
# கடல்

## ஈழத்தமிழர் வாழ்க்கைக் கடலின் தெறிப்புகள்



**வாசுகி சொக்கன் நடேசன்**



வாசுகி நடேசன் யாழ்ப்பாணம் நாயன் மார்கட்டில் பிறந்து திருமணத்தின்பின் இன்று இத்தாலியில் வசித்துவருகிறார். இவர் நாடறிந்த எழுத்தாளரான கலாநிதி க. சொக்கலிங்கம் (சொக்கன்), திருமதி தெய்வானை ஆகியோரின் இளைய மகளாவர்.

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தனது கல்வியைப்பெற்று, யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றினார்.

தமிழில் சிறப்புக் கலைமாணிப்பட்டம், முது தத்துவமாணிப் பட்டம் ஆகியவற்றைப் பெற்றதோடு, கல்வியியல் துறையில் முதுகலைப் பட்டத்தையும் பெற்றவர்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் ஆ. சண்முகதாஸ் ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் இவர் செய்த ஆய்வு “மருதத்திணை” என்ற பெயரில் நூல் வடிவம் பெற்றுள்ளது.

இவற்றைவிட இவரது ஆய்வுக்கட்டுரைகள் பல்வேறு ஏடுகளில் வெளிவந்துள்ளன. இக்கட்டுரைகள் இவரது இலக்கிய ஆளுமையையும் சமூகவியல் நோக்கினையும் புலப்படுத்துவன.

இத்தகைய கல்வி இலக்கியப் பின்புலத்தைக் கொண்ட வாசுகியின் படைப்பாளுமையை இந்நூல் வாயிலாகத் தரிசிக்க முடியும்.

# கடல்

## ஈழத்தமிழர் வாழ்க்கைக் கடலின் தெறிப்புகள்

வாசுகி சொக்கன் நடேசன்


இத்தாலி, 11 டிசம்பர் 2021

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | கடல் – ஈழத்தமிழர் வாழ்க்கைக் கடலின் தெறிப்புகள் |
| ஆசிரியர் | : | வாசுகி சொக்கன் நடேசன் |
| முதற்பதிப்பு | : | 11 டிசம்பர் 2021 |
| வெளியீடு | : | SLee பப்ளிகேசன் |
| கணினியாக்கம் | : | எஸ். பூங்குன்றன் |
| விலை | : | ரூபா. 500/= |

| | | |
|---|---|---|
| Title | : | Kadal |
| Author | : | Vasuki Sokkan Nadesan |
| First Edition | : | 11 December 2021 |
| Publishers | : | SLee Publication |
| Typesetting | : | S. Poongunran |
| Price | : | Rs. 500/= |

Printed at:
St. Joseph's Catholic Press, 360, Main Street, Jaffna, Sri Lanka
Phone: +94212222378

# சமர்ப்பணம்



இந்தச் சிறுகதைத் தொகுதி வெளிவரும்போது நான் அடையும் மகிழ்ச்சியிலும்
தெய்வமாகி இன்றும் தோன்றாத் துணையாக என்னை வழிப்படுத்தும் எனது
தந்தை (சொக்கன்) அடையும் மகிழ்ச்சி மிகப் பெரியதாக இருக்கும் என்பதை
மிக நிச்சயமாக நான் அறிவேன். அவருக்கு இந்தநூலைச் சமர்ப்பிப்பதன்
மூலம் மனநிறைவடைகிறேன்.

## மகிழ்வுரை (Appreication)

"கடல் – ஈழத்தமிழர் வாழ்க்கைக் கடலின் தெறிப்புகள்" என்னும் முன்முனைவர் வாசுகி நடேசன் அவர்களின் படைப்பாக்கத் திறனில் உருவான, 39 பக்கங்களில் அமைந்த கடல் என்னும் குறுநாவல், 84 பக்கங்களில் அமைந்த "ஊனம் மனதுக்கல்ல" என்னும் சிறுகதை முதல் "ஆதிமந்தி ஆட்டனத்தி" என்னும் சிறுகதை வரையான 14 சிறுகதைகள், மற்றும் 29 பக்கங்களில் அமைந்த "சக்தி தனக்கே கருவியாக்கு" என்னும் நாடகம் என்பவற்றை உள்ளடக்கிய 174 பக்கங்களில் அமைந்த இந்நூல், "ஈழத்தமிழர்களின் வாழ்க்கைக் கடலின் தெறிப்புகள்" என்ற உள்ளடக்கத்தை விளக்கும் சுருக்கக் குறிப்புக்கு ஏற்ப, ஈழத்தமிழ் மக்களின் சமகால வாழ்வின் எண்ணத் தெறிப்புகளின் இலக்கிய வெளிப்பாடாக உள்ளது. அந்த வகையில் இந்நூல் வெறுமனே கற்பனைப் படைப்பாக இல்லாது திருமதி வாசுகி நடேசன் அவர்கள் கண்ட புலக்காட்சிகளின் புனைந்துரை இலக்கியமாக இலங்குகிறது.

"கடல்" என்னும் சொல் தமிழர் இலக்கிய வரலாற்றில், தத்துவ வரலாற்றில், வாழ்வின் ஆழத்தையும் அது எழுப்பும் அலைகளின் கோலத்தையும் வேகத்தையும், இவற்றை எதிர்த்து மனிதன் நீச்சலடிப்பதற்கு, அவனோடு அவனாக உள்ள கடவுளைச் சார்வதால், அகத்தைப் பலப்படுத்திப் புறத்தே தோன்றும் சிக்கல்கள் என்னும் பேரலைகளை எல்லாம் கடந்து வாழ வேண்டும் என்னும் வாழ்க்கைக்கான செல்நெறியைக் குறிக்கும் தன்மையானது. இந்தச் சொல்லை திருமதி வாசுகி நடேசன் அவர்களின் தந்தையும், ஈழத்தின் புகழ்மிக்க சைவத்தமிழ்ப் பேராசானாக விளங்கிய அமரர் முனைவர் க. சொக்கலிங்கம் அவர்கள் தனது முதலாவது சிறுகதைக்கு அமைத்த தலைப்பாகவும் உள்ளது. அந்த வகையில் ஈழத்தின் மகாகவி உருத்திரமூர்த்தி அவர்கள் "அப்பனே மகனாகி" த் தொடர் வாழ்வு என்று படைத்தளித்த அற்புதமான கவி வரிக்குப் புதிய பொருளாக "அப்பனே மகளாகி.." தொடர்வது வாழ்க்கை என்ற விளக்கத்தைத் தனது இப்படைப்பாக்கத்திற்கு "கடல்" எனப் பெயரிட்டதன் மூலம் திருமதி வாசுகி நடேசன் அளித்துள்ளார்.

"தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தியிருப்பச் செயல்"

என்கிற வள்ளுவ வாக்கிற்கு அக்கால வழக்குக்கு அமைய பரிமேலழகர் அவர்கள் மகற்கு என்பதற்கு மகன் என்று பொருளுரைத்தாலும் மகவு என்ற சொல் இருபாலாருக்கும் ஏற்புடைய பொதுச் சொல் என்ற விளக்க விரிவுக்குப் பின் அது மகளுக்கும் பொருந்தும் என்ற எடுத்துரைப்பின் வரலாற்றுச் சான்றாக திருமதி வாசுகி நடேசன் அவர்கள் விளங்குகின்றார்கள். அவரின் மதிநுட்பம் ஈழத்தமிழர்களின் வரலாற்று இயக்கத்தைச் சிறுகதைகள், நாவல், நாடகம் என்னும் முத்தமிழ் வகைமைகள் வழியாகவும் வெளிப்படுத்தும் பேராற்றலை இந்நூலில் தெளிவாகக் காண முடிகிறது. அந்த வகையில் தந்தையே மகளாகி தந்தை தமிழ்கூறு நல்லுலகு எவ்வாறு அமைய வேண்டுமென்று விரும்பினாரோ அவ்வாறு அதை அறிவார்ந்த நிலையில் கட்டமைக்கும் பணியினைத் தந்தைக்குச் செய்ய முற்பட்டதன் வழி

“மகன் தந்தைக் காற்று முதவி யிவன் தந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்”

என்பதை மகளாலும் செய்விக்க இயலும் என்று இன்றைய பெண்ணிய எழுச்சியின் நடைமுறை உதாரணமாகத் தனது படைப்புக்களை முன்வைத்துள்ளார். ஆதலால்

“தம்மிற்றம் மக்களறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது”

என்ற வள்ளுவர் வாக்குக்கு அமைய இன்று இவரின் தந்தையாகிய மதிப்புக்குரிய மேனாள் தமிழாசான் க. சொக்கலிங்கம் ஐயா அவர்களை நினைந்ததுமே எவ்வாறு ஈழத்தமிழர்கள் மகிழ்ச்சி அடைகின்றனரோ அவ்வாறே இன்று இப்படைப்பின் மூலமும் முன்னர் இவரின் முதுதத்துவமாணிப்பட்ட ஆய்வான “மருதத்திணை” என்னும் ஆய்வு நூலும் இவர் பெயரை நினைத்ததுமே ஈழத்தமிழினம் மகிழ்ந்து பாராட்டும் தன்மையினை இவருக்கு அளித்து அதன்வழி வள்ளுவர் குறளின் உண்மைத் தன்மையை உலகுக்கு நிரூபித்துள்ளது.

“மேலும் மொழியின் கையாள்கை பற்றிச் சிந்திக்கும் பொழுதும், அதன் தொடர்பு பூரணத்துவம் பற்றி நோக்கும் பொழுதும், ஒரு முக்கியமான அமிசம் மேற்கிளம்பும். அதுதான் குறிப்பிட்ட விடயம் எடுத்துக் கூறப்படுகின்ற முறைமை. அதாவது “எடுத்துரைப்பு” முறைமைதான் (நூலை

படிப்பவருடனான) தொடர்பினை (Communication) நிச்சயிக்கின்றது." என்பது மதிப்புக்குரிய வாழ்நாள் பேராசிரியர் அமரர் கார்த்திகேசு சிவத்தம்பி ஐயா அவர்களின் கூற்று. அவரிடத்தில் முதுதத்துவமாணிப்பட்ட ஆய்வினைச் செய்தவர் என்ற வகையில் திருமதி வாசுகி நடேசன் அவர்கள் அவர் வழி பெற்ற பயிற்சிக்குச் சான்றாக இந்நூலின் மூன்று படைப்புக்களிலுமே "எடுத்துரைப்பில்" வெற்றி பெற்றுள்ளமையைக் காண்கிறோம். ஜெறாட் ஜெனே என்னும் புகழ்மிக்க ஆய்வாளர் கதையில் அமைய வேண்டும் எனக் கூறும் பின்வரும் மூன்றிலும் இப்படைப்புக்கள் பெரும்பாலும் வெற்றி பெறுகின்றன.

"நிகழ்ச்சிகளின் கால ஒழுங்கமைவு" மாறாது வரலாற்று ஓட்டத்துடன் இணைத்துக்" கூறுதல் (Recit),

"நடக்குமாறு" (histoiro) அதாவது சம்பவங்கள் உண்மையில் அமையும் முறையிலேயே புனைவிலும் வனைதல்,

இவற்றுக்கான எடுத்துரைப்பு நடைமுறை (narration)

என்னும் மூன்றிலுமே திருமதி வாசுகி நடேசன் அவர்களின் இப்படைப்புக்கள் பெருமளவுக்கு வெற்றி பெறுகின்றன. அத்துடன் இவரின் எடுத்துரைப்புக் கண்ணோட்டம் (point of view) ஈழமக்களின் வாழ்வியலின் பொய்மையில்லாப் பதிவு என்பதனால் இப்படைப்புக்கள் ஈழமக்களின் வரலாற்று இழப்பைத் தடுக்கும் தமிழீழக் குடிமகள் ஒருவரின் தாயகக் கடமையாகவும் அமைகிறது. புனைகதைகளின் பயன்பாடான செயற்பாடுகளின் தொடர்கள் அமையும் எதார்த்தத்தின் அடிப்படையிலேயே மக்கள் இலக்கியமாக ஒரு படைப்புப் பரிணமிக்கும் அந்தத் தகுதியினை இந்நூல் செம்மையாகக் கொண்டுள்ளது. இதற்கமைவாக இவர் சுட்டும் பாத்திரங்கள் மொழி நடையால் உயிர் பெற்றெழுகின்றன. இந்த நடை என்பது படைப்பாளியின் "அனுபவத் திரட்சி" உடனும், அந்த அனுபவத்திரட்சியை வர்த்தக மயப்படுத்தாது மக்கள் சார்பான படைப்பாக நித்தியம் பெற வைப்பதிலுமே, படைப்பாளன் இலக்கிய உலகில் நிலைப்பான். திருமதி வாசுகி நடேசன் அவர்களின் "கடல்" என்னும் இம் முத்தமிழ் வழியான படைப்பாக்க முயற்சிகள் நிச்சயமாக அவருக்குச் சிறந்த தமிழிலக்கியப் படைப்பாளி என்கிற பெருமையை அளிக்கும் என்பது என் உறுதியான எண்ணம். இந்நேரத்தில் இத்தாலியில் அதுவும் இந்த கோவிட் – 19 தொற்றுக்காலத்தில் மரணத்தைக் கண்டு கலங்காதே

விஜயா என்ற கண்ணனின் கீதோபதேச உள்ள உறுதியை அவரின் இலக்கிய ஆளுமையாலும் "அஞ்சுவதும் யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை" என்ற அப்பரின் உளப்பாங்கை அவரின் சைவநெறி வழி வாழ்வின் வழியாலும் பெற்றதனால் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என இக்காலத்தில் இந்நூலை படைத்தளிக்கும் உள்ளத்தன்மையைப் பெற்றுள்ளார். இவருக்குப் பக்கத்துணையாக அமைந்த இவரின் கணவர் திரு. நடேசன் அவர்களுக்கும் இவரின் இரு ஆண்மக்களுக்கும் அவர்கள் இவருடைய படைப்பாக்கத்திறனுக்கு அளித்த ஒத்துழைப்புதான் இந்நூ லாக்கமாக இன்று அரங்கேறுகிறது என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிடுவது பெண் படைப்பாளர்களுக்கு அவர்களின் குடும்பங்கள் ஒத்துழைப்புக்களை நல்கி பல சிறந்த பெண் படைப்பாளர்களைத் தமிழ்கூறு நல்லுலகு காண உதவுமென்பது என் நம்பிக்கை.

இறுதியாக இந்த படைப்புக்கள் எனக்கு இந்த மகிழ்வுரையை எழுத எந்த அளவுக்கு ஒரு நூலின்பத்தை அளித்ததோ அந்த அளவுக்கு இப்படைப்புக்களை நுகரும் ஒவ்வொரு தமிழ் உள்ளங்களுக்கும் அது இன்பம் அளித்து, மகிழ்வூட்டும் தமிழ்ப்படைப்புக் "கடல்" இப்படைப்பு என்பதே என் அனுபவமொழி. படியுங்கள். பயன்பெறுங்கள். படைப்பின் நோக்கைப் புரியுங்கள். எம் மண்ணும் மக்களும் விடுதலை வாழ்வில் பாதுகாப்பான அமைதியுடன் வாழ்வதற்கான சிந்தனைகளை அறிந்து, "இயல்வது கரவேல் – ஈவது விலக்கேல்" என ஔவை வழி வாழுங்கள். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் திருமந்திர வழியில் இந்நூல் உங்களை வாழ்விக்க வேண்டுமென அவனருளாலே அவன் தாள் பணிந்து இதய வணக்கத்தைத் தெரிவிக்கிறேன்.

முனைவர் நீற்றா பற்றிமாகரன்
BA, BSc, PG Diploma, MA., PhD
ஓக்ஸ்வேர்ட்டு,
ஐக்கிய இராச்சியம்.

# மனம் தழுவும் அலை

# வாசுகியின் கடல் சிறுகதைத் தொகுப்பு

போரின் காயங்களை வாங்கிய மனத்தின் பதிவுகளாகக் “கடல்” எனும் இச்சிறுகதைத் தொகுதி முன்னிறுத்தப்படுகின்றது. போருக்குள் வாழ்ந்த சாதாரண பெண்களின் வாழ்வைப் பல கதைகளில் வாசுகி சொக்கன் நடேசன் பதிவிடுகின்றார். இச்சூழலை நானும் கடந்தே வந்தேனெனும் போது அக்கதைகளினூடே அனுபவரீதியாக ஆத்மார்த்தமாக என்னால் பயணிக்க முடிகின்றது. இது நாம் வாழ்ந்த வாழ்வென நினைக்கையில் இக்கதைகள் எனக்குக் கனதியாகின்றன. போராளிக் குழுக்களோ, போராட்ட அரசியலோ அன்றிப் போர் மண்ணில் பன்னெடுங்காலம் காலூன்றத் தத்தளித்த மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் இங்கு பேசுபொருளாக விளங்குகின்றமையால் இழையோடும் துன்பியலை நோக்க முடிகின்றது.

தேர்ந்த வாசிப்பும் ஆய்வு நோக்கும் கொண்ட வாசுகியின் இச்சிறுகதைகளின் போக்கு, மிகவும் யதார்த்தமாகவும் உள்ளுணர்வின் பிரதிபலிப்பாகவும் இருக்கின்றன. ஈழத்தில் யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்புப்பாடமாகப் பயின்ற இவரது கல்விப் புலமையின் தாக்கமும் வீரியத்துடன் கதை நகர்த்தலுக்கு உதவுகின்றது. ஈழத்து இலக்கிய உலகில் மிக முக்கியமானவராகக் கருதப்படும் கலாநிதி க. சொக்கன் அவர்களது மகளான வாசுகிக்குக் கதைகளைச் சமூக நோக்கில் மனித மனங்களினூடே பார்ப்பதென்பது இயல்பாகவே வந்தமைந்து விடுகின்றது.

தாயகத்தில் ஆசிரியைகள் மாணவர்களுக்கு தாய்க்குச் சமமாகின்றார்கள்; பிள்ளைகளின் உளவியலை மிகச் சரியாகக் கணிப்பிடக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். அந்தச் சிறப்புமிகு பண்பையும் ஆசிரியராகக் கல்விப் பணிசெய்த வாசுகியின், இக்கதைகளினூடே தரிசிக்க முடிகின்றது. பெண்கள்தான் இவரது கதைமாந்தர்கள் அப்பெண்கள் இவரது கதைகளில் பல்வேறு பரிமாணங்கள் கொள்கின்றார்கள். அவர்களது குணவியல்புகள், செயற்பாடுகள், ஆளுமைகள் போன்ற பல முகங்கள் பிரதிபலிக்கப்படுகின்றன. அப்பெண்களில் தன் சிந்தனைகளைத் திணிக்காது அவர்தம் பாணியில் வாசுகி உலாவ விடுகின்றார். அதனால் அப்பெண்கள் எம் மனதின் அருகில் வந்து போகின்றனர். அதேசமயம் தான் சார்ந்த கருத்துக்களை வலிமையுடன் கதைக்கூடாகச் சொல்லி வைப்பதிலும் வாசுகி பின் நிற்கவில்லை. இத்தகைய நகர்வைப் பல சந்தர்ப்பங்களில் காணலாம்.

பால்ய கால பாடசாலை நாட்களையும் மாணவ உளப்பாங்குகளையும் நினைவுறுத்துவனவாக "ஊனம் மனதுக்கல்ல" எனும் சிறுகதை அமைகின்றது. தனக்குத்தானே ஆறுதல் தேடி உத்வேகம் கொள்ளும் மாணவனின் மனதைப் புரிந்து கொள்ள இக்கதை சந்தர்ப்பம் தருகின்றது. இச்சிறுகதையின் வாசிப்பினூடே 1986 ஆம் ஆண்டு யாழ். மத்திய கல்லூரி மாணவத் தலைவர்களில் ஒருவனாக இருந்து துப்பாக்கிக் குண்டால் மரணித்துப்போன விபுலாநந்தனின் நினைவும் இந்திய இராணுவத்தின் உதவியுடன் நடந்த யாழ். பரியோவான் கல்லூரி மாணவன் அகிலன் திருச்செல்வத்தின் மரணமும் ஞாபகச்சகதியாக வந்து போவது தவிர்க்கப்பட முடியாததாகின்றது. அன்று அச்சூழலில் கற்றுக் கொண்டிருந்த மாணவர்கள் அனைவருக்கும் மன அழுத்தத்தையும் இயலாமையும் திக்குத்தெரியாத வாழ்க்கையையும் உண்டு பண்ணிய நிகழ்வுகள் அவை. அதுமட்டமல்ல பின்னாட்களில் வீதிகள் தோறும் மாணவர்கள் குண்டுகளுக்குப் பலியாகியும் அங்கவீனர்களாகியும் வாழ்வைத் தொலைத்திருந்தனர். அதனது இன்னொரு வடிவமாக காலையிழந்த பிள்ளையின் வாழ்வு சொல்வதாக "போர் முகம்" சிறுகதையை வாசுகி அமைத்திருக்கின்றார். அத்துடன் யாழ்ப்பாணத்து மினிபஸ் அனுபவங்களையும் அச்சமூக வாழ்வையும் எடுத்தியம்புவதாக இக்கதையை நோக்கலாம். இது போன்றே குழந்தை உளவியலைக் கூறுவதாக "பாப்பாவுக்கு ஒருநாள் கழிகிறது" எனும் சிறுகதை காணப்படுகின்றது. இங்கு ஆசிரியர், பிள்ளை, பெற்றோர் ஆகிய முக்கோணக் கதாபாத்திரங்களின் கதையாடலில் பிள்ளையின் ஆசைகள், அவர்களின் தாங்கு சக்தி என்பன பெற்றாரின் அதீத ஆசையால் நிராசையாய் போய் விடுமோவென்ற பதட்டத்தை வாசுகி மிகக்கச்சிதமாக விபரிக்கின்றார்.

இவரது சிறுகதைகளில் தொடக்கம் முதல் சம்பவங்கள் தொகுக்கப்பட்டு ஒரு பரவசத்தன்மையை ஏற்படுத்தி, அக்கதைகளின் நிறைவாக அமைதி நிலைப்பாடு தோற்றுவிக்கின்றது. இந்த வளர்ச்சித் தன்மைகள் கதைகளின் ஆதார சுருதியாக அமைவதும் பலமாகிறது. கதைகளுக்கான திருப்பங்கள், கதைகளின் நிறைவுப் பகுதிகள் பூரணத் தன்மையுடன் வந்தமைக்கின்றன. சோர்வு தராத எழுத்து இவரது வலிமையெனக் கொள்ளலாம். இங்கு இடம்பெறும் சிறுகதைகள் சில, வாசித்து முடித்த பின்னரும் எம்மோடு அவை அலையும். மீண்டும் மீண்டும் அசைபோட வைக்கும். அது வலியா அன்றி சஞ்சலமாவென்று அறியாத ஒரு மனநிலைக்கு நாம் தள்ளப்படுவதை உணர முடியும்.

இயல்பாகவே போர்க்கால யாழ்ப்பாணத்து வாழ்வு அணுக்கமானதாக இருப்பதால் இக்கதைகளைக் கொண்டாட முடிகின்றது. "கொட்டில்" கதை தலைமுறை இடைவெளியை மையமாகக் கொண்டாலும் ஒரு இரவில் மண்ணை விட்டுக் கிளம்பிப் போன மக்களின் சோக வரலாற்றினையும்

கோடிட்டுக் காட்டுகிறது, இடப்பெயர்ந்து அவர்கள், மரங்களின் கீழும், காடுகளை அண்டியும் தம்மைத் தக்க வைக்க முயற்சி செய்ததையும், பாம்புகள் பூச்சிகளின் வாழ்விடத்தைத் தமதாக்கிப் பட்ட துயர்களையும் எடுத்துரைப்பதென்பது கடினமானதே. அத்துடன் கொட்டிலுக்காக அப்பு படும் வேதனை என்பது, வீடு தங்குமிடமல்ல் அது மாடிவீடாக இருக்க வேண்டுமென்பதுமல்ல உணர்வுகளால் நினைவுகளால் செயல்களால் அலங்கரிக்கப்பட வேண்டியதென்பதை இங்கு பதிவு செய்கின்றார். முக்கியமான கதைகளிலொன்றாக "ஆலய தரிசனம்" எனும் கதையைக் குறிப்பிட்டாக வேண்டும். இந்திய அமைதிப்படை செய்த அட்டூழியத்தைச் சொல்லும் பல சம்பவங்களை நிஜத்தில் நாம் அறிவோம். அத்தகைய சம்பவங்களில் வரும் எத்தனையோ பெண்களின் பிரதிநிதிகளாக அந்த மூன்று பெண்களையும் வாசுகி இங்கு உருவாக்கியுள்ளார். அவர்களைக் காப்பாற்றிய அபிராமியம்மா தெய்வமாகின்றார். எடுத்த கருப்பொருளும் அதனைக் கூறிச் செல்லும் முறைமையும் செம்மையான அவரது எழுத்தாற்றலை உணர்த்துகின்றன.

தாயகம் விட்டுப் புலத்தில் வாழும் மக்களும் இவரது சிறுகதை மாந்தர்களாக இருக்கின்றனர். ஊரில் வாழ்ந்த மக்கள் இங்கு வந்ததும் இன்னொரு வடிவம் எடுப்பதையும் இருதலைக் கொள்ளி எறும்புகளாகத் திக்குமுக்காடு வதையும், போலி வாழ்வுக்குள் தம்மை இணைத்து அற்ப மகிழ்வுக்குள் தம்மைப் புகுத்திக் கொள்வதையும் வாசுகி அழகாகக் கதைக்குள் தந்திருக்கின்றார், அந்த வகையில், ஆசிரியரின் கிண்டல், நகைச்சுவைத் தன்மைகளோடு உருவாகியதாக "இருப்பைத் தேடும் மனிதர்களும் சில அந்தரங்கங்களும்" எனும் சிறுகதை இருக்கின்றது. சதாசிவத்தின் மரண வீட்டில் சிவக்கொழுந்தர் மைக் முன் நிற்பதில் தொடங்கும் கதை சதாசிவத்தின் வாழ்க்கையைப் பின்னோக்கிப் பார்க்க வைக்கின்றது. ஈழத்தின் பழைய சிறுகதையாசிரியர்களின் எழுத்தை நினைவுபடுத்தும் இக்கதையின் தளம் வேறுபட்ட விதமாக வடிவமைக்கப்பட்டமை சிறப்புக்குரிய விடயமாகும்.

"உடையும் விலங்குகள்" சிறுகதை புலம்பெயர் தமிழர் வாழ்வை மையமாகக் கொண்ட இன்னொரு சிறுகதையாகும். தாயகத்திலிருந்து வந்த பெற்றோருக்கும் புலத்தில் பிறந்து வளர்ந்த பிள்ளைகளுக்குமிடையே ஏற்படுகின்ற பண்பாடு, கலாசார இடைவெளியும் சமூக உறவு விரிசலும் தாயகத்து மனோபாவமும் இக்கதையில் அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. கல்வி, தொழிலென்பவற்றால் உயர்ந்தாலும் வந்த மண்ணில், பிடுங்கி எடுக்கப்பட்ட மரங்களாகக் காலூன்றி நிற்க முடியாமல் திணறும் மக்களைப் பார்த்திருக்கின்றோம். இங்கும் வாழ வந்த அந்த இடம், கல்லா மண்ணா வளமா எனத் தெரியாது மனவுளைச்சலுக்கும் சகிப்புத் தன்மைக்கும் உட்படுகின்ற புலம்பெயர் சமூக மாந்தர்கள், கதாபாத்திரங்களாக வலம்

வருகின்றனர். இதற்கு வாசுகி கையாளும் வார்த்தைகள், கதை வடிவமைப்பு என்பன வலிமையுடன் உணர்வு சேர்க்கின்றன. "யாழ்ப்பாணத்தில் சாதி துரும்பல்லவே. வலிமையான மிதவையாகவல்லவா கருதப்படுகின்றது" எனும் வாசுகியின் கூற்று யதார்த்தமான உண்மையாகும். புலம்பெயர் தேசங்களில் வீட்டிலொரு பண்பாடும் கலாசாரமும், மொழியும் வெளியில் இன்னொரு பண்பாடும் கலாசாரமும் மொழியுமெனத் திணறும் நிலையில் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையே மிகப்பெரிய சவால்களும் ஏமாற்றங்களும் மலிந்திருக்கின்றன. இதனால் பெரும்பாலான பெற்றோர் விருப்பமின்றிப் பிள்ளைகளின் அபிலாசைகளுக்கு ஒத்துப் போக வேண்டியவர்களாக இருக்கின்றனரென்பதை இக்கதை சொல்கின்றது.

புலம்பெயர் வாழ்வின் யதார்த்தத்தைத் துயரங்களை, பொருளாதார நெருக்கடிகளை, ஆறுதல் தேட முடியாத சந்தர்ப்பங்களை "இயலாமை" சிறுகதை விபரிக்கின்றது. "அகிலா தன் ஆசைகளைத் தலையில் குட்டி மெல்ல மனதுக்குள்ளே புதைத்துக் கொள்கிறாள்" எனக் கூறுமிடத்தில் தாயகம் விட்டு வந்து நான்கு சுவர்களுக்குள் வாழ்வைச் சுருக்கி வாழும் தமிழ்ப் பெண்களின் ஒட்டுமொத்த உணர்வாக அதனைப் பார்க்க முடிகின்றது. அத்துடன் இது போன்ற கதைகளை மேலும் வாசுகி எழுத வேண்டுமென எண்ணத் தோன்றுகின்றது. ஏனெனில் சுவாரசியமான எழுத்து நடையில் பல திருப்பங்களுடன் இலாவகத்தன்மையுடன் நகரும் இக்கதை உண்மையை அம்பலப்படுத்தும் தன்மையுடன் அமைந்திருக்கின்றது. இவை போன்று இன்னும் பல பதிவுகள் பேசாப் பொருளைப் பேச விழையும் விருப்புடன் வெளி வர வேண்டும்.

அரசியல் சார்ந்து எழுதப்பட்டதாக "ஆனந்தசுதந்திரம்" கதை உள்ளது. ஈழத்துப் போர் தந்த மன அவஸ்தையினால் தம்மைத் தாமே மாய்த்து உயிர் துறந்த முத்துக்குமார், முருகதாசன், திலீபன், அன்னை பூபதி போன்றோரை மையமாகக் கொண்டு தொடர்ந்த கதையின் உச்சநிகழ்வாக பாரதியாரையே மன்னிப்புக்கேட்க வைக்கின்ற வாசுகியின் திறன் அவரை அடையாளபடுத்துகின்றது. "உண்மை எந்த அலங்காரமுமின்றி அம்மணக் குழந்தையாய் ஆங்கு கிடக்கிறது. " என விபரித்துத் தொன்மங்களுக்கூடாகக் கதையை விபரித்துள்ளமை நல்லதொரு முயற்சியாகும்.

மனிதனை உருவாக்கும் கடவுளைப் பற்றியதான "கடவுள் மீண்டும் வருவாரா" எனும் சிறுகதையில் "கடவுளின் படைப்புக் கருவிகளை எடுத்து அவன் ஆராய்கின்றான் என வரும் வரியும்" கடவுளின் மனம் துணுக்குற்றுப் போகிறது. மனதில் இடி இறங்குகிறது. பொறாமை எட்டிப்பார்க்கிறது. தனக்குப் போட்டியாய் இவர்களும் சிருஷ்டி கர்த்தாக்களானால்" என வரும் வரியும், இரசிக்கத்தக்கதாக உள்ளது. கதைக் கருக்களை எடுக்கும் நுட்பமும் சிறப்பான விடயமாகும். மேற்குறிப்பிட்ட இரு கதைகளுமே

புதுமைப்பித்தனின் கதைகளோடு ஒப்பிடக்கூடியனவாக உள்ளன. சொல்லும் செயலும் ஒன்றாக இல்லாதவர்கள் பற்றியதான "முரண்கள" கதையில் திருக்குறளைப் புகுத்திப் பல்கலைக்கழகத்தில் பதவி வழங்கும் போது முறைகேடுகள் ஏற்படுவதை மிக நாசுக்காக எடுத்துரைக்கும் திறன் நல்லதொரு உத்தியாகும். இச்சீர்கேட்டைப் பார்த்து யமனே வெறுத்துப் பூலோகம் விட்டு மேலோகம் செல்வதாக நகைமுரண்களோடும் விரக்தி மனநிலையோடும் கூறுவது, யாரோடு நோவோம் யார்க்கு எடுத்துரைப்போமென எண்ண வைக்கின்றது.

தேர்ந்தெடுக்கும் கதைக்கரு, ஒன்றிற்கு ஒன்று சளைத்ததல்ல என்பதாக "பாவமன்னிப்பு" எனும் சிறுகதையையும் இருக்கின்றது. பதவிக்காலத்தில் மிக மோசமாகச் செயற்பட்ட அரசியல்வாதியின் இறுதிக்காலத்தில் அவரால் பாதிக்கப்பட்ட ஒருவரின் மகளே அவருக்குப் பாவமன்னிப்பு வழங்கும் சந்தர்ப்பத்தை வாசுகி கொடுத்திருக்கின்றார். அந்தக் குற்றவுணர்வே வாழ்நாள் முழுதும் அவருக்குத் தண்டனையாக அமையுமென உணர்த்துவது, பாதிக்கப்பட்டவர்கள் அனைவரதும் குரலாக ஒலித்து வக்கிர மனநிலையில் தொழிற்படுபவர்களைச் சாடுகின்றது. "ஞானி" ஒரு சின்னக்கதைதான். ஆனால் அதனுள் பொதிந்து வைக்கப்பட்ட கருப்பொருளும் கதையுருவாக்கமும் எம்மை ஆச்சரியப்பட வைக்கின்றன. சுனாமி தந்த இழப்புக்களையும் மனச் சிதறல்களையும் மீண்டும் உயிர்ப்புக்குரியதாக்கி ரணமாக்குகின்றது. "ஆட்டமந்தி ஆட்டனத்தி" ஆதித் தமிழர் வாழ்வியலுக்குள் எம்மை அழைத்துச் செல்வது போலவும், உண்மை அன்பின் பிரிவாற்றாத் துயரையும் சுட்டுகின்றது.

இத்தொகுப்பில் முக்கிய குறுநாவலாக இருக்கின்ற "கடல்" ஈழத்தில் தமிழ்ப்பிரதேசக் கரையோரமெங்கும் போரினால் மீனவர் பட்ட வாழ்வின் பின்னடைவுகளை, தொலைத்த வாழ்வைத் தேடி அலையும் சொல்லொனாத் துயர்களை அந்த மக்களில் ஒருவராக நின்று வாசுகி கதையாடுகின்றார். பதினொரு அலைகளாக அத்தியாயமிட்டுள்ள கதையில் வருகின்ற அனைத்துப் பாத்திரங்களும், அவற்றின் ஆசைகள் நிராசையான பொழுதுகளும் மனசைப் பிழிய வைப்பனவாகும். கதாபாத்திரங்களின் நகர்வுகள் அவற்றிற்கான தனித்துவத்தோடு பளிச்செனச் செறிவு பெறுகின்றன. அவை ஒன்றோடு ஒன்று நிகழ்த்துகின்ற சின்னச் சின்ன உரையாடல்கள், அதில் பொதிந்திருக்கும் எளிய மொழி, சிணுங்கல்கள் என்பன யதார்த்த மாந்தர்களைக் கண்முன் கொண்டு வருகின்றன. இலங்கைக் கடற்படையால் மீனவர்கள் கடலில் காணமல் போவதும் உயிர் இழப்பதும் இற்றை வரை நடைபெற்று வருவது துயர் மிகுந்த அவலமாகும். எனினும் எங்கோ ஒரு வாழ்வின் பிடிப்பு இருக்குமென்ற நம்பிக்கையில் அவர்கள் பயணம் தொடர்கின்றது.

“சக்தி தனக்கே கருவியாக்கு” என்கின்ற பாரதியின் பாடல் வரியைத் தலைப்பாகக் கொண்ட சிறந்த நாடகப்பிரதியொன்றும் இங்கு இடம்பெறுகின்றது. ஒவ்வொரு பருவத்துப் பெண்ணும் எதிர்நோக்கும் வாழ்வியல் இடர்ப்பாடுகளை மையப்படுத்தி எழுதப்பட்ட இப்பிரதியில் கல்யாணப் பேச்சும் திருமண வாழ்வும், வீட்டிலும் அலுவலகத்திலும் பெண் படும்பாடும் இளவயதுப் பெண்குழந்தையின் ஏக்கமும், கணவன் மனைவிக்கிடையே உண்டாகும் கருத்து முரண்பாடுகளால் பாதிப்புள்ளாகும் பிள்ளைகளுமென அனைத்துப் பிரச்சினைகளும் மையப்படுத்தப்பட்டுள்ளன. உரையாடல் தன்மையுடன் கதைகளைக் கொண்டு செல்லும் திறன் வாசுகிக்கு அருமையாக வாய்த்திருக்கின்றது. தாயகத்திலும் புலத்திலும் வாழுமெம் மக்களின் வாழ்வை உண்மை நிலை நின்று பார்த்திருக்கின்றார். இது தவிர சிறுகதை வடிவமைப்பை செம்மையுறச் கையாண்டிருக்கின்றார். சிறுகதைகளினூடே அவர் பயன்படுத்தும் சில வரிகள் கருத்துச் செறிவாகிக் அக்கதைகளைத் தாங்கி நிற்கின்றன. உதாரணமாகப் பின்வருவன்வற்றைக் கூறலாம்.

“இராணுவத்தினர் எல்லாத்திக்குகளும் தெந்திசையே என்ற எண்ணத்தில் ஷெல்களை ஏவிக் கொண்டிருந்தனர்.”

“காத்திருப்பு...பஸ்சுக்கு...கப்பலுக்கு... நிவாரணத்துக்கு...காணாமல் போன வருக்கு”

இவை போன்ற வரிகள் தமிழ்ச் சமூகத்தின் முழு வாழ்க்கையையும் விபரித்து விடுகின்றன. வாழ்வை வசப்படுத்தி வாழப் பழக்கப்படுத்தியவர்களாகவே புலம்பெயர் மக்களின் ஒவ்வொரு செயற்பாடும் அமைவது அனை வருக்கும் தெரிந்த மெய்யாகும். வாசுகிக்கும் காலமும் தேசமும் வாழ்வின் இடர்பாடுகளும் அனுபவங்களும் இக்கதைகளைச் சாத்திய மாக்கியுள்ளனவென்றே கூற வேண்டும். முழுக்கதைகளையும் வாசிக்கும் போது வடிந்தோடும் வெள்ளத்தில் ஆங்காங்கே விழும் மழைச்சாரல்கள் தோற்றுவிக்கும் குமிழிகளாக வாழ்வில் ஆங்காங்கே முகிழ்க்கும் பல நிகழ்வுகள் தோன்றி மறைகின்றன. 1991 ஆம் ஆண்டு முதல் எழுதப்பட்ட சிறுகதைகள் இங்கு இடம் பெறுவதால் அவற்றிற்கிடையே காணப்படும் கால இடைவெளிகளையும் கருத்தில் கொள்ள வேண்டியவர்களாகின்றோம். நிறைவாக, வாசுகி உள்ளத்திற்கு சிலிர்ப்பையுண்டாக்கிய உங்கள் கதைகள் கொண்டே உங்களை வாழ்த்துகின்றேன். உங்கள் இலக்கியப் பயணம் தொடரட்டும்.

அன்புடன்,
மாதவி சிவலீலன்

# முகவுரை

புலம் பெயர்ந்தவர்களின் வாழ்வு, தாய் நாட்டு வாழ்வு, புலம்பெயர்ந்த தேசத்து வாழ்வு என இரண்டு பாகங்களைக் கொண்டிருக்கும். எனது கதைகளும் அவ்விரண்டு பாகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

நான் கண்டவை, கேட்டவை, அனுபவித்தவை சிலவற்றை கதைகளாகத் தந்திருக்கிறேன். இவை நீங்கள் கண்ட கேட்ட அனுபவித்தவற்றோடு ஒத்துப்போகக்கூடும். அந்தவகையில் ஒரு நினைவூட்டலாகக் கூட இக்கதைகள் அமையலாம், எது எவ்வாறாயினும் இனி இது உங்கள் கதைகளே.

இக் கதைகள் இன்று வெளிவருகிறது என்றால் அதற்கு முற்று முழுதான காரணம் எனது நண்பி திருமதி மாதவி சிவலீலனே. அவர் இந்தத் தொகுதி வெளிவர உதவியதோடு நின்று விடாமல் நல்லதொரு அணிந்துரையும் வழங்கி இருக்கிறார். அவருக்கு நன்றி என்ற ஒரு வார்த்தையைக் கூறினால் போதாது. ஆனாலும் அதற்கு மேல் ஒருவார்த்தை கிடையாததால் அந்த வார்தையையே என் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து வணக்கத்துடன் தெரிவிக்கிறேன்.

மிகுந்த நேர நெருக்கடியைக் கொண்டிருந்தபோதும் மறுக்காது இந்தத் தொகுதிக்கு நல்லதொரு வாழ்த்துரை வழங்கிய ரீற்றா பற்றிமாகரனுக்கும் எனது நன்றிகள் உரியன,

இதனை நூலுருவில் மிகச் சிறப்பாக வடிவமைத்துத் தந்த திரு. பூங்குன்றன் சுந்தரம்பிள்ளை அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

வாசுகி சொக்கன் நடேசன்
இத்தாலி

# 1.

## ஊனம் மனதுக்கல்ல

நேரம் அதிகாலை நாலரை இருக்கும். பக்கத்து வீட்டுச் சேவல் இரு தடவை கூவி அமைதியாகிவிட்டது. இன்னும் பறவைகள் விழித்துக் கொள்ளவில்லைப் போலும். அமைதியாக இருந்தது. மார்கழி மாதக் குளிருக்குப் போர்வையைத் தலைவரை மூடிக்கொண்டு படுத்திருந்த சந்திரன் விழித்துவிட்டான். ஆனால் கட்டிலில் இருந்து எழுந்து படிக்க மனம் அங்கலாய்த்தபோதும் உடலும் கண்களும் இன்னும் கொஞ்ச நேரம் படுத்திரு என அவனைக் கெஞ்சிக்கொண்டிருந்தன. அம்மாவின் அதட்டலோடு கூடிய அழைப்பை எதிர்நோக்கிப் பயத்துடன் காதுகள் கூர்மையாயின. நல்லவேளை அம்மா அயர்ந்து தூங்கியிருக்க வேண்டும். ஆறுமணிவரை அவனை எழுப்பவில்லை.

ஆறுமணிக்குத் தானாகவே எழுந்த சந்திரன் தன் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு அவசரமாகப் பாடசாலைக்குப் புறப்பட்டான். புத்தகங்களை அடுக்கியபோது பேனாவைக் காணவில்லை.

“ஏய் சாந்தா என்ர பேனையை எடுத்தனியே? மரியாதையோட தா, இல்லாட்டிப் பல்லுக் கழரும்.”

என்று தன் தங்கையை அதட்டினான். தங்கை குறைந்தவளா என்ன? அவளும் தமையனுக்கு சமனாகக் கத்தினாள். வார்த்தையில் தொடங்கிய சண்டை சாந்தாவைச் சந்திரன் அடித்ததோடு பெரிதாகி

“ஏய் இங்க என்ன சத்தம்?”

என்ற அப்பாவின் அதட்டலோடு அடங்கியது. இருவரும் மனதுக்குள் கறுவியபடி சாப்பிடப் போனார்கள்.

சாப்பாட்டு மேசையில் அமர்ந்திருந்த சந்திரனை உணவு பரிமாறிக் கொண்டிருந்த அம்மா வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தா. உயர்தர வகுப்புப் படிக்கும் இவனுக்கு இவ்வளவு

வளர்த்தியா..? எவ்வளவு வாரினாலும் அடங்காத மயிர்க் கற்றைகள் நெற்றியில் தவழ்ந்து தனியழகைக் கொடுத்தன. பெரிய கண்கள் நீண்ட நாசி என்பன அவனுக்கு மேலும் எடுப்பை வழங்கின. சிறு வயதில் தன்னிடம் ஓடிவரும் பொழுது எல்லாம் அவனது கால்களை அவள் இரசித்திருக்கிறாள்.

"என்னப்போல நேரா நட. காலைச் சவட்டி நடக்காதே"

என்று அவன் தங்கைக்கு அடிக்கடி சொல்லும் போது அதைக்கேட்டு மனதுக்குள் சிரித்திருக்கிறா. அவனது சுறுசுறுப்பும், குறும்புத்தனங்களும் மிகவும் இரசிக்கக் கூடியனவாகவே இருந்தன. படிப்பிலும் விளையாட்டிலும் சமஅளவு கெட்டித்தனத்தைக் காட்டியமை அந்தத் தாயுள்ளத்துக்கு பெருமையை அளித்தன. அவனை ஒரு எஞ்சினியராக எண்ணி மனதுக்குள் மகிழ்ந்தா.

சந்திரன் "என்னம்மா இப்படிப் பாக்கிறீங்கள்"? என்ற போதே தனது சுய நினைவுக்கு வந்தா அம்மா.

"அம்மா நான் இண்டைக்குப் பின்னேரம் பிந்தித்தான் வருவன் புட்போல் மாச் முடிய நேரமாகும்."

என்று கத்தியபடி சைக்கிளில் பறந்தான் சந்திரன்.

சந்திரன் படிப்புப் போலவே விளையாட்டிலும் மிகுந்த ஆர்வத்துடன் கலந்துகொள்வான். விளையாட்டுப் போட்டிகளில் எத்தனையோ பரிசில்களைப் பெற்றவன் அவன். அவன் மிகவும் விரும்பி விளையாடுவதும் திறமையை முழுவதும் வெளிப்படுத்துவதும் உதைபந்தாட்டத்திலேதான். இதனால் ஆசிரியர்களின் ஒருமித்த அன்பையும் பெற்றிருந்தான். அவனது இயல்பான திறமையும் எல்லோரையும் சமமாகப் பாவித்துக் கலகலப்பாய் பேசும் தன்மையும் அவனை மாணவர்களிடையே பிரகடனப்படுத்தாத தலைவனாய் மாற்றியிருந்தன. அவனது தலைமைப் பதவியைக் கண்டு மாணவர்கள் சிலர் பொறாமை அடைந்ததும் உண்டு.

பாடசாலைகளின் இறுதிச் சுற்று உதைபந்தாட்டப் போட்டி அன்று இடம் பெற்றது. சந்திரன் கோல் காப்பாளனாகத் திறமையாக விளையாடிக்கொண்டிருந்தான். பந்தாட்டத்தின் போது இரண்டு கோல்களை லாகவமாய்த் தடுத்தவன் மூன்றாவது கோலின் போது

கால் தடுக்கி விழுந்துவிட்டான். வலது கால் உடைந்து பறந்து விட்டது போன்ற ஓர் உணர்வைச் சந்திரன் அடைந்தான். நல்ல வேளை கால் இருந்த இடத்திலேயே இருந்தது, ஆனால் அவனால் மேற்கொண்டு விளையாட முடியவில்லை. அவனை உடனே அருகில் உள்ள ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றார்கள். டாக்டர் எலும்பு விலகியதாகவும் அது பொருந்த ஒருமாத காலம் செல்லலாம் எனவும் கூறிவிட்டார்.

“நீ விழுந்ததால ஞெசனல் மச்சில விளையாடிர சான்ச மிஸ் பண்ணிட்டியேடா “

என்று அவனது நண்பர்கள் அனுதாபப் பட்டுக் கொண்டார்கள்.

ஐயோ நீ விளையாட்டாட்டி எங்கட ரீமே தோத்துப் போயிடுமே”

என்று போலியாகவும் சிலர் அநுதாபப்பட்டுக் கொண்டனர்.

ஆனால் உண்மையோ பொய்யோ அனுதாபம் எதுவானாலும், அது சந்திரனுக்கு எரிச்சலையே மூட்டியது. ஆசிரியர்கள் அநுதாபம் தெரிவித்தபோது பொறுமையுடன் சகித்துக்கொண்டவனுக்கு நண்பர்கள் அநுதாபப்பட்டபோது கோபம் தலைக்கேறிவிட்டது.

“நிறுத்துங்கடா, நான் இப்ப செத்திட்டன் எண்டே அநுதாபப் பத்திரிகை வாசிக்கிறியள்? ஆரும் அநுதாபப்படுகிறதை நான் அடியோடு வெறுக்கிறன்”.

எனக் கத்தினான் சந்திரன். அவனுக்கு தான் விளையாட முடியவில்லையே என்பதைவிட அவர்கள் அநுதாபப்பட்டதுதான் அதிக கவலையை அளித்தது.

வீட்டுக்குச் சென்ற போது அப்பா சமாதானமாகத் தோளில் தட்டிவிட்டுச் சென்றுவிட்டார். அம்மாதான் மிகவும் அங்கலாய்த்துக் கொண்டா.

“உனக்கு வேணும்..... உன்ர கொழுப்புக்கு ஒரு மாசமாவது கட்டிலில் கிட அப்பத்தான் நான் அடி வாங்காமல் தப்பலாம்.”

மனதில் ஒருவகை நெருடல் இருந்தபோதும் அண்ணனை எதிர்க்க ஒரு சந்தர்ப்பம் வாய்ந்ததே என்று சாந்தா நினைத்துக் கூறியவை சந்திரனுக்கு உண்மையிலே சந்தோசத்தையே தந்தன.

நாள்கள் ஓடின. இடையிடையே நடக்கும் ஹர்த்தால்கள், குண்டுவீச்சுக்கள், ஷெல்லடிகள் இவற்றால் ஏற்படும் மரணங்கள் கண்ணீர் அஞ்சலிகள் என்பன பத்திரிகைகளின் பக்கங்களை நிரப்பிக் கொண்டிருந்தன.

அன்றும் ஓர் அனர்த்தமான நாள்தான். கோட்டை இராணுவ முகாமிலிருந்து இலங்கை இராணுவம் எல்லாத் திக்குகளும் தென்திசையே என்ற எண்ணத்தில் ஷெல்களை ஏவிக்கொண்டிருந்தது.

யாழ்ப்பாண நகரத்துப் பாடசாலைகள் அவசர அவசரமாய் மூடப்பட்டன. மாணவத் தலைவர்கள் வாங்குகளுக்குக் கீழ்ப் பதுங்குமாறு மாணவர்களை ஏவிக்கொண்டிருந்தனர். ஷெல்கள் இடையிடையே வெடிக்கும் சத்தங்கள் பதற்றமடைந்த மாணவர்களின் குரல்களையும் அமுக்கிக் கொண்டு நாராசமாய் ஒலித்தன.

சந்திரன் பரபரப்பும் பயமும் கலந்த ஓர் உணர்வுடன் தனது வகுப்பு மாணவர்களை வாங்குகளின் கீழ்ப் படுக்குமாறு கூறிவிட்டு அடுத்த வகுப்புக்குச் செல்லப் படியிறங்கிக் கொண்டிருந்தான். இரண்டு படிகள் தாண்டியிருப்பான்.

ஸ்ஸ்..... என்ற சத்ததுடன் தீப்பிழம்பொன்று தன்னை நோக்கி வருவதைக் கண்டு ஓ என்று கத்தினான். பின் அவனுக்கு நினைவில்லை.

சந்திரன் சிரமப்பட்டுக் கண்களைத் திறந்து சற்றுமுற்றும் பார்த்தான்.. பெற்றோரின் கலங்கிய விழிகளைச் சந்தித்த அவன் கண்கள் தானாகவே கலங்கின. தன்னைச் சுற்றியுள்ள சூழ்நிலையை ஒருவாறு உணர்ந்தபோது தான் ஆஸ்பத்திரியில் இருப்பதையும் தன்மேல் ஷெல் விழுந்திருக்க வேண்டும் என்பதையும் சந்திரன் ஊகித்துக்கொண்டான். அடைபட்டிருந்த செவிப்பறையிலே சிறிய சிறிய ஓசைகள் விழுகின்றன. அம்மாவின் விம்மலும் பொருமலும் துல்லியமாய்க் கேட்டன. உடலில் நெருப்பைக் காய்ச்சி ஊற்றியது போல எரிவு ஏற்பட்டது. வேதனை தாங்காது கத்தவேண்டும் போல் தோன்றினாலும் மேல் அண்ணமும் கீழ் அண்ணமும் ஒட்டிக்கொண்டு அவனது ஓலத்தைத் தடுத்தன. சிரமப்பட்டுக் கட்டுக்கள் நிறைந்த தனது உடலைச் சந்திரன் பார்த்தான். அவன் பார்த்த முதலிடமே அவனைப் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

வலது கால் இருந்த இடம்....?

அம்மாவால் இரசிக்கப்பட்ட கால்களில் ஒன்று.....

எத்தனையோ வீர சாகசங்களை விளையாட்டில் நிறைவேற்ற உதவிய பாதங்கள்...

இவற்றில் ஒன்று இருந்த இடத்தில் பாதி வெறுமையாய்..... இதற்கு மேல் தாழவில்லை..... அறிவிழந்து மயங்கினான்.

நாட்கள் நத்தையாய் ஊர்ந்தன. சந்திரன் ஆஸ்பத்திரியில் இருந்து வீட்டுக்கு வந்துவிட்டான். இந்த நாட்களில் அவன் சந்தித்தவையெல்லாம் சோகம் அப்பிய முகங்களே..... அவன் அடியோடு வெறுத்த அநுதாபத்தை பிரதிபலிக்கும் முகங்கள் அவை. கால் ஊனத்தால் ஏற்பட்ட கழிவிரக்கத்திலும் அவன் நெஞ்சத்தைச் சுட்டெரித்ததெல்லாம் பிறரின் அநுதாப வார்த்தைகளே..... எந்த நேரமும் எதிர்த்துப் பேசிச் சண்டையிடும் சாந்தாவின் முகத்தில் கூடச் சோகமும் அநுதாபமும் தெரிவதை அவனால் உணரமுடிந்தது.

“அண்ணை இந்தாங்கோ சுடுதண்ணி. உங்களை எழும்பவிடக் கூடாதாம். படுத்திருங்கோ.” என்ற தங்கைக்குப் பளார் என்ற அறைதான் பதிலாகக் கிடைத்தது. வேறு சமயம் என்றால் அங்கிருந்தபடியே கத்தத் தொடங்கும் தங்கை அன்று அழுதபடி அம்மாவிடம் போய்விட்டாள்.

மனப்பூர்வமாய் அவனுக்கு அநுதாப வார்த்தைகளைக் கூறிய நண்பர்கள் முகத்தில் கரி பூசிக்கொண்டார்கள்.

சுறுசுறுப்பும் மகிழ்ச்சியும் நிரம்பிய சந்திரனின் முகம் எள்ளும் கொள்ளும் வெடிக்கும் தாச்சியாய் மாறிப்போய்விட்டது. எதிலும் கோபம்...... அவன் செயல்களை யாரும் கண்டித்தால் கையிலிருக்கும் பொருட்களைப் போட்டுடைத்தான். அவன் சுபாவம் இந்த நாட்களில் முற்றாக மாறிவிட்டிருந்தது. அவன் என்ன..... அந்தச் சிறிய குடும்பமே மாறிவிட்டது..... அம்மா எந்நேரமும் தன்னைச் சுற்றி சுற்றிவந்து அடிவாங்கினாலும் தன் குறும்புகளைக் குறைக்காத சந்திரனை எண்ணி மாய்ந்து போனாள். அப்பா மௌனமாய்க் கண்ணீர் வடித்தார். சாந்தா பழையபடி அண்ணா எழுந்து என்னை அடித்துப் பேசிச் சண்டையிட மாட்டாரா? என்று ஏங்கினாள்.

அன்று அவனுக்கு ஜெய்ப்பூர்க்கால் பொருத்தப்பட்டது. முடமான காலில் அவனுக்கென அளவெடுத்துச் செய்யப்பட்ட

காலைத் தோற்பட்டியால் பொருத்திவிட்டனர். அவன் அந்தப் பொய்க்காலோடு நடந்துபயிற்சி செய்ய வற்புறுத்தப்பட்டான். அந்த மரக்காலோடு நடப்பது பெரும் சித்திரவதையாவே இருந்தது. காலில் ஏற்பட்ட எரிவும் சில காலமாய் மனதில் ஏற்பட்ட எரிவும் மரக்காலைக் கழற்றி எறிய வைத்தன.

டொக்டர் "ஒரு கிழமை போகட்டும். மனச்சோர்வு இன்னும் சந்திரனை விட்டு போகேல்லை"

என்று சந்திரனுக்கும் பெற்றோருக்கும் பலவாறு ஆறுதல் கூறி அனுப்பி வைத்தார். மீண்டும் சந்திரன் தனது அறையைத் தஞ்சமடைந்துகொண்டான்.

வெள்ளிக்கிழமை அவனைப் பார்க்க அவனது ஆங்கில ஆசிரியர் வந்திருந்தார்.

அவர் "நீ எழுதின ஆங்கிலக் கட்டுரைக்கு முதற்பரிசு கிடைச்சிருக்கு. பிரசெண்டா இதை நான் உனக்குத் தாரன்."

என ஒரு பார்சலை நீட்டினார்.

இத்தனை துன்பங்களுக்கு மத்தியிலும் சந்திரனின் கண்களில் புதியதொரு ஒளி பிறந்தது. ஆசிரியருக்கு நன்றி சொல்லிப் பரிசிலை வாங்கிய அவன் அவர் போனபின் பெட்டியைத் திறந்து பார்த்தான். அதில் ஒரு கசற் இருந்தது. அந்தக் கசற்றில் மயூரி என்ற பெயர் எழுத்தப்பட்டிருந்தது. போகமுன்பு ஆசிரியர் அம்மாவிடம்

"இதைக் கட்டாயம் சந்திரனுக்குப் போட்டுக் காட்டுங்கோ "

என்று கூறியது சந்திரனுக்கு ஞாபகம் வந்தது.

"எனக்குப் பொழுது போக மாஸ்டர் வழி சொல்லித்தாரார்."

என்று முணுமுணுத்தபடி அந்தக் கசற்றை அம்மாவைக் கொண்டு டெக்கில் போட்டுப் பார்த்தான்.

அந்தப் படத்தின் பாதிவரையும் எந்தவித உணர்வுமின்றிப் பார்த்துக் கொண்டிருந்தவன் மறுபாதியைப் பார்த்த போது மிகவும் உணர்ச்சிவசப்பட்டான். ஒரு தடவைக்கு இரண்டு தடவைகள் அப்படத்தை போடுவித்துப் பார்த்தான். கண்களில் அவனை அறியாமலே நீர் பெருகிற்று..

அந்த நீர்த்துளிகளின் முடிவில் ஓர் எதிர்கால ஒளி தெளிவாகத் தெரிந்தது. அவன் ஒரு தீர்மானத்துக்கு வந்திருந்தான்.

ஒரு காலை இழந்துங்கூட மனந்தளராது பொய்க்கால் பூட்டி மயூரி நடன ராணி ஆகலாம் என்றால் நான் ஏன் என்சினியர் ஆகக் கூடாது? என்ற கேள்வி அவனது மனதில் விஸ்வரூபம் எடுத்தது. இவ்வளவு காலமும் மனதிலிருந்த இயலாமையும் ஊனமும் நீங்கி அது லேசாய்ப் போயிற்று.

“அம்மா நாளைக்கு டொக்டரிட்டைப் போவம்.. தாயாரா இருங்கோ. “என்று சந்திரன் சொன்ன பொழுது அந்தக்குரலிலே தாழாத தன்னம்பிக்கையும் உறுதியும் நிலைத்திருந்தன. அம்மா அவன் சொன்னதைக் கேட்டு ஆச்சரியப்படவில்லை.

---

1991

# 2.

# கொட்டில்

அப்புவின் கண்கள் அந்தக் கொட்டில் இருந்த இடத்தில் நிலைத்திருந்தன. முன்பு அது இருந்த இடத்தில் மண்மேடு. சுடலைப்பிட்டி போல......

அப்பு என அழைக்கப்படும் அப்புத்துரை அறுபத்தைந்து வயதைதக் கடந்தவர். தமக்குச் சீதனமாக வந்த வீட்டின் முன்னால் தமது இருபத்தைந்தாவது வயதில் அந்தக் கொட்டிலைச் சிற்றாள் ஒருவரின் உதவியுடன் தமது கையாலேயே போட்டவர் அவர்.

இயல்பாகவே வலுவான உடல்..... தோட்டத்தைக் கொத்திக் கொத்தி வைரம் பாய்ந்த கைகள். எதையும் சாதிக்கத்துடிக்கும் இளமை வேகம்.

அப்பு தாமே தனித்து மரங்களைத் தூக்கிக் கூரைபோட்ட போது அவரது இளம் மனைவி கமலம் கிலியுடன் பிரமித்துப் பார்த்துக் கொண்டிருந்தது இன்னும் அவர் மனக் கண்ணில் நிழல் ஆடுகிறது.

செவ்வக வடிவில் அமைந்த ஒற்றை கூரைக் கொட்டில் அது. அதனைச் சுற்றி மண்ணால் அரைச்சுவர் எழுப்பி வாசலின் இரு பக்கங்களிலும் நேர்த்தியான திண்ணை போட்டிருந்தார். திண்ணையின் முகப்பில் சங்குகள் இரண்டைப் பதித்து அழகு செய்தார்.

தலைசிறந்த தச்சன், மேசன்களுக்கே உரிய தொழில் திறனும் ஒரு கலைஞனுக்கே உரிய செய் நேர்த்தியும் அழகும் அக்கொட்டிலில் மிளிர்ந்தன. வஞ்சகமில்லாத கூலியாளின் வியர்வை சிந்தும் உழைப்பு அக்கொட்டிலின் ஒவ்வோர் அணுவிலும் தெறித்தது.

மொத்தத்தில் அப்புவின் அழகுக் கனவின் உயர்ந்த வடிவமாகவே கொட்டில் காட்சி தந்தது.

அந்தக் கொட்டிலிலே அப்புவின் பெரும் பொழுது கழிந்தது. அதிகாலையில் எழுந்து தோட்ட வேலைகளை முடித்து வந்தவுடன்

கொட்டிலில் அமர்ந்து கொள்வார். கமலம் அங்கேயே காலைச் சாப்பாட்டைக் கொண்டு வந்து விடுவாள். பத்து மணியளவில் சுருட்டுச் சுற்றும் இரண்டு பிள்ளைகள் வருவார்கள். அவர்களோடு இணைந்து தாமும் சுருட்டுச் சுற்றுவார். இந்த வேலை பிற்பகல் இரண்டு மணிவரை தொடரும். அதற்குப் பின் மதியச் சாப்பாடும் கமலத்தால் அவ்விடத்துக்கே கொண்டு வரப்படும்.

அப்புவுக்குச் சைவ போசனம் கமலத்துக்கு மச்சமில்லாவிட்டால் சாப்பாடு இறங்காது. அதனால் இரண்டு சமையல் செய்யும் அவஸ்தை அவளுக்கு. கணவன் முகம் சுழிக்காமலும் ஆசாரம் தவறாமலும் சாப்பிடக் கொட்டில் வசதியாகப் போயிற்று.

நான்கு மணியளவில் அப்புவின் நண்பர்கள் வருவார்கள். தேநீர்க் கடை விரிக்கப்படும். வம்பர் மாசபை ஆரம்பமாகும். உலகத்து வம்புகள் கொட்டிலின் மூலை முடுக்குகள் எங்கும் எதிரொலிக்கும். அப்புவும் அவர் நண்பர்களும் விடுகின்ற சுருட்டின் புகை கொட்டிலைச் சூழ்ந்து மூட்டம் போடும்.

வெளியில் சென்றுவரும் அப்புவுடன் இரவு வேளைகளில் நிலா வெளிச்சத்தில் கொட்டிலில் இருந்து கதைப்பது கமலத்துக்கு இன்பமாகவே இருந்தது. இரவுச் சாப்பாட்டில் மச்சம் சேர்க்கும் வழக்கம் கமலத்துக்கு இல்லை. கொட்டிலிலேயே இருவரதும் உணவு முடிந்து விடும். நேரம் பத்தைத் தொடும்போதே கொட்டிலைவிட்டு இருவரும் நகர்வார்கள்.

விடிந்ததும் அப்புவின் முதல் தரிசனம் அந்தக் கொட்டில்தான்.

“எப்போதோ பிரிஞ்சு போன பிள்ளையைக் கனகாலத்துக்குப் பிறகு கண்டதுபோல் வாஞ்சையோட பார்க்கிறியள்.....”

என்ற மனைவியின் கேலி அவரை அர்த்தபுஸ்டியுடன் புன்னகைக்க வைக்கும்.

அப்புவின் பிள்ளைகள் வளர்ந்துவிட்டார்கள். கமலத்துக்கு இயலவில்லை வாதப்பிடிப்பு. முதுமையின் சாயல்கள் அவள் மீது படியத் தொடங்கிவிட்டன. குனிந்து வளைந்து வேலை செய்ய முடிவதில்லை. இப்போது கொட்டிலைப் பராமரிக்கும் பொறுப்பு மூத்தமகள் ரமணியை வந்தடைந்தது.

வெள்ளிக்கிழமைதோறும் கொட்டிலைச் சாணகத்தால் மெழுகுவதென்பது முதுகை ஒடிக்கும் வேலைதான். ஆனால் பஞ்சி அலுப்பென்று மெழுகாமல் விடமுடியாது. அப்பு ரௌத்திர தாண்டவம் ஆடுவார். தானே சாணகத்தை எடுத்துக் கொண்டு மெழுகப் புறப்பட்டு விடுவார்.

காலம் உருண்டோடியது. அப்புவின் ஐந்து குழந்தைகள் நடைபயில உதவிய கொட்டிலின் மண்சுவர் இன்று அயலவர்களின் குழந்தைகள் நடை பயில உதவுகிறது.

குழந்தைகளின் ஆட்டபாட்டமும் மழலையும் கொட்டிலை நிறைக்கும் வேளைகளில் இனம்புரியாத இன்பத்தில் திளைப்பார் அப்பு.

ரமணி பொறுமைசாலி..... ஒலெவலுக்குப் பின் ஆர்வம் இல்லாததால் படிப்பை நிறுத்திவிட்டாள். அப்புவிம் மூத்த பிள்ளைதான் அந்தக் கொட்டில் என்பது அவளுக்குத் தெரியும்.

“அப்பு உங்கட மூத்தபிள்ளையிண்ட கால் முறிஞ்சிருக்கு.... சரி பாருங்கோ.....” என்றவகையில் அவளே முறிவு ஒடிவுகளைச் சுட்டிக்காட்டி நகைப்பதுண்டு.

ஆனால் ரமணியின் திருமணத்துக்குப் பின் யார் மெழுகுவதென்பதில் பிரச்சினை தொடங்கியது.

கடைக்குட்டி சாந்தி..... நவநாகரிக..... மேட்டிமைக்காரி எதிர்காலத்தில் தனக்குச் சீதனமாகப் போகும் வீட்டின் பிரமாண்டமும் அழகும் அவளுக்கு பெருமிதத்தை அளித்தன. அந்த வீட்டுக்குக் கண்ணூறு போல..... வீட்டு முற்றத்தில் அந்தக் கொட்டில்..... அதில் அவளுக்கு அருவருப்பும் வெறுப்பும்..... பனையோலையால் வேயப்பட்ட கொட்டிலைப் பார்க்கும் பொழுதெல்லாம் அவள்முகம் பலகோணங்களாவது வழக்கமாயிருந்தது.

இதனால் சாந்தி கொட்டிலைப் மெழுகத் தீர்மானமாக மறுத்துவிட்டாள். ஒருநாள்

“உங்ளுக்குக் கொட்டில் வேணுமிண்டா இதைப் பிடுங்கிக்கொண்டு போய் அடிவளவுக்க போடுங்கோ.....”

என்று முகத்தில் அடித்ததுபோலக் கூறினாள்.

“ஓம் பிள்ளை, இண்டைக்குக் கொட்டில் பழசெண்டு மூலையில் போடச் சொல்லுவியள். நாளைக்கு நானும் கொம்மாவும் பழசுகள் எண்டு எங்களையும் மூலைக்குள் தள்ளிப் போடுவியள்” என்று விரத்தியுடன் பதில் சொன்ன அப்பு அன்று முதல் தாமே கொட்டில் தரையை மெழுகத் தொடங்கிவிட்டார். அந்த வேளைகளில் அவருக்கு ஒரு குழந்தையைப் பரிசிப்பது போன்ற இன்பம் கிட்டியது.

அப்புவின் பிடிவாதத்துக்கு ஒருபடி மேலேயே சாந்தியின் பிடிவாதம் இருந்தது. அப்புவின் இச்செயல் அவளது மனதை இளகவைப்பதற்குப் பதில் வைரிக்கவே செய்தது. கொட்டில் மீதான வெறுப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது.

அவள் பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது அவளது தோழிகள் வீட்டுக்கு அடிக்கடி வந்து போவார்கள். அவர்களது பார்வை நவநாகரிகத்துக்கு ஒவ்வாத கொட்டிலின் மீது ஏளனத்துடன் சென்று படிவது வழக்கம்..... அப்பார்வையின் இலக்குப் பலவேளைகளில் சாய்மனைக் கதிரையில் வெற்றிலை போட்டுக் குதப்பிக் கொண்டிருக்கும் அந்தக் காலத்து அப்புவை நோக்கியும் திரும்புவதுண்டு.

அவ்வேளைகளில் சாந்தி வேதனையுடன் பெருமூச்சு விடுவாள்.....

கொட்டிலைப் பிடுங்குமாறு அப்புவை நச்சரிப்பதும் ஆனால்.....

சுருட்டுச் சுற்ற வேறு கொட்டில் போட வேணுமே, அது சில ஆயிரங்களை விழுங்கிவிடுமே என்று கூறி அப்பு மறுப்பதும் நாள் தவறாத நிகழ்வுகளாயின. ஆனால் பொம்மரும் செல்களும் வீடுகளை நொருக்கத் தொடங்கிய பின்பு கொட்டில் பற்றித் தனது கடுமையான விமர்சனத்தை வெளிப்படுத்தச் சாந்தியால் முடியவில்லை.

காலத்தின் கோலம் வலிகாம மக்கள் இடம்பெயர்ந்து தென்மராட்சியிலும் வடமராட்சியிலும் தஞ்சம் புக நேர்ந்தபோது அவ்வாறு வந்தவர்கள் பலருக்கு அப்புவின் வீடு அடைக்கலம் அளிக்கத் தவறவில்லை.

சாந்தியின் பல்கலைக்கழகத் தோழி சுமதி தன் பெற்றோர் உடன் பிறப்புக்களோடு சாந்தியின் வீட்டைத் தேடிவந்தபோது, வீடு நிரம்பியிருந்தது. அப்புவின் கொட்டிலையே அவளுக்கு வழங்க

வேண்டியதாயிற்று.

அப்புதமது பெரியவீட்டிலே யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்த அறுபதுபேர்களில் ஒருவரானார். சாமி அறைமட்டுமே அவர் குடும்பத்துக்கென்றாயிற்று.

காற்றோட்டமான கொட்டில் இல்லாமல் சனப்புழுக்கத்திலும் காற்று அதிகம் புகாத அறையின் வெக்கையிலும் அப்பு வெந்துபோனது உண்மைதான். ஆனால் எல்லாவற்றுக்கும் மேலாகத் தம் உயிரோடு கலந்த கொட்டில், ஓர் உயிர்ப் பொருளாகவே எண்ணிப் பழகிய கொட்டில் ஒரு குடும்பத்துக்கு வாழ்விடமானதில் அவருக்கு எல்லையற்ற மகிழ்ச்சி.

ஆனால் அக்கொட்டில் குமர்ப் பிள்ளைகளோடு கூடிய சுமதி குடும்பத்துக்கு வசதியானதா என்பதில் அவருக்குச் சந்தேகம். கல் வீட்டில் தனியறைகளில் வாழ்ந்து பழகிய சுமதிக்கும் அவள் சகோதரிகளுக்கும் சாக்குகளாலும் ஓலைத்தட்டிகளாலும் மறைக்கப்பட்ட தனியறை அமைப்பில்லாத அக் கொட்டில் வசதிக் குறைவாவே இருக்கும் என்பது அவர் கணிப்பு.

சுமதியின் குடும்பம்.... கொட்டிலில் சில அசௌகரியங்கள் இருந்தாலும் காற்றுத்தேவதையின் பூரண கிருபையால் மகிழ்ச்சியாகவே இருந்தது.

“ஏன் பிள்ளை சுமதி! உங்களுக்கு உந்தக் கொட்டில் வசதிக் குறைவாகவே இருக்கும். வேற வசதிசெய்து தரவும் முடியேல்ல” அப்புவின் ஆதங்கம்.

“இல்லை அப்பு இந்தக் கொட்டில் பெரிய மாளிகை மாதிரிக் கிடக்கு. உங்கட உதவியை நாங்கள் ஒருநாளும் மறக்கமாட்டம்.”

இவை சுமதியின் மன ஆழத்தில் இருந்து வந்த உண்மையான வார்த்தைகள்.

அவை அவர் வருத்தத்தை ஆற்றி ஒரு வகை திருப்தியைத் தந்தன.

இடம் பெயர்ந்தவர்கள் ஊருக்குத் திரும்பிவிட்டார்கள். அப்புவின் கொட்டில் உட்பட வீடே வெறிச்சோடிவிட்டது. ஆனால் வெகு விரைவிலேயே அந்த வெறுமையிலிருந்து அப்பு தம்மை ஆசுவாசப்படுத்திக் கொண்டார். பழையபடி அவர் வாழ்க்கை கொட்டிலில் பூத்துக் குலுங்கியது.

புதிய மரங்கள் போட்டு கூரை வேய்ந்து கொட்டிலை மேலும் செம்மைப்படுத்தினார். தமது கொட்டில் பிள்ளையின் குமரிப்பருவப் பொலிவைக் கண்டு களிக்கும் பூரிப்பு அவருக்கு.

ஆனால் சாந்தியின் நச்சரிப்பும் தாக்குதல்களும் மீண்டும் புதிய கோணத்தில் தொடங்கிய பொழுது.....

சாந்திக்கு மாப்பிள்ளை பார்க்கச் சாதகக் கட்டை எடுத்தபோதுதான், சாந்தியின் காதல் விவகாரம் அப்புவுக்குத் தெரியவந்தது. அப்பு அவள் காதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. அவளோடு படித்த குமரனுக்கு அவளை கட்டிக்கொடுப்பதாகத் தீர்மானமாயிற்று..... அப்பு தாமிருந்த வீட்டைச் சீதனமாகக் கொடுத்தபோதும்..... மாப்பிள்ளை வீட்டார் காசாகப் பத்துலட்டசமும், டொனேசனாக ஐந்து லட்சமும் கேட்ட போது அப்பு திணறித்தான் போய்விட்டார். வெளிநாட்டில் உள்ள அவரது ஆண்பிள்ளைகள் மூவரும் கை கொடுத்ததால் விசயம் ஒரு மாதிரி ஒப்பேறியது.

அன்று குமரன் சாந்தியைப் பார்க்க வந்தான்..... அவனது பார்வை கொட்டிலில் அருவருப்பாய்ப் படிந்தது. கொட்டிலில் வெற்றிலை பாக்கைக் குதப்பிக்கொண்டிருந்த அப்புவின் முகத்திலும் அந்த அருவருப்பின் எச்சில் படாமலில்லை.

“குமரன் நல்ல டீசன்ரான ஃபமிலியில வந்தவர். அவற்றை அப்பா என்சினியர்..... அம்மா ரீச்சர்..... அவயின்ற வீடு கச்சேரி நல்லூர் றோட்டில இருக்கு..... வாடகை வீடுதான். ஆனாலும் நல்ல பாஃசனான வீடு”

என்று அன்றே பூர்வாங்கத் திட்டத்தோடு சாந்தி அப்புவினருகில் வந்தாள்.

“அதுக்கென்ன?”

அப்புவின் கேள்விக்கு நாகபாம்பாய் சீறினாள் சாந்தி.

“இந்த வீட்டுக்கு முன்னாலை அசிங்கமான இந்தக் கொட்டில் வேண்டாமாம். கலியாணத்துக்கு முன்னால பிடுங்கிப்போடுங்கோ.”

“பிடுங்காட்டில்”

“கலியாணம் நடக்காது..... கருமாதிதான் நடக்கும்.”

சாந்தியின் நெஞ்சில் ஒடுங்கியிருந்த அக்கினிக் குஞ்சு வார்த்தைகளாய்ப் பரந்து அப்புவைச் சுட்டது.

அப்பு மௌனித்தார்..... அந்த மௌனம் அவரின் தோல்விக்கும் சரணாகதிக்கும் அறிகுறி...

வேட்டியை இழுத்து மடித்துக் கட்டிக் கொண்டு வாயிலிருந்த சுருட்டை ஒரு ஓரமாக வீசி எறிந்தார். தோளில் இருந்த துண்டை தலைப்பாகையாகக் கட்டிக் கொண்டார். சிற்றாளின் உதவியோடு போட்ட கொட்டிலை தனியாகப் பிரித்துப் போடத் தொடங்கினார்.

அவரிடம் இதுவரைகாணாத ஒரு வேகமும் விரத்தியும் சேர்ந்தே கிடந்தது. சுட்டெரிக்கும் வெயிலைக் கூட அவரால் உணரமுடியவில்லை. கொட்டிலின் ஒவ்வொரு பகுதியையும் பிரித்துப் போடுகையில் அவரது ஒவ்வொரு உறுப்புபையும் பிடுங்கி எடுப்பதுபோன்ற வேதனையில் துடித்தார்.

உழுதுவிட்ட நிலம்போலக் கிடந்த அப்புவின் முகத்தில் ஆழமான கண்களிலிருந்து அடிக்கடி நீர் ததும்புவதும் பின் அந்தக் கரடு முரடான முகத்தைவிட்டு கீழே விழுவதற்குமுன் அங்கேயே வற்றுவதுமாக..... முழுத் துன்பத்தையும் தன்னுள்ளே விழுங்கிமுடித்தார் அப்பு.

வளைகள், தூண்கள் சலாகைகள் ஒவ்வொன்றுமாய்த் தமது நெஞ்சில் விழுந்து பெருங்காயத்தை உண்டாக்குவதாய் உணர்ந்தார்.

ஆனால்.....

சாந்தியின் முகத்தில் வெற்றிக் களிப்பு..... என்றுமில்லாத பிரகாசம்.

அவள் நான்கைந்து சாடிகளில் பூச்செடிகளைக் கொண்டுவந்து கொட்டில் இருந்த இடத்தில் ஒழுங்காக வைத்தாள்.

அப் பூச்செடிகளின் நடுநாயகமாக கள்ளிச்செடி ஒன்று ஒரு பூச்சாடியில் கம்பீரமாய் வீற்றிருந்தது.

---

சுந்தரன், கலை இலக்கிய சமூக ஏடு, 1998

# 3.

# பாப்பாவுக்கு ஒரு நாள் கழிகிறது.

மகிழ்ச்சியான கனவில் திளைத்திருந்த பாப்பாவுக்கு அம்மாவின் அதட்டலான அழைப்புக் குரல் நாராசமாய் விழுந்தது. அவளின் இனிய கனவினை அது கலைத்து நினைவுக்கு இழுத்து வந்தது.

"பாப்பா... பாப்பா எழும்பு. எழும்படி நேரம் ஐஞ்சாச்சு..."

பாப்பா சோம்பல் முறித்தபடி படுக்கையில் இருந்து எழுந்தாள். அவள் எழும்புவதற்கே காத்திருந்தது போல சுவர்க்கடிகாரத்திலிருந்து வெளிப்பட்ட சின்னக்குருவி ஐந்து தடவை கடிகாரத்தைக் கொத்தி ஒலி எழுப்பிவிட்டு மறைந்து போகிறது. லண்டனில் இருந்து மாமா அனுப்பி வைத்த கடிகாரம் அது. வந்த நாளிலிருந்து நாள் தவறாது தனது இன்பக் கனவுலகை அது கலைத்துச் சிதைப்பதனால் அதன் மீது பாப்பாவுக்கு அளவுகடந்த வெறுப்பு..... கோபம்.....

ஆனால் வெறுப்பையும் கோபத்தையும் தன்னுள்ளே விழுங்கிக்கொள்வதைத் தவிர அவளால் என்னதான் செய்ய முடியும்?அந்தக் கடிகாரம் போன்று, அம்மா என்ற பற்றரியின் இயங்கு விசையால் இயங்குவதற்கே பிறந்தவள் அவள்.

அம்மா அப்பாவுக்குச் செல்லப் பாப்பா ஆகவும் பாடசாலை ஆசிரியருக்கு மகிழினி ஆகவும் சக மாணவிகளுக்கு மகிழ் ஆகவும் விளங்கும் அந்தச் சிறுமி வேண்டா வெறுப்போடு சென்று தனது படிப்பு மேசையின் முன்பு நாற்காலியில் அமர்ந்தாள்.

தூக்கம் முற்றாகக் கலையாது தேங்கிவிட்ட கண்களைத் திறப்பதே பெரும் சிரமமாகவிருந்தது. திறந்த விழிகளைப் பாடப் புத்தகத்தின் ஒவ்வொரு எழுத்தும் பூதமாய் மாறிப் பயமுறுத்தியது. ஆனாலும் அவள் ஆறு மணி ஆகும் வரை அங்கிருந்து அசைய முடியாது. படித்தே ஆகவேண்டும்.

படிப்பதுபோலப் பாசாங்கு செய்யவும் முடியாது.

அம்மாவின் கண்களும் காதுகளும் சர்வவல்லமை படைத்த கடவுளுடையவை போல சர்வவியாபகமானவை என்பது பாப்பா அனுபவபூர்வமாகப் பெற்ற முடிவு.

அன்றைக்குரிய பயிற்சிகளைச் செய்து முடிக்காவிட்டால் அம்மாவின் பயங்கரக் கோபத்துக்கு ஆளாக நேரிடும். பரதேசி, மொக்கு, சாக்கு என்று லட்சார்ச்சனையில் இறங்கிவிடுவா.

பாப்பா புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடையாவிட்டால் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் தலையிறக்கம். கௌரவக் குறைச்சல் ஏற்படுமாம்.

அப்பா வங்கி ஒன்றில் முகாமையாளர். அம்மா பாடசாலை அதிபர். அவர்களுக்குத் தங்கள் ஏகபுத்திரி தங்களிலும் சிறந்த படிப்பாளி என்று பெயர் எடுப்பது மட்டும் தான் நோக்கம் அல்ல. அப்பாவின் வங்கியிலே சிற்றூழியனாய் உள்ள முத்தையாவின் மகன் சென்ற வருடம் புலமைப்பரிசில் பரீட்சையில் சிறப்பாகச் சித்தி பெற்றதற்காக,அவன் வாயெல்லாம் பல்லாக வந்து வங்கி ஊழியர்களுக்கு கன்டோஸ் வழங்கிக் கொண்டாடியது, இவர்களுக்கு மன உறுத்தல். சாமானியன் மகன் சிறப்புச் சித்தி பெற்றால் சகல வசதிகளுமுடைய தங்களின் ஏக புத்திரி யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயே முதன்மைச் சித்தி பெற வேண்டாமா.....?அந்த வெற்றியை அவர்கள் பெரிய பார்ட்டி கொடுத்துக் கொண்டாடாதுவிட்டால் அவர்களின் கௌரவம் என்னாவது...?

பக்கத்து வீட்டுச் சேவல் பெருங்குரல் எடுத்து விடியலைக்கூவி அழைக்கிறது.

வெள்ளைவெளேர் என்ற பால்வண்ண மேனியும் இரத்தச் செம்மையோடு கூடிய சொண்டுமுள்ள அந்தச் சேவல் கம்பீரமாய் நடந்து வருவதைக் காணப் பாப்பாவுக்குக் கொள்ளை ஆசை. நான்கு பக்கச் சுவர்களுக்கிடையே அடைக்கப்பட்டுக் கிடக்கும் அவளுக்கு அந்தக் காட்சி என்றைக்கும் கானல்நீர் தான்.

காலைக் கதிரொலியிலே பொன்மணிகளாய் நெல்மணிகளைச் சுமந்து கொண்டு, மெல்லிய காற்றின் தழுவலிலே கிறங்கிப் போய்

அசைந்தாடும் நெற்கதிர்கள், அவளின் சின்னஞ் சிறிய உள்ளத்திலே ஏற்படுத்தும் களிப்பினை என்ன என்பது.....?

பக்கத்து வீட்டுப் பிள்ளைகளோடு கிளித்தட்டு, கெந்தல், கோக்கான், பசுவும் புலியும் ஆட்டம் முதலான விளையாட்டுக்களை விளையாடுகையில் ஏற்படும் உற்சாகம் அம்மா பழக்கும் பாற்மின்ரனில் அவளுக்கு என்றும் உண்டானதில்லை.

சென்ற ஆண்டு விடுமுறைக் காலத்தில் கண்டி சென்று அங்கு கண்ட அழகிய இயற்கைக் காட்சிகளிலே நெஞ்சைப் பறிகொடுத்தது இன்றும் நினைவிலே பசுமை அழியாமல் நிலைத்திருக்கிறது, பாப்பாவின் உள்ளத்திலே பொங்கிப் பூரித்து விரிகின்ற சின்னச் சின்ன ஆசைகள் பெரும்பாலும் நிறைவேறாமல் போவதுதான் வழக்கம்!

பாப்பா மேசையில் புத்தகத்தை விரித்த நிலையில், இன்னும் பாதிக் கண்களை மூடியபடியே கற்பனையுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள்...

“நங் “என்ற சத்ததுடன் அவளின் தலையில் பலத்த குட்டு! அம்மாவின் இந்த எதிர்பாராத தாக்குதல் அவளை நிஜ உலகுக்கு அழைத்து வந்தபோது தலையில் ஏற்பட்ட கொடிய வலி அவளை பதைபதைத்துக் கிறுகிறுக்க வைத்தது.

பாடசாலையில் அன்று நடைபெறப்போகும் ஆங்கிலப் பேச்சுப் போட்டியின் முதற்சுற்றுக்கு ஆயத்தம் செய்யாமல் மகள் புத்தகத்தை விரித்து வைத்துக் கொண்டு தூங்கிவழிகிறாளே! அந்த ஆதங்கத்தின் வெளிப்பாடுதான் பலமான அந்தக் குட்டு.

பாப்பாவின் விழிகளிலே நீர் முத்துக்கள் உருண்டோடின. அம்மாவின் செய்கை சினத்தைக் கிளப்பியது.

அவள் சிறுமிதான். ஆனால் பெரும் பிடிவாதக்காரி. கைகால்களை உதறியபடி..... விம்மிப் பொருமியபடி..... ஓடிச் சென்று கட்டிலில் சுறுண்டு படுத்துவிட்டாள்.

இனி அம்மா என்ன? ஆண்டவனாலும் அவளை அசைக்க முடியாது.

அம்மாவின் கோபம் ஆரோகண கதியில் ஏறியது.

சமையல் வேலை ஒரு புறம், கடமைக்குச் செல்ல வேண்டிய நிர்பந்தம்

மறு புறம்.

அதிபர் வேலைப்பளு, கணவனின் ஒத்தாசையின்மை, இத்தனைக்குமிடையே மகளின் குணமறிந்திருந்தும் அவளைச் சீண்டிவிட்ட குற்ற உணர்வு, அதிகாலைப் பொழுதில் அவளின் தலையைப் பதம் பார்த்ததால் வந்த கழிவிரக்கம்..... எல்லாம் சேர்ந்து அவவின் சீற்றத்தைக் கணவன் மீது திசை திருப்பிவிட்டன.

வங்கியில் முதல்நாள் மாலையில் இடம் பெற்ற பிரியாவிடையில் கலந்து கொண்டு இரவு பத்துமணியளவில் நிறை வெறியுடன் வந்து படுத்தவர்தான், தலையணை ஒன்றைத் தழுவியபடி இன்னும் குறட்டை விடுகிறார்.

“இங்கையப்பா உங்கட செல்லப்பிள்ளையிண்ட திமிரப் பாருங்கோ. அவ இண்டைக்குப் பள்ளிக்கூடம் போகாமல் மட்டம் போடப் பிளான் போடுறா. வந்து பாருங்கோ..”

அம்மாவின் குரல் அப்பாவின் காதைக் குடைந்தது. எரிச்சலோடு அவர் உருண்டு மறு பக்கம் படுக்கிறார்.

“பிள்ளையத் தலையில வைச்சுக் கூத்தாடிறதும் நீர்தான். இப்ப குட்டிப்போட்டு அழவைச்சதும் நீர்தான். எனக்கேன் சொல்லுறீர். நீர்பாடு உம்மட பிள்ளை பாடு.” அப்பா தொடர்ந்து பேசவுமில்லை. படுக்கையிலிருந்து எழும்பி வரவுமில்லை.....

“எனக்கென்ன? அவள் எக்கேடாவது கெட்டுப் போகட்டும். நீங்கள் குசாலாய் நித்திரை கொள்ளுங்கோ.”

விரத்தியின் விளிம்பில் தகப்பனையும் மகளையும் ஏசி விட்டு அம்மா அடுக்களைக்குள் நுழைந்து கொண்டா.

பாப்பாவுக்கு அப்பாவிலும் அம்மாவிலும் கோபம் கோபமாய் வந்தது. தன்னில் அவர்களுக்கு அக்கறையில்லை, அன்பு இல்லை என்று அவ்வேளையில் நினைத்துக் கொண்டாள்.

“நான் காய்ச்சலாய் படுத்திருக்க வேணும். இவையின்ர நடப்பு அப்பதான் தெரியும். இண்டைக்கு அம்மா எவ்வளவு கெஞ்சினாலும் சாப்பிடவே கூடாது” என்று அவள் உறுதி செய்து கொண்டாள்.

ஆனால் பாடசாலை போவது....?

இந்த ஆர்ப்பாட்டத்தில் நேரம் 6. 30ஐத் தொட்டுவிட்டது. 7. 15க்கு பஸ் நிலையம் சென்றால் மட்டுமே பாடசாலை பஸ்சில் இடம் கிடைக்கும்.

பாப்பா பரபரப்போடு எழுந்தாள். இன்று பாடசாலை போகாவிட்டால் நாளை லீவுக் கடிதமில்லாது வகுப்பாசிரியை வகுப்புக்குள் அனுமதிக்க மாட்டா. அம்மா கடிதம் தருவதும் சந்தேகம்தான். அதோடு இன்று அவளின் பிரிய தோழி அவளுக்குப் ரோஜா பூக்கள் கொண்டுவந்து தருவதாக உறுதி அளித்திருக்கிறாள்.

வகுப்பாசிரியரின் கண்டிப்பும் தோழியின் ரோஜாப் பரிசும் பாப்பா பள்ளி செல்ல வேண்டும் என்பதை முடிந்த முடிவாக்கிக் கொள்ள வைத்தன.

பாப்பா அவசர அவசரமாக காலைக்கடன்களை முடித்தாள். வழக்கமான குளிப்பு அன்று இல்லை. அம்மாவின் உதவிகளையும் நாடமுடியாது.

பாப்பா முகம் கழுவி, விபூதி பூசி படத்திலுள்ள தெய்வங்களுக்கு சலாம் போட்டு, அரைகுறையாகப் பவுடரை முகத்தில் அப்பி, தனக்குத் தெரிந்தபடி தலைவாரி, பாடசாலைச் சீருடை அணிந்து பள்ளிக்குப் புறப்பட, நேரம் 7. 00 என்று காட்டியது.

அம்மா சாப்பிட அழைத்தா.

“உங்கட சாப்பாட்டை நீங்களே சாப்பிடுங்கோ” என்று சீறி விழுந்துவிட்டு புத்தகங்களை அவசர அவசரமாகப் பைக்குள் திணித்துக்கொண்டு பஸ் நிலையம் நோக்கிப் புறப்பட்டுவிட்டாள்.

அம்மா பலவந்தமாகத் தந்த சாப்பாட்டுப் பெட்டியை பெற்ற போது அதன் கனத்திலிருந்து காலை மதியம் இரு நேரங்களுக்குமான சாப்பாடு அதனுள் இருந்தது தெரிந்தது. எனினும் மதிய இடைவேளைக்கு முன்பு சாப்பாட்டைத் தொடக்கூடாது என்று தீர்மானித்துக் கொண்டாள்.

அம்மாவுக்கு “றற்றா” காட்டாமல் புறப்பட்டது என்னமோ போலிருந்தாலும் அவவின் கண்களிலே நீர் திரளுவதைக் கடைக் கண்ணால் பார்த்தபோதிலும் மனதைக் கல்லாக்கிக் கொண்டு பாப்பா பஸ்நிலையத்தை நோக்கி ஓட்டமும் நடையுமாகச் சென்றாள்.

பாப்பா விழுந்தடிக்குக்கொண்டு சாவகச்சேரி பஸ் நிலையம் வந்த

போது பாடசாலை பஸ் புறப்படத் தயாராயிருந்தது. "ஏதோ வீட்டில வேலை செய்து கொட்டிற மாதிரி வாற நேரத்தைப் பார். இண்டைக்கு உம்மால் ஐந்து நிமிசம் லேற்" என்று பஸ்நடத்துனரின் முணுமுணுப்பினைப் பொருட்படுத்தாமல் அவள் பஸ்சில் ஏறி மாணவக் கிழங்கடுக்கினுள் தானும் ஒருத்தியானாள்.

இதுவரை அடக்கியிருந்த அழுகை பீறிக் கொண்டு வெளிவருவேன் என்று பயமுறுத்தியது. மிகுந்த சிரமத்துடன் அடக்கிக் கொண்டாள்.

வாகன நெருக்கடி காரணமாக பஸ் ஆங்காங்கே நின்று தாமதித்தே செல்ல வேண்டியிருந்தது. ஒருவாறு பஸ் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல தனியார் மகளிர் பள்ளியை வந்தடைந்தது. தரிப்பிடத்தில் இறங்கி ஓட்டமும் நடையுமாய்ப் பாடசாலை சென்றடைந்தபோது நேரம் 8. 35

பிராத்தனை முடிந்து வகுப்புத் தொடங்கி ஐந்து நிமிடங்களாகி விட்டன.

நேரம் பிந்தி வந்ததற்காய் வகுப்பாசிரியை வெளியில் பத்து நிமிடங்கள் நிற்குமாறு பணித்தா.

பசிக்களை, பஸ்ஸில் நசுங்குண்ட களை, ஓடியும் நடந்தும் வந்த களை எல்லாம் சேர்ந்து அவளை அலைக்கழித்தன. கால்கள் கெஞ்சின. ஆனால் இன்னும் பத்து நிமிடங்கள் அங்கே நின்றாக வேண்டும் நின்றாள்.

வகுப்பில் நுழைந்தவளுக்கு பாடத்தைச் சரியாகக் கவனிக்க முடியவில்லை. இரண்டாம் பாடம் தமிழ். ஆசிரியை தந்த பயிற்சி களைச் செய்து வரவில்லை என்பதற்காக ஆசிரியையின் ஏச்சுக்களை வாங்கிக் கட்டிக் கொண்டாள். ஏற்கெனவே நொந்துகிடந்த அவளின் பிஞ்சு மனம் வகுப்பறையில் தனக்குக் கிடைத்த அவமானத்தால் வெதும்பிப் போயிற்று.

அடுத்து வந்த ஆங்கிலப்பாடமும் தொடர்ந்து வந்த இரு பாடங்களும் ஆங்கிலப் பேச்சு முதற் சுற்றுக்கென ஒதுக்கப்பட்டன.

ஒவ்வொரு தடவையும் ஆங்கிலப் பாடப் பேச்சில் முதலாவதாகவோ அல்லது இரண்டாவதாகவோ வருவதை வழக்கமாகக் கொண்ட பாப்பாவால் இன்று அது கைகூடவில்லை..... அம்மாவின்

அச்சுறுத்தலால் பேச்சினைக் கரைந்த பாடமாக ஆக்கியிருந்த போதிலும் மன உடற்களைப்புகள் ஒருசேர இணைந்து அவளை ஐந்தாம் இடத்துக்குத் தள்ளிவிட்டன. முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களே அடுத்த சுற்றுக்குத் தகுதியடையமுடியும்.

அம்மாவை நினைக்க நினைக்க அவளுக்குப் பயமாக இருந்தது.

வெளிப்பட அழுவதற்கு கூசி மனதிற்குள்ளேயே குமுறியழுதாள் பாப்பா. தோழியின் ஆறுதல் மொழிகளும் அவள் தந்த ரோஜாப் பூக்களும் அவளின் கவலை நோவுக்கு ஒத்தடம் கொடுக்கத் தவறிவிட்டன,.

இடைவேளையில் சாப்பாடும் கசந்தது..... அதன் பெரும்பகுதியை வெளியே வீசிய பொழுது வழக்கமாக வெளியே காத்திருக்கும் காகங்கள் சாப்பாடு நிலத்தில் விழ முன்பே “லபக்” என்று கவ்விக் கொண்டன. பக்கத்தில் சாப்பிட்டுக் கொண்டிருந்த தோழி well caguht girls என்று சொல்லிச் சிரித்தது அவளுக்கு ரசிக்கவில்லை.

இடைவேளைக்குப் பின்பு நடந்த பாடங்களும் அவளின் மூளைக்குச் செல்லவில்லை. அவளின் சோர்ந்து வாடிய முகத்தைக்கண்டு கணித பாட ஆசிரியை காரணம் கேட்ட போது தலைவலி என்று கூறிச் சமாளிக்க வேண்டியிருந்தது.

ஒருவாறு **2. 30** க்கு பாடசாலை விடும் மணி அடித்ததும் வாசலில் நின்ற பஸ்ஸில் ஏறிக் கொண்ட போது பாப்பா முற்றாகக் களைத்திருந்தாள். பஸ் சாவகச்சேரிப் பஸ் நிலையத்தை வந்தடைந்த போது நேரம் **3. 43**

பாப்பா வீட்டை அடைந்த போது அம்மா இன்னும் பாடசாலையில் இருந்து வந்திருக்கவில்லை. இன்றுபாடசாலையில் ஆசிரியர் ஒன்றுகூடல் இருக்கிறது என்று நேற்று மாலை அப்பாவுக்குச் சொன்னது ஞாபகம் வந்தது. ஆங்கிலப் பேச்சுப் போட்டி முடிவு காரணமாக அம்மாவிடம் உடனடியாக ஏச்சு வாங்கத் தேவையில்லை என்றது பாப்பாவுக்கு சற்று ஆறுதலாய் இருந்தது.

ஆனாலும் அந்த ஆறுதலை அனுபவிக்க முடியாதபடிக்கு புலமைப் பரீட்சைக்கு ஆயத்தம் செய்வதற்காக அம்மாவால் ஒழுங்கு செய்யப்பட்ட ஆசிரியர் வந்து சேர்ந்தார். பாப்பாவுக்கு எல்லாமே சலிப்பாகவும் வெறுப்பாகவும் இருந்ததன,

உடைமாற்றி முகம் கால் கழுவி தாகத்துக்குத் தண்ணி அருந்திய பின் ஆசிரியரின் முன் வந்து அமர்ந்தாள். ஆசிரியர் திறமைசாலி. மிக நுணுக்கமாகக் கணக்குகளை விளக்கும் திறன் படைத்தவர். அன்றும் அவர் தமது கடமையைச் சரிவரச் செய்தபோதிலும் பாப்பாவின் மூளைக்குள் அவை சென்று சேரவில்லை.

எல்லாம் சிதம்பர சக்கரமாக இருந்தன.

5. 00 மணிக்குப்பாடம் முடிந்தது அம்மாவும் வந்தா. சோறு பரிமாறினா. அதிகாலையில் சமைத்த சோறு விறைத்துப் போயிருந்தது. பல மணி நேரம் பசி கிடந்த வயிறு ஒட்டிப் போய் சோற்றை விழுங்குவதே சிரம்மமாய் இருந்தது. அம்மாவின் பாடசாலையில் ஏதோ பெரிய பிரச்சனை நடந்திருக்க வேண்டும். வழமைபோல் பாப்பாவிடம் பள்ளியில் என்ன நடந்தது எனக் குடைந்தெடுக்காது ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தா. பாப்பாவும் சாப்பிட்டதாய்ப் பெயர் பண்ணிவிட்டு எழுந்து நாட்டிய வகுப்புக்குத் தயாரானாள்.

நடனத்தில் பாப்பாவுக்கு மிகுந்த விருப்பம். அவள் வீட்டிலிருந்து கூப்பிடு தொலைவில்தான் பரதநாட்டியம் பயிற்றுவிக்கும் ஆசிரியரின் வீடு இருந்தது. 5. 30 இல் இருந்து 7. 00 மணிவரை அந்தப் பயிற்சி தொடரும்.

நாட்டியத்தில் அவளுக்கிருந்த அபாரமான திறமை காரணமாக ஆசிரியை எதிர்வரும் சரஸ்வதிபூசை கலைவிழாவில் அரங்கேறவிருந்த நடன நிகழ்ச்சியில் அவளுக்கு முதன்மையான பாத்திரத்தை வழங்கியிருந்தா.

நடன வகுப்புக்கு வரவிருந்தபோது இருந்த உற்சாகம் பயிற்சியின் போது பாப்பாவை விட்டு ஓடிவிட்டது. உடற் சோர்வும் களைப்பும் தாளம் தப்பி ஆடவைத்தன. பதத்துக்கும் பாவத்துக்கும் தொடர்பு அறுந்து போனது. வழக்கத்துக்கு மாறான அவளது தவறுகள் நடன ஆசிரியை முகம் சுழிக்க வைத்தன. ஆசிரியரின் மனநிலை வேறு பாப்பாவை கவலையில் ஆழ்த்தியது.

மாலை 7. 00மணிக்கு வீடு வந்தவளுக்கு மேசையில் வடையும் தேநீரும் காத்திருந்தன. அவற்றை உண்டும் அருந்தியும் ஓரளவு சோர்வு நீங்கினாலும் களைப்பு வந்து அவளை மூடிக்கொண்டது.

சில மணித்தியாளங்களாவது படுக்கையில் சரிந்து ஆறுதல் கொள் என்று உடலும் மனமும் கெஞ்சின, ஆனால் அம்மா ஆங்கிலப் பாடம் படிக்கவருமாறு அழைக்கிறா.....

பாப்பாவுக்கு தலை சுற்றியது. கண்கள் மங்கி இருண்டு போயின. நாற்காலியிலிருந்து விழவிருந்த பாப்பாவை நோக்கி அம்மா பதற்றத்துடன் ஓடிவந்தா.....

---

சஞ்சீவி, 15–5– 1999

# 4.

## போர்முகம்

அடிக்கடி வேரோடு பிடுங்கப்பட்டு மீண்டும் மீண்டும் வெவ்வேறு இடங்களில் நடப்படும் பயிர்கள் எல்லாம் பிழைத்துக் கொள்வதில்லை. சில செத்து மடிந்து விடுகின்றன. சில உயிருக்காய் ஊசலாடுகின்றன. ஒரு சில மட்டுமே மீண்டும் தளிர்த்துத் துளிர்விடுகின்றன. இப்படித்தான் யாழ்ப்பணத்து மக்களும் அடிக்கடி வேரோடு பிடுங்கப்படுகிறார்கள். அவர்களது ஆணிவேர்கள் அறுந்துபோகின்றன.

எனது சிந்தனையை பஸ்சின் இரைச்சல் துண்டிக்கிறது. ஆர்வமாய்த் தெருவை நோக்குகிறேன். மூளாய் வீதியிலிருந்து நெல்லியான் சந்தி முடக்கில் திரும்பி, சுழிபுர வீதியால் இராணுவ வாகனம் ஒன்று மிகவேகமாகச் செல்கிறது. ஏமாற்றத்துடனும் சலிப்புடனும் நேரத்தைப் பார்க்கிறேன். மணி 7.30 ஐக் காட்டுகிறது. எனது காத்திருப்பு முப்பது நிமிடத்துளிகளை விழுங்கிவிட்டது.

காத்திருப்பு-

பஸ்சுக்கு.....

கப்பலுக்கு..... நிவாரணத்துக்கு.....

காணாமல் போனவருக்கு.....

பட்டியல் நீள்கிறது.

காத்திருப்பே தேசத்தின் தலைவிதியாகி.... மீண்டும் பொறுமையாய் காத்திருந்தேன்.....

நானும் வேரோடு பிடுங்கப்பட்டவள்தான். ஆணிவேருக்கு மண் அணையாய் அக்கா குடும்பத்தின் ஆதரவு கிட்டியது.

அக்கா வீட்டில் எல்லா வசதிகளும் இருந்தது உண்மையே..... ஆனால், சுழிபுரத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்குத் தினமும் பஸ்சில்

பயணிப்பதென்பது நரக வேதனையாகவிருந்தது. எண்ணச் சுழியில் அகப்பட்ட மனம் அது இழுத்த இழுப்புக்கெல்லாம் சுழல்கிறது.

மேலும் பத்து நிமிடத்துளிகள் காத்திருப்பில் கரைகின்றன..... பள்ளிக்குப் பிந்திச் செல்லுகையில் அதிபரின் பார்வை ஊடுருவித் துளைக்கும். அதில் கோடிடும் வெறுப்புக்குறி என்னைச் சங்கடத்தில் ஆழ்த்தும்.

வேதனை..... சலிப்பு..... கோபம்..... உணர்வுகள் போட்டியிடக் காத்திருப்புத் தொடர்கிறது.

7. 45 க்கு மிக வேகமாக மினிபஸ் ஒன்று வந்து நிற்கிறது. அவசர அவசரமாய் பஸ்ஸில் ஏறி அமர்கிறேன்.

மினிபஸ் புறப்பட்டபோது அதனைத் துரத்தியபடி இ. போ. ச பஸ் ஒன்று நெல்லியான் முடக்கில் திரும்பி முந்திச் செல்கிறது.

எனது மனம் அங்கலாய்த்துக்கொள்கிறது. இ.போ.ச. பஸ்ஸில் பயணம் செய்வதில் சில ஆதாயங்கள் உண்டு. பயணிகளின் எண்ணிக்கையில் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லாமையால் நேரச் சிக்கனம் கூடியது. இராணுவச் சோதனைச் சாவடியில் பரிசோதனை சற்றுக் குறைவு.

இ.போ.ச. மினிபஸ் இரண்டும் ஒன்றுக்கொன்று குரோதத்துடன் போட்டியிட்டுப் பறக்கின்றன. மினிபஸ் சாரதி இ.போ. ச. சாரதியைத் திட்டித் தீர்க்கிறார். தமது பிழைப்பில் மண்ணைப் போடும் சாரதி மீது ஏற்பட்ட கொதிப்பில் நெருப்புத் துண்டங்களாய் வார்த்தைகள்.....

மினிபஸ்ஸின் வேகம் எனக்கு ஆறுதலைத் தருகிறது. குறித்த நேரத்தில் 15 நிமிடங்களையாவது மிச்சம் பிடிக்கலாம்.

மினிபஸ் சாரதியின் வார்த்தைகள் தடித்து காதில் வாங்க முடியாதனவாக வக்கரித்து வெளிப்படுகின்றன. எனது கவனத்தைத் தெருவில் செலுத்துகிறேன்.

மினிபஸ் சங்கானைத் தரிப்பிடத்தில் திடீர் பிரேக்குடன் குலுங்கி நிற்கிறது. வயிற்றுப் பிழைப்புக்காக மினிபஸ்ஸை ஒட்டத்தொடங்கிய சாரதியால் வீம்புக்கு வேட்டையாட முடியவில்லை.

கொதிக்கும் வார்த்தைகளால் தூஷித்தபடி நிதானமாக பஸ்ஸை

ஓயவைக்கிறார். கிளீனர் இறங்கி அருகில் இருந்த தேநீர்க் கடையில் சென்று அமர்கிறார். அவரது நிதானம் பஸ் உடனே புறப்படப் போவதில்லை என்பதைச் சொல்லாமல் சொல்லியது. அவர்களுக்கு அவர்களது பிழைப்பு. எனக்கு?..... என்னைப் போன்று அங்கே ஏறியிருந்த ஏனைய பயணிகளுக்கு.....

வேதனை சலிப்பு விரத்தி போன்ற உணர்ச்சிக் கலவையுடன் பஸ்ஸில் உள்ளவர்களை நோட்டமிடுகிறேன்....

அவர்கள் முகங்களிலும் சலிப்பும் அவசரமும்..... சிலர் தங்கள் சலிப்பை வாய்விட்டுக் கூறுகிறார்கள்.

எனது பார்வை எனது இருக்கைக்கு சமாந்தரமான இருக்கையில் அமர்ந்திருக்கும் சிறுமியில் படிகிறது. அழகும் ஆரோக்கியமும் நிறைந்த அவளுக்கு 15-16 வயதுக்கு மேல் இருக்காது. அவள் சீருடை அணியவில்லை. ஆனால் நிச்சயமாக மாணவியாகத்தான் இருக்க வேண்டும். துடைத்து விட்டது போல பளபளக்கும் அவளது முகத்தில் சூழலின் பாதிப்பு அதிகமாய்த் தெரியவில்லை. ஆனால்..... அவளது வயதுக்கு மீறிய ஓர் உணர்வு..... இறுக்கம்..... தற்செயலாகத் திரும்பிய அவள் எனது பார்வையின் ஊடுருவலை தவிர்க்கவோ என்னவோ..... சட்டென மறுபக்கம் திரும்பிக் கொள்கிறாள்.

முணுமுணுப்பாய்த் தொடங்கி, பயணிகள் இப்பொழுது, சாரதியை பஸ்ஸை எடுக்குமாறு வற்புறுத்தினர். சில பயணிகள் பஸ்ஸில் புதிதாய் ஏறுகிறார்கள். பஸ்ஸில் இருக்கைகள் நிரம்புகின்றன. அதனால் திருப்தியடைந்ததாலோ, அல்லது பயணிகளின் அதிருப்தியை விரும்பாததாலோ சாரதி பஸ்ஸை எடுக்கிறார். கிளீனர் வந்து தொற்றிக்கொள்கிறார்.

பஸ் பதினைந்து நிமிட தாமதத்தின் பின் ஊரத் தொடங்குகிறது. சங்கானைக்கு அடுத்துவந்த பஸ் தரிப்பில் சில பயணிகள் ஏறுகின்றனர். அவர்களோடு ஓர் ஆச்சியும்..... முதுமையும் நோயும் கோடிடத் தள்ளாடி நிற்கும் கிழவிக்கு இடங் கொடுக்க அங்கு யாரும் முன்வரவில்லை. பயணித்தவர்களில் மிகவும் இளமையான அந்தச் சிறுமி எழுந்து இடம் கொடுப்பாள் என எதிர்பார்த்து அவளைத் திரும்பிப் பார்க்கிறேன். ஆனால் ஜன்னலுக்கு வெளியே வெறித்து நோக்கிக் கொண்டிருந்த அவள் அசையவில்லை.

நான் எழுந்து அந்த ஆச்சிக்கு இருக்கையை வழங்கினேன். மலர்ந்த முகத்துடன் கிழவி இருக்கையில் அமருகிறார்.

ஆசிரியை என்பதைப் பறைசாற்றும் எனது தோற்றம்..... உடை..... எனது செயலைப்பார்த்த பின்னாவது அச்சிறுமியில் மாற்றம் ஏற்படுகிறதா எனத் திரும்பிப் பார்க்கிறேன். அவள் முகத்தில் தெரிந்த உணர்வு..... எது? என்னால் மட்டிட முடியவில்லை. எனது பார்வையைத் தவிர்க்க மீண்டும் தலையைத் திருப்பிக் கொள்கிறாள்.

என்னுள் அவள் மீது சிறிது வெறுப்பு முகிழ்க்கிறது." இக்காலத்தில் மாணவர்கள்..... ஆசிரியர், பெரியோரை மதிப்பதில்லை"

சட்டம்பித்தன எதிர்பார்ப்புகள் புறக்கணிப்புக்கு உள்ளாகும் போது இயல்பாக எழும்பும் வெறுப்பு அது. மெல்ல பஸ் சண்டிலிப்பாய் தடை முகாமில் வந்து நிற்கிறது. பஸ்ஸில் உள்ள அனைவரையும் இறங்கச் சொல்லும் கனத்த உத்தரவு இராணுவத்திடம் இருந்து பிறப்பிக்கப்படுகிறது.

"எல்லோரும் இறங்கிறது. ஒருத்தரும் இருக்க வேணாம்."

நேற்று இராணுவ அணியினர் மீது கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டதன் எதிரொலி அந்தக் கண்டிப்பான குரலில் தொனிக்கிறது..

இறங்கி நடக்கிறேன். முதியவர்கள் சிலரைத் தவிர இளம் வயதினர் இறங்கி வருகின்றனர். அந்தச் சிறுமி இறங்கி வருகிறாளா? என நோட்டமிடுகிறேன். அவள்இறங்கிநடப்பதில்எனக்குஅற்பசந்தோசம். ஆனால் அவள் இறங்கவே இல்லை! "இதுகள் இப்படி இறங்காமல் விடுரதால தான் அவங்களும் நேரத்தை மினக்கடுத்திறாங்கள். தங்களை விட்டால் ஆக்களில்லை எண்ட நினைப்பு. நாங்களெல்லாம் விசருகளே? இறங்கி நடக்க திமிர். உடம்பு முழுக்கத் திமிர்"

நான் பெற்ற துன்பம் பெறுக இவ்வையகம் என்ற வக்கிரத்தின்

விளைவா?..... அல்லது இன்றைய பொழுதுகளின் பாதகநிலைமைகள் ஏற்படுத்திய மன உளைச்சல்களுக்கெல்லம் வடிகாலாக அந்தச் சிறுமி அமைந்தாளா?:..... எனக்குப் புரியவில்லை.

இராணுவத்திடம் அடையாள அட்டையைக் காட்டிவிட்டு தெரு ஓரத்தில் பஸ்ஸூக்காகக் காத்திருக்கிறேன்.

மீண்டும் பஸ்ஸில் ஏறிக் கால் கடுக்க நிற்கிறேன். இப்பொழுது பயணிகள் அதிகரித்திருந்தமையால் நெரிசல் அதிகமாக இருந்தது. வியர்வை ஒருபுறம் மிக அருகில் ஒன்றோடு ஒன்று மோதும் மூச்சுக்காற்று மறுபுறம்..... அருவருப்புணர்வு மேலிடுகிறது. “ஆராவது இறங்க மாட்டார்களா,இருப்பதற்கு ஓர் இடமும் கிடைக்காதா?” என ஏக்கமாக இருக்கிறது.

அவளது இருக்கையின் கம்பியை பிடித்தபடி முதியவர் ஒருவர் நிற்கிறார்.

அச்சிறுமியை பார்க்கப் பிடிக்கவில்லை. முகத்தைத் திருப்பிக்கொள்கிறேன்.

பஸ் மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோயிலடியில் உள்ள இராணுவச் சோதனைச் சாவடியில் நிற்கிறது..... மீண்டும் எமது கீழ்ப்படிவான அடிமைத்தனத்தை எடுத்துக் காட்ட “ஒக்கம பஹிண்ட”..... இறக்கப் படுகிறோம்.

பெண் பொலிஸின் ஸ்பரிச தீட்சை பெற்றுப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் மீண்டும் காத்திருக்கிறேன். பிள்ளையார் எம்மைப் பார்த்து என்றும் போல் சிரிக்கிறார்.

இப்பொழுதாவது அச்சிறுமி இறங்குகிறாளா?.... ஏமாற்றம்தான் மிஞ்சுகிறது. இம்முறை எப்படியாவது இருக்க இடம் பிடித்திட வேண்டும் என்ற வேகத்துடன் பஸ் வந்தவுடன் விரைவாக ஏறுகிறேன்.

சிறுமியின் பக்கத்தில் இருந்தவர் மருதடியில் இறங்கியிருக்க வேண்டும். இருக்கை காலியாக இருந்தது.

அவசர அவசரமாக அவ்விருக்கையில் அமர்கிறேன்.

எனக்கு வசதியாக இடம் தருபவள் போல் சற்று நகர்ந்து இருக்கிறாள். அவளது இறுகிய முகம் சற்றுத் தளர்கிறது. சிறுகோடாய் புன்னகை நெளிகிறது..... அடுத்தகணமே மறைகிறது. மீண்டும் ஜன்னலுக்கு வெளியே வெறித்து நோக்குகிறாள்.

நேரம் 8. 40ஐத் தொட்டுக்கொண்டிருந்தது பாடசாலக்கு 9. 30 க்கு முதல் நான் போய்ச் சேரமுடியாது என்பது உறுதியாயிற்று. தலைக்கு மேல் வெள்ளம் போன பின் சாண் ஏறினால் என்ன முழம் ஏறினால் என்ன என்ற விரக்தி நிலைக்கு வந்திருந்தேன்.

முன்னே இராணுவத்தின் பவள் வாகனம் ஒன்று தெருவை நிறைத்தபடி மிக வேகமாக வரவே பஸ்சாரதி திடீர் பிறேக் போட்டு விபத்தைத் தவிர்த்துக் கொள்கிறார்.

எனது மடியில் இருந்த கோப்புக்களில் இருந்த காகிதங்கள் பரந்து விழுந்தன. அச்சிறுமி தன்னிச்சையாக குனிந்து காகிதங்களைப் பொறுக்கித்தரத் தொடங்குகிறாள். நானும் குனிந்து அக்காகிதங்களைப் பொறுக்க முனைந்த பொழுது......

மின்சாரத்தால் தாக்குண்டவள் போல் அதிர்ச்சியுடன் நிமிர்கிறேன். அச்சிறுமியின் பாதங்களில் ஒன்று.....?இத்தேசம் இன்னும் எத்தனை பேருக்கு ஜெயப்பூர் கால்களைப் பரிசாக வழங்கப் போகிறதோ.....?

கேள்வி பெரிதாக எழுந்து பயமுறுத்துகிறது. போரின் அவலங்களின் தாற்பரியங்களைத் தரிசித்தபோது எனது மன உளைச்சல்கள் மிக அற்பமானவை என்பது புரிந்தது.

மானசீகமாக அந்தச் சிறுமியிடம் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

---

தினக்குரல், 1–4– 2001

# 5.

## ஆலய தரிசனம்

அபிராமியம்மா மீளாத்துயிலில் ஆழ்ந்திருந்தா. வெள்ளை வெளேறென்ற அவவின் முகத்தில் ஒரு நாணயம் அளவு குங்குமப்பொட்டு மிளிர்ந்து கொண்டிருந்தது. நிரந்தரப் புன்னகையொன்று இதழ்க்கடையில் விரிந்து முகத்தை மேலும் பொலிவுபடுத்தியது.

வாழ்வினை நிறைவாக அனுபவித்துப் பூர்த்தியாக்கிச் சுமங்கலியாகப் போகிறேன் என்ற நினைப்பு அவரது புன்னகைக்குக் காரணமாகலாம்.

இந்தக் காலத்தில் பூட்டப்பிள்ளையைக் காணும் வரை வாழ்வது சாதாரண காரியமா?

அதிக நோயாலும் அறுபது ஆண்டுகளாகத் தம் ஜீவனோடு கலந்து விட்டவளின் பிரிவைத் தாங்க முடியாமலும் உண்டான துயரங்களைத் தன்னுள் அடக்கி அந்த நினைவுச் சுழியில் அமுங்கியிருந்த பரமசாமியைத் தவிர இந்த மரணத்தை அவரது குடும்பம் இயல்பாக ஏற்றுக் கொண்டது போல இருந்தது. ஒப்பாரி முதலிய சடங்காசாரங்களின்றி சாயி பஜனைக் குழுவின் உருக்கமான பக்திப் பாடல்கள் மட்டும் அந்த வீட்டில் ஓங்கி ஏதோ ஒருவகையான அமைதியை நிலவப் பண்ணியது.

அபிராமியம்மா, பரமசாமி தம்பதியருக்கு ஐந்து பிள்ளைகள். பரமசாமி கச்சேரியில் கிளார்க்காக உத்தியோகம் பார்த்த போதும் தமது பரம்பரைத் தொழிலான தோட்டத் தொழிலையும் விடவில்லை. அபிராமியம்மா இவரது தோட்டத்தில் தானும் ஒருத்தியாகப் பாடுபட்டிருக்கிறார். இதனால் அவர்களது செவ்வையான வாழ்வில் வறுமை எட்டிப் பார்த்ததில்லை. மூன்று மகன்களையும் படிப்பித்து எஞ்சினியர், டொக்ரர் எனப் பெரியவர்களாக்கி விட்டார்கள். பெண்களிலொருத்தி நேர்ஸ். கடைக்குட்டி சாந்தா ஆசிரியை.

கடைசி மகன் கொழும்பில் வசிக்கிறார். சாந்தா ரீச்சர் மட்டுமே யாழ்ப்பாணத்தில் குடும்பத்தோடு இருக்கிறார். ஏனைய பிள்ளைகள் குடும்பமாக வெளிநாடுகளில் வசிக்கிறார்கள்.

கொழும்பிலிருந்த மகன் தாயைப் பார்க்கச் சென்ற கிழமைதான் யாழ்ப்பாணத்துக்குக் குடும்பத்தோடு வந்திருந்தார். அந்த மகிழ்ச்சியின் பூரிப்பு அபிராமியம்மாவிடம் தெரிந்ததை நான் இங்கு வந்திருந்த போது நன்கு அவதானித்தேன்.

“ஓம் குஞ்சு நான் வாழ்க்கையில அனுபவிக்க வேண்டியதெல்லம் மகிழ்ச்சியா நிறைவா அனுபவிச்சிட்டன். அந்தக் கந்தன் என்னை எப்பவும் கைவிடேல்ல.” அப்போது அவ எனக்குச் சொன்ன வார்த்தைகள் இவை.

உலகில் வாழும் எத்தனை சீவன்கள் இத்தகைய திருப்தியை அனுபவிக்கின்றன? வாழ்க்கை கரடுமுரடாக இல்லாவிட்டாலும் தமது செயல்களால் வலியக் குத்தி குதறி எத்தனை பேர் தங்களையும் மற்றவர்களையும் காயப்படுத்திக் கொள்கின்றனர்.

அபிராமியம்மாவின் வாழ்வுக்குத்தான் எத்தனை அர்த்தங்கள். எத்தனை பரிமாணங்கள்.

“நேற்று அம்மா எங்களோட அண்ணாவோட எல்லாம் கதைச்சிட்டு பதினொரு மணியளவிலதான் படுத்தவ. அப்பா நாலுமணியளவில எங்களை எழுப்பி “அம்மாவுக்கு என்னமோ செய்யுது..... ஒருக்கா வாங்கோ” எண்டு கூப்பிட்டார். நாங்கள் எல்லோரும் சுற்றி நிண்டம். அம்மா தண்ணி கேட்டிட்டு எல்லோரையும் ஒரு முறை பார்த்தா. அவவின் பார்வை கடைசியில அப்பாவில நிலைச்சுது. அண்ணா தண்ணி பருக்க ஒருவாய் குடிச்சா. அதோட சீவன் போட்டுது.” பெற்ற தாயின் கடைசி நிமிடங்களை விபரிக்கும் போது சாந்தா ரீச்சரிடம் ஒரு கேவல் எழுந்து ஒரு கணம் அந்த வீட்டை அதிரச் செய்தது.

எனக்குள் முட்டி மோதிக் கொண்டிருந்த துயரம் எத்தனையோ பிரயத்தனம் எடுத்தும் அடக்க முடியாது ரீச்சரின் கேவலோடு இணைந்து வெளிப்பட்டது. எல்லோரும் அதிசயமாக என்னை நோக்கினர். என்னை நான் கட்டுப்படுத்திக்கொண்டு முழங்கால்களுக்குள் என்னைப் புதைத்துக் கொள்கிறேன்.

“அபிராமியக்காவிண்ட சாவு போல ஆருக்கு வரும். மனிசி நோய் நொடி எண்டு எதுவுமில்லாமல் குடும்பத்துக்கு நேற்றுவரை உதவி செய்து கொண்டல்லே இருந்தது.” ஏறத்தாழ சம வயது மீனாட்சியின் சொல்லில் யதார்த்தம் மட்டுமல்ல ஆதங்கமும் இருக்கத்தான் செய்தது.

பஜனைநிறுத்தப்பட்டு கிரியைகள் ஆரம்பமாகின்றன. அபிராமியம்மா, ராமசாமி தம்பதிகளின் வாழ்க்கைச் சிறப்பு அங்கு அலை மோதிய சனங்களின் பெருக்கத்தில் தெரிந்தது.

கிரியைகள் விரைவாக நிகழ்ந்தேறுகின்றன. அபிராமியம்மாவை இறுதியாக என் கண்களுக்குள் அகப்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற துடிப்பு உந்த அவவின் உடலுக்கு மிக அருகில் சென்று நிற்கிறேன்.

பேரப்பிள்ளைகள் பந்தம் பிடித்து அபிராமியம்மா மீது தங்களுக்குள்ள உரிமையை நிலை நிறுத்தி நிற்கிறார்கள். அவர் கண்களில் அன்புப் பாட்டியின் இழப்பால் ஏற்பட்ட துயரம் கண்ணீராய் வழிகிறது. அவரது பிள்ளைகள் அவரை வலம் வந்து வணங்குகிறார்கள்.

எனது கண்கள் அபிராமியம்மாவின் முகத்தில் நிலைக்கிறது. அங்கு அவர்கள் தங்கள் தாயைக் கிடத்தியிருக்கிறார்கள்.....?

இல்லை எனது தெய்வமே..... கண்கள் குளமாகின்றன. அந்தத் தெய்வத்தை ஒரு முறையாவது வலம் வந்து கும்பிட வேண்டும் என்ற உந்துதல் என்னையும் மீறி..... எனது மூளையின் கட்டளைக்கு அல்ல இதயத்தின் கட்டளையை ஏற்றுக் கால்கள் முன்னேறுகின்றன. அம்மாவின் மிக நெருக்கமான உறவினரோடு நானும் அவரை வலம் வருகிறேன். எனது தெய்வத்தின் கால்களைக் கட்டிக்கொண்டு கதறுகிறேன். என்னோடு மேலும் இரு பெண்கள் இணைந்து கதறுகிறார்கள்.

எங்கள் கண்ணீரால் அபிராமியம்மாவின் பாதங்கள் நனைகின்றன. எங்கள் அழுகை சில நிமிடத்துளிகளை விழுங்குகிறது.

எங்களது இச்செயலின் தாற்பரியம் புரியாது சாந்தா ரீச்சர் உட்பட அனைவரும் திகைத்து நிற்கிறார்கள்.

**1987** கார்த்திகை மாதம்.....எங்கள் பிரதேசத்தின் அமைதி முற்றாக அழிந்து போயிருந்தது. அன்று இரவு பன்னிரண்டு மணியிருக்கும். இரண்டு துவக்குச் சூடுகள் அந்தகாரத்தைக் கிழித்துக்கொண்டு

எழுந்தது. அதனைத்தொடர்ந்த பல சூடுகள்..... இராணுவம் நடமாடும் ஓசைகள்..... நாய்களின் குரைப்பொலி..... அந்தக் கிராமத்தின் நித்திரையை முற்றாகக் குழப்பிவிட்டது.

மனதில் இனம் புரியாத பீதியுடன் போர்வைக்குள் என்னை முடக்கிக் கொள்கிறேன். அக்கா, அத்தான் எழும்பிக் கதைத்தது பிள்ளையை எழுப்பியிருக்க வேண்டும். அது வீரிட்டுக் கத்துகிறது. அக்கா அதைச் சமாதானப் படுத்தப் பிரயத்தனப்படுகிறா.

குழந்தையின் அழுகை இராணுவத்தின் கவனத்தை ஈர்த்துவிடுமோ என்ற பயம் என்னைக் குடைகிறது. வேர்வையால் தெப்பமாய் நனைந்துபோகிறேன். நெஞ்சுப் படபடப்பு காதுவரை கேட்கிறது.

நான் பயந்தது போலவே..... இராணுவம் வேலியை வெட்டி உள்ளே வருகிறது. நாய் அவர்கள் வருகையை கட்டியம் கூறுவது போல ஊளையிடுகிறது..

தடார்.. தடார்... எனத் தட்டப்படுகிறது கதவு. கோடிப்பக்கமாக இராணுவத்தின் அழுத்தமான சப்பாத்து ஒலி..... எனது அறை யன்னல் அருகே கறுத்த உருவமாய் ஒரு ஆமி..... அவன் ஆக்ரோசமாக யன்னலில் துவக்கால் ஓங்கியடிக்கிறான். யன்னல் கண்ணாடி கலீர் என்ற ஓசையுடன் சுக்கு நூறாய் உடைந்து விழுகிறது.

கட்டிலில் கிடந்த நான் ஒரு கணம் செயலற்றுப் போகிறேன். இரத்தம் உறைந்து கால் கைகள் விறைத்து போகின்றன. தப்பு..... தப்பு..... என்று மனக்குரல் என்னை அறையில் ஊர்ந்து வெளியேற வைக்கிறது. அக்கா குழந்தையுடன் கோலுக்குள் வந்து நிக்கிறா. அவவின் பின் போய் ஒடுங்குகிறேன். கதவு மேலும் ஆக்ரோசமாகத் தட்டப்படுகிறது. இனியும் கதவு திறக்கப்படாவிட்டால் கதவு உடைக்கப்படும் என்பதையும் அதன் விளைவு பயங்கரமானதாய் இருக்கும் என்பதையும் கணித்துக் கொண்ட அத்தான் கதவைத் திறக்கிறார். அத்தானை வேகமாகத் தள்ளியபடி திபு திபு என்று உள்நுழைந்த இராணுவம் ஒவ்வொரு அறையாக நுழைந்து வருகிறது. ஹிந்தியில் ஏதோ பேசியவாறு வந்த ஒரு ஜவானின் பார்வை என்னில் நிலை குத்துகிறது.

நான் ஒடுங்கிப்போகிறேன்..... உடம்பு நடுங்குகிறது. அந்த இடத்திலேயே உயிர் போய் விடக் கூடாதா என மனம் ஏங்குகிறது.

ஒரு கணப் பொழுதில் அத்தான் தாக்கப்படுகிறார். அக்கா எவ்வளவோ கதறியும் கெஞ்சியும் பலனின்றி நான் அவர்களால் இழுத்துச் செல்லப்படுகிறேன். தப்புவதற்கு என்னால் எடுக்கப்பட்ட எல்லா முயற்சியும் தோற்றுப் போகக் கிட்டத்தட்ட மயக்க நிலையை அடைகிறேன்.

அந்த உடைந்து பாழடைந்திருந்த வீட்டுக்கு இழுத்துவரப்பட்டபோது அங்கு கிட்டத்தட்ட 20 பேர் அளவில் எங்களூர்ப் பெண்கள்..... அநேகர் என்னோடுபடித்த தோழிகள்......

பலிக்கடாக்களான எங்களைச் சுற்றி இறைச்சியை உண்ணக் காத்திருக்கும் வெறிபிடித்த பசி நாய்களாய் இராணுவம்.

எங்கள் இறுதிக் கதறல்..... மண்டபத்தில் எதிரொலித்து எங்களிடமே திரும்பிவருகிறது. எங்களில் பலர் மயங்கி விழுகின்றனர். வாழ்க்கையின் இறுதி நம்பிக்கைத்துளியும் என்னுள் வறண்டு போகிறது.

அப்பொழுதுதான் அந்தப் பேரதிசயம் நிகழ்கிறது. அபிராமியம்மா இராணுவ அதிகாரியோடு அபிராமி அம்மனே தன் பரிவாரங்களுடன் தோன்றியதாய்.....

இராணுவ அதிகாரிகளைக் கண்ட போது வெறிநாய்கள் சலூட் அடித்து மெல்ல நழுவப் பார்கின்றன. ஆனால் அதிகாரிகளின் கட்டளை அவர்களுக்குரிய தண்டனையின் தன்மையை விளக்குகிறது. அவர்கள் மற்றைய இராணுவத்தால் பிடிக்கப்படுகிறார்கள்.

நாங்கள் அபிராமியம்மாவைக் கட்டிக் கொண்டு அழுகிறோம். அதிகாரிக்கு நன்றி சொல்லி எங்களை அவ பொறுப்பேற்றுக்கொள்கிறா. தெய்வத்தை தொடரும் பக்தைகளாக நாம்.....

அபிராமியம்மவின் அயல் விட்டுப் பெண்ணான கலா பிடிக்கப்பட்டபோது அபிராமியம்மா அவளை விடுவிக்க இராணுவத்தோடு எவ்வளவோ போராடியிருக்கிறா. துவக்குப் பிடியினாலான அடியே அவவுக்குப் பரிசாகக் கிடைக்கிறது. அவ்வாறு போராடியபோதே அங்கு இராணுவ அதிகாரி எவரும் இல்லாததை அனுமானித்துக்கொள்கிறா. இராணுவம் போனபின் அந்தப் பயங்கரமான கண்ட இடத்தில் சுடும் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள வேளையில் தன்னுயிரைப் பற்றி சிறிதும் பொருப்படுத்தாது ஓட்டமும் நடையுமாய் இராணுவ முகாமுக்குச் சென்றிருக்கிறா, அங்கே

பெரிய கூக்குரலிட்டு இராணுவ அதிகாரிகளின் கவனத்தை ஈர்த்துத் தமக்குத்தெரிந்த ஆங்கிலத்தில் எங்கள் நிலமையை விபரித்திருக்கிறா.

இராணுவ அதிகாரி நல்லவராக இருந்திருக்க வேண்டும். மேலும் தம்முடைய ஜவான்களின் திருவிளையாடலும் அது நிகழும் இடமும் அவருக்குத் தெரியாது இருக்க நியாயமில்லை. அதனால் உடன் நடவடிக்கை எடுத்தார்.

அபிராமியம்மா வீட்டை நாம் அடைந்த போது நாம் எல்லோரும் களைத்துப் போயிருந்தோம். யமனின் வாசலுக்குப் போய் வந்தது போலிருக்கிறது. சாந்தா ரீச்சரும் பிள்ளைகளும் கணவர் வீட்டிற்கு சென்றிருந்ததால் நல்லதாகப் போயிற்று. எங்களைக் காலை வரை அங்கேயே தங்க வைத்தா.

“பிள்ளையள் இப்ப நான் சொல்வதைக் கவனமாய் கேளுங்கோ. முருகன்ட கருணையால நீங்கள் காப்பாத்தபட்டியள். இந்தச் சமூகம் கெட்டது. பனிப்புகாரைக் கண்டிட்டு நெருப்புத்தான் எண்டு சத்தியம் பண்ணும். அதால நடந்த ஒரு விசயத்தையும் நீங்கள் உங்கட வாழ்நாள் வரை வெளியிடக்கூடாது. உங்களைப் பெத்தவை, உடன்பிறப்புக்களிட்டையும் இதைத்தான் சொல்லுங்கோ. நானும் இதப்பற்றி மூச்சு விடமாட்டன்.”

“எங்களைத் தெய்வமா காப்பாத்தினீங்கள். நீங்கள் என்ன சொன்னாலும் நாங்கள் கேப்பம்” ஒருமித்துக் கோரஸ் பாடினோம்.

கலகலத்துச் சிரிச்சு இப்படிச் சொன்னா அபிராமியம்மா. ”நான் தெய்வமும் மில்லை சந்நிதியுமில்லை. எங்கட முருகமூர்த்தியான்தான் உங்களைக் காப்பாத்த என்னக் கருவியாக்கினான்.”

ஓம் முருகந்தான் உங்களுக்குள்ள புகுந்து எங்களைக் காப்பாத்தினான். ஆனா முருகன் தோன்றின உங்கட உடம்பு எங்களுக்குக் கோயில்தான்.

பத்து வருட இடைவெளியில் நாங்கள் மூன்று பேர்தான் ஊரில் குடும்பமாகச் சீவிக்கிறம். எங்கள் அழுகையின் அர்த்தம் எங்கள் மூவருக்குத்தான் புரியும். இந்த இடத்தில் ஊரவருக்கு நாங்கள் மூவரும் புதிர்தான்.

---

சங்குநாதம், 17– 6–2002

# 6.

# இருப்பைத் தேடும் மனிதர்களும் சில அந்தரங்கங்களும்

கனடாவில் கை லாண்ட் மெமோரியல் கார்டனில் (High Land Memorial Garden) அப்படி ஒன்றும் சனம் அலை மோதவில்லைத் தான். நூறுபேர்வரை அங்கு கூடியிருந்தார்கள்.

அக்கார்டனில் மைக் ஒன்றின் முன் நின்று கொண்டு தம்மை ஒரு நாட்டுப்பற்றாளர் எனத் தாமாகவே அறிமுகப்படுத்திக் கொண்ட சிவக்கொழுந்தர் பேசிக் கொண்டிருந்தார். அவர் பேச்சில் தம்மைப் பற்றிய பிரலாபமே அதிகம் தொனித்தது. தாம் தமிழரசுக் கட்சியின் அணுக்கத் தொண்டராக இருந்து அக்கட்சியின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்தது பற்றிக் கூறிக் கொண்டிருந்தார். தந்தை செல்வாவுக்கும் தமக்கும் இருந்த அன்புத் தொடர்பு பற்றிக் கூறுகையில் அவர் நா தழுதழுத்தது. அமரராகிச்..... சிவமாகிக் கிடந்த சதாசிவத்தார் பற்றியும் அவர் தமது வழிகாட்டலில் நாட்டுக்கு உழைத்தது பற்றியும் நினைவு கூர்ந்து கொண்டார். அத்துடன் சதாசிவம் கோயில் தர்மகர்த்தாவாக இருந்த செய்தியும் வாசகசாலை செயலாளராக இருந்த காலத்தில் அவர் ஆற்றிய அளப்பரிய பணியும் அங்கு சிவக்கொழுந்தரால் விண்டுரைக்கப்பட்டன.

அவர் இவ்வாறு நினைவு கூர்ந்த பொழுதெல்லாம் அங்கிருந்த சதாசிவத்தின் பிள்ளைகள் அழுகையைக் கட்டுப்படுத்த முடியாதவர்களாய் விம்மிப் பொருமிக் கொண்டிருந்தனர்.

இன்னும் நால்வர் சதாசிவம் ஐயா பற்றி இரங்கல் உரை ஆற்ற இருப்பதால் நான் இச்சிற்றுரையை (40 நிமிடங்களை முழுமையாக விழுங்கிக் கொண்ட சிற்றுரை) நிறைவு செய்கின்றேன்....."எனக் குறிப்பிட்ட போது சபையிடையே சிறு கைதட்டல் கிளம்பி

சூழ்நிலையைக் கருத்தில் கொண்டதனால் சட்டென அடங்கியது.

சிவக்கொழுந்தர் அதைத் தமக்குக் கிடைத்த பாராட்டாகக் கருதினாரோ என்னமோ அவர் இதழ் கடையில் புன்னகை மலர்ந்து சுருங்கியது. வந்தவர்கள் பொறுமை இழந்திருக்க வேண்டும். கடிகாரத்தைப் பார்ப்பதும் ஒருவரோடு ஒருவர் மிகக் குறைந்த தொனியில் குசுகுசுப்பதுமாய் இருந்தார்கள்.

சதாசிவம் அப்படியொன்றும் பிரபலமான மனிதர் இல்லை. யாழ்ப்பாணத்தில் கட்டுவன் சதாசிவத்தின் பிறந்த இடம். தோட்டம் அவரது சீவனோபாயத்துக்குக் கைகொடுத்தது. மனைவி இரு பிள்ளைகள் என இவரது வாழ்க்கை தெளிந்த நீரோட்டமாய் மிக அமைதியாக ஓடிக் கொண்டிருந்தது. தானுண்டு தன் குடும்பமுண்டு என வாழ்ந்த இவரைப் பற்றி ஊரார் "சதாசிவம் மிதிச்ச இடத்தில் புல்லும் சாகாது" எனச் சொல்லுவதைத் தவிர வேறொன்றும் பேசுவதற்கு இருக்கவில்லை.

நாட்டில் பிரச்சினை தொடங்கிய போது இவர் வாழ்விலும் மாற்றங்கள் ஏற்படத்தான் செய்தன. தொண்ணூறுகளிலேயே இவர்கள் இடம் பெயர நேரிட்டது. இடம் பெயர்ந்த இடத்தில் இவரால் தோட்டம் செய்ய முடியவில்லை. காய்கறி வியாபாரத்தில் ஈடுபட்டு ஒருவாறு காலத்தை ஓட்ட வேண்டியதாயிற்று.

பத்தாம் வகுப்பைக் கூட ஒழுங்காக முடிக்காத அவரது மகன் கருணை காய்கறி வியாபாரத்தை இழிவாகக் கருதினான். வெளிநாட்டு மோகம் வேறு அவனை ஆட்டிப்படைத்தது. அவனுக்கு அமைந்த நண்பர்களால் குடி சிகரட் பழக்கங்களும் அவனிடம் ஒட்டிக் கொண்டன. இவற்றால் தமக்கு இருக்கும் நல்ல பெயரை மகன் அழித்து விடுவானோ என்ற பயம் சதாசிவத்துக்கு ஏற்பட்டதில் வியப்பொன்றும் இல்லை. கூட்டிக்கழித்துப் பார்த்ததில் அவனை வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதே சிறந்த வழி என்ற தீர்மானத்துக்கு அவர் வந்தார். மனைவியின் நகை, வட்டிக்குப் பணம் என்று துடைத்து வழித்து ஒருவாறு கனடாவுக்கு கருணையை அனுப்பி வைத்தார்.

கால ஓட்டத்தில் மகள் ராதாவும் திருமணமாகி கனடாவுக்குப் போய் விட்டாள். மனைவியுடன் தனித்திருந்த போது வெறுமை அவரைப் பற்றிக் கொண்டது. ஆனால் சொந்த மண்ணில் வாழ்வது

அவருக்கு நிம்மதியைத் தந்தது. காலம் பழைய ஓட்டத்தில் ஓடுவதாக ஓர் எண்ணம் மனதில் குடிகொண்டது. ஆனால் அந்த அமைதி..... தொடரவில்லை.

மகள் ராதாவுக்குக் குழந்தை பிறந்த போது அவள் தாய் யோகத்தை ஸ்பான்சர் பண்ணிக் கனடாவுக்குக் கூப்பிட்டாள். மகன் கருணைக்கும் கலியாணம் நடக்கவே பிரசவத்துக்காய் போன யோகம் கனடாவிலேயே நிரந்தரமாய் தங்கிவிட்டா..... அவவின் நச்சரிப்பும் பிள்ளைகளின் கட்டாய வேண்டுகோளும் சதாசிவத்தையும் கனடாவாசியாக்கி விட்டன.

தங்கள் பிள்ளைகள் அன்பு மிகுதியாலோ அல்லது கடமை உணர்வினாலோ தங்களை, கனடாவுக்கு கூப்பிடவில்லை என்ற உண்மையை அங்கு வந்த சிலகாலங்களிலேயே அவர்கள் உணரும் நிலை ஏற்பட்டுவிட்டது.

பெற்றோர்காள் தமது முதுமைக் காலத்தில் பிள்ளைகளிடம் எதைத்தான் எதிர்பார்க்கிறார்கள்? பிள்ளைகள் காட்டும் அன்பு, ஆதரவு, மதிப்பு..... பேரப்பிள்ளைகளின் மழலை தழுவிய அன்பு, கலகலப்பு..... இவை யாவுமே சதாசிவத்துக்கோ அவர் மனைவி யோகத்துக்கோ பிள்ளைகளிடமிருந்து கிடைக்கவில்லை.

அவர்கள் பேரப்பிள்ளைகளைப் பராமரிக்கும் ஆயாக்களாகவும் அரசாங்கத்தால் வழங்கப்படும் உதவிப்பணத்தை வாங்கிப் பிள்ளைகளிடம் கொடுத்து விட்டுத் தமது சிறிய தேவைகளுக்கும் பிள்ளைகளிடம் கை ஏந்துபவர்களாகவும் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். கோயில் குளம் சந்தை என என்றுமே எறும்பு போலச் சுறுசுறுப்பாய் இயங்கி வந்த இருவரும் பெரும்பாலும் நான்கு சுவர்களுக்குள் அடைபட்டு சிறைவாசத்தையும் அனுபவிக்க நேர்ந்தது.

இவ்வாறு மூச்சுத் திணறி வாழ முடியாது போனதால்தானோ என்னமோ யோகம்மா சிறகு விரித்து இந்த உலகை விட்டுச் சென்று விட்டா. அதன் பின் சதாசிவத்தின் நிலை மேலும் மோசமானது. தன் மனப்பாரத்தை இறக்கி வைக்க ஆதரவாய் இருந்த ஒரே சீவனும் அவரை அம்போ எனத் தவிக்க விட்டுப் போய்விட்டது. இதனால் ஏற்பட்ட மனச்சோர்வு அவர் ஆரோக்கியத்தையும் கொள்ளை

கொண்டது. இந்த அவலங்களுக்கிடையே மூன்று வருடங்களை ஒருவாறு ஓட்டிவிட்டார்..... இல்லை உந்தித் தள்ளிவிட்டார்.....

கடந்த இரண்டு மாதங்களுக்கிடையில் ஐந்து தடவைகள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சதாசிவத்தார் திரும்பி விட்டார். இந்தக்காலத்தில் தந்தை மீது கொஞ்ச நஞ்சம் வைத்திருந்த பற்றுதலையும் பிள்ளைகள் இழந்திருக்க வேண்டும்.

முந்த நாள் இரவு அவருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டு மிகவும் அவஸ்தைப்பட்டார். பின்னேரம் மகள் ராதா இரவு உணவாக சூப்பை அவரது கட்டிலுக்கருகில் இருந்த மேசையில் வைத்து விட்டு இரவு வேலைக்குச் சென்று விட்டாள். மகன் கருணை நடு இரவு, வேலையால் திரும்பியவன் சிறிது நேரம் டி.வி பார்த்து விட்டு படுக்கைக்குப் போய்விட்டான். அவன் மன அந்தரங்கத்தில் தகப்பனின் உடல்நிலை பற்றிய எண்ணம் சிறிதும் தோன்றவில்லை. டி.வி சத்தத்தோடு சதாசிவத்தின் முனகல் சத்தமும் அடங்கிப் போனது.

காலை ஐந்துமணி...... சதாசிவத்தின் சீவன் அடங்குவதற்குச் சரியாக ஐந்து நிமிடங்கள்தான் இருந்த நேரம்..... தூக்குக் கைதிக்குக் கூடக் கடைசி ஆசை நிறைவேற்றி வைக்கப்படும். ஆனால்..... "தண்ணி...... தண்ணி...... "என்று தாகத்தால் தவித்த சதாசிவத்தின் குரல் மட்டும் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த அவரது குடும்பத்தவர் எவரையும் எழுப்பும் வலிமையைப் பெற்றிருக்கவில்லை.

சதாசிவத்தின் மரணம்...... அவரது பிள்ளைகளைப் பொறுத்தவரை ஒருவகையில் நட்டத்தை ஏற்படுத்துவதாக இருந்தது. அவருக்கு வரும் அரச உதவிப் பணம் நட்டக்கணக்கில் சேர்க்கப்பட வேண்டிய ஒன்று. ஆனால் எந்தத் தீங்கிலும் நன்மை உண்டு. இந்தத் தத்துவத்தைப் பிள்ளைகள் உணர்ந்தனர் போலும்..... தமது இருப்பைக் கனடா வாழ் தமிழ்ச் சமூகத்துக்கு உணர்த்த நல்ல ஒரு சந்தர்ப்பமாக இதைப் பயன்படுத்த அவர்கள் முடிவு செய்ததன் வெளிப்பாடுதான் இந்த மரணச் சடங்கும் அதன் ஈடும் எடுப்பும்.....

சிவக்கொழுந்தரைப் பின்பற்றி கதிர்வேலு, சிவஞானசுந்தரம், சரவணபவன், ஜோர்ஜ் ஆகியோரும் தங்கள் பங்குக்குச் சில மணித் தியாலங்களை விழுங்கிக் கொள்கிறார்கள். அவர்களும் கூட..... தங்கள் இருப்பைக் கனடாவாழ் தமிழ்ச் சமூகத்துக்கு உணர்த்துமுகமாக

அண்மையில் பேச்சாளர்களாய் மாறியவர்கள்தான். கோயில்கள், பொதுக்கூட்டங்கள் மட்டுமின்றி மரணச்சடங்குகள் கிடைத்தாலும் இவர்கள் தப்ப விடுவதில்லை. இவர்களுக்குத் தேவை சபையும் மைக்கும் மட்டுமே.

இவர்களால் சதாசிவத்தின் அரசியல் சமூகப் பெருமைகள் மட்டுமன்றி அவரையும் அவரது மனைவியையும், அவரது பிள்ளைகள் எவ்வாறெல்லாம் போற்றிப் பேணினார்கள் என்பதும் விரிவாக இவ்விடத்தில் சிலாகிக்கப்பட்டன.

கிரிகைகள் ஒருவாறு நிறைவேறி பெட்டி காஸ் போறனையில் தள்ளப்பட்ட போது பிள்ளைகளின் கூக்குரல் அந்த இடத்தை ஒருகணம் அதிரச் செய்தது. இந்த நாடகத்தின் அந்தரங்கங்களை உணர்ந்திருந்த சபையோர் சிலர் மட்டுமின்றி விடுதலை பெற்றுச் சிவமாகிவிட்ட சதாசிவத்தின் ஆன்மாவும் வேதனையுடன் சிரித்துக் கொண்டது.

---

முத்துக்கமலம், 15-5-2012

# 7

# உடையும் விலங்குகள்

உமாவுக்குக் காலை எட்டுமணிக்கே விழிப்புத் தட்டிவிடுகிறது. கணவர் காந்தன் இன்னும் நித்திரைவிட்டு எழும்பவில்லை. மெல்லிய குரட்டை அவருடைய நித்திரையின் ஆழத்தை உணர்த்திக் கொண்டிருந்தது.

உமா யன்னல் திரையை விலக்கி வெளியே நோக்குகிறாள். வெண்பனி எங்கும் பரந்து தரையை மூடியிருந்தது. நிறுத்தப்பட்ட கார்களில் பனிபடிந்து அவை பல்வேறு கோலங்கள்காட்டி நின்றன. நீண்ட பைன் மரங்களில் ஆதவனின் கதிர்க் கரங்கள்பட்டு பனி உருகிக் கொண்டிருந்தது. இக்காட்சி காலைப் பொழுதுக்கு ரம்மியமூட்டுவதாக உமாவுக்குப் பட்டது.

வழமையாகப் பனிபடர்ந்த பொழுதுகள் உமாவுக்கு வெறுப்பையே தரும். குளிர்கால உடுப்புகளே பாரமாக அதிகாலையில் வேலைக்குச் செல்வது என்பது வேதனையூட்டும் அனுபவமாகவே இருந்து வந்திருக்கிறது.

ஆனால்..... இன்று ஞாயிற்றுக்கிழமை. வேலைக்குச் செல்ல வேண்டியதில்லை. ஆறுதலாக எழும்பி வீட்டு வேலைகளை அவளும் காந்தனும் சேர்ந்து செய்வார்கள். கோதை நேரம் கிடைக்கும் போதெல்லாம் இவர்களுடன் இணைந்து உதவி செய்வாள். மூவரும் சேர்ந்து இருக்கும் அந்தப் பொழுதுகள் கலகலப்பாகவும் இன்பம் தருவதாயும் அமையும்.

உமாவின் உள்ளத்தில் என்றுமில்லாதவாறு மகிழ்ச்சி. அதற்கு ஞாயிற்றுக்கிழமை மட்டும் காரணமில்லை..... அதற்கு மேல் ஒன்று அவள் உள்ளத்துக்கு உவகை ஊட்டிக் கொண்டிருந்தது.

குறும்புத்தனங்களுடன் அன்புமழை பொழியும் கோதை அவளைப் பொறுத்தவரை நேற்றுவரை குழந்தையாகத்தான் தெரிந்தாள். ஆனால்..... இன்று அவள் திருமணத்துக்காக நிற்கும் குமரி.....

உமாவால் நம்பத்தான் முடியவில்லை.

மேலை நாடுகளில் குழந்தைகளைப் பெற்றோர் தங்கள் விழுமியங்களுக்கு, எதிர்பார்ப்புக்களுக்கு,ஏற்ப வளர்ப்பது தாய் நாட்டிலும் கடினமானது என்பதை உமா நன்கு புரிந்துகொண்டிருக்கிறாள். தன் ஒரே மகளின் ஒவ்வொரு அசைவைவிலும் தன் முழுக்கவனத்தையும் மிக அவதானமாய்க் குவித்திருந்தாள். உமா கோதைக்குத் தாயாக மட்டுமன்றி நல்ல ஆசானாக, நண்பியாக விளங்கி வந்திருக்கிறாள். கோதையின் கல்வியை அவள் விரும்பும் துறையில் ஊக்குவிக்கும் முயற்சியில் கூடத் தான் வெற்றி பெற்றதாகவே அவள் கருதினாள். கோதை இன்று பல்கலைக்கழகத்தில் இயற்பியல் துறை மாணவி. அவள் படிப்பில் காட்டும் அக்கறை அவளை, நாளை ஒரு விரிவுரையாளராக..... கால ஒட்டத்தில் பேராசிரியராக மாற்றுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம். தனது கனவு ஒன்றினைக் கோதை நிறைவேற்றுவதில் உமாவுக்குத்தான் எத்தனை பெருமிதம்.....

என்னதான் பெண்களுக்கு கல்வி சிறப்பளித்தாலும் மணவாழ்க்கை அவர்கள் கல்விக்கே தடையாகிவிடும் சந்தர்ப்பங்கள் உண்டே..... அதற்கு உமாவே ஒரு எடுத்துக்காட்டு..... ஆனால் கோதை அதிலும் அதிஷ்டசாலிதான். அவள் தனக்கு மிகவும் பொருத்தமான வாழ்க்கைத்துணையைத் தானே தேர்ந்தெடுத்துவிட்டாள்.

உமா பிரான்சுக்கு வந்து இருபத்து நான்கு வருடங்கள் ஓடிவிட்டன. அவள் வெளிநாட்டு வாழ்க்கையை விரும்பி ஏற்றவள் அல்ல. தான் மனப்பூர்வமான ஈடுபாட்டுடன் செய்துவந்த ஆசிரியத் தொழிலையும் தன்னால் நேசிக்கப்பட்ட தேசத்தையும் தனது உறவுகளையும் விட்டுத் திருமணம் என்ற ஒரே பந்தத்தை ஏற்றுக்கொண்டு பிரான்சுக்கு விமானம் ஏறிய அந்தப் பொழுதில் ஏற்பட்ட வலியை அவளால் மட்டுமே உணரமுடியும்.

சாதகம், சாதி எல்லாவற்றுக்கும் மேலாகச்சீதனம்...... இத்தனை தடைகளையும் தாண்டிச் சாதாரண, கச்சேரி கிளார்க் ஆன உமாவின் தந்தை ஆறுமுகத்தாரால் உள்ளூரில் ஒர் உத்தியோக மாப்பிள்ளையை உமாவுக்குத் தேடிக்கொடுக்க முடியவில்லை. அவளுக்குக் கீழ் இரண்டு தங்கைகள் பருவ வயதை எய்தியிருந்தார்கள். காந்தனின் சம்பந்தம் வந்தபோது இந்த நிலைகளைக் கருத்தில் கொண்டே கழுத்தை

நீட்டினாள் உமா.

பிரான்சுக்கு வந்த போது அந்த வாழ்க்கையை இயல்பாக ஏற்றுக் கொள்வதற்கு உமா பகீரதப் பிரயத்தனம் செய்ய வேண்டி இருந்தது.

ஏ-எல் மட்டுமே படித்திருந்த காந்தன் ஒருகடையில் விற்னையாளரக இருந்தார். பகுதிநேரமாக கிளீனிங், அயனிங் என்று விடாதுவேலை செய்து வந்தார். உமா தன் கணவனுக்கு இருக்க வேண்டும் என எதிர்பார்த்த இலட்சணங்களுக்கு அது முற்றுமுழுதாக முரண்பட்டிருந்தது. அது மட்டுமன்றி அவள் இருந்த நகரில் மிகக் குறைவான தமிழர்களே இருந்தனர். பழகிய உறவுகள் இல்லாமை, மொழி என்பன யாவும் பூதாகரமான பிரச்சினைகளாகத் தோன்றின. வேலை செய்த அவளால் வேலையற்று வீட்டில் முடங்கிக் கிடப்பதும் சலிப்பையும் வெறுப்பையுமே தந்தது.

ஆனால்..... காலகதியில் வெளிநாட்டின் வாழ்க்கைப் போக்கை அவளால் புரிந்து கொள்ளமுடிந்தது. காந்தன் மட்டுமல்ல காந்தனைவிடப் படித்தவர்கள்கூட இத்தொழில்களையே செய்து வந்தார்கள். இத்தொழில்களை செய்வதை எல்லோரும் இயல்பாக ஏற்றுக் கொள்கிறார்கள் என்ற ஞானமும் ஏற்பட்டது.

குடி சிகரட் பழக்கங்கள் எவையும் காந்தனை பீடித்திருக்கவில்லை...... உமாவின் மனப்போக்குகளை விளங்கிக் கொண்டு அவளுக்கு மிகவும் அனுசரணையாக நடந்து கொண்டார். எல்லாவற்றுக்கும் மேலாக அவருடைய களங்கமில்லாத அன்பில் உமா திளைத்திருக்கிறாள்..... அவர்களது அன்பு வாழ்க்கைக்கு அடையாளமாகக் கோதை பிறந்த போது அவள் பூரித்துத்தான் போனாள்.

காந்தன் தனது குடும்பத்துக்காக மட்டுமன்றிக் காலத்துக்குக் காலம் அவர் சகோதரிகளுக்கும் சீதனம் கொடுக்க வேண்டியவராய் இருந்தார். அதுமட்டுமன்றிக் காலத்துக்குக் காலம் அவர் பெற்றோருக்கும் குறிப்பிட்டளவு பணம் அனுப்ப வேண்டிய கடமையும் அவருக்கு இருந்தது. இதனால் தானும் வேலைக்குப் போக உமா தீர்மானித்தாள். முன்பு தான் குறைவாகக் கருதிய வேலைகளை மிக இயல்பாகத் தானே செய்யும் மனப்பக்குவம் அவளுக்கு இப்பொழுது கூடியிருந்தது.

தனது மகளைச் சிறப்பாக வளர்க்கவும் தனது சகோதரிகளுக்கு ஓரளவு உதவவும் தன் வருவாய் உதவிய போது தனது வேலையில் திருப்திகூட

அவளுக்கு ஏற்பட்டுவிட்டது. அவளது வாழ்க்கை தெளிந்த நீரோட்டம் போல அமைதியாகச் சென்றது. தனதும் காந்தனதும் புரிந்துணர்வோடு கூடிய அமைதியான வாழ்வுதான் கோதையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கும் காரணம் என்பது அவள் கணிப்பு.

உமாவின் தோள்களில் கைபதித்து அவளைத் தன் பக்கம் காந்தன் திருப்பிய போதுதான் அவள் தனது நினைவுச் சுழியில் இருந்து விடுபடுகிறாள்.

“உமா உம்முடைய மகளுக்குத்தான் கல்யாணம்.....இங்க நீர் கனவு காணுகிறீர்.....” காந்தன் கேலி செய்தபடி அவள் கன்னத்தை வருடுகிறார்.

உமாவின் இதழ்களில் காந்தப் புன்னகை ஒன்று புலர்ந்து மறைகிறது..

“ஓமப்பா இண்டைக்கு மாப்பிள்ளை வீட்ட போகவேணும். அதோட தங்கச்சிக்கும் ஃபோன் பண்ணிக் கதைக்க வேணும். அதுகளை விட்டிட்டு ஏதோ யோசனையில நிண்டிட்டன்.

பேசியபடி படுக்கை விரிப்பை ஒழுங்கு செய்கிறாள். அவளிடம் வழமையான சுறுசுறுப்பு வந்து ஒட்டிக்கொள்கிறது.

காலைக் கடன்களை முடித்துக்கொண்டு இருவரும் சமையல் வேலைகளில் ஈடுபடுகின்றனர்.

“அம்மா இண்டைக்கு நான் உங்களுக்கும் கெல்ஃப் பண்ண மாட்டன்.....”

தோள்களைப் பற்றியவளாய் கோதை தாயைக் கொஞ்சுகிறாள்.

பலகாரத்துக்கு மாவைக் பிசைந்தபடி மகளை நோக்குகிறாள் உமா.....” எங்கு போகிறாய் என்ற கேள்வி தொக்கு நிற்கிறது.

“இண்டைக்கு என்னோட படிக்கிற டேவிற் அன்றனியோட பிறந்தநாள் முகுந்தனும் வாரார். ரெண்டு பேரும் போட்டு வாரம்”

“அப்ப நாங்கள் முகுந்தன் வீட்ட போகேக்க அவர் நிக்க மாட்டாரோ?” காந்தன் அக்கறையுடன் மருமகனை விசாரிக்கிறார்.

“உங்களுக்கு முகுந்தனைத் தெரியும் தானே.....அனேகமாய் ஐஞ்சு மணி அப்படி வந்திடும்” புன்முறுவலுடன் பதில் கூறியபடி குசினியை

விட்டு வெளியேறுகிறாள் கோதை.

சுவரில் இருக்கும் மணிக்கூடு ஒருதடவை அடித்து ஓய்கிறது.

“அப்பா நீங்கள் இந்த மாவை உருட்டிவையுங்கோ..... இப்ப ரெலிபோன் எடுத்தாத்தான் தங்கச்சியிட்ட கதைக்க சுகம். பேந்து அவையள் நித்திரைக்கு போயிடுவினம்.”

காந்தனுக்குக் கூறியபடி ரெலிபோன் எடுக்கிறாள் உமா. மறுமுனையில் யாழ்ப்பாணத்திலிருந்து அவள் தங்கை பேசுகிறாள். வழமையான குசல விசாரிப்புக்களுக்குப் பின் கோதைக்கும் முகுந்தனுக்கும் நிகழவிருக்கும் திருமணம் பற்றிக் கூறுகிறாள். முகுந்தன் மருத்துவத்துறை இறுதியாண்டு மாணவன் என்றும் அவனுடைய ஒழுக்க சீலம் பற்றியும் உயர்வாகக் கூறியபோது உமாவின் மகிழ்ச்சி அவள் தங்கை தயாநிதி யையும் தொற்றிக் கொள்கிறது.

“அவை யாழ்ப்பணத்தில எந்தப் பகுதி?” என்ற தயாவின் கேள்வி உமா ஃபோன் எடுத்ததன் நோக்கத்தில் கொண்டு விடுகிறது.

“அத விசாரிக்கவும்தான் ஃபோன் எடுத்தனான். முகுந்தண்ட தாத்தா கோண்டாவிலச் சேர்ந்தவர். கணபதி மாஸ்றர் என்றால் எல்லோருக்கும் தெரியுமாம்.”

“இது போதும் நான் விசாரிச்சுச் சொல்லுறன். “தயா உறுதியளிக்கிறாள்.

ஒரு பொறுப்பைத் தயாவிடம் ஒப்படைத்த நிறைவுடன் ஃபோனை வைக்கிறாள் உமா.

உமாவும் காந்தனும் முகுந்தன் வீட்டுக்குச் செல்கிறார்கள் முகுந்தனின் தந்தை பரமேஸ்வரன் அவர்களை இன்முகத்துடன் வரவேற்கிறார், அவரைத்தொடர்ந்து அவர் மனைவி றஞ்சியும் உமாவின் கைகளைப் பற்றி வரவேற்று, கூடத்தில் அமரச் செய்கிறா. அவர்களுடன் முகுந்தனின் தம்பி கரனும் இணைந்து கொள்கிறான்.

வழமையான உபசரிப்புக்களுக்குப் பின் வீட்டைச் சுற்றிக் காட்டுகிறார்கள். பிரான்சில் அப்படி ஒரு அழகான வீட்டுக்குச் சொந்தக்காரராய் இருக்கவேண்டுமாயின் அவர் மிகக் கடுமையாக உழைத்திருக்க வேண்டும் என்று சிந்திக்கிறாள் உமா.

பரமேஸ்வரன் சிறந்த உழைப்பாளிதான். அவர் நகரில் ரெலிஃபோன்

கடை ஒன்று நடத்தி வருகிறார். அதோடு இணைந்து world money transfer நிறுவனத்தின் உதவியுடன் உண்டியலும் நடத்தி வருகிறார். ஆரம்பத்திலேயே இம்முயற்சியில் ஈடுபட்டதால் நல்ல லாபமும் பெற முடிந்தது.

உமாவும் காந்தனும் அவர்கள் வீட்டைவிட்டு மனநிறைவோடு விடைபெறுகிறார்கள்.

"பணக்காரர்கள் எண்டாலும் நல்ல பண்பான மனிசர். கோதை நல்ல அதிஸ்டசாலிதான். "காந்தன் திருப்தியுடன் கூறுகிறார். உமாவுக்கும் அவர்கள் குடும்பத்தை நன்கு பிடித்திருந்தது என்பதை அவள் முகமே பறைசாற்றியது.

ஆனால் இந்த மகிழ்ச்சி இரண்டு நாட்களுக்குமேல் நீடிக்கவில்லை.

உமாவின் தங்கை தயாவிடமிருந்து வந்த செய்தி இடியென இறங்கியது.

"முகுந்தனோட குடும்பம் எங்கட சபை சந்திக்கு ஒத்துவராத பகுதியைச் சேர்ந்தவை."

உமாவும் காந்தனும் உண்மையில் ஆடிப்போய்விட்டார்கள். இந்த உண்மையை எப்படிக் கோதையிடம் விளக்குவது. கோதை பிரான்சிலேயே பிறந்து வளர்ந்தவள். சாதிபற்றியும் யாழ்ப்பாணத்தில் அது பெறும் முக்கியத்துவம் பற்றியும் விளக்கினால் எப்படிப் புரிந்துகொள்ளப் போகிறாள்? வெளிநாட்டில் சாதி பற்றி முணுமுணுப்பதோடு சரி. அந்த முணுமுணுப்பின் அர்த்தம் பெரியவர்களுக்கு மட்டுமே புரியும். பெரும்பாலான குடும்பங்களில் அது பிள்ளைகளைச் சென்றடைவதில்லை. உமா கொள்கையளவில் சாதிபற்றி பேசுவதை விரும்புவதில்லை. அதோடு உணவு ஊடாட்டங்களிலும் ஊரைப்போல் இங்கு நடந்து கொள்வதில்லை. இவற்றால் கோதைக்குச் சாதிபற்றிய எண்ணக்கரு மனதில் தோன்றியிருக்க வழியில்லை.

கப்பல் மூழ்கும் போது துரும்பைக் கூடப் பற்றத் தோன்றுகிறது. யாழ்ப்பண சமூகத்தில் சாதி துரும்பல்லவே. வலிமையான மிதவையாகவல்லவா கருதப்படுகிறது..

உமாவினதும் காந்தனதும் குடும்பங்கள் ஊரில் சாதித்தடிப்பும் சமூக அந்தஸ்தும் கொண்டனவாகவே விளங்கிவந்தன. ஆனால்

புலம் பெயர்ந்த இடத்தில் தொழில் ரீதியாகத் தாங்கள் படியிறக்கம் பெற்றுவிட்டதாக உள்ளூர எழும் எண்ணங்களில் இருந்து அவர்களால் முழுமையாக விடுபடமுடியவில்லை. இந்த நிலையில் சாதிப் பெருமை ஒன்றே அவர்களுக்கு பெருமை தருவதாகக் கருதவேண்டியிருந்தது.

காந்தனின் முதலாளி தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்தான். முதலாளி தொழிலாளி என்ற ஏற்றத்தாழ்வுக்கு "என்ன இருந்தாலும் முதலாளி என்னில் குறைந்தவர் தானே" எனக் கூறிக்கொள்வதன் மூலம் காந்தன் திருப்திப்பட்டு வந்திருக்கிறார். இந்தநிலையில் சாதிப் பெருமையை எப்படி விட்டுக் கொடுப்பது.? அப்படியே விட்டுக்கொடுத்தாலும் ஊர் உலகம் என்ன சொல்லும். ஊர் உலகம் வேண்டாம்..... உறவுகள் என்ன சொல்லும். கேள்விகள் அவர்களைக் குடைந்து எடுத்தன. நீண்ட மனப்போராட்டத்துக்குப் பின் கோதைக்கு இந்த உண்மையை விளக்கிக் கலியாணத்தை நிறுத்தத் தீர்மானித்தார்கள் உமாவும் காந்தனும்.

பெற்றோரின் திடீர் கவலைக்குக் காரணம் புரியாதவளாய்க் கோதை திகைத்துப் போகிறாள்.

"அம்மா ஏன் ஒரு மாதிரி இருக்கிறீங்கள்? அப்பாவிண்ட முகமும் வாடிக் கிடக்குது. என்ன பிரச்சினை உங்களுக்கு?"

கோதையின் கேள்வியைப் பூர்வாங்கமாக எடுத்துக்கொண்டு தங்கள் நிலமையினையும் அதன் பொருட்டுத் தங்களுக்கு ஏற்படவிருக்கும் தலையிறக்கம் பற்றியும் கோதை மனம் மாற வேண்டியதன் அவசியம் பற்றியும் உமா விரிவாக எடுத்துக் கூறினாள்.

ஆனால் கோதைக்கு அவர்களது இந்த முடிவு பயித்தியக்காரத்தனமாகப்படுகிறது. அவளால் சாதி பற்றிய அவர்களது நிலைமையை ப் பூரணமாக விளங்கிக் கொள்ளக் கூடமுடியவில்லை.

"அம்மா எனக்கு என்னுடைய வருங்காலக் கணவனை தேர்ந்தெடுக்கிற முழு உரிமையும் இருக்கு. "கோதையின் பேச்சில் உறுதி தெறிக்கிறது. கோதை எவ்வளவுதான் பெற்றோரின் ஆளுமைக்குட்பட்டு வளர்ந்தாலும் அவள் ஊடாடுவது மேலை நாட்டுச் சமூகம் தானே.

இந்த இருபத்து மூன்று வருட காலத்தில் கோதைக்கும் அவள் பெற்றோருக்கும் இப்படியொரு முரண்பாடு ஏற்பட்டதேயில்லை.

பெற்றோர்கள் கோதையின் மனம் அறிந்து நடந்தார்கள். கோதையும் அவர்களின் விருப்பு வெறுப்புக்களுக்கு மதிப்பளித்து வந்தாள்.

“அப்ப எங்களுக்கு உன்ற வாழ்க்கையில அக்கறையில்லையெண்டு நினைக்கிறியோ....?” காந்தன் குரலில் கோபம் தொனிக்கிறது.

“முகுந்தனிண்ட ஒழுக்கத்திலையோ நடத்தையிலேயோ குற்றம் கண்டு சொன்னீங்கள் எண்டா அந்த அக்கறைக்கு ஒரு அர்த்தம் இருக்கும்.”

“எங்கட குடும்ப கௌரவம் இக்கல்யாணத்தால கெட்டுப்போகும்.” காந்தனின் குரலில் கடுப்புச் சிறிதும் குறையவில்லை.

“நான்வேற இனத்தவரை காதலிக்கேல்ல. சமயம் ஒண்டு. முகுந்தன் படிப்பில பண அந்தஸ்திலையும் எங்கட குடும்பத்தைவிட உயர்வான நிலையில்தான் இருக்கிறார்”.

கோதை தன் பக்க நியாயங்களை மிகத்தெளிவாக எடுத்துரைக்கிறாள்.

“ஆனால் தமிழரெண்டு இருக்கிற நாங்கள் சாதியையும் பார்க்க வேணும்”

. உமா அழாக்குறையாகக் கெஞ்சுகிறாள்.

“ஒருத்தனைக் காதலிச்சிட்டு மற்றவனைக் கல்யாணம் செய்யிரது மட்டும் தமிழர் பண்பாடோ?”

கோதையின் அழுத்தமான கேள்விக்கு பதில் கூற முடியாது இருவரும் ஒருகணம் திகைத்துப் போகிறார்கள்

முகுந்தனோ கோதையோ மேலை நாட்டில் பிறந்து வளர்ந்தாலும் எல்லை மீறி நடந்ததில்லை. அவர்கள் உறவில் நேர்மை இருந்தது. நேசம் இருந்தது. காலம் முழுவதும் ஒன்றாகச் சேர்ந்து வாழவேண்டுமென்ற உறுதியிருந்தது. இது உமாவுக்கும் நன்கு தெரியும். இதுவரை அவர்களது நேசங் கண்டு “கோதை எண்ட பிள்ளைதான்” என உள்ளூ ரக் குளிர்ந்திருக்கிறாள் உமா.

“அம்மா முகுந்தனிட்ட ஒரு மனிசனுக்கு வேண்டிய எல்லா நல்ல பண்பும் இருக்கு. அதோட அவர் எனக்கு எல்லாவிதத்திலும் தகுதியானவர். நல்லா யோசிச்சு இந்தக் கலியாணத்துக்கு நீங்களே சம்மதிப்பீங்கள் எண்டு நம்பிறன். என்ற முடிவில மட்டும் எப்பவும் மாற்றமில்லை.”

மூச்சு விடாமல் கூறிவிட்டுப் பதிலை எதிர்பாக்காமலே அங்கிருந்து வெளியேறுகிறாள் கோதை.

கோதை அவர்கள் மனதில் மேலும் ஒரு படி மேலே ஏறி இடம்பிடித்தது என்னமோ உண்மைதான். ஆனாலும் காலங்காலமாக தம் உதிரத்தோடு கலந்துவிட்ட சாதி உணர்வை அது தரும் பெருமிதத்தை கோதைபோல அவர்களால் அவ்வளவு எளிதாக உதற முடியவில்லை.

உமாவுக்கும் காந்தனுக்கும் அன்றிரவு சிவராத்திரியாகிறது. பல வழிகளிலும் அந்தப் பிரச்சினையைப் போட்டு அலசுகிறார்கள்.

பாசமும் சாதி உணர்வும் தராசின் இரண்டு பகுதிகளிலும் நின்று பலமணி நேரம் ஊசலாடுகிறது.

கோதை எவ்வளவுதான் பெற்றோரை மதித்தாலும் கூட அதற்கு மேலாக தனக்கு நியாயம் எனப்படும் விடயத்துக்காக இறுதிவரை போராடிச் சாதிப்பாள் என்பது அவர்களுக்குத் தெளிவாகத் தெரிந்தது.

கோதை என்ற ஒளிவிளக்கில்லாத குருட்டு வாழ்க்கையை அவர்களால் கற்பனை பண்ணிப் பார்க்கக் கூட முடியவில்லை.

தொடக்கத்தில் சமூகம் விமர்சித்தாலும் காலகதியில் கோதை முகுந்தன் ஆகியோரின் கல்வி, அந்தஸ்து ஆகியவற்றின் முன் அவர்களது சாதி முதன்மைப்படுத்தப்படாமல்தான் போகப் போகிறது. ஊரில் இத்தகைய நிலையில் உள்ளவர்களை உமாவும் காந்தனும் தம் மனக் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறார்கள். ஆக வெளிநாட்டில் சாதி சமூகத்தில் புறக்கணிக்கப்படும் வேகம் இன்னும் அதிகமாகவே இருக்கும் என்ற எதார்த்தத்தையும் புரிந்துகொள்கிறார்கள்.

கோதை, முகுந்தனின் ஒழுக்கத்தோடு கூடிய நேசத்துக்கு அவர்களும் இதுவரை அங்கீகாரம் வழங்கியே வந்திருக்கிறார்கள். அந்த நேசத்துக்கு மதிப்பளிக்காது விடுவது சரியல்ல என்ற உணர்வும் அவர்களிடம் தோன்றுகிறது. ஒரு கூட்டுப் பறவைகளாகத் தாங்கள் மூவரும் இதுவரை வாழ்ந்த சந்தோசமான வாழ்வுக்கு மூடுவிழா வந்துவிடுமோ என்ற அச்சமும் தாம் கோதையின் மனதில் பெற்று வந்த உயர்ந்த இடத்தை ஒருபோதும் வழுவ விடக்கூடாது என்ற பாதுகாப்பு உணர்வும் ஒரேசமயம் தோன்றி அவர்கள் மனத்தில் தெளிவை ஏற்படுத்துகின்றன,

தராசின் சமநிலை குலைகிறது. கோதையின் பக்கம் தாழ்கிறது.

பெற்றோரின் மன மாற்றத்தைக் கேட்டு கோதை உள்ளம் குளிர்ந்து புன்னைகைக்கிறாள். அந்த மாற்றம் ஒருவகையில் அவள் எதிர்பார்த்ததுதான். தனது பெற்றோர் பற்றி அவள் கொண்டிருந்த உயர்ந்த படிமம் உடைந்து சிதறாமல் போனதில் அவளுக்குப் பெரும் நிம்மதி.

பழைய கலகலப்பு மீண்டும் அந்தக் குடும்பத்துக்கு ஒளியூட்டுகிறது.

சாதி என்ற பெரும் சங்கிலியில் பிணைக்கப் பட்டிருந்த வளையங்களில் மேலும் சில சத்தமில்லாது விழுந்து தெறிக்கின்றன.

---

முத்துக்கமலம்

# 8.

# ஆனந்த சுதந்திரம்

இந்திரபுரி,

இனிய பொன் மாலைப் பொழுது,

மேற்கு வானில் தினகரன் தகதக எனத் தங்கத் தாம்பாளமாய் ஒளிர்ந்து கொண்டிருக்கிறான். அவனைக் கலவி மயக்கத்தால் தழுவிட வேண்டுமென்று வெள்ளாடை கட்டிய மேகப் பெண் ஓடித் திரையிட்டு அழகு முகம் காட்டுகிறாள். தென்றலோ மழலையின் தளர் நடை நடந்து காண்பவரையெல்லாம் காண்பவற்றையெல்லாம் தன் பரிசத்தால் கிலுகிலுப்பூட்டிக் கொண்டிருக்கிறது. பச்சைப் புல் வெளிகளும் வானுயர்ந்த சோலைகளும் மலர்கூட்டங்களும் சற்றுமுன் பெய்த அமுதமழைச் சாரலில் நனைந்து ஆதவன் ஒளித்தெறிப்பினால் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன.

இந்திரலோகத்து மாந்தருக்கோ இரவு வரும்வரை காத்திருக்கப் பொறுமையில்லை. இப்போதே களியாட்டத்தில் இறங்கிவிட்டார்கள். சோமபானக் கோப்பைகள் ஒன்றோடு ஒன்று மோதும் ஓசை இந்திரலோகத்து அழகு தேவதைகளின் சலங்கை ஒலியோடு கலந்து கதம்பமாய் ஒலிக்கிறது. சாஸ்திரிய நடனத்தில் வெறுப்புற்ற இளைஞர் கூட்டம் ஒன்று அத்தேவதைகளின் சிற்றிடைகளைத் தழுவி வினோத நடனத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தது. ஆனால் மேனகை ரம்பையின் சாஸ்திரிய நடனத்தில் இன்றும் திளைக்கும் ஒரு கூட்டம் இல்லாமலும் இல்லை. அக்கூட்டத்தில் சிலர் பல்லியங்களைத் தம் கைகளில் ஏந்திச் சுருதி பிசகாத இசை மழை பொழிந்து கொண்டிருந்தனர்.

அப்பப்பா... இன்பத் தெவிட்டலென்பது இதுதானோ...?

ஆனால் இந்தக் களியாட்டங்களின் நிழல் கூடப்படுவது தோசம் என்று கருதுவது போல இளைஞர் குழு ஒன்று ஒதுங்கியிருதந்து. இந்திர லோகக் காலக் கணிப்பில் ஏறத்தாழ இருபத்தைந்து நாட்கள் இருக்கக்

கூடுமோ....? ஆனால் இவர்களுக்கு இந்திரலோகக் கணிப்புப் பற்றிய பிரக்ஞை இருப்பதாகத் தெரியவில்லை. இவர்கள் பூலோகக் காலக் கணிப்பையே தமதாகக் கொண்டிருந்தனர்.

அவர்களுக்காய் ஒரு நல்ல செய்தியை ஏந்திவந்த நான் சற்றுத் தயங்கி நிற்கிறேன்.

அவர்களிடத்தில் ஏன் இன்றும் இந்தப் பரபரப்பு....? நான் கொண்டு வந்த செய்தி பற்றி முன்னரே அவர்கள் அறிந்திருந்தார்களா...? அவர்களை நெருங்குகிறேன். உண்மை புலப்படுகிறது.

இரண்டு அக்கினிக்குஞ்சுகள் ஒன்றை ஒன்று தழுவுகின்றன. அந்த ஒளி என் கண்களைக் கூசவைக்கிறது..... ஆனால் அதன் வெப்பம் என்னைச் சுடவில்லை..... தமிழகத்தில் விடுதலைத்தீயை ஒளிரச் செய்த முத்துக்குமரனும் புலத்தில் அத்தீயை வளரவிட்ட முருகதாசனும் ஒருவரை ஒருவர் இறுகத் தழுவிக்கொண்டிருந்தனர். இவர்களிடத்தில் தான் என்ன பெயர் பொருத்தம்.....? முத்துக்குமரன் முருகனின் பெயர். அவனது கொள்கைக்குத் தாசன் முருகதாசன்..... என்னுள் வியப்பு....!

ஏனோ என் கண்கள் சட்டெனத் திரும்பித் திலீபனையும் அன்னை பூபதியையும் நோக்குகின்றன. அவர் கண்களில் கண்ணீர்க் கோவைகள். என் கண்கள் மேலும் அவர்களை ஊடுருவுகின்றன. அந்தக் கண்ணீருக்குப் பின் சோகமும் விரக்தியும் தெறிக்கின்றன. இவ்விருவரும் இங்கு வந்த போது மஹாத்மாவின் கண்களிலும் இத்தகைய உணர்வுகள் தானே வெளிப்பட்டது. அதன் காரணம் எல்லோருக்கும் தெரிந்தது தான் தம்மையே திரியாக்கியாவது உலகுக்கு ஒளி தந்திட வேண்டும் என்று தியாகத்தின் எல்லைக்குச் சென்றாலும் அதனைப் பூலோகம் கணக்கில் எடுக்கவில்லையே..... அகிம்சை செல்லாக் காசாகிவிட்டதே..... என்ற எண்ணத்தின் வெளிப்பாடுகளை அவர்கள் கண்கள் நன்கு பிரதிபலித்தன.

சில கணப்பொழுதுகள் அக்கினிக்குஞ்சுகளின் தழுவல் நீடிக்கிறது. வார்த்தைகளில் சிக்காத எத்தனையோ விடயங்களை அவர்கள் பரிமாறிக்கொண்டனர். தழுவலில் இருந்து விலகிய கணங்களில் எதேச்சையாகத் திரும்பிய முருகதாசனின் கண்கள் வியப்பால் விரிகின்றன.

பாரதி..... மகாகவி......!ஓடிவந்து என்னைத் தழுவிக்கொள்கிறான்.

என் தேகம் மின்சாரத்தைப் பாய்ச்சினால் போல சிலிர்க்கிறது. மகன் தந்தையைத் தழுவியது போன்ற பரவசம்..... பாசம் எம் இருவரிடையே ஊற்றெடுக்கிறது.

பாரதி..... நீ ஏன் சிங்களத்தீவினுக்கோர் பாலம் அமைப்போம் என்று பாடினாய்? திடீரென இக்கேள்வி அவனிடத்திலிருந்து பிறக்கிறது. அதில் கோவமும் கூடவே தொனிக்கிறது.

“செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே” என்று ஆராக் காதலுடன் பாடிய நான் அன்றைய நிலையில் இந்திய தேசிய கருத்தினையே கொண்டிருந்தேன். முப்பது கோடி மக்களையும் இந்தியத் தாயின் மக்களாகக் கருதியிருந்த காலம். வெள்ளையனிடமிருந்து இந்தியாவை மீட்டெடுக்க வேண்டும் என்பதே ஒவ்வொரு இந்தியனதும் கருத்தும் கனவுமாக இருந்த காலம். இந்நிலையிலேயே பெரும்பான்மை நோக்கி “சிங்களத் தீவு”என்று இலங்கையக் குறிப்பிட்டிருந்தேன். இதனூடாக ஈழத்தமிழரின் தாயக உரிமையை மறுத்தேன் என்ற கருத்துக்கு இடமேயில்லை. ஆனாலும் இன்றைய நிலையில் அது எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது, என்று எண்ணுகையில் மிகவும் வருத்தம் ஏற்படுகிறது. அதற்காக அவனிடத்தில் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

முருகதாசனைத் தொடர்ந்து தமிழ் வேந்தனும் சொர்க்கத்துக்கு வந்தபோது வன்னிப் பேரவலம் கணத்துக்குக் கணம் அதிகரித்த போது மாவீரர்கள் முற்றாகவே பொறுமை இழந்திருந்தார்கள். அவர்கள் கண்கள் சினத்தால் சிவந்தன. உள்ளக்கொதிப்பால் பொங்கிப் போனார்கள்.

முத்துக்குமரன் வருகை தந்தபோதே பெரும் ஆர்ப்பாட்டம் செய்து அதன் முடிவில் இந்திரனிடம் மனுச் சமர்பித்திருந்தனர். பரமசிவனைச் சந்திக்கவேண்டும் என்பது அவர்களது பிரதான கோரிக்கையாக இருந்தது. அதன் பின் வைகுண்டாதிபதிக்கும் இந்திரனூடாக மனு வழங்கப்பட்டாகிவிட்டது. எங்கிருந்தும் பதில் கிட்டவில்லை. இந்திரன் மனுக்களை உரியவர்களிடம் சமர்பித்தானா என்பது சந்தேகமாகவே இருந்தது.

சொர்க்காதிபதிக்கு இந்த மாவீரர்களிடம் மிகுந்த அசூசை. அதற்கு அவன்வரையில் காரணங்களும் இருந்தன. இந்திரன் இதுவரை இரண்டு

தரப்பினரையே தன் ஆட்சியில் சந்தித்திருக்கிறான். ஒரு பகுதியினர் இந்திரலோகத்தின் இன்பத்தில் மூழ்கித் திளைப்பவர்கள். மற்றவர்கள் சிற்றின்பச் சிருங்காரங்களை வெறுத்தொதுக்கி இந்திரலோக மலைச் சாரல்களில் யோக தவமுயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்கள். பரமுத்திக்காகக் காத்திருப்பவர்கள். இந்த இரு பகுதியினராலும் இந்திரனுக்குத் தொல்லையில்லை.

இந்த இருவகையினரையும் சாராது மாவீரர் ஆர்ப்பாட்டம் என்றும் உண்ணாவிரதம் என்றும் சொர்க்கத்திலும் குழப்பத்தை விளைவிக்கிறார்களே என்ற கடுப்பு. அதேசமயம் மிகவும் ஆராய்ந்து கொள்கையை உறுதியாகவும் இறுதியாகவும் வகுப்பது, மலையே எதிர்த்தாலும் கடலே பொங்கி வந்தாலும் அந்தக் கொள்கையின் நின்றும் எள்ளளவும் விலகாது இருப்பது என்பன சாதாரண விடயமில்லை என்பது அவனுக்கு நன்கு தெரியும். அரசியல்வாதிகளில் நூற்றுக்குத் தொண்ணூற்றெட்டு விழுக்காட்டினருக்கு கைப்படாத விடயம் கொள்கை விலகாமை. சொர்க்கம் வந்தும் தமது கொள்கையில் விலகாது இருப்பார்களானால் இவர்களை வழிநடத்திய தலைவன் எவ்வளவு உறுதியானவனாக உயர்ந்தவனாக இருக்க வேண்டும்.....? இந்திரனால் இதுகுறித்து வியக்காமல் இருக்கமுடிய வில்லை.

எவ்வாறாயினும் ஆதிக்கவர்க்கத்தின் குணாம்சமோ என்னவோ பூலோக சர்வதேசத் தலைவர்கள் போலவே, மாவீரர்களின் வேட்கையையும்- எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களது நியாயப்பாட்டையும் -நன்கு புரிந்திருந்த போதும் சொர்காதிபதியும் இவர்களது மனுக்களைக் கிடப்பில் போட்டுவிட்டான்.

தேவர்களை ஆட்டிப்படைத்த இராவணனின் வழித்தோன்றல்கள் இவர்கள் என்ற காழ்ப்புணர்வும் பழிஉணர்வும் இத்தகைய செயலுக்குக் காரணம் போலும்.

அல்லாமலும் இவர்களது தலைமைப் பண்பும் தீரமும் தனது தலைமைக்கு........ தனது ஆதிக்கத்துக்கு ஒருகாலத்தில் கேடாக அமைந்துவிடுமோ....? என உள்ளாரப் பயமும் கொண்டிருந்தான். அப்பயத்தை அவர்கள் மீதான வெறுப்பாக வெளிப்படுத்திக் கொண்டிருந்தான்.

இதனால் இனி வரும் காலங்களில் வைகுண்டாதிபதிக்கோ

கைலாசபதிக்கோ மனுக்களை வழங்க வேண்டுமாயின் திரிலோக சம்சாரியான நாரத முனிவரிடம் வழங்குமாறு நான் மாவீரரிடம் கூறியிருந்தேன்.

ஆனால் நாரதர் மூன்று மாதங்களுக்கு ஒருதடவையும் சிவனும் பெருமாளும் ஒருவருடத்துக்கு ஒருதடவையும் இந்திர லோகம் வருவது வழமை. அந்த வகையில் பூலோகக் கணக்கின் பிரகாரம் நாராதரின் இந்திரலோக வருகைக்கு முப்பது ஆண்டுகளும் சிவனது வருகைக்கு நூற்று ஐம்பது ஆண்டுகளும் இருந்தன. அதுவரை காத்திருப்பது என்பது போராளிகளைப் பொறுத்த வரை நினைத்துப் பார்க்க முடியாததாய் இருந்தது.

இதனால் இந்திரனை மசிய வைக்கத் தமது போராட்டத்தின் வீச்சை மிக வலுப்படுத்த எண்ணியிருக்கிறார்கள்.

இந்நிலையிலேயே நான் இவர்களுக்கு மிக ஆறுதல் தரத்தக்க செய்தியை அறிந்து வந்திருக்கிறேன். நாரதர் திடீர் விஜயமாக இந்திரலோகம் வருகிறார் என்ற செய்தியை அவர்களுக்கு அறிவித்த போது விடுதலைக்கான தூரம் வெகுதூரத்தில் இல்லை என்பதை உணர்ந்தவராய் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள்.

நாராயணா... நாராயணா... என்ற கீதம் எமக்கு மிக அருகில் கேட்கிறது. இசையின் பூரணம் அக்குரல் வளையில் இருந்து பிறந்து அவ்விடத்தை நிறைக்கிறது.

எம்முன் நாரதர்..........!

ஜால்ரா கட்டையுடன் உயர்ந்த முடியினராய்..... கைகளில் வீணை ஏந்தியவராய்..... பொதுவாகச் சினிமாவிலும் நாடகங்களிலும் பார்த்த நாரதராய் அவர் இருக்கவில்லை.....

கண்களில் சதா தேடுதல்..... உண்மையை நாடியவராய்..... அகஜபாணுவாய் நாரதர் எம்மை நோக்கிப் புன்னகையுடன் கைகூப்புகிறார்.....

“என்ன பாரதி......! தீவிரவாதிகளுடன் கூடிச் சதித்திட்டமோ.....?

அவரது கேள்வியே அவரைக்கண்ட போது ஏற்பட்ட இன்ப அதிர்வில் இருந்து எம்மை மீட்டெடுக்கிறது.

“நியாயத்தைக் காப்பதற்காய் பல்வேறு போராட்டங்களின் தோல்விக்குப் பின் ஆயுதத்தைக் கையிலேந்தியவர்களுக்குச் சுலபமாகத் தீவிரவாதிகள் என்று முத்திரை குத்திவிடுகிறீர்கள்....”

என் பதில் சற்றுக் கோபமாகவே அமைகிறது.

“கோபிக்காதே பாரதி.... பூலோகத்தில் சஞ்சாரம் செய்துவந்ததால் பழக்கதோசத்தில் அப்படிச் சொல்லிவிட்டேன்.....” ஆனால் இந்திரன் இவர்களைப்பயங்கரவாதிகள்என்றல்லவா அறிமுகப்படுத்துகிறான்....”

நாரதர் கலகத்தை ஏற்படுத்த இவ்வாறு கூறுகிறாரா.....?புருவம் உயர்த்தி அவரை நாம் நோக்குகிறோம்.

நான் சொல்வது அத்தனையும் உண்மை நண்பர்களே..... இந்திரனிடம் மகாசிவன் திடீர் விஜயமாக இந்திரலோகம் வருகிறார் என்ற செய்தி தாங்கிய ஓலையைச் சமர்ப்பித்தேன்.....”

“பரமசிவன் இந்திரபுரி வருகிறாரா......?” வியப்பும் ஆனந்தமும் போட்டியிட நாம் நாரதரைப் பார்த்து வினவுகிறோம்.

நாரதரின் இதழ்கடையில் ஒருவிதமான புன்னகை ஓடுகிறது...

“நீங்கள் ஆனந்தத்தில் திளைக்கிறீர்கள். ஆனால் இச்செய்தி கேட்டு இந்திரனோ ஒருகணம் நடுங்கிப் போனான். பின் தன்னை சுதாகரித்துக் கொன்டு தனது மந்திரிகளைக் கூப்பிட்டு ஆலோசனை நடத்தத் தொடங்கிவிட்டான்.. அது தொடர்பாகத்தான் நான் உங்களைக் காண வந்தேன்”

கலகதாரியான நாரதரின் மேலதிக விளக்கத்துக்காய் காத்திருக்கிறோம்.

“பரமசிவனின் இந்திரபுரி விஜயத்தை மாவீரருக்குத் தெரியாதவாறு முற்றாக இருட்டடிப்புச் செய்ய இந்திரன் முயலுகிறான்..... பரமசிவனைத் தரிசிக்கும் தேவையோ தகுதியோ அவர்களுக்கு இல்லை என்று இந்திரன் தனது மேல்மட்டக் குழுவிடம் கூறிக்கொண்டிருந்தான்.

பூலோகத்தில்தான் எமக்கு நியாயம் நீதி கிடைக்கவில்லை. இங்குமா ஆதிக்கத்தின் இரும்புக் கரங்கள் எங்கள் கழுத்தை நெரிக்க வேண்டும். எமது கோபத்தையும் மீறி ஆற்றாமை மேலிடுகிறது.

எமது உள்ளத்தீயில் நெய்யை வார்ப்பது போல நாரதர் மேலும்

கூறிக்கொண்டு போகிறார்.

“சிவனது வருகைக்கு ஒரு வாரத்துக்கு முன்பே இந்திரபுரி விழாகோலம் பூண்டுவிடும். இந்திரபுரியின் ஒவ்வொரு மூலை முடுக்கெங்கும் இன்ப அதிர்வுகள் எதிரொலிக்கும். இந்திரன் சிவனை வரவேற்க எடுக்கும் எடுப்பிருக்கிறதே....! முன்னைய நினைவுகளில் ஆழ்ந்த நாரதரிடம் நக்கல் சிரிப்பொன்று தோன்றி மறைகிறது. சில கணப் பொழுதுகளின் பின் அந்த நினைவுகளில் இருந்து மீண்டவராய்.....

“இந்தமுறை சிவனது வரவேற்பு இந்திரனின் அரண்மனையுடன் முடிவடைந்துவிடுகிறது.....” என்று கூறுகிறார்.

அதற்குக் காரணத்தைத் தெரியாது நாம் விழி பிதுங்குகிறோம்.

“பரமசிவன் இந்திரலோகம் வரப் பலகாலம் ஆகுமென்பதால் அதற்குள் மாவீரர்களின் குரலை அடக்கி ஒடுக்கிவிடலாம் என்ற எண்ணத்தில் அவரது மனுக்களை கிடப்பில் போட்டு விட்டான் இந்திரன். தமது கடமையில் நின்று தவறுபவருக்கு உருத்திரன் வழங்கும் தண்டனை எத்தகையது என்பதை பலதடவை அனுபவரீதியாக உணர்ந்தவன் இந்திரன். அதனால் மாவீரர் விடயத்தால் உருத்திரனின் நெற்றிக்கண் தன்பால் திரும்பிடுமோ என்று நடுநடுங்குகிறான். அதனாலேயே சிவனது வருகையை மாவீரரிடம் இருந்து மறைப்பதற்குப் பகீரதப் பிரயத்தனம் செய்கிறான். இதுகுறித்து உசார்படுத்தவே நான் இங்கு வந்தேன்.”

தமது கடைமை நிறைவேறியதாகக் கருதிக் கொண்டு நாரதர் எம்மிடமிருந்து விடைபெற்றுக் கொள்கிறார்.

பரம்பொருள், இந்திரனது அரண்மனைக்கு வரும் பொழுது உண்ணாது உறங்காது சாத்விகப் போராட்டத்தை மேற்கொள்வது என்றும் அதனூ டாக தமது கோரிக்கைகளை உறுதிபட முன்மொழிவது என்றும் தீர்மானத்துக்கு வருகிறார்கள்.

ஆனால் அடுத்த நாழிகைப் பொழுதிலேயே அதற்கான தேவை இல்லாது போயிற்று. கன்றின் அவலக்குரல் கேட்டு பசு கன்றை நோக்கி ஓடி வருவதுபோல அவர்கள்முன் அழிவில்லாத பேரொளிப் பிழம்பாய் பரமசிவன் தரிசனமானார்.

அந்த எதிர்பாராத பிரசன்னத்தால் மாவீரர் மட்டுமன்றி

சொர்காதிபதிகூடத் திகைத்து நிற்கிறான்,.... மாவீரரின் வேண்டுதலை நிறைவேற்றவேசிவன்அங்குவந்தார்என்பதைப்புரிந்துகொள்ளுவதற்கு சிலகணப் பொழுது வேண்டியிருந்தது.

போரொளியின் முன் போலி என்ற இருள் கலைந்து காணாது போயிற்று.

உள்ளத்துணர்வுகளையும் கருத்துக்களையும் மறைத்து வாயும் கண்ணும் பேசும் நிலைக்கு அங்கு அறவே இடமிருக்கவில்லை.

உண்மை... எந்த அலங்காரமும் இன்றி அம்மணக் குழந்தையாய் அங்கு கிடந்தது.

முக்காலமும் முழுமையும் உணர்ந்த மும்மூர்த்திகளில் ஒருவரான உருத்திரனுக்கு எதுபற்றியும் யார் பற்றியும் எடுத்துரைக்கும் தேவை வேண்டுவதோ...?

ஒவ்வொரு செயலுக்கும் எதிர்வினை உண்டு... அதன் அதன் பயனைக் காலம் அதனதனிடத்து காவிச் சென்றளிக்கிறது. இந்த மாறாவிதிக்கு மூவுலகிலும் எவரும் எவையும் விதிவிலக்கில்லை. ஈழவிடுதலைக்கும் இன்று காலம் கனிந்து வந்திருக்கிறது.

பேரொளி வடிவினரான உருத்திரன் மாவீரருக்கு உணர்த்தியவை இவையே..

ஆனால் மாவீரரின் உள்ளக்கிடக்கையோ........

பரம சிவனே அவர்தம் வேண்டுதலால் சிலகணப்பொழுது செயலற்றவரானார்.

எல்லாம் இயல்பின்படி நடக்கவேண்டும் என்பது விதி. ஆனால் அந்தக் கணிப்பு இங்கு தலைகீழ் விகிதமாக் கிடந்தது.

பொதுவாகச் சொர்க்கத்தை அடைந்தவர்கள் பரமசிவனிடம் வேண்டிநிற்பது சிவனும் தாமும் வேறு என்ற பேதமின்றி இரண்டறக் கலக்கும் வீட்டு நிலையையே... துன்பங்கள் சிறிதும் அணுகாத பேரின்ப நிலை... கடவுட் பதவியை வேண்டி நிற்பவர்களிடையே மனிதப் பிறவியை அவாவி நிற்கும் இவர்களது மனநிலை சொர்காதிபதியான இந்திரனையே இவர்கள் பால் தலை சாய்க்க வைக்கிறது.

தனித்தமிழ் ஈழத்தில் பிறந்து தவழ்ந்து அதன் சுதந்திரக் காற்றைச்

சுகிர்ப்பதையே யாசித்து நிற்கும் அவர்களது கனவு மிக விரைவில் நிறைவேற வரமளித்தவராய் சிவன் கைலாயம் திரும்புகிறார்.

“இந்திய தேசம் சுதந்திரமடையும் முன்பே “ஆடுவோமே.. பள்ளுப்பாடுவோமே... ஆனந்த சுதந்திரம் கிடைத்தது..”என்று பாடிய எனது மன நிலையும் அன்று மாவீரரின் எண்ணத்தை ஒத்திருந்தது கண்டு என் உள்ளத்தில் களிப்பு....

ஆனால் இந்திய சுதந்திரத்தின் பின் நிகழ்ந்த அவலங்கள்.... பாகிஸ்தான் பிரிவினை... இந்து முஸ்லீம் கலவரம்... மகாத்மாவின் படுகொலை..

அகிம்சை பிறந்த தேசத்திலேயே அது செத்து மடிந்தபோது எனது எண்ணத்தில் மாற்றம் நிகழ்ந்துவிட்டது...

அத்தகைய அவலம் ஈழமண்ணில் நிகழாது என்பதற்கு அவர்களுக்குக் கிடைத்திருக்கும் தலைவன் ஒருவனே மாறாத சாட்சியாய் இருக்கிறான்.. என்னுள் நிம்மதி.

மாவீரர் தாம் ஈழத்தில் பிறக்கப் போகும் நாட்களை எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இந்திரலோகத்து நாட்கள் அல்ல..... வழமைபோல பூலோக நாட்களையே....

---

முத்துக்கமலம்

(இக்கதை 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இறுதிப்போர் நடந்த காலத்தில் எழுதப்பட்டது)

# 9.

# முரண்கள்

யமன். தர்மராஜாவின்,,,இராச்சியம்

தர்ப்பார் நடந்து கொண்டிருக்கிறது,,,

சித்திரபுத்த்திரன் பாவபுண்ணியக் கணக்கை படித்துக் கொண்டிருக் கிறான்.

தேவ கணங்கள் இறந்த ஆன்மாக்களை அவர்களது கணக்குப் பிரகாரம் நரகத்துக்கும் சொர்க்கத்துக்கும் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

சிம்மாசனத்தில் வீற்றிருந்த யமனாரின் நெற்றிப்பொட்டு சுருங்குவது அவர் ஆழ்ந்த சிந்தனையில் இருக்கிறார் என்பதைக் காட்டுகிறது.

அவர் மனக் கண்ணின் முன் தராசு.... அதில் உள்ள முள்ளு பாவக்கணக்கின் பக்கம் மிகவும் சாய்ந்து கிடக்கிறது...

கலி முற்றிவிட்டதா.... என்னதான் பூவுலகில் நடக்கிறது....?ஒருமுறை அங்குசென்று பார்த்துவர அவர் விரும்பினார்...

உருவமா... அருவமா... அருவுருவமா...

எருமையுடன் உருவமாய் உலகில் போனால்... பயத்தால் எல்லோரும் விலகிவிடுவார்கள். மரணத்துக்குப் பயப்பிடாத உயிர் இன்னும் பூவுலகில் பிறக்கவில்லை என்பது யமனார் கணிப்பாக இருந்தது.

அருவுருவம்.... அதுவும் சரிப்படாது... மனிதனிடம் விஞ்ஞான அறிவு பிரமிக்கும் படியாகவுள்ளது.. “நானும் ஆய்வுப் பொருளாகி விடுவேனா?....” யமனாருக்குப் பயமாக இருந்தது....

அருவம் தான் பொருத்தமானது... தீர்மானித்துவிட்டார். இனியென்ன பயணம்தான்...

பூலோகம் மனிதர்களின் கோட்டையாய் கிடக்கிறது.... யமனார் ஒரு

பாடசாலையில் வந்து இறங்கிவிட்டார்..

பெரிய அளவிலான மண்டபம்.. மாணவர்களால் நிரம்பியிருக்கிறது... மேடையில் ஒரு பேச்சாளர்...

தன்னைத்தான் காதலனாயின் எனைத் தொன்றும்

துன்னற்க தீவினைப் பால்

"இந்தக் குறள் எனக்கு நன்கு பிடிக்கும். இதன் பொருளென்ன தெரியுமா மாணவர்களே..."

ஓ..! மகான் திருவள்ளுவரின் குறள் அல்லவா... யமனாரல் எங்கும் அசையமுடியவில்லை. கட்டுண்டவர் போல அவ்விடத்திலேயே உறைந்து போகிறார்.

மாணவரை ஊக்குவிப்பதற்காக அழைக்கப்பட்ட பேச்சாளர் குமாரமூர்த்தி தொடர்கிறார்..

"தன்னைத் தான் விரும்புபவன். பிறருக்கு ஒரு சிறியளவில் கூடத் தீங்கு செய்யக்கூடாது என வள்ளுவர் கூறுகிறார்-

தன்னைத்தான் விரும்புபவன்.. அவனைச் சுயநலவாதி என்று சொல்லுவோம். சுயநலன் தனது நலத்துக்காக மற்றவருக்குத் தீங்கு செய்யத் தயங்கமாட்டான் என்றே நாம் பொதுவாக நினைப்பதுண்டு.

ஆனால் வள்ளுவர் இங்கு மிக நுட்பமான கருத்தைக் குறிப்பிடுகிறார்.

தன்னை விரும்புபவன் தனக்கு ஒரு துன்பமும் வரக்கூடாது என விரும்புவான். தனக்கு துன்பம் தருவது பிறருக்கும் அதே அளவிலான துன்பத்தையே தரும் எனபதை தன்னை பிறர் இடத்தில் பொருத்திப் பார்த்து உண்ர்ந்துகொள்வதால் பிறருக்கு ஒரு தீங்கும் செய்யமாட்டான். உதாரணமாக தனது பொருளை ஆராவது களவெடுத்தால் அந்த இழப்புக்காய் ஒருவனுக்குத் துன்பம் நேருகிறது. எனவே அவன் அத்தகைய துன்பம் பிறருக்கு வரத்தக்க வகையில் நடந்துகொள்ள மாட்டான்."

எட.... வள்ளுவன் உண்மையில் பெரும் மகான் தான். வள்ளுவனின் இக்குறட்படி நடந்தால் உலகத்தில் கெட்டவர் எவரும் இரார்... கெட்ட செயலும் நடக்காது...

யமனாருக்குக் குதூகலம் தாங்கமுடியவில்லை.

இந்த உயர்ந்த கருத்தினை உலகுக்குப் பரப்புவதற்காகவே குமார மூர்த்திக்கு ஏதாவது பரிசளிக்கவேண்டும் போல் மனம் குறுகுறுக்கிறது.

குமாரமூர்த்தியின் ஆயுள்காலத்தினை நீடிக்கக் கூட யமனாருக்கு விருப்பம்தான். ஆனால் அது அவரால் முடியாது. விதியை மாற்றும் திறன் பரமசிவனுக்கன்றி வேறு யாருக்கும் கைகூடாததாய் இருந்தது,

அதனால்

வையத்துள் வாழ்வாங்கு வாழும் குமாரமூர்த்திக்கு வானுறையும் தெய்வப் பதவியை வழங்கத் தீர்மானித்தார்.

ஏனோ குமாரமூர்த்தியினைத் தொடர்ந்து அவரது வாழ்க்கையை பார்க்க வேண்டும் என்ற விபரீத எண்ணம் யமனாருக்குத் தோன்றுகிறது.

குமாரமூர்த்தி தமது மேலான பேச்சினை நிறைவுசெய்தபோது மாணவர்கள் பலத்த கரவொலி செய்கிறார்கள். அக்கரவொலி பேசப்பட்ட பொருளுக்கா அல்லது மேலும் பேசி போரடிக்காமலிருந்ததற்கா என்பது தெரியவில்லை.

அதிபர் குமாரமூர்தியை அழைத்துக்கொண்டு தமது அலுவலகத்துக்கு வருகிறார், அங்கு அவருக்கு தேநீர் வழங்கப்படுகிறது. அதன் பின் ஏதோ ஒரு கவரினையும் வழங்குகிறார் அதிபர், யமனாருக்கு அந்தக் கவருக்குள் என்ன இருக்கிறது என்பது தெளிவாகத் தெரியவில்லை. அருகில் சென்று உற்று நோக்குகிறார். அக்கவருக்குள் நான்கு ஐந்து ரூபாய் நோட்டுக்கள்.

ஓ.... வள்ளுவமும் விற்பனைப் பொருளானதா,,,,? யமனாருக்கு சிறிது ஏமாற்றமாய் இருக்கிறது.

குமாரமூர்த்தி காரை எடுத்துக்கொண்டு பாடசாலை வாசலுக்கு வருகிறார். வாகன நெரிசல் அதிகமாக இருந்ததால் தெருவில் காரை ஓட்டிச்செல்வதற்கு அவர் வாசலில் சிறிது நேரம் காத்திருக்க வேண்டியிருந்தது,இந்த இடைநேரத்தைப் பயன்படுத்தி பிச்சைக்காரன் ஒருவன் அவரிடம் கையேந்தி நின்றான்.

குமாரமூர்த்திக்கு வேறொரு பட்டிமன்றத்தில் பேச வேண்டியிருந்தது. வாகன நெரிசலைப் பார்த்தபோது சரியான நேரத்துக்குப் போக

முடியுமா என்ற சந்தேகம் உண்டானது, இதனால். அவர் மனதில் ஒருவகைப் படபடப்பும் எரிச்சலும் உண்டாகியிருந்தன. தமது மன உளைச்சலை பிச்சைக்கரனை வாயில் வந்தவாறு ஏசுவதன் மூலம் தீர்த்துக் கொண்டார். அவர் பிரயோகித்த வார்த்தைகள் யமனாரின் காதுகளில் இரும்பைக் காச்சி ஊற்றியதுபோல விழுகிறது. பிச்சைக்காரனுக்கு இவையெல்லாம் பழகியிருக்க வேண்டும். அவன் புறுபுறுத்தபடி அவ்விடத்தைவிட்டு அகன்று சென்றான்.

“இனிய உளவாக இன்னாத கூறல் கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று” என்ற குறள் யமனாரின் சிந்தையில் வந்து போனது.

குமாரமூர்த்தி பட்டிமன்றம் தொடங்குவதாக இருந்த நேரத்துக்கு சிறிது முன்பாகவே போய்விட்டார். பேச்சாளர் சிலரோடு நடுவரும் வருவதற்கு தாமதமானதால் அரைமணித்தியாலளத்திற்குப் பின்பே நிகழ்ச்சி தொடங்கியது.

இன்றைய நிலையில் வள்ளுவர்நெறி நின்று வாழ்வது கடினமானதா இல்லையா என்பதே தலைப்பாக இருந்தது.

குமாரமூர்த்தி “வள்ளுவர் நெறி நின்று வாழ்வது கடினமில்லை” என்று வாதாடினார்.

அவரது பேச்சு தலைப்போடு ஒட்டியதாகவோ பொருளாழம் உள்ளதாகவோ இருக்கவில்லை. மாறாக பெண்களைக் குறை கூறுவதன் மூலம் சபையோரைச் சிரிக்கவைத்து கரகோசத்தைத் தட்டிச் செல்வதாகவே அமைந்தது. வந்திருந்த சபையோரும் ஆழமான கருத்துக்களைக் கேட்டு தமது வாழ்வை நெறிப்படுத்த வந்தவர்களாகத் தெரியவில்லை. சிறிதுநேரம் சிரித்துப் பொழுது போக்க வந்தவர்களாகவே இருந்திருக்க வேண்டும். அதனால் அவரது பேச்சுக்கு அதிக வரவேற்பு இருந்ததாகப்பட்டது.

யமனாருக்குச் சலிப்பாகவிருந்தது. ஆனாலும் தமது தீர்மானத்தைத் தானே மீற விரும்பவில்லை. அவர் குமாரமூர்த்தியைத் தொடர்ந்தார்.

பட்டிமன்றம் முடிய வெகு நேரமாயிற்று. வீடு வந்து இரவுச் சாப்பட்டை முடித்தவர் நிம்மதியாகத் தூங்குவதற்காக இரண்டு கிளாஸ் மது அருந்துகிறார் குமாரமூர்த்தி. அவர் மாணவருக்கு

மது அருந்துவதன் கேடு பற்றிக் கூறியது யமனார் நினைவில் வந்து போகிறது.

மறுநாள் சாவகாசமாக எழுந்து கொள்கிறார் குமாரமூர்த்தி. காலைச் சாப்பாட்டை முடித்துவிட்டு கைத்தொலைபேசியில் face book பார்க்கிறார். அதில் மூழ்கியும் போகிறார்.

"என்னப்பா இண்டைக்கும் கம்பஸ்சுக்கு லேற்றா போகப் போறீங்களே...."

மனைவியின் குரலால் விழிப்படைந்தவராய் மணியைப் பார்க்கிறார். மணி பதினொன்றைக் காட்டுகிறது. இரண்டு வகுப்புகளுக்கான நேரம் கடந்திருந்தது. மாணவர்கள் காத்திருந்திட்டுப் போயிருப்பார்கள். அதைப்பற்றி அவர் சிறிதும் கவலை கொள்ளவில்லை. அவர்களுக்கு வருகைதராததற்கு ஏதாவது காரணத்தை சொல்லி விடலாம்... மனதுக்குள் திட்டமிடுகிறார்.. ஒரு மணிக்கு துறைசார் ஒன்று கூடலுக்கு போய்வரலாம் எனத் தீர்மானித்துக் கொள்கிறார்.

கலைப்பீடத்தில் உள்ள துறைகள் சிலவற்றுக்கு விரிவுரையாளர்களை தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது..... பீடாதிபதி துறைகள்தோறும் விரிவுரையாளர்களைப் பரிந்துரைக்கும்படி கேட்டிருந்தார்.

கல்வியியல்துறைத் தலைவர் என்ற வகையில் குமாரமூர்த்தியும் சில பெயர்களைப் பரிந்துரைக்க வேண்டியிருந்தது.

விரிவுரையாளராவதற்கு தகுதியானவர்களின் நான்கு பெயர்களை துறைசார்ந்த ஏனைய விரிவுரையாளர்கள் ஏகமனதாக வழங்கி யிருந்தனர். எனினும் குமாரமூர்த்தி அப்பெயர்களுடன் தாம் வழங்கும் ஒரு பெயரையும் சேர்க்குமாறு அவர்களை வற்புறுத்தினார். வேறு வழியின்றிப் பட்டியலில் ஐந்தாவதாக அப்பெயரை இணைக்க ஏனையவர்கள் இணங்க வேண்டியதாயிற்று. ஆனாலும் அவர்களில் முதலிரு இடங்களில் இருந்தவர்களே மிகவும் தகுதியானவர்கள் என்றும் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பே மற்றவர்கள் பற்றி கருத்தில் கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் வற்புறுத்திக் கூறியிருந்தனர்.

ஒன்றுகூடலின் போது கல்வியியல்துறைக்கு தற்சமயம் ஒரு விரிவுரை யாளரையே தேர்ந்தெடுக்க முடியும் எனப் பீடாதிபதி கூறிய போது

குமாரமூர்த்தி சிறிதும் தயங்காது தம்மால் வற்புறுத்திச் சேர்க்கப்பட்ட ஐந்தாம் நபரையே விரிவுரையாளராகத் தேர்ந்தெடுக்கும்படி பரிந்துரைத்தார். அதனால் ஏனைய விரிவுரையாளர்களிடம் உண்டாகும் அதிருப்தியை வேறுவழிகளில் சமாளித்துக் கொள்ளலாம் எனவும் கணக்குப் போட்டார்.

அவரால் பரிந்துரைக்கப்பட்ட கவிதா அவரது உறவினள் என்றும் அவருக்கு மிகவும் நெருக்கமானவள் என்றும் கதையொன்று ஏற்கனவே பல்கலைக்கழகத்தில் அடிபட்டுக்கொண்டிருந்தது.

தகுதி அடிப்படையில் முதலிடத்தில் இருந்த பகீரதன் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் இருந்து வந்தவன். போர் சூழலால் பெரிதும் பாதிக்கப்பட்டவன். குடும்பத்தின் ஒரே உழைப்பாளியான தந்தை செல்லுக்குப் பலியாகிவிட பகீரதனையும் அவனது இரண்டு தங்கைகளையும் வளர்ப்பதற்கு பகீரதனின் தாய் கலைமகள் பட்ட கஷ்டங்கள் சொல்லில் அடங்காதவை. இன்று இரண்டு குமர்பிள்ளைகளைக் கரையேற்ற வேண்டிய பொறுப்பும் பகீரதனிடம் இருந்தது.

இத்தனையும் குமாரமூர்த்திக்கு நன்குதெரிந்தே இருந்தன..

தகுதி மிகக் குறைந்த ஒருவரைத் தேர்ந் தெடுத்து தகுதி நிறைந்தவரது வாய்ப்பைப் பறித்துவிட்டார் குமாரமூர்த்தி.. பகீரதனின் ஏமாற்றமோ அவன் அடையவிருக்கும் வருத்தமோ அவருக்குப் பொருட்டாக இல்லை. பகீரதனின் இடத்தில் தன்னைப் பொருத்திப் பார்க்க அவர் எள்ளளவும் முயலவில்லை.

வாய்ச்சொல் வீரனாக... சுயநலவாதியாக... இருந்த குமாரமூர்த்தியின் வக்கிரங்களை பார்த்த யமனாருக்கு தலை சுற்றியது.

ஒரு பானை சோற்றுக்கு ஒருசோறு பதம் எனக் கருதினாரோ என்னவோ

இன்னும் பூலோகத்தில் இருக்கப்பிடிக்காதவராய் யமலோகம் திரும்புகிறார் அவர்.

# 10.

## கடவுள் மீண்டும் வருவாரா....?

கடவுள் தனியாக இருக்கிறார். எங்கும் அமைதி, மயான அமைதி என்பார்களே... மனம் வெற்றிடமாய்க் கிடக்கிறது. செய்வதற்கு எதுவுமில்லை. வெறுத்துவிட்டது அவருக்கு.

எம்மால் உருவாக்கப்பட்ட பூமிக்கு ஒருதடவை போய்ப் பார்க்கலாமே என்று அங்கு வருகிறார்.

அவர் சிந்தையில் ஏதோ தட்டுப்படுகிறது.... எடுத்துப் பார்க்கிறார்... ஒரு டைனோசரின் எலும்பு அது.... அட.... இந்த டைனோசரையாவது அழிக்காமல் விட்டிருக்கலாமே..... இவையிருந்திருந்தால் இவற்றைப் பார்த்தாவது பொழுதைப் போக்கியிருக்கலாமே..... அவர் மனம் இப்பொழுது ஏங்குகிறது.

இதுவரை ஓரறிவு முதல் ஐந்தறிவு வரையுள்ள விலங்குகளை மட்டுமே அவர் படைத்திருந்தார்..,... அவை உயிர் வாழ உணவு, இனம் பெருக உயிர்ச்சேர்க்கை என்ற இரண்டோடு மட்டும் திருப்தி கொண்டு விடுகின்றன. தமது உணவுக்காக ஓர் உயிரினம் மற்ற உயிரினத்தோடு சண்டையிடுகிறது... வலியது வாழ்கிறது.. உடல் வலிமையற்றது சாகிறது... மீண்டும் மீண்டும் இதையே பார்த்து கடவுளின் மனம் சலித்துவிட்டது..

இப்படி வெறுமையில் மனம் உழன்ற பொழுதில்தான் சூரியப்பந்தில் ஒரு துண்டைப் பிடுங்கி பூமி மீது எறிந்திருந்தார்...

அவர் ஓர் தீர்மானத்துக்கு வருகிறார்.. இனி தாம் தோற்றுவிக்கும் எந்த உயிரினத்தையும் இவ்வளவு எளிதாக அழித்து விடுவதில்லை... என்பதுதான் அது..

மேகம் கறுத்து மழை பொழிகிறது. இந்த மழையில் நனைவது அவருக்குச் சற்று ஆறுதலைத் தருகிறது.

அவர் சிந்தனையில் மூழ்கிப்போகிறார்.... சட்டென ஒரு மின்னல்.... அது மேகங்கள் இரண்டும் மோதியதால் உருவாகியதா... அன்றி அவர் சிந்தனையில் இருந்து தெறித்ததா என்று அவர் ஆராய முற்படவில்லை...

ஆறு அறிவுள்ள உயிரைப் படைத்து விட்டால்......

அவர் மனம் துள்ளுகிறது.....

பகுத்தறிந்து கொள்ளும் திறத்தால் உலகில் அது புதிது புதிதாகச் செயற்படும்,. தாம் படைத்து விட்டிருக்கும் உயிரியல், சடப்பொருட்களின் மூலத்தைத் தேடி அலைந்து கொண்டிருக்கும். அதன் இரகசியங்களை அறிந்து பயன்கொள்ளும். உலகந்தாண்டி.... பிரபஞ்சம் அதன் தேடல் பொருளாகும்.... படைப்பின் மூலகர்த்தா யார் என்ற வினா முடிச்சை அவிழ்க்க அது படும் அவஸ்தை இருக்கிறதே....... அது பார்ப்பதற்கு சுவாரசியமாக இருக்கும்.. இந்த வழியில் மீண்டும் மீண்டும் அதன் பயணம் தொடரும்......

தாம் சிவனே என்று சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கலாம்.

அவர் மகிழ்ச்சியாகச் செயற்படத் தொடங்குகிறார். தம் சிறப்பு ஆற்றலை எல்லாம் பயன்படுத்தி ஏதோ ஒன்றை உருவாக்க முயலுகிறார். அவரது சிந்தனைக்கு வடிவம் கொடுப்பது ஒன்றும் அவ்வளவு இலகுவானதாய் இல்லை. கருவிகள் பலவற்றை பயன்படுத்துகிறார்.

பல்லாயிரம் தடவைகள் முயன்ற பின்னர் ஒருவாறு அவர் சிந்தனை வடிவம் பெற்றுவிட்டது..

ஆணும் பெண்ணுமாய் மனிதர் சிலரைப் படைத்து விட்டார்.....

ஒரு குழந்தை அவர் கால்களைக் கட்டிக் கொண்டு அண்ணாந்து அவர் முகத்தை பார்க்கிறது... குமின் சிரிப்பொன்றை உதிர்க்கிறது....

கடவுளுக்கோ உடல் சிளிர்க்கிறது..... தாய்மையின் பரவசநிலை....

ஆனந்தக் களிப்பில் மிதக்கிறார்.... களிப்பின் உச்சியில் அழுகிறார்... பின்பு பெரிதாய் சிரிக்கிறார்...

அவர் செயல்களை அவரால் உருவாக்கப்பட்ட மனிதர் சிலர் சிறிது நேரம் வேடிக்கை பார்க்கிறார்கள்.

அவர்களில் ஒருத்தன் அங்கொன்றும் இங்கொன்றுமாய்ச் சிதறிக் கிடக்கும் கடவுளின் படைப்புக்கருவிகளை எடுத்து ஆராய்கின்றான்.

கடவுளின் மனம் துணுக்குற்றுப் போகிறது... மனதில் இடி இறங்குகிறது... பொறாமை எட்டிப்பார்க்கிறது...

தமக்குப் போட்டியாய் இவர்களும் சிருக்ஷ்டி கர்த்தாக்களானால்...

பயம்.... பெரும் ஐயத்தால் பிறந்த பயம்.. முதல் முதலாய் உணர்கிறார்.... கடவுள்

அவர்களை அழித்துவிடமுடியாது..... சற்றுமுன்னர்தான் எளிதாக அழித்துவிட மாட்டேன். என்று தீர்மானித்திருந்தார் கடவுள்..

கடவுளின் பயம் நியாயமானதுதான்.... மனிதன் ஒருவன் அவரைச் சுற்றிவருகிறான்... நான் இக்கடவுளை அழித்துவிட்டு அவர் இடத்தைப் பெற்றுவிட்டால்.....? ...... சுத்தச் சுயநலம் கொழுந்துவிட்டெரிகிறது......

கடவுள் சிந்தையில் புன்னகை.... அகக்கண்களில் பேரொளி....

நாடகத்துக்கான கதாபாத்திரங்கள் பரிபூரணமாகத் தாயாராகி விட்டன.

கடவுள் மனதில் என்றும் அனுபவித்திராத திருப்தி..... அவர் மனிதச் சிந்தைக்குக்கூட எட்டாத தூரத்துக்குச் சென்றுவிடுகிறார்....

அன்று முதல் பூமியில் நாடகம் தொடர்கிறது........

கடவுள் மீண்டும்.........?

(தம்மைக் கடவுள் என்று சொல்லித்திரியும் (ஆ)சாமிகளுக்கு இக்கதை சமர்ப்பணம்.)

# 11.

## இயலாமை

வசந்தகாலப் பரபரப்பில் இத்தாலியத் தெருக்கள்...

நள்ளிரவு கடந்த பின்பும் தெருக்களில் சனநடமாட்டம் சிறிதும் குறையவில்லை.

கடல் அலையின் ஓசை காதுக்கிதமாய் ஒலிக்கிறது.

கடற்கரைக்கு மிக அருகில் இருக்கும் “போச்சே” பார்க்கில் அகிலாவும் அவள் தோழிகளும்... மிக மகிழ்ச்சியாய்ப் பொழுதைப்போக்கிக் கொண்டிருந்தார்கள்.

எத்தனையோ பொழுதுபோக்கு ஊடகங்கள் இருந்த போதும் நண்பர்கள் கூடிக் கதைப்பதில் தனிச் சுகம் இருப்பதாக அகிலா எண்ணிக்கொள்கிறாள். பல சமயங்களில் அக்கதையில் சாரம் இருப்பதில்லை. ஆனாலும் மன இறுக்கங்களைத் தளர்த்திக் கொள்ள இவ்வாறான ஒன்றுகூடல்கள் அவசியம் எனப்பட்டது அவளுக்கு.

சற்றுத் தொலைவில் அவர்களது பிள்ளைகள் பந்தடித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

அகிலாவின் தொலைபேசி செல்லமாய்ச் சிணுங்குகிறது. மறு முனையில் அவளது அண்ணி,,.....

வழமையாக இரவு வேளைகளில் அவர்கள் அகிலாவை அழைப்பதில்லை.

அவள் சற்றுப் பதட்டத்துடன் அழைப்பை இணைக்கிறாள். அண்ணியின் உற்சாகக் குரல்.....

அவள் பதட்டம் அடங்குகிறது. ஏதோ நல்ல செய்தி சொல்லப்

போவதாய்….. அவள் உள்ளத்திலும் உற்சாகம் தொற்றிக் கொள்கிறது…

அவள் ஊகம் சரியாகவே இருந்தது.

அவள், அண்ணாவின் மகள் கார்த்திகாயினியின் திருமணம் பல காரணங்களால் தள்ளிப்போய்க் கொண்டிருந்தது.

அண்ணன் உதயன் வீடு, தோட்டம் என்று….. நல்ல பசையோடு தான் இருந்தார்.

கார்த்தி அவர்களின் ஒரேமகள்..

ஆனாலும் அண்ணியதும் கார்த்தியினதும்.. எதிர்பார்ப்பு மிக அதிகமாக இருந்ததாலோ என்னமோ வயது முப்பதைக் கடந்தபோதும் அவளுக்கு திருமணம் கைகூடாமல் இருந்துவந்தது..

முன்பு ஒரு சம்பந்தம் கலியாணத்துக்கு நாள் குறிக்கும் தறுவாயில் குழம்பிப் போனது…. அந்த ஏமாற்றத்திலிருந்து அவர்கள் மீண்டுவரச் சிலகாலம் தேவையாய் இருந்தது…

இரண்டு வருடங்களுக்குப் பிறகு அதே சம்பந்தம்

கூடிவந்திருக்கும் கதையை அண்ணி மிகச் சுவாரசியமாய் சொல்லிக் கொண்டிருந்தா… அகிலாவும் சில கேள்விகளைக் கேட்டவளாய் அவவின் உற்சாகத்துடன் கரைந்துகொண்டிருந்தாள்.

ஆவணி 24இல் கலியாணத்தேதி முடிவாயிருந்தது.

அண்ணியிடம் போனை வாங்கி உதயன் அண்ணாவும் கார்த்திகாவும் கதைக்கிறார்கள்.

எல்லோருமே கலியாணத்துக்கு வர வேண்டும் என்ற கட்டாய வேண்டுகோளை முன் வைக்கிறார்கள்.

அதிலும் கார்த்திகா ஒருபடி மேலே சென்று

“அத்தை நீங்கள் வராவிட்டால் நான் பேந்து கதைக்க மாட்டன்”

எனச் சிணுக்கமாய் கட்டளையிடுகிறாள்.

அந்த அழைப்பு ஆத்மார்த்தமானது என்பதை அகிலாவால் நன்றாகவே உணர்ந்துகொள்ள முடிந்தது.

கார்த்தி குழந்தையாக இருந்தபோது அவளின் பொழுது, அப்பம்மா வீட்டிலேயே அதிகம் கழிந்தது. அவளே கந்தசாமி தம்பதியரின் முதல் பேர்த்தியென்பதால் ஒரு குட்டி இளவரசியாகவே அவர்கள் வீட்டில் உலவி வந்தாள்.

அகிலாதான் குட்டி இளவரசியின் மந்திரி. விளையாட்டுத் தோழி,

ஆசிரியை..... கதை சொல்லி...

அகிலா இத்தாலிக்கு வரும் போது கார்த்திக்குப் பத்து வயது.. அவள் அகிலாவின் பிரிவைத் தாங்காது இரண்டு நாட்கள் சரியாகச் சாப்பிடாது அழுது கொண்டே இருந்தாள்.

இன்று அவள் பருவ மங்கையாகி... அவளை அன்பொழுக அழைக்கிறாள்

அகிலாவுக்கு நாளையே ஊருக்குப் போனால் என்ன என்று இருக்கிறது. கார்த்தியின் கலியாணக் கோலத்தை கண்குளிரக் காணவேண்டும்.. உறவுகள் எல்லோரையும் சந்திக்க வேண்டும். பிறந்து வளர்ந்த ஊரை ஒருமுறை கண்டு வரவேண்டும். உற்சாகம் பொங்கி வழிகிறது...

ஆனால்...... அவளது பொருளாதாரம்?

குடும்பத்தில் ஐந்து பேரும் போய் வருவதானால்,,,,அதுவும் ஆகஸ்டு மாதம் டிக்கற் விலை இரண்டு மடங்காய் இருக்கையில்... டிக்கற்றுக்கு மட்டும் 5000யூரோக்கள் வேண்டுமே...

அகிலாவின் கணவர் கரன் பொறுப்பில்லாதவர். குடியில் பல சமயங்களில் மயங்கிக் கிடப்பவர். அவ்வப்பொழுது வேலையில்லாது இருப்பது அவருக்கு ஒன்றும் புதியதல்ல. வேலையில்லை என்பதற்காக அவர் கவலை கொண்டதும் இல்லை..

அகிலா கரனுக்கு மூன்று பிள்ளைகள். மூத்த மகள் நிவேதாவுக்கு 18 வயதாகிறது. அவள் பள்ளி இறுதியாண்டில் படிக்கிறாள். விநயன், 16வயது வினோத் 10 இவர்கள் பள்ளியில் படிக்கிறார்கள்.

பதின்ம வயதில் இருக்கும் இவர்களைப் பற்றியும் கரன் அதிகம் அலட்டிக் கொண்டதில்லை.....

இந்த நிலையில் குடும்பத்துக்காக இடை விடாது உழைத்துக் கொண்டு வீட்டுப் பொறுப்பையும் அகிலா ஒருத்தியே சுமக்கிறாள்.

போன வருடம் கரனின் சகோதரியின் மகளின் கலியாணம் இந்தியாவில் நடந்தது. அதற்குக் கட்டாயமாக தான் குடும்பத்தோடு சென்றுவர வேண்டும் எனக் கரன் விரும்பினான். அவனை மட்டும் போய்வருமாறு அகிலா கேட்டுக் கொண்ட போதும்" அக்கா கோபித்துக் கொள்ளுவா "எனப் பிடிவாதமாகக் கரன் நின்ற போது வேறு வழியில்லாது அவர்கள் இந்தியாவுக்குப் போய் வந்தார்கள்.

அப்போது வாங்கிய 10000 யூரோவுக்கு வட்டிகட்டிக்கொண்டிருக்கும் நிலையில் மேலும் செலவு செய்வதென்பது தனக்குத் தானே படுகுழி வெட்டுவதற்கு சமமானது.....

அகிலாவின் அக்கா இருவர் இலண்டனில் இருக்கிறார்கள். அண்ணா ஒருவர் என்சினியராய் அவுஸ்ரேலியாவில் இருக்கிறார்.. இவர்கள் அடிக்கடி குடும்ப நிகழ்வுகளுக்காக இலங்கை சென்று வருகிறார்கள். அகிலா ரெலிஃபோனில் வாழ்த்துச் சொல்வதோடு சரி.

கார்த்தியின் கலியாணத்துக்கும் ஊருக்கு அவர்கள் நிச்சயம் போவார்கள்.

அவர்கள் போல நானும்.....

அகிலா தன் ஆசைகளை தலையில் குட்டி மெல்ல மனதுக்குள்ளேயே புதைத்துக் கொள்கிறாள்.

இம்முறை குடும்பத்தின் முக்கிய நிகழ்வு இது என்பதால் கட்டாயம் அகிலா வருவாள் என அண்ணி உறுதியாக நம்பினா என்பது அவவின் கதையிலிருந்து விளங்கியது.

அப்போதைக்கு பார்க்கலாம்..... என்றுகூறி இணைப்பைத் துண்டிக் கிறாள் அகிலா.

கலியாணத்துக்கு போகவில்லை என்பது அகிலாவுக்கு மட்டுமல்ல

அண்ணா அண்ணிக்கும் வருத்தத்தை தந்தது.

கார்த்தியின் கலியாணம் முடிந்து இரண்டு வருடங்களாகிவிட்டன.. ஒரு குழந்தைக்குத் தாயாகியும் விட்டாள்..

அகிலாவுக்கோ போராட்டங்களோடு வாழ்க்கை நகர்கிறது.......

அவள் மதியச் சமையலுக்கு ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறாள்.

வெளியில் கருமேகம் கூடியிருந்தது. மழை பெய்யவில்லை.. குளிர் காற்று வீசியது..... ஆனாலும் ஒருவகைப் புழுக்கம்.....

அகிலாவின் மனதில் ஏதோ வெறுமை..... குழப்பம்.... பதற்றம்.....

இனம்புரியாத சோகம் மனதைக் கவ்வியதாய்.....

வீட்டு ரெலிஃபோன் அலறியது..... ஒருவகை அலுப்புடன் அதை எடுக்கிறாள்

எதிர்முனையில் கார்த்தியின் அழுகுரல்... குழறி அழுகிறாள்.

அகிலா செய்வதறியாது சிலையாகிறாள்.....

அம்மா... அம்மா...." அழுகையிடையே தெறித்த வார்த்தைகள் இவைதான்.....

அவளிடமிருந்து போனை வாங்குகிறார் அவள் கணவர் முரளி.

"மாமி பின்னேரம் நடந்த ஒரு விபத்தில் சம்பவ இடத்திலேயே இறந்திட்டா..... மாமா சின்னக்காயங்களுடன் உயிர் தப்பிவிட்டார்.."

இதுவே முரளி சொன்ன செய்தி

மென்மையான மனதில் பெருங்கல்லை தொப்பெனப் போட்டது போல வலியால் துடித்துப்போகிறாள் அகிலா.

"மாமியின் உடல் டிப்பர் ஏறினதால சிதைஞ்சுபோட்டுது..... அதால எம்போம் பண்ண முடியாது. நாளையே உடலை எடுக்கவேண்டியிருக்குது....."

முரளி இன்னும் ஏதோ சொல்லுகிறார். அகிலாவுக்கு தலை

சுற்றுவதுபோல இருக்கிறது.

அண்ணியாகவில்லாது சொந்தச் சகோதரி போல அன்பு செலுத்திய அண்ணியின் இழப்பு அவள் மனதில் வேதனையாகக் கொப்பளிக்கிறது. இந்தச் செய்தி பொய்யானதாக இருக்க்கக்கூடாதா என மனம் ஏங்குகிறது.

அவள் பொத்தென செற்றியில் சாய்கிறாள்..... சுயநிலையடைய சில நிமிடங்கள் தேவைப்படுகிறது..

அவர்கள் அகிலாவுக்குச் செய்தியைச் சொல்லிவிட்டார்கள். இப்போது அவள் ஊருக்கு போவதைப்பற்றி முடிவெடுக்க வேண்டும்.

உடல் பார்க்கக் கூடியதாக இருந்தால் அவளாவது ஊருக்குப் போய்வரலாம்..... அதுவும் முடியாத நிலை.....

விசா முடிந்த நிலையில் விசாவைப் புதுப்பிக்க டோக்கிமன்சை வேறு அனுப்பியிருந்தாள்.

பொங்கிவந்த அழுகையை கட்டுப்படுத்த முடியாதவளாய் விக்கி விக்கி அழுகிறாள்..

அழுகை அண்ணியின் இழப்புக்காக மட்டுமல்ல..... அகிலாவின் இயலாமைக்குமானதால் மணிக்கணக்காய் தொடர்ந்தது.....

# 12.

## ஞானி

சாமியார்..... இது அவரது பெயரல்ல..... ஊரவர் அவரை அப்படித்தான் அழைக்கிறார்கள்.....

ஒற்றைக் கூரை போட்ட குடில்..... அவர் வாசஸ்தலம்..... குடிலைச் சுற்றிப் பரந்து கிடக்கிறது விளைநிலம்..... கொட்டிலின் கிழக்குப் பக்கத்தில் பெரிய காய்கறித் தோட்டம்..... கால்வாயைக் கடந்தால் பெரிய வயல் நிலம்.....

சாமியாரின் தந்தைவழி முதுசமாய் அவரை வந்தடைந்தவை...

அவர் ஒரு இயற்கை விவசாயி... அவரது இடைவிடாத உழைப்பில் செழித்து இருக்கிறது பூமி..

சாமியார் விளைந்தவற்றில் தமக்கு உயிர்வாழ சிறிதளவு எடுத்துவிட்டு மிகுதி அனைத்தையும் ஊர்ப்பாடசாலை மாணவருக்கு மதிய உணவுக்காய் வழங்கிவிடுவார்.. அவர் தயவால் ஏழை மாணவர்களுக்கு மட்டுமன்றி அனைத்து மாணவர்களுக்கும் ஆரோக்கியமான உணவு கிடைத்து வருகிறது.

எளிமையில் அவர் காந்தியவாதிபோலும். அவரிடம் உபயோகத்துக்கு மிக அவசியமான பொருட்கள் மட்டுமே இருந்தன. உடைகள்கூட இரண்டு மட்டுமே இருந்தன.. உழைப்பதில் அவருக்கு அலாதியான பிரியம் இருந்தது. பொருள் எதிலும் அவர் ஆசை கொள்ளாத அதிசய மனிதராய் இருந்தார்..

இவர் இறைவழிபாட்டில் ஈடுபட்டதையோ, தமது கடவுட் கொள்கை இது என எடுத்துரைத்ததையோ எவரும் பார்த்ததில்லை... கேட்டதில்லை. இவரும் காவி அணிந்ததுமில்லை. தம்மைத் துறவி என்று கூறியதுமில்லை. ஆனாலும்

இவரது நடத்தையைப் பார்த்த பொதுமக்கள் இவரைச் சாமியார் என்றே அழைத்தனர்.

காலைமுதல் மாலைவரை விவசாயத்தில் ஈடுபடுவது, தனக்கான உணவை தானே தயாரிப்பது.... மாலையில் கால்நடையாக இரண்டு மணிநேரமளவில் ஊரைச் சுற்றிவருவது இரவில் ஏழை மாணவருக்கு பாடம் சொல்லிக் கொடுப்பது, படுக்க முன் நூலகத்தில் பெற்றுவந்த புத்தகத்தைப் படிப்பது இவைதான் இவரது நாளாந்த செயற்பாடுகளாக இருந்து வருகின்றன. இவர் இந்த ஊருக்கு வந்த காலம் தொடக்கம் கடந்த பத்து வருடங்களாக இவ்வாறே இவரது பொழுதுகள் கழிகின்றன.

இவரது கடந்த காலத்தை அறிந்திட ஊரவர் விரும்பினார்கள் இவரிடமே நேரடியாகச் சிலர் கேட்டும் பார்த்தார்கள். ஒரு புன்னகையால் அக்கேள்விகளை அவர் கடந்து சென்றுவிடுவார்.

ஊரவர் தமக்குக் கிடைத்த தகவல் துணுக்குகளைக் கொண்டு அவரது வாழ்க்கை பற்றி ஊகித்து சில கதைகளை கட்டினார்கள். பின்பு ரிஷி மூலம் நதிமூலம் அறியமுடியாது என நினைத்தார்களோ என்னவோ தமது ஆராய்ச்சியைக் கைவிட்டுவிட்டார்கள்.

ஆனாலும் அவரிடமும் ஒருகதை புதையுண்டுதான் இருந்தது. கரிகரன் தான் அவரது பெயர். அவர் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது தான் தயாநிதியைச் சந்தித்தார். முதலில் நண்பர்களாகத்தான் இருந்தார்கள். நட்பு காதலாகியது. ஐந்து வருடங்கள் காத்திருந்து இரு வீட்டாரதும் சம்மதத்துடன் திருமணம் செய்துகொண்டார்கள்.

திருமண வாழ்க்கை மிக மகிழ்ச்சியாகப் போய்கொண்டிருந்தது. ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டு வாழ்ந்தார்கள். ஆனாலும் அந்த வாழ்விலும் ஓர் இழையாக குழந்தை இல்லை என்ற சோகம் இல்லாமல் இருக்கவில்லை. கரியின் பெற்றோர் பேரப்பிள்ளைகளை கொஞ்சமுடியவில்லையே என்ற ஏக்கத்தோடேய ஒருவர் பின் ஒருவர் இறந்து போனது வேறு தம்மபதியினரை வாட்டியது என்னவோ உண்மைதான். ஆனாலும் அந்தத் துயரில் இருந்து தங்களை விடுவித்துக் கொண்டு இருவரும் தம் மனதால் நெருங்கினார்கள். அந்த வாழ்விலும் இனிமையை அனுபவித்தார்கள்.

ஆறு வருடங்களின் பின் தயாநிதி கருவுற்ற போது மகிழ்ச்சியில் திளைத்தார்கள். குழந்தை பிறந்து ஒருவருடம் வரையிலான காலம் மட்டுமே அவர்கள் வாழ்வில் வசந்தம் நீடித்தது...

அந்தக் கொடியநாள் கரிகரனின் வாழ்வையே புரட்டிப்போட்டு

விட்டது..

தயாநிதியின் பெற்றோர் கடற்கரைக்கு மிக அருகில் இருந்த வீட்டில் குடியிருந்தனர். தாய் நோய்வாய்ப்பட்டிருந்ததால் அவருக்கு உதவுவதற்காக குழந்தையோடு தயாநிதி பெற்றோரின் வீட்டுக்கு சென்றிருந்தபோது தான் சுனாமி இலங்கை இந்திய கடற்கரையைத் தாக்கியது. ஒரு கணப்பொழுதில் அவர்கள் குடும்பமே சுனாமிக்குப் பலியாகிப் போனது.

கரிகரன் தனிமரமானார் இருவரது இழப்பையும் தாங்கமுடியாது இரண்டு வருடங்கள் நிம்மதியின்றி எங்கெங்கோ அலைந்தார். காலம் அவர் மனப்புண்ணை சிறிது ஆற்றிய போது அவர் சிந்தையில் ஆழ்ந்தார்.

ஒரு பயித்தியம்போல மனதை வருத்திக்கொண்டு வாழ்வதைவிட பிறருக்காவது பயனாக வாழ்ந்துவிட்டுப் போகலாமே என்று எண்ணியதன் பயன்தான் அவரது இன்றைய வாழ்வு.

கரிகரன் தனது மனைவியின் நேசத்தை தமது உள்ளத்துக்குள் பூட்டிக்கொண்டார். அந்த நேசம் வளர்ந்து அவர் உயிரெங்கும் பரவியது. மனைவியை ஸ்தூல நிலையிலேயே அவரால் காதல் கொள்ள முடிகிறது,

பாவனைதானே உறவுகள் எல்லாம். அவர் குழந்தையின் விம்பத்தை எல்லாக் குழந்தையிலும் காணும் அற்புத மனநிலையைத் திருஷ்டித்துக் கொண்டார். அவர் மதிய உணவை மாணவருக்கு வழங்குவதையோ தம்மிடம்நாடிவரும் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பதையோ தானமாகக் கருதவில்லை. தமது கட்டாயக் கடமையாகக் கருதினார்.

அவர் மற்றவர்கள் தம்மை எப்படிப் பார்கிறார்கள் என்று சிறிதும் கவலைப்படவில்லை. மக்களின் புகழ்ச்சியோ இகழ்ச்சியோ அவரை பாதிக்கவில்லை.

அவர் மனம் குறுகிய வட்டத்துக்குள் சுழலாது சிறிது சிறிதாக பரந்து உலகலாவி வியாபித்தது வந்தது.

இதுதான் உண்மை ஞானியின் மனநிலையோ?

# 13.

## பாவ மன்னிப்பு

வானம் பிளந்து கொண்டதோ என்னமோ... கருக்கொண்ட மேகங்கள் சுமைதாங்காது நீர்த்தாரையைத் தெறிக்கவிட்டிருந்தன..... மேகங்களின் கூச்சல் பொறுக்காது மின்னல் சாட்டை கொண்டு வீசிற்று...

கடல் அலைகள் பொங்கி வானத்தைத் தொட்டு விடத்துடித்தன.... காற்று ஆவேசம் வந்தது போலச் சுழன்று அடித்தது..... பிரளய காலம் இவ்வாறுதான் இருக்குமோ...

வெளி ஆரவாரங்கள் எவையும் அவர் மனதைத் தொடவில்லை ஆனாலும் அவர் மனதிலும் புயல் அடித்துக் கொண்டிருந்தது. அப்புயலில் அகப்பட்ட சிறுஇலை போல் அவரது மனம் அமைதியின்றி அலைக்கழிந்து கொண்டிருந்தது. அமுதாவின் உயர்ந்த உள்ளத்தின் முன்னே தான் மிகக் கேவலமான சிறு புழுவாக இருப்பதை எண்ணித் துடித்துக்கொண்டிருந்தார்.

சிவராமன் இது தான் அவர் பெயர். அறுபதுகளைத்தொடும் அவர் வாழ்க்கை மனதின் கட்டளைப் படியே இதுவரை சென்றிருந்தது.

வாழ்வின் இன்பங்கள் யாவற்றையும் அனுபவித்திட வேண்டும் என்ற வேட்கை அவன் மனதினை முழுமையாக ஆக்கிரமித்திருந்தது.

மகிழ்ச்சியும் அதனால் அடையும் இன்பமும் அகமனதில் இருந்து ஊற்றெடுக்க வேண்டும் என்பதை அவன் அறிந்திருக்கவில்லை.

அவன் பொருள்கள் வாயிலாகவே அந்த இன்பத்தை அடைய முடியும் என முழுமையாக நம்பினான்.

இதனால் பணம் அவன் தேடு பொருளாக அமைந்ததில் வியப்பொன்றும் இல்லைத்தான். மிகவும் சாதாரண குடும்பத்தில் பிறந்ததனால் தந்தைவழி முதுசமாக எப்பொருளும் அவனை

வந்தடையவில்லை.

படிப்பும் அவனுக்கு அதிகம் ஏறவில்லை. உத்தியோகத்தால் தன்னால் அதிகம் சம்பாதிக்க முடியாது என்பது அவனுக்கு நன்கு தெரிந்தது. அதனால் குறுக்கு வழியில் எப்படியாவது சம்பாதித்து விடவேண்டும் என்று தீர்மானித்தான். அதற்கு அவன் இலகுவான வழியாக அரசியலைத் தேர்ந்தெடுத்தான்.

அரசியலில் ஒரு சிறுபதவியைப் பெறுவதற்கே அவன் பலபேரைத் திருப்தி செய்ய வேண்டியிருந்தது. உண்மைத்தொண்டரை இடறி விழுத்த வேண்டியிருந்தது. பலநூறு பொய்களைச் சொல்ல வேண்டியிருந்தது.. தனக்குத் துரோகம் செய்யக்கூடியவர்களை இனங்காணவும் தான் பலருக்குத் துரோகம் செய்யவும் வேண்டியிருந்தது. மொத்தத்தில் தனது பாதையில் உள்ள தடைகள் யாவற்றையும் மிகச் சாதுரியமாகக் கடந்து தன்நலத்தைப் பாதுகாக்க வேண்டியிருந்தது.

இந்தப் பயணத்தின் போது அவனால் பாதிப்புக்குள்ளானவர்கள் பலர் என்பதையும் அப்பாதிப்புக்கள் மிகவும் கொடுமையானவை என்பதையும் அவன் நன்கு அறிந்திருந்தான். ஆனால் பணப்போதையும் குடிபோதையும் அவனது குற்ற உணர்வுகளை மறக்கடிக்க வைத்தன. அவனது பேராசை மனச்சாட்சியின் குரல்வளையைத் திருகி எறிந்திருந்தது. பதவிப் படிகளில் விரைவாக ஏறிப் பணப்புதையலை அடைந்துகொண்டிருந்தான்.

மண், பெண், பொன் தேவைக்கதிகமாகவே அவனுக்கு கிடைத்து விட்டன. மேலும் மேலும் கிடைத்துக் கொண்டிருந்தன. கொள்கைக்காக இல்லை...... அரசியலில் கிடைக்கும் பெரும் பதவிகள் அதன்வழி கிடைத்த அதிகாரங்கள் இவை தரும் போதையில் அவன் தன்னை முழுமையாக ஆழ்த்திக் கொண்டான். இதனால் தனக்கென ஒரு குடும்பத்தை அமைப்பதில் ஆர்வம் காட்டவில்லை. இன்பத்தில் மட்டுமல்ல அவனது துன்பத்திலும் உண்மையுடன் உடனிருக்கும் உறவுகள் இல்லாமல் போயிற்று.

அவன் நினைத்தவற்றை நிறைவேற்ற ஒரு கூட்டம் அருகில் இருந்தது. அக்கூட்டம் முழுமையான நம்பிக்கைக்கு உரியதாகவோ அவன் மீது அன்பு கொண்டதாகவோ இருக்கவில்லை. கூழைக் கும்பிடு போடும்

கூட்டமாகவே இருந்தது.

எவ்வளவுதான் துரோகிகளை இனங்காணும் திறன் அவனிடம் இருந்தாலும் தனக்கு இக்கட்டான சந்தர்ப்பங்களில் கைகொடுத்த சிலரை அவன் முழுமையாக நம்பினான்.. அவர்களையே தனக்கு மிக அந்தரங்கமான உறவுகளாகக் கொண்டாடி வந்தான். அவர்கள் அறியாத இரகசியங்கள் எவையும் அவனிடத்தில் இருக்கவில்லை. அவர்கள் அவனது பலத்தையும் பலவீனத்தையும் நன்கு அறிந்து வைத்திருந்தார்கள்.

இவர்களுள்ளும் நரேந்திரன் அவன் மனைவி கலா இவர்களைத் தனது சொந்தச் சகோதரர்களாகவே கருதினான். ஆனால் அவர்கள்தான் அவனை படுபாதாளத்தில் தள்ளி அவன் சொத்துக்களை அபகரிக்கக் காலம் கனியக் காத்திருக்கும் கழுகுகள் என்பதை அவன் கனவில் கூடக் கருதியிருக்கவில்லை.

அரசியலில் வெற்றியோ தோல்வியோ நிரந்தரமில்லை என்பதை சிவா தனது முப்பது வருட அரசியல் வாழ்வில் நன்கு அறிந்திருந்தான். வெற்றி பெற்ற காலத்தில் சொத்துக்களைச் சேர்ப்பதும் தோல்விக் காலத்தில் சொத்துக்குவிப்பு வழக்குகளில் சிக்கிய போதும் அவ்வழக்குகளை வெற்றிகொண்டு சேர்த்த சொத்து பறிபோகாமல் பாதுகாப்பதோடு அடுத்த வெற்றிக்கான வழிகளைத் தேடுவதும் சிவாவின் வழமையான செயற்பாடாக இருந்துவந்திருக்கிறது..

ஆனால் இம்முறை நடந்த தேர்தலில் அவன் அடைந்த தோல்வி சற்றும் எதிர்பார்த்திராததாக மட்டுமன்றி அதிலிருந்து மீள்வதற்கு கடினமானதாகவும் இருந்தது.

மிகவும் மனச்சோர்வுடன் வீடு வந்தான் அவன். அவனை கலாவும் நரேந்திரனும் வழமைபோல வாஞ்சையுடன் எதிர்கொண்டனர். நரேந்திரன் சிவாவுக்காக மிகவும் வருந்தியபோதும் தனது கவலையை மறைத்து சிவாவுக்கு ஆறுதல் கூறுவதாக சிவா கருதும்படி நடந்துகொண்டான். கலாவோ சொந்த சகோதரனின் தோல்வியை கண்டு துவண்டவளாய் கண்ணீரில் கரைந்தாள்.

சிவாவின் மனதில், மனித வாழ்வில் உறவுகள் மிக முக்கியமானவை என்பதை முதல் முதல் உணர்ந்ததாகத் தோன்றியது. மனம் முதல் முதலில் நெகிழ்ந்து கண்களில் நீர் எட்டிப்பார்த்தது.

சிவாவின் மனதை ஆற்றுவதற்காக மதுவை, தானே கோப்பையில் ஊற்றி வழங்கினான் நரேன். மனம் நெகிழ்ச்சியடைந்ததாலோ என்னவோ அவன் மிக மிக அதிகமாகத் தன்னைக் குடிக்கச் செய்ததை சிவாவால் உணரவோ தடுக்கவோ முடியவில்லை. போதை மிகவும் தலைக்கேறிய நிலையில் சிவாவிடம் பல பத்திரங்களில் கையெழுத்துக்கள் பெறப்பட்டன.

இன்று அரசியல் முதல் போட்டு வருமானம் எடுக்கும் தொழிலாக மாறி வருவதை நரேன் நன்கு கணித்திருந்தான். அதனால் அடுத்ததேர்தலில் தனது வெற்றிக்காக சிவா தனது சொத்தில் பெரும் பகுதியை முதலிடத் தயங்கமாட்டான் என்பதை நரேனால் ஊகிக்கமுடிந்தது.. அவ்வாறான நிலைமை வருவதை நரேன் சிறிதும் விரும்பவில்லை. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள எண்ணினான்.

சிவாவிடம் சிறிதளவு பணத்தை விட்டுவைத்தால் கூட அவன் மீண்டெழுந்திடக் கூடும் என்றும் நரேன் உள்ளாரப் பயந்திருக்க வேண்டும். குண்டுமணியளவுகூட விடாமல் முழுச்சொத்துக்களையும் அவன் பறித்துக் கொண்டான். இவ்வாறு பணம் பறிப்பதுபற்றி நீண்டகாலம் திட்டமிட்டு காத்திருந்தது வீண்போகவில்லை.

இத்தோடு மட்டும் அவர்கள் திருப்தி கொள்ளவில்லை. சலரோகம் காரணமாக சிவா பயன் படுத்தும் ஊசிமருந்தில் அவனது உடற்கலங்கள் செயலிழக்கும் வகையில் சில மருந்துகளைக் கலந்து ஏற்றினார்கள்.

அடுத்தநாள் ஊடகங்களில் சிவராமனது செய்தியே தலைப்புச் செய்தியானது. அரசியல் பிரமுகரான சிவா என அழைக்கப்படும் சிவராமன் அவர்கள் தேர்தல் தோல்வியை தாங்கமாட்டாது உடல்பாதிப்புக்குள்ளாகி அவருக்குச் சொந்தமான மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தமது பேச்சால் மக்களைக் கவர்ந்து அரசியலில் வெற்றிகள் பலவற்றைக் குவித்த இவர் இன்று பேசமுடியாதவராய் இருப்பது வருந்தத்தக்கது.

சிவராமன் அரசியலில் தவிர்க்க முடியாத ஆளுமையாக இருந்தமையால்,செய்திகள், ஊகங்கள், சந்தேகங்கள் விமர்சனங்கள் என்ற வகையில் ஒருவருடத்துக்கு மேலாக ஊடகங்களில் பேசு பொருளாகினார். அந்தவகையில் ஊடகங்கள் கூட சிவராமனால் நன்மையடைந்தன என்றே கூறவேண்டும்.

அரசியலில் எப்பொழுது எவர் பக்கம் காற்றடிக்கும் என்பதை முன் கூட்டியே கணிப்பது கடினம். ஒரு கொலை செய்தவன், சிறிய களவு செய்தவன் எனக் குற்றம் புரியும் சாதாரண குடிமகனைச் சட்டம் மிக இறுக்கமாகத் தண்டிக்கும்.

ஆனால் அரசியல் போர்வைக்குள் நின்று பல கொலைகளைச் செய்தவன் கோடிக்கணக்கில்பெரும் ஊழல் செய்தவன் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டாலும் பலசமயங்களில் தண்டனை பெறுவதில்லை....

குற்றம் சாட்டப்பட்டதற்காக அவமான உணர்வில் குன்றுவதுமில்லை.....

சிவராமன் பக்கமும் காற்றடித்தது.

ஊடகங்களில் சிவராமனைப்பற்றி எழுதப்பட்ட சில சாதகமான விமர்சனங்கள், இவரால் பாதிக்கப்பட்டவர்களிடத்தில் கூட சிறிய அனுதாப அலையை ஏற்படுத்திவிட்டன. சிவாவின் இடத்தைப்பிடித்துக் கொண்ட புதிய தலைவரது செயற்பாடுகளும் மேன்மையற்றவையாகவே இருந்தன. உமி கொடுத்த ராஜாவிலும் தவிடுகொடுத்த ராஜா மேன்மையானவர் என மக்கள் கருதும் நிலை உண்டாயிற்று. சிவா இப்பொழுது தேர்தலில் நின்றால் இவரே வெற்றியடைவார் எனக் கூட ஊடகங்கள் விமர்சித்தன.

சிவராமனின் இந்த நிலைமைக்கு நரேன் குடும்பமே காரணம் என்று சில ஊடகங்கள் துப்புத்துலக்கி விமர்சிக்கவும் தவறவில்லை.

ஆனால் இவையெல்லாம் நரேந்திரன் கொம்பனியினரைச் சிறிதும் பாதிக்கவில்லை. அவர்கள் தமக்குச் சொந்தமாக்கிக் கொண்ட வைத்தியசாலையில் சிவராமனை செயலற்ற மனிதராக்கி பராமரிப்பதன் மூலமும் வேறு சில பெரிய அரசியல் முதலைகளின் மறைமுக உதவியுடனும் இந்த விமர்சனங்களைக் கடந்து சென்றனர்.

இந்த ஒருவருட வாழ்க்கை, சிவராமனுக்குப் பல்வேறு பாடங்களைச் சொல்லித்தந்தது. தன்னை இடைவிடாது சுயபரிசோதனை செய்து கொள்ள அவருக்கு இப்பொழுதுகள் நன்கு பயன்பட்டன. அவரில் இருந்த மிருக உணர்வுகள் மறைந்து மனித உணர்வுகள் மேலெழத் தொடங்கின. பிறருக்குத்தான் செய்த தீங்குகளினால் அவர்களுக்கு

ஏற்பட்டிருக்கக் கூடிய இழப்பினையும் அதனால் ஏற்படக்கூடிய வலியினையும் நன்கு உணர்ந்து கொண்டார். தனக்கு இன்று கிடைத்திருக்கும் தண்டனை போதாது என்பதே அவரது கணிப்பாக இருந்தது. குற்ற உணர்வு அவரைக் கொன்று கொண்டிருந்தது.

அந்தப் பொழுதுகளில் தான் டொக்ரர் அமுதா அந்த மருத்துவ மனைக்கு வந்தாள். அன்பு, அமைதி, அழகு இவற்றின் மொத்த வடிவமாக அவள் திகழ்ந்தாள். எல்லா நோயாளியிடமும் அவள் கனிவாய் நடந்துகொண்டாள்.

சிவராமனிடம் அவள் காட்டிய அன்பு அவரின் கண்களில் நீரை வரவைத்தது. அவளிடம் தனது மனநிலையை வெளிப்படுத்திவிட அவர் மனம் ஏனோ துடித்தது. வாய் பேச முடியாதிருந்தமைக்காக அப்பொழுது அவர் மிகவும் வருந்தினார். அவள் போன்ற மகள் தமக்கில்லையே என்ற ஏக்கமும் அவர் மனதில் துளிர்விட்டது.

ஆனால் அமுதா அவர்பற்றி நன்றாகவே அறிந்திருந்தாள். அவரது இன்றைய பரிதாபநிலை அவள் மனதில் அவர்மீது அனுதாபத்தை ஏற்படுத்தியிருந்தது. அதனால் அவரிடத்தில் சிறிது அதிக கரிசனத்துடன் நடந்துகொண்டாள். அவர் மனதில் இருந்த குற்ற உணர்வையும் அவளால் புரிந்து கொள்ளமுடிந்தது.

அமுதாவின் தந்தை ராமநாதன் காவல்துறையில் உயர் அதிகாரியாக இருந்தவர். மிகவும் நேர்மையானவர். தமது கடைமையிலிருந்து யாருக்காகவும் எதற்காகவும் விலகாதவர். இதுவே அவரது மரணத்துக்கும் காரணமாயிற்று.

ஒருகாலத்தில் சிவராமனுக்கும் அவரது சகாக்களுக்கும் ராமநாதனது பணிகள் குடைச்சல்களை கொடுத்தன. எந்த விலைகொடுத்தும் அவரது நேர்மையை அவர்களால் வாங்கமுடியவில்லை. இதனால் விபத்து என்ற பெயரில் அவர் கொலை செய்யப்பட்டார்.

தனது தந்தையின் இறப்புக்கு காரணமானவரிடமே பரிவு காட்டும் அமுதாவின் மனநிலையை சிவராமனால் புரிந்துகொள்ள முடியவில்லை.

பாவ மன்னிப்பை அவள் வழங்கிவிட்டாள்.

ஆனால் குற்றம் புரிந்தவர் வாழ்விலே நிம்மதி.....

# 14.

## ஆதிமந்தி ஆட்டனத்தி

ஆதி மந்தி கண்களில் காவிரி ஆறு புகுந்து கொண்டது போலும். அவள் உள்ளம் வேதனையால் வெதும்பிக்கொதித்துக் கொண்டிருந்தது. அவளால் ஆட்டனத்தியை ஒருகணப் பொழுது கூட நினைக்காமல் இருக்க முடியவில்லை,

ஆட்டனத்தி பேரழகன்; மலையை ஒத்த தோள்களையுடையவன். அவன் ஊர்த்திருவிழாவின் போது மள்ளரோடு கழல்கள் அணிந்த தன் கால்களால் சுழன்று சுழன்று ஆடிய அழகு கண்டு மலைத்து நின்றாள் ஆதிமந்தி..அன்று அவன் நினைவால் அவளால் துணங்கைக் கூத்தில் கூட சரிவரப் பங்குகொள்ள முடியவில்லை. ஓரத்தில் நின்று துணங்கைக் கூத்தினை இரசித்துக் கொண்டிருந்த ஆட்டனத்திக்கு ஆதிமந்தி தன்மீது தனிக்கவனம் கொண்டுள்ளாள் என்பதை உணர்வது கடினமாகவில்லை . மூங்கிலின் பளபளப்போடு அமைந்த தோள்களும் காந்தல் கண்களும் சிறுத்த இடையுமாய் அழகோவியமாய் ஆடும் அவளின் கடைக்கண் பார்வைக்காக அங்குள்ள இளைஞர்கள் ஏங்கியிருக்கையில் அவள் தன் மீது காதல் பார்வையை எறிந்தது அவனுக்குப் பெருமையைத்தந்தது.

இருவர் கண்களும் சந்தித்துக் கொண்டன. முதல் சந்திப்பிலேயே தாம் யுகம் யுகமாய் காதலராய் இருந்தவர்கள் என உணரத்தலைப்பட்டனர்.

அவர்கள் காதல் திருமணத்தில் முடிந்தது-அன்றில் பறவைகளைக் காணாதவர்கள்கூட இவர்களை அன்றில் பறவைகளுக்கு உதாரணமாகக் கூறினர். காதலால் அன்பின் எல்லையைக் தொட்டுவிட துடித்துக் கொண்டிருந்த வேளையில்தான் அந்தக் கொடுமையான நாள் அவர்கள் வாழ்வில் குறுக்கிட்டது.

அன்று ஆடிப்பெருக்கு. காவிரி அன்னைக்கு சோழன் கரிகால் வளவன் பெருவிழா எடுக்கிறான். கழாஅர் என்ற காவிரிக் கழிமுகத்தை அண்டி

அமைந்த ஊரில் இந்திர விழா கொண்டாடப்பட இருந்தது. அதில் கரிகாலன் முன், நீரில் நடனமாடும் வாய்ப்பு ஆட்டனத்திக்குக் கிடைக்கிறது. அவனுக்கு இணையாக காவிரி என்ற நடன மாது ஆடுகிறாள்.

கரிகாலன் ஆரவாரமிக்க தனது சுற்றத்துடன் காவிரிக்கரையில் வீற்றிருக்கிறான். பாணரது இசை எட்டுத்திக்கும் முழங்குகிறது,

அழகிய கச்சினை உடுத்தியவனாய் தனது கழல்கள் நீரின்மேலே தெரியுமாறும் இடுப்பில் கட்டியிருந்த பொன்னாலான மணி ஒலிக்கவும் தனது உடலைப் பலவாறு வளைத்து காண்பவர்கள் மகிழுமாரு தன் இணையான காவிரியுடன் இணைந்து நடனமாடுகிறான் அத்தி. அவன் ஆட்டத்தின் சிறப்பால் ஈர்க்கப்பட்டு அவனை தன்னுள் அடக்கிவிடத் துணிந்தது போல காவிரி திடீரென மிகுதியாய் பெருக்கெடுக்கிறது. அத்தியையும் காவிரியையும் புது வெள்ளம் அடித்துச் செல்கிறது.

ஆதிமந்தியால் கணவனின் பிரிவைத் தாங்கமுடியவில்லை. அவளும் அத்தியும் உயிரால் முழுமையாக இணைந்தவர்கள். அதனால் அவள் உள்ளுணர்வு தன் கணவன் உயிருடன் இருக்கிறான் என்று சொல்லிக் கொண்டிருந்தது. ஆனாலும் அத்தி அவளைத்தேடித் திரும்பவில்லை.

“என்னை அவன் மறந்தானோ ......?. “ அவளால் அதற்கு மேல் சிந்திக்க முடியவில்லை. அவன் மறந்தால் என்ன அவனை நான் மறவேன். எவ்வாறாயினும் தேடி அடைவேன் எனத் தீர்மானித்துக் கொண்டாள்

அவள் நாடு நாடாகச் சென்றாள் ஊர்ஊராக நடந்தாள். துணங்கைக்கூத்து நடக்கும் இடங்களிலும் மள்ளர் தழுவியாடும் ஆட்டக் களத்திலும் அவள் தேடுதல் தொடர்ந்தது. கண்டவர் நின்றவர்களிடம் எல்லாம் தன் காதல் கணவனைக் கண்டீரோ என வினாவினாள். பித்துப் பிடித்தவள் போன்று கலங்கி நிற்கும் இவள் நிலை பார்ப்பவர்களிடத்தில் பேரிரக்கத்தை ஏற்படுத்தியது. இவளின் காதலின் பரிதவிப்பு கண்டவரைக் கலங்கவைத்தது.

அப்படித்தான் அந்தக் கடற்கரை ஊருக்கும் அவள் வந்து சேர்ந்தாள்.

காவிரி நதி அத்தியோடு இணையாக ஆடிய காவிரியை தன்னுள் இழுத்துக்கொண்டாலும் அத்திமீது இரக்கம் கொண்டு கரை

ஒதுக்கிவிட்டது. கரையில் ஒதுங்கி இருந்த அத்தியை மருதி என்ற மீனவப்பெண் கண்டாள். நதியின் இழுப்புக்கெல்லாம் அலைக்கழிக்கப்பட்டு உடலெல்லாம் புண்ணாகத் தன்னினைவற்றுக் கிடந்த அத்தியை தன் தோழியரின் உதவியுடன் தன் வீட்டுக்கு எடுத்துச் சென்றாள் மருதி.

தன் குடிசையில் வைத்து அவனுக்கு சிகிச்சை அளித்தாள் உடல் வேதனையால் தவிக்கும் அத்தியிடம் அவன் பெயரையோ அவன் வரலாற்றையோ கேட்க மருதிக்கு மனம் வரவில்லை. அத்தி மணமானவனா இல்லையா எனவெல்லாம் ஆராய அவள் முற்படவில்லை,.

ஆனால் மெல்ல மெல்ல அத்தி பால் அவள் மனம் ஈடுபடத்தொடங்கியதை அவளால் தடுக்கவும் முடியவில்லை. அத்தி தன்னினைவற்ற நிலையில் “மந்தி மந்தி என் அன்பே” எனப் பிதற்றிய போது மட்டும் மருதி கவலையில் ஆழ்ந்தாள்.

அவனுக்கு உணவூட்டி மருந்து இட்டு சேவை செய்யும் போதெல்லாம் தன் காதலனுக்குச் செய்யும் சேவையாகவே கருதிச் செய்யளானாள். ஆனாலும் தன் மனக் கிடைக்கையை அத்தியிடம் சொல்லும் துணிவுமட்டும் அவளுக்கு வரவில்லை.

மருதியும் அழகிதான்; கருத்த கற்சிலையின் நேர்த்தியான அழகு அவளுடையது. அவள் அருகாமையும் அவள் தன் மீது காட்டும் அளவு மீறிய அன்பும் அத்தியை என்னவோ செய்தன. மருதி வார்த்தைகளால் சொல்லாவிட்டாலும் அவள் தன்னைக் காதலிக்கிறாள் என்பது அவனுக்கு நன்றாகத் தெரிந்தே இருந்தது.. சிலசமயம் தானும் அவள்மீது காதலில் வீழ்ந்துவிடுவேனோ என்ற பயமும் அவனுக்கு உண்டாகிற்று. அவனுக்கு தன் மீதே வெறுப்பாக இருந்தது..

ஆதிமந்தி மீது அவன் கொண்ட காதல் அளவில்லாதது. அதுபோல் ஆதிமந்தியும் தன்மீது கொண்ட காதல் இந்த வானிலும் பெரிது. கடலிலும் ஆழமானது என்பது அவனுக்குத் தெரியும்.. தான் இல்லாது ஆதிமந்தி அளபரிய துன்பமும் தவிப்பும் அடைவாளே என எண்ணும் போது அசைக்க முடியாது கிடக்கும் தனது உடலை உதறிவிட்டு காற்றில் பறந்து அவளிடம் செல்லவேண்டும் என மனம் தவிக்கும். இந்த மனத் தவிப்பின் போது தான் அவன் தனது காதல்

வாழ்வு பற்றி மருதிக்கு சொல்லியிருந்தான். மருதி இப்படியொரு கதை அவனிடமிருந்து பிறக்குமென்று எதிர்பார்த்தவள் போலக் காணப்பட்டாள். ஆமை தன் ஓட்டுக்குள் தன்னை மறைத்துக் கொள்வதுபோல தன் காதலையும் மறைக்க முயன்று அவள் ஒவ்வொரு தடவையும் தோற்றுப் போகிறாள்.

இந்தத் போராட்டத்துடனேயே மாதம் ஒன்று கடந்துவிட்டது. அத்தி கோலூன்றி நடக்குமளவுக்குத் தேறிவிட்டான். அவனை வீட்டிலிருக்கவிட்டு மருதி பொது மன்றுக்குப் போயிருந்தாள்.

அங்கேதான் அவள் ஆதிமந்தியைக் கண்டாள். கண்களில் கலக்கமும் முகத்தில் ஏக்கமுமாய் அவள் ஆட்டனத்தியை தேடிவந்திருப்பதையும் மருதி கண்டாள். பெரும் தவிப்புடன் “நானும் ஆடுகள மகளே என்னை வருத்ததில் ஆழ்திப் பிரிந்த எனது காதலனும் ஆடுகளமகனே. அவனைக் கண்டீரோ” என மருதியையே வினவியபோது ஒருகணம் அவள் மிகுந்த அதிர்ச்சிக்கு உள்ளானாள்.

அத்திமீது காதல் கொண்ட மனம் இல்லை எனக் கூறச் சொன்னது. அனால் மனச்சாட்சியோ உண்மையை உரை என வற்புறுத்தியது. இந்தப்போராட்டத்தில் அவள் சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். இறுதியில் மனச்சாட்சியே வென்றது .

மருதி பதில் கூறாது ஆதிமந்தயைத் தனது வீட்டுக்கு அழைத்து வந்தாள்.

அங்கு அத்தியை கண்டாள் ஆதிமந்தி.தன் காதலே தன் கணவனைத் தன்னுடன் சேர்த்துவைத்தது என அவள் உறுதியாக நம்பினாள். மகிழ்ச்சியால் ஆனந்தக் கண்ணீர் பெருக அவனை அணைத்துக் கொண்டாள் பிரிந்தவர்கள் கூடிவிட்டார்கள். அணைத்தது அணைத்தபடியே இருக்க சில கணங்கள் நழுவிச்செல்கிறது.

மருதி செருமி தன் இருப்பை உணர்த்தியபோதே அவர்கள் இவ்வுலகுக்கு வந்தனர். அதிமந்தி வெட்கத்துடன் புன்னகைத்துக் கொண்டாள்.

அத்தி, மருதியின் கைகளைப் பற்றி அவளுக்கு நன்றி கூறினான். அவன் கண்களில் இருந்து ஒருசொட்டுக் கண்ணீர் அவள் கையில் விழுந்து அவள் கையைச் சுட்டது. அத்தி தன் மீது கொண்ட காதலை எரித்து

விட்டான் என்றும் அதன் சாம்பலின் சூடு தான் அது என்றும் மருதி எண்ணிக்கொண்டாள்.அந்த எண்ணம் அவள் உள்ளத்தையே வெடித்துவிடச் செய்துவிடும் போல இருந்தது.

“எனது பொக்கிசத்தை இதுவரை காத்து என்னிடம் ஒப்படைத் துள்ளாய். உனக்கு என்ன கைமாறு நான் செய்யமுடியும்” என்றுகூறி நன்றிப் பெருக்குடன் அவளை அணைத்துக் கொண்டாள் ஆதிமந்தி.

இருவரும் விடைபெற்றுச் சென்றுவிட்டனர்.

மருதி தன்காதலை மறக்க முடியாதவளாக தகிக்கும் வெறுமையைப் பொறுக்கமுடியாதவளாக தமையனின் வள்ளத்தை தனியே எடுத்துச் சென்றதாகவும் புயலில் அவ்வள்ளம் அகப்பட்டதாகவும் அதன்போது அவள் இறந்ததாகவும் சிலர் கூறினர்.

சிலர் மருதி வேண்டுமென்றே கடலில் சென்று தன்னை மாய்த்துக் கொண்டதாகவும் கூறினர்.

எது எவ்வாறிருப்பினும் காதல் மட்டும் அழியாது வாழ்ந்து கொண்டிருந்தது.

# 15.

# கடல்

## அலை 1

சுனாமிப் பேரலையின் கோரத்தாண்டவம் குடத்தனை, தாளையடிப் பிரதேசங்களை முற்று முழுதாக உருக்குலைத்திருந்தது. இடிந்த கட்டடச் சிதைவுகள், முறிந்து விழுந்த மரங்கள், எங்கும் பரந்து கிடக்கும் தட்டுமுட்டுச் சாமான்கள் என்று அப்பிரதேசமே மாநகரசபையின் குப்பைத்தொட்டி போலப் பொலிவிழந்து காட்சி தந்தது.

நிவாரணப் பணியாளரின் கடைக்கண் இன்னும் சரியாக அந்தப் பிரதேசத்தில் விழவில்லைப் போலும். குடத்தனை அரசினர் கலவன் பாடசாலை இன்று அகதி முகாமாக மாறி இருந்தது. அதில் சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் என்று முன்னூறு பேர் அளவில் அடைக்கலம் தேடியிருந்தார்கள். தொடர்ச்சியான போருக்கும் பொருளாதாரப் பிரச்சனைகளுக்கும் முகம் கொடுத்து வந்த அவர்கள், இயற்கையின் கோரத்தைக் கண்டு கிலி கொண்டு அந்த அதிர்ச்சியில் இருந்து விடுபடாதவர்களாய் நடைப்பிணங்களாய் உலவிக் கொண்டிருந்தார்கள்.

அரசினர் பாடசாலைக்கு அண்மையில் இருந்த பாலர்பள்ளி இன்று தற்காலிக மருத்துவ முகாமாக மாற்றப்பட்டிருந்தது.

உடல் வருத்தங்களுக்கு உள்ளானவர்களுக்கும் உளப்பாதிப்புக்கு உள்ளாகி மீளமுடியாது தவிப்பவர்களுக்கும் உள்நாட்டு வெளிநாட்டு மருத்துவர்களும், மருத்துவத் தொண்டர்களும் சிகிச்சையும் ஆலோசனையும் வழங்கிக் கொண்டிருந்தனர்.

உடல் உபாதைகளுக்கு உட்பட்டவர்களுக்கு அளிக்கப்படும்

சிகிச்சை உடன் பலனைத் தரலாம். ஆனால் உள நெருக்குவாரத்துக்கு உள்ளானவர்கள் விரைவில் அதிலிருந்து விடுபடுவார்களா...? உள்ளத்தை அரிக்கும் புற்றுநோயாக மரணத்தின் எல்லைக்குப் போய்விடுவார்களா...? பயங்கரமான கேள்வி ஒன்று, மருத்துவரை மட்டுமல்ல சமூகப் பணியாளர் ஒவ்வொருவரது உள்ளத்திலும் எழுந்து ஆட்டி வைத்தது.

மருத்துவ முகாமின் ஒரு மூலையில் மரியம்மா சுருண்டு படுத் திருந்தாள். அவள் கண்கள் மட்டும் தூக்கத்தைத் தொலைத்தனவாய் அங்கும் இங்கும் அலைபாய்ந்து கொண்டிருந்தன. அந்தக் கண்களில் நவரசநாயகியர் காட்டும் இரசபாவங்கள் பல கணந்தோறும் தோன்றுவதும் மறைந்து மீண்டும் மாறுவதுமாய் விந்தை காட்டிக் கொண்டிருந்தன. அவள் உள்ளத்தில் இருந்து எழ விரும்பும் ஆயிரம் உணர்ச்சிகள் பிரமைகளாய் அலையடித்துக் கொண்டிருந்தன. அந்தப் பிரமைகளை உண்மைகளாய்க் கருதி அவள் தனக்குள் கதைத்துக் கொண்டிருந்தாள்... இல்லை... அவள் மன அந்தரங்கத்தில் அவளது உறவுகள் தோன்றிக் கொண்டிருந்தனர். அவர்கள் வெளிப்படுத்தும் உணர்வுகளுக்கு இணையாக மரியம்மாவும் தனது உணர்வுகளுக்குச் செயல் வடிவம் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

## அலை 2

“மரியம்மா... மரியம்மா...”

கொஞ்சலாக சூசை அவன் மனைவியை அழைக்கிறான். குடிசையின் நீக்கலுக்கிடையே நிலவொளி மரியம்மாவின் முகத்தில் பட்டுத் தெறிக்கிறது. நிலவொளியில் கையால் கணவன் தன்னைத் துலாவுவது மரியம்மாவுக்கு நன்கு தெரிகிறது. அவள் மெல்லத் தனக்குள் சிரித்துக் கொள்கிறாள். சற்றுப் புரண்டு படுத்தாலும் மௌனமே அவள் பதிலாகிறது.

“மரியம்மா... மரியம்மா...”

இம்முறை சூசையின் குரல் சற்று உரத்து ஒலிக்கிறது.

“இப்ப உமக்கு என்ன வேணும்...?”

சிணுக்கமாக அவள் குரல்...

“இப்படிக் கிட்ட வாவன்.....”சூசை அன்பொழுக வேண்டுகிறான்.

“வயதுவந்த பிள்ளைகள் கிடக்குதுகள். உமக்கு விளையாட்டுத்தான்...” சற்றுக் கண்டிப்பான குரலில் மரியம்மாவின் மறுப்பு சூசையை உலுக்குகிறது.

“ஒரே கால் உளைவு... பிடிச்சுவிடு எண்டு கூப்பிட்டா பிகு பண்ணுறாய்”

அவன் கோபம் மனைவி மீதா...? அல்லது அந்தரங்கங்களைக் கூடப் பகிர்ந்து கொள்ள முடியாத... பேணமுடியாத தங்கள் பொருளாதரத்தின் மீதா...?

இவர்கள் உரையாடல் எற்படுத்திய குழப்பமோ அல்லது பசி மயக்கமோ இவர்களின் குழந்தை யேசுதாசனின் நித்திரையைக் குலைத்திருக்க வேண்டும். அவன் ஏணையில் நெளிந்தபடி குரல் எழுப்பத் தொடங்கினான்.

மரியம்மா சட்டென்று எழும்புகிறாள். குழந்தையை அள்ளி எடுத்து சமாதானப்படுத்த முயன்றவளாய் அவனை அணைத்துக் கொள்கிறாள்.

அதிகம் பால் சுரக்கா விட்டாலும் அந்தப் பரிசத்தின் மென்மையில் குழந்தை மீண்டும் துயிலில் ஆழ்ந்து போகிறது.

அவனை ஏணையில் கிடத்தி சற்று நேரம் ஆட்டிய மரியம்மாவிடம் சொற்பம் இருந்த நித்திரையும் ஓடிவிட அவள் தன் படுக்கையில் குந்தி இருக்கிறாள்.

அவளுக்கு அருகில் கபரி ஆழ்ந்த நித்திரையில் கிடக்கிறான். அந்த நிலையிலும் அவன் முகத்தில் பசிக் களைப்புத் தென்படுவதாக உணர்கிறாள் மரியம்மா.

நேற்றுத் தொழிலுக்குச் சென்று களைப்போடு திரும்பிய கபரி பெயருக்கு அள்ளி இரண்டு வாய் சாப்பிட்டுப் படுத்தது மரியம்மாவுக்கு நினைவு வருகிறது.

அவனுக்காகப் பொரித்த முட்டையும் அவித்த பிட்டும் அப்படியே கிடக்கிறது. தாய் மனம் பொறுக்கவில்லை...

அவனை உலுப்பி எழுப்பிகிறாள். “கபரி... கபரி... எழும்படா மோனை... எழும்படா... உனக்குப் பசி தாங்காதில்லே... எழும்பு மகன்...”

மரியம்மா தன்னையும் அறியாது பக்கத்தில் படுத்திருந்த வள்ளியம்மையை உலுப்பி எழுப்புகிறாள்.

உடல் மன உளைச்சல்களுக்கு உள்ளாகி நித்திரையின்றிப் புரண்டுவிட்டு அப்பொழுதுதான் சற்றுக் கண்ணயர்ந்த வள்ளிக்கு எரிச்சல் எரிச்சலாக வருகிறது.

“என்ன மரியம்மா உனக்கென்னவும் பயித்தியமே....“ எரிந்து விழுந்தவள்... தன் செயலுக்காகத் தன்னையே கடிந்து கொள்கிறாள்.

மரியம்மாவின் நடவடிக்கைகள் கடந்த சில நாட்களாகவே இயல்பாக இல்லை என்பது அவளுக்குத் தெரியும். முகாமுக்கு வரும் உளவளத் துணையாளர்களும் அதனை அவதானித்து அவளுடன் நேரத்தைச் செலவிடுகிறார்கள்.

இந்த வேளையில் மரியம்மாவுக்கு ஆறுதலாக இருப்பது தனது கடமை என்று எண்ணமிடுகிறாள் வள்ளி.

மரியம்மா பாவம். அவள் வாழ்க்கையில்தான் எத்தனை பிரச்சினைகள்..? எத்தனை இழப்புக்கள்..? நீண்ட பெருமூச்சொன்று வள்ளியிடம் தோன்றி மறைகிறது...

## அலை 3

அதிகாலை...

நிலவு மேலைக் கடலில் மெல்ல மெல்லச் சரிகிறது. நிலவு தந்த போதையால் கடல் அலை நிலமகளைத் தாகத்துடன் தாவி அணைக்கிறது. குடத்தனைப் பிரதேச வீடுகள் சிலவற்றில் மட்டும் விளக்கொளி வானத்திடையே சில நட்சத்திரங்கள் போன்ற பிரமையை எற்படுத்துகின்றன.

அதிகாலை....... மணி மூன்றைத் தொடுகிறது. கடல் தொழிலுக்கான ஆயத்தங்கள் அயல் வீடுகளில் தொடங்கி விட்டன.

சூசைக்கு நித்திரை கலைந்து விட்டது. ஆனாலும் உடல் அலுப்பு எழும்புவதற்குத் தடையாக இருக்கிறது. அவன் புரண்டு படுக்கிறான்.

மரியம்மாவுக்கு விழிப்பு தட்டி விடுகிறது. அருகில் கபரி, மேரி, ரெமி உட்பட பிள்ளைகள் ஆழ்ந்த நித்திரையில் கிடக்கிறார்கள். மரியம்மா

அரக்கப்பரக்க எழும்பி, கணவனைப் பார்க்கிறாள்.

"இந்த மனுசன் விடிஞ்சது கூடத் தெரியாமல் இன்னும் குறட்டை விடுது." தனக்குள் முணுமுணுத்தபடி கணவனைத் தட்டி எழுப்புகிறாள்.

"எழும்புமன் கண்டறியாத நித்திரை... அங்க பாரும் டானியல் தொழிலுக்கு வெளிக்கிட்டிட்டுது... இப்ப இங்க வந்து சத்தம் போடப் போகுது..."

"கபரியேல் எழும்பிட்டானே...?" சூசையின் கொட்டாவியிடையே வினா ஒன்றும் தொக்கி நிற்கிறது.

"கபரி.... எழும்படாமோனை... தொழிலுக்கு நேரமாச்சுதில்லை..."மகனை எழுப்பி விட்டபோதும் மேரியை எழுப்புவது லேசான காரியம் இல்லை என்பது மரியம்மாவுக்குத் தெரியும். இவள் பெட்டைக்கு இனி தண்ணி ஊத்தினாலும் எழும்ப மாட்டாள்... "எடி மேரி எழும்படி. கொப்பரும் கொண்ணரும் வெளிக்கிட வேணுமில்லை..."

மேரி முனகியபடி புரண்டு படுக்கிறாள்.

"அதுக்கு நான் என்ன செய்யிறது... நீ எல்லாத்தையும் செய்யன்..."

எரிச்சலுடன் பதில் வருகிறது மேரியிடம்.

"நான் எல்லாத்தையும் செய்யிறது எண்டால் பிள்ளையள் எண்டு நீங்கள் ஏன் இருக்க வேணும். கருவாடு காயப் போட்டு நேற்றைக்கு முழுக்க முதுகு வலியில கிடக்கிறன். கதையை விட்டிட்டு எழும்பி பல்லை விளக்கிட்டு அடுப்ப மூட்டு பிள்ளை."

"ஒழுங்கா நித்திரையும் கொள்ள விடாதுகள்." புறுபுறுத்தபடி அரைமனதுடன் எழும்பி கிணற்றடி நோக்கிச் செல்கிறாள் மேரி. இந்த ஆர்ப்பாட்டத்தில் குழந்தை யேசுதாசன் எழும்பியழவே, அவனைச் சமாதானப்படுத்த ஒரு தாலாட்டுப் பாடலை முணுமுணுத்தபடி ஏணையை ஆட்டுகிறாள் மரியம்மா.

மேரி முகம் கால் கழுவிவிட்டு அடுப்பை மூட்டவே அவள் வேலைகளுடன் மரியம்மாவும் இணைந்து கொள்கிறாள்.

"நான் புட்டுக் கொத்திறன் பிள்ளை. நீ இறாலை பொரி. நேற்றையான் நண்டுக் குழம்பைக் கொதிக்க வைத்துக் கொடுத்தால் கொப்பர்

புறுபுறுக்காமல் சாப்பிடுவார்."

மரியம்மா சொல்லியபடியே பேசினை எடுத்து அதற்குள் பிட்டு மாவைக் கொட்டுகிறாள். காலைக் கடனை முடித்துக் கொண்டு வந்த கபரி மரியம்மாவின் பக்கத்தில் குந்தியபடி மேரி கொடுத்த தேத்தண்ணியை உறிஞ்சுகிறான்.

"அம்மோய் படுவான்கரை ராசனும் இண்டைக்கு எங்களோடை வாரான். ஒரு பார்சலைக் கூடக் கட்டணை."

ராசன் என்ற பெயர் மேரியின் காதில் தேன் எனப் பாய்கிறது. திடீரெனப் பாய்ந்த மின்சாரத்தால் உடல் சூடேற காது மடல்கள் சிவந்து போகின்றன. அவள் முகம் மலர்ந்து புதுப்பொலிவு பெறுகிறது.

"அம்மோய் அப்ப முட்டை ரெண்டும் பொரிச்சு வைப்பமே." தன்னிச்சையாக அவளிடமிருந்து அந்தக் கேள்வி கிளம்பிகிறது.

"முட்டையென்ன கோழிக்கறி கூட நீ வைப்பையெண்டு எனக்குத் தெரியும்." நமிட்டுச் சிரிப்புடன் கபரி சொல்லவும் அவனைப் பார்த்து முறைக்கிறாள் மேரி.

"இப்ப முட்டைக்கு நான் எங்க போறது? பேசாமல் இதுகளை வைச்சுச் சமாளிப்பம்." புட்டுக் கொத்துவதிலேயே மரியம்மாவின் கவனம் செல்கிறது.

"கதை கண்ட இடம் இவனுக்கு கைலாயம். கபரி! வலையில சின்னப் பீத்தல் இருக்குதில்லை... அதைச் சரிப்படுத்தினியே? இண்டைக்கு காத்தமுத்துச் சம்மட்டியிண்டை மெசின் போட்டிலை கடலுக்குப் போறமெண்டு தெரியும்தானே...? அவன் டேவிட் ஒரு கொதியன். நடுக்கடலிலை நிண்டு கத்துவான்."

"ஓமன அப்பு ராசனும் நானும் அதை நல்லாச் சரிக்கட்டிப் போட்டம். நீ யோசியாதை."

மகனின் பதிலில் திருப்தி கண்டவனாய் மகள் கொடுத்த தேத்தண்ணியை வாங்கிக் கொண்டு வெளியே சூசை வரவும், அவனை அழைத்துக் கொண்டு டானியல் படலையைத் திறந்து கொண்டு உள்ளே வரவும் சரியாக இருக்கிறது.

"வா டானியல் அஞ்சு நிமிசத்தில நாங்கள் ரெடியாகிடுவம்."

குடிசை வாசலில் போடப்பட்ட வாங்கில் இருந்து கொண்டு டானியல் இருக்க இடம் தருகிறான் சூசை. டானியல் சாவகாசமாய் அமர்ந்தபடி பீடியொன்றைப் பத்தவைத்துப் புகையை உள் இழுக்கிறான். அந்தப் பனி படர்ந்த காலைப் பொழுதுக்கு அது இதம் அளிக்கிறது. அது தந்த உற்சாகத்தில் இருவரும் பலதும் பத்தும் கதைக்கிறார்கள்.

“என்ன சூசை நேற்றைக்குப் பேப்பர் பாத்தனியே?” திடீரென இப்படியொரு கேள்வி டானியலிடமிருந்து எழுகிறது.

“பேப்பரோ...? அதுகளை பாக்க வாசிக்க எனக்கு எங்க நேரம்... என்னவாம் போட்டிருக்குது.”

“கடலில் கடற்புலியிண்டை பயிற்சி நடக்குதெண்டு நேவியிண்ட கடற்கட்டுபாடு மேலும் அதிகரிக்கப் போகுதாம்... எண்டு போட்டிருக்குது.”

“இது போல நியூசுகள் நெடுக வாரதுதானே... இதுகளைப் பார்த்தா தொழில் செய்யேலுமே?”

சூசையின் குரலில் ஒருவித அலட்சியம். வாழ்க்கையை அதன் போக்கில் எதிர் கொள்ளும் மனம் அவனிடம் கைவந்திருந்தது.

“இல்லை....... எங்கட போட்டிலையும் மூண்டு இளந்தாரிகள் வாராங்களில்ல. அதுதான் யோசனையாக்கிடக்குது...”

டானியல் சொன்னவை சூசையைப் பெரிதும் பாதிக்கவில்லைதான். ஆனால் குடிசையினுள் வேலையாக இருந்தாலும் இவர்கள் கதைப்பதைக் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்த மரியம்மாவால் சும்மா இருக்க முடியவில்லை. அவள் வெளியே வருகிறாள்.

“என்ன அண்ணை அப்ப இவன் கபரி கடலுக்கு வாரதில எதும் பிரச்சினை வருமோ...?” கலக்கம் அவள் கேள்வியில் ஊடுருவி நிற்கிறது.

“இவள் பாவிக்கு எந்த நேரமும் பொல்லாத பயம். எது நடக்க இருக்கிறதோ அதுதான் நடக்கும். இதுகளுக்குப் பயந்தால் வாழமுடியுமோ...?”

“நீர் தத்துவம் பேசும். உங்களைக் கடலுக்கு அனுப்பிப் போட்டு

வயித்திலை நெருப்பைக் கட்டின மாதிரி அவதிப்படுகிறது நாங்களில்லோ...? முந்திதான் கடல் கொந்தளிப்பு சூறாவளி எண்டா இப்ப சூரப்படையே கடலுக்க..."

உணர்ச்சி வேகத்தில் கண்களில் திரையிட்ட கண்ணீரை முந்தானையால் துடைத்தபடி வேலையைத் தொடர உள்ளே செல்கிறாள் மரியம்மா. தாய்மையின் தவிப்பை சூசையோ டானியலோ உணராமலில்லை. ஆனால் அவர்களால்தான் என்ன செய்ய முடியும்..?

அப்பொழுது ராசன் அங்கு வரவே "கபரி! கபரி!! ராசன் வந்திட்டுது. போய் வலையை எடுத்து ஆயத்தப்படுத்து மோனை." உட்பக்கம் பார்த்து சூசை குரல் கொடுக்கிறான்.

கபரி குடிசையில் இருந்து வெளியே வர மேரியும் வாசல் கதவருகில் வந்து எட்டி ஆர்வமாக இராசனைப் பார்க்கிறாள். இருவரின் முகங்களிலும் புன்னகை... மேரி சட்டென தலையைக் குனிந்து கொள்ள அதனை அவதானித்தவனாய் "காதல்... மழையே காதல்... மழையே" என்று பாடிக் கொண்டு கபரி ராசனை நோக்கி வருகிறான். இவர்கள் இருவரும் தங்களுக்காகவே அந்தப் பாட்டுப் பாடப்பட்டது என்பதை உணர்ந்தவர்களாய் வெட்கத்துடன் மீண்டும் புன்னகைத்துக் கொள்கிறார்கள்.

சற்றுத் தயங்கி நின்ற ராசனின் தோள்களைப் பற்றி அணைத்தபடி வலையை நோக்கி கபரி நடை போடுகிறான்.

"மேரி உங்க என்ன ஏமலாந்திக் கொண்டு நிக்கிறா... தண்ணி எடுத்துப் போத்தலில நிரப்பிட்டியோ....?"

மரியம்மாவின் அதட்டலால் தடுமாறியவளாய் "ஓமனை... இல்ல... இப்ப... எடுத்து வாரன்." உளறுகிறாள் மேரி. வெளியில் சென்று ராசனை வடிவாகப் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைத்ததற்காக மகிழ்ந்தவளாய்ப் போத்தல்களை எடுத்துச் செல்லும் அவள் நடையில் துள்ளல்...

வலையைப் பிரித்தபடி ராசனும் அவளைக் கவனிக்கவே அவன் தலையில் நொங் எனக் கபரியின் குட்டு விழுகிறது.

"வேலையை ஒழுங்காகப் பார் மோனே"

"வேலையை ஒழுங்காகத்தான் பாக்கிறன்." கபரியின் கிண்டலுக்கு

அவன் பாணியிலேயே பதில் கூறிய ராசனின் கண்கள் மட்டும் இமை வெட்டாது மேரியை விழுங்குகின்றன.

இவர்கள் இருந்த இடத்துக்குச் சூசையும் டானியலும் வருகிறார்கள். பின்னால் மரியம்மா சாப்பாட்டுப் பார்சல்களுடன் வர மேரியும் தண்ணிப் போத்தலுடன் அங்கு வந்து சேருகிறாள்.

கபரி வலையை எடுத்துத் தோளில் போடவே மேரி ராசனிடம் தண்ணிப் போத்தல்களைக் கொடுக்கிறாள்.

"கவனமாய்ப் போட்டு வாங்கோ..." அவள் குரல் கிசுகிசுக்கிறது.

"ம்... ஞாயிற்றுக்கிழமை பின்னேரம் மாதா கோயிலில சந்திப்பம். ஏமாத்தாம வந்திடும்."

ராசனின் வேண்டுகோளுக்கு ம்... எனத் தலையசத்துச் சம்மதித்த மேரியின் கண்கள் ஏக்கத்துடன் அவனையும் கடலையும் நோக்கித் திரும்புகின்றன.

மரியம்மா சாப்பாட்டுப் பார்சல்களைக் கணவனிடம் கொடுத்து விட்டுக் கபரியைக் கட்டியணைக்கிறாள்.

"கவனமாப் போட்டு வா ராசா... ராசன் நீரும் கவனமாய்ப் போட்டு வாரும்." அவள் நாத் தழுதழுக்கிறது. கண்களில் முட்டிக் கொண்டு வந்த கண்ணீரை கணவனுக்குத் தெரியாமல் அவசர அவசரமாகத் துடைக்க முற்பட்ட போதும் சூசையின் பார்வையில் அது பட்டுவிடுகிறது.

"நாங்கள் கடல் மாதாட்டத்தனே போறம். எந்த நேரமும் கண்கலங்கிக் கொண்டு..." சற்று எரிச்சலுடனும் கண்டிப்புடனும் சூசை கூறுகிறான்.

"அப்ப நாங்கள் போட்டு வாறம்..." அங்கு நிலவிய இறுக்கத்தைத் தளர்த்துவதற்காய் டானியல் சொல்கிறான். நால்வரும் திரும்பி இரு பெண்களையும் பார்த்து விட்டுக் கடல் நோக்கிப் போகிறார்கள்

அவர்கள் கண்களைவிட்டு மறையும் வரை பெண்களின் பார்வை அவர்களைத் துரத்திச் செல்கிறது.

## அலை 4

அலை ஓசை மெல்ல மெல்ல அதிகரிக்கிறது. மீனவர்களை வரவேற்கும்

அன்னையின் கீதம் போல் அந்த ஓசையில் ரிதம் கூடி நிற்கிறது. இனிமையான காலைப்பொழுதைத் தரிசிக்கக் கீழ்வானில் சூரியனும் தன் கதிர்கரங்களைப் பரப்பியபடி ஆவலுடன் புறப்பட்டு விட்டான். அவன் மேனியின் பொற்கிரணங்கள் கடல் மகள் உடல் தொட்டுப் பொன்முலாம் பூசிவிட்டிருந்தன.

இயற்கையின் வினோதங்களை இரசித்தார்களோ இல்லையோ மீனவர்களின் முகங்களில் தொழிலுக்குச் செல்லும் போது ஏற்படும் உற்சாகக் களிப்பு வெளிப்படுகிறது. கபரி, ராசன், அன்ரனி மூவரும் போட்டின் கயிற்றை அவிழ்த்து அதைக் கடலில் தள்ளிச் செல்லுகிறார்கள். இளந்தாரிகளைத் தொடர்ந்து சூசை, டானியல், டேவிட் ஆகியோரும் கடலலை நடுவே நடந்து போட்டை அடைகிறார்கள். ஆறு பேரும் ஏறியதும் டேவிட் இயந்திரத்தை முடுக்கி விடுகிறான். இயந்திரத்தின் விசிறிகள் கடலைக் கடைய வெண்ணுரையைத் தள்ளியபடி படகு ஆழ்கடல் உழப் புறப்பட்டு விட்டது. அது துள்ளும் அலைகளின் எற்ற இறக்கத்துக்கு ஏற்ப மேல் எழுவதும் கீழ் விழுவதுமாய் விரைந்து செல்கிறது. சவுக்கடியாக அலைகள் இளைஞர் மேல் விழுகின்றன. அவற்றில் நனைவது கூட அந்த வேளையில் இன்பம் தருகிறது.

ராசன் படகின் அணியத்தில் அமர்ந்திருந்து பரந்து விரிந்த கடலைப் பார்த்த வண்ணம் வருகிறான். எப்பொழுதும் பார்க்கும் கடல்தான். ஆனால் அவன் உள்ள எழுச்சியை பிரதிபலிப்பது போலக் கடலும் புதுக்கோலம் கொண்டுள்ளதாக அவனுக்குப் படுகிறது. நாரைகள் நீர் மீது கெந்திக் கெந்தி விளையாடுவது போலத் தோற்றம் தருகின்றன, ஆனால் நீரில் திடீரென அமுங்கி மீன்களைக் கவ்வி மேல் எழுகின்றன. இப்படித்தான் மேரியும் என் உள்ளத்தைக் கவ்விக் கொண்டாளோ? ராசன் மனதுக்குள் சிரித்துக் கொள்கிறான். மீனவர்களின் நண்பர்களான ஓங்கில் பறவைகள் வானில் சுதந்திரமாய்ப் பறந்து படகுகளுக்கு திசைகாட்டிச் செல்லுகின்றன. அவை போலத் தாமும் சுதந்திர புருசர்களாகவும் வாழ்வுக்கு அர்த்தமளிப்பவர்களாயும் வாழ வேண்டும் என்ற வேட்கை அவன் உள்ளத்தில் என்றுமில்லாது தோன்றுகிறது. காதல்தான் எத்தனை வலியது. சாதாரண மனிதனைக் கவிஞனாக மட்டுமல்ல சிந்தனைவாதியாகவும் மாற்றும் இரசவாதம் அதற்கு உண்டோ...?

ராசன் மேரியின் தரிசனத்தை உள்ளத்தில் வைத்து ஆராதிப்பதாலேயே மவுனமாக வருகிறான் என்பது கபரிக்குப் புரிகிறது. அவனது மோன தவத்தை அதிகம் குலைக்க விரும்பாதவனாய் இடைக்கிடையே சீண்டுவதோடு விட்டு விடுகிறான். அதனால் அவன் அன்ரனியோடேயே அதிகம் பேச்சுக் கொடுக்கிறான். அவ்விருவரதுப் பேச்சிலும் இளைஞருக்கேயுரிய கிண்டலும் கேலியும் இழையோடிக் கிடக்கின்றன.

டேவிட் கலகலப்பாகப் பேசும், பழகும் சுபாவம் இல்லாதவன். அவனே அந்த அறுவர் கொண்ட குழுவுக்குத் தலைவன் போலவும் செயற்பட்டு வந்தான். காத்தமுத்துச் சம்மட்டியாருக்கு அவன் மீது அதிக நம்பிக்கை. அவனும் அந்த நம்பிக்கையை ஒரு போதும் இழக்க விரும்பியதில்லை. அதனால் அவன் மற்றவர்களை விடச் சம்மட்டியாரிடம் அதிக சலுகைகளையும் பெற்று வந்தான். அலையசைவுக்கு எற்பப் படகு ஆட அந்த ஆட்டத்துக்கு இணைந்து ஒத்திசைவாகத் தானும் அசைந்து படகினை இயக்குவதிலேயே டேவிட்டின் கவனம் முழுவதும் குவிந்திருந்தது.

சூசையும் டானியலும் ஊர் உலகத்துக் கதைகளை அசை போட்டுக் கொண்டு வந்தார்கள்.

மதியம் அளவில் அவர்கள் ஆழ்கடலை அடைந்து விட்டார்கள். கபரிக்குப் பசி வயிற்றைக் கிள்ளுகிறது.. “சாப்பிட்டிட்டுத் தொழிலைத் தொடங்குவம்” என்ற அவனது முன்மொழிவை அந்த நேரத்தில் அனைவரும் ஏற்றுக் கொண்டார்கள். தங்கள் தங்கள் பாசல்களைப் பிரித்து ஒருவரோடு ஒருவர் பரிமாறிச் சாப்பாட்டைத் திருப்தியாக முடித்துக் கொண்டார்கள். மேரியின் கைப்பாகம் தனிச்சுவை தருவதாக ராசன் எண்ணிக் கொண்டான்.

சாப்பிட்ட பின் சிறிது நேரம் கூட ஓய்வு எடுக்க டேவிட் விடவில்லை. நீண்ட நேரம் கடலில் நிற்பது கூட உகந்ததில்லை என்ற எண்ணமும் அவன் தொழிற்படக் காரணமாய் இருந்தது.

டேவிட் வலையை எடுத்துக் கடலில் வீசத் தொடங்கி விட்டான். அவனுடன் மற்றவர்களும் இணைய வேண்டியதாயிற்று.

வழமைக்கு மாறாக அன்று அவர்களது வலையில் மீன்கள் அதிகம்பட்டன. அது அவர்களுக்கு பெரும் திருப்தியையும்

உற்சாகத்தையும் தந்தது. நேரம் போவது தெரியாமல் தொழில் ஆழ்ந்து போனார்கள்.

நேரம் நடுநிசியைத் தொட்டது.

இருளின் கனதியில் ஆழ்ந்திருந்த கடலில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் சில மீனவர்களது படகுகள் புள்ளி வடிவில் தென்பட்டன. அவை பெரும்பாலும் இந்திய மீனவர்களுடையதாக இருக்க வேண்டுமென்று எண்ணிக் கொண்டார்கள்.

துணிச்சல் கொண்ட ஒரு சிலரைத் தவிர ஈழத்து மீனவர்கள் இரவில் மீன்பிடிப்பதைக் கடந்த சில ஆண்டுகளாய்த் தவிர்த்து வந்தமையே அந்த எண்ண ஓட்டத்துக்குக் காரணமாய் அமைந்து இருந்தது. ஆழ்கடலில் அலை கூட அதிக ஆரவாரம் இல்லாமல் அமைதியாக இருப்பது போலத் தோன்றியது. அங்கு நிலவிய நிசப்த்தம் அதிக நேரம் நீடிக்கவில்லை. இரவின் அமைதியை விரட்டியபடி கெலிகொப்டர் ஒன்று இவர்களது படகைக் குறிவைப்பது போல மேலே சுற்றிவிட்டு வானில் மறைகிறது.

அதன் வருகை நல்ல அறிகுறியாகப் படகில் இருந்தவர்களுக்குத் தெரியவில்லை. இதுவரை உற்சாகமாகத் தொழிலில் கண்ணாயிருந்தவர்களை அச்சம் இறுக்குகிறது.

“என்ன டானியல் கோதாரியிலே போறவங்கள் வந்திட்டுப் போறாங்கள்…?”

சூசையின் குரலில் கலவரம் அப்பட்டமாகத் தெரிகிறது.

உள்ளத்தில் திடுக்குற்றாலும் பதறாது முடிவுகளை எடுக்கிறான் டேவிட்.

“அது அவங்கள் சும்மா போறாங்கள். நீங்கள் கவலைப் படாதுங்கோ… எதுக்கும் நாங்கள் இன்னும் பத்து நிமிசத்தில திரும்புவம். அன்ரனி ராசன் வலையை உள்ளுக்குள்ள கெதியில இழுங்க.”

அவர்கள் மிக வேகமாக வலையை உள்ளிழுத்த போதும் அவர்கள் கண்கள் மட்டும் நாற்திசையும் சுழன்று படகு ஏதாவது வருகிறதா என்பதையே அவதானிக்கின்றன. காங்கேசன்துறைப் பக்கமாகப் புள்ளி வடிவில் தோன்றிய அந்தப் படகு கொஞ்சம் கொஞ்சமாய் வியாபித்துப் பெரிதாகி வருவதை முதலில் கபரியேலே காணுகிறான்.

“அங்க பாருங்கோ நேவியின்ற பீரங்கிப் படகொண்டு வருகுது.” கிலியுடன் கபரி காட்டிய திக்கை எல்லோரும் நோக்குகிறார்கள். அந்தப் படகு இவர்கள் போட்டை நோக்கி மிக வேகமாக வருவது மட்டும் இவர்களுக்குத் துல்லியமாகத் தெரிகிறது.

அதிர்ச்சியில் ஒருகணம் உறைந்து போனவர்கள் படகை மிக வேகமாகத் திருப்பிக் கரைக்குச் செல்ல எத்தனிக்கிறார்கள். ஆனால்... சாதாரண மீனவப் படகால் அதிவிரைவான, ராடர் முதலிய நவீன கருவிகள் பூட்டப்பட்ட பீரங்கிப் படகுக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. நேவி போட் அவர்களது போட்டுக்கு சிறிது தூர இடைவெளிக்கு வந்து விடுகிறது. அங்கு இருந்தவாறே மேல் வெடி வைக்கிறது. ஆயுததாரிகளான புலிகள் படகாக இருக்குமானால் ஒன்றில் எதிர்த்துத் தாக்குவார்கள். அல்லது தங்களை அழித்துக் கொள்ளுவார்கள். இதனை உறுதி செய்யவே இந்த இடைவெளி என்பது படகில் இருப்பவர்களுக்கு நன்கு புரிகிறது. மேலே வெடித்துச் சிதறும் றவைகள் இன்னும் சிறிது நேரத்தில் தங்கள் நெஞ்சுகளைப் பதம்பார்க்கப் போகின்றன என எண்ணும் போதே பயத்தால் உடலும் உள்ளமும் ஒருங்கே நடுங்குகின்றன.

தங்கள் முன்னே தத்தளித்துக் கொண்டிருக்கும் படகு மீன்பிடிப் படகுதான் என்பதைத் தொலைநோக்குக் கருவியாலும் உறுதி செய்து கொண்டு தமது படகை மீனவர் படகிற்கு மிக அருகில் கொண்டு வந்து முற்றுகையிடுகிறார்கள். ஒரு நேவி ஏ,கே 47 ஐ நீட்டிய வண்ணம் இவர்கள் படகுக்குத் தாவுகிறான். உழைப்பினால் உறுதியான கட்டுமஸ்தான உடற்கட்டுடன் காணப்பட்ட இளைஞர்களைக் கண்டவுடன் ஏற்கனவே குடியினால் சிவப்பேறியிருந்த அவன் கண்கள் சினத்தால் மேலும் கோரம் அடைகின்றன. தமிழ் இளைஞர்கள் யாவரையுமே புலிகளாகவே காணும் படையினரின் குரோதம் விழித்துக் கொள்ள தனது துப்பாக்கியைக் கபரியின் நெஞ்சினை நோக்கி அழுத்திப் பிடிக்கிறான் அவன்.

“ஐயோ என்ற மகன்... அவன் அப்பாவி...” கதறியபடி முன்வந்த சூசையை ஒரு கையால் நெட்டித் தள்ளுகிறான் நேவி. தடுமாறி விழுந்த சூசை நரகத்துக்கே தான் தள்ளப்பட்டதாக உணருகிறான்.

“நாங்கள் மீன்பிடிகாரரர். இங்க பாருங்கோ மீன்தான்”. தனக்குத் தெரிந்த சிங்களத்தில் தங்கள் நிலையினை நிரூபிக்க முற்பட்ட டேவிட்

துவக்குப் பிடியால் தாக்கப்படுகிறான். அடி பலமாக முழங்கையில் படவே அதில் இரத்தம் சொட்டுகிறது.. தலை விறுவிறுத்து மயக்க நிலைக்கு உள்ளாவது போல் தோன்றுகிறது டேவிட்டுக்கு.

இதற்கிடையில் படகில் மேலும் இரண்டு படைகள் குரங்குகள் போல் தாவுகின்றன. ராசன், அன்ரனி, ஆகியோரின் நெஞ்சுகளை நோக்கி அவர்கள் துப்பாக்கிகள் நீளுகின்றன. கைகள் இரண்டையும் உயர்த்திப் பலிக்கடாக்கள் போல் உறைந்து நிற்கும் இளைஞர்களைப் பார்க்கப் படைகளின் உள்ளதில் கருணைக்குப் பதில் குரோதம் குமுறி எழுகிறது. இரண்டு நாட்களுக்கு முன் புலிகளிடம் சிக்கி உயிரிழந்த இருபது படையினருக்காக பழிவாங்க அவர்கள் மனம் துடித்துக் கொண்டிருந்தது.

“டமில்நாய்.... கொட்டி நாய்... “புரியாத தூசனை வார்த்தைகள் தாராளமாய் இளைஞர்களின் காதுகளை துவேசிக்கின்றன. எதிரியை உடலால் மட்டுமன்றி வார்த்தைகளாலும் முகத்தில் எச்சிலை விசிறி அவமானப்படுதும் கோரம் அங்கு பல்லிளித்துக் கொண்டிருந்தது. வார்த்தைகள் கூட பொங்கி எழும் குரோத உணர்வுக்கு வடிகாலமைக்கப் போதவில்லைப் போலும். துவக்குக் கத்தியால் இளைஞரின் நெஞ்சுகளைக் கீறி இரத்தக் கோலமிட்டு இரசிக்கிறது படை. அவர்களின் வேதனை கண்டு துடிக்கும் முதியவரின் கதறல் வெறியை மேலும் கூட்டும் பறையொலியாகவே படைக்குப் படுகிறது.

இளைஞர்களைச் சுடுவதத்கு துவக்கின் நாக்கை இழுக்கச் சென்ற நேவியின் கரங்கள் கப்றனின் கட்டளையால் செயல் இழக்கின்றன.

“இவங்களைக் காம்பில கொண்டு போய் விசாரிப்பம்.” கப்ரனின் கட்டளையின் உள்ளர்த்தத்தைப் புரிந்தவராய் படையினர் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரிக்கிறார்கள். நிராயுதபாணிகளான அவர்களைச் சம்பவ இடத்தில் வைத்துச் சுடுவதிலும் சித்திரவதை செய்த பின் சுடுவதில் அதிக சுகம் இருப்பதாக அவர்கள் கருதியதன் வெளிப்பாடுதான் அந்தச் சிரிப்பு என்பதை அங்குள்ளவர்களால் ஊகிப்பது கடினமாக இருக்கவிலை.

தங்கள் உயிர் சிறிது நேரத்தில் பந்தாடப்படப் போகிறது என்பது இளைஞர்களுக்கு இப்பொழுது பொருட்டாகத் தெரியவில்லை. உயிரோடு அவர்கள் செய்யப் போகும் சித்திரவதை... நிமிடத்துக்கு

நிமிடம் சாவின் எல்லையைத் தொட்டு வரும் அவலம்... உள்ளங்காலில் இருந்து உச்சம்தலை வரை பயம் ஊடுருவி உடல் விறைத்து நீள்வது போல் உணர்கிறார்கள்.

எத்தனையோ கெஞ்சல்கள். கதறல்கள். நிரூபிப்புக்கள் எவையும் பயன் தராத நிலையில் மூன்று இளைஞர்களும் படகு மாற்றம் பெறுகிறார்கள். அன்றைய உழைப்பான மீன்கள் முழுவதும் நேவியால் கொள்ளையிடப்படுகின்றன.

தனது படை புலிகளிடம் வாங்கும் அடிகளுக்குக் களத்தில் நின்று சரியான பதில் கூறமுடியாத அவலத்துக்கு அப்பாவிகளைத் துன்புறுத்துவதன் மூலம் வடிகால் தேடிக்கொள்வது படையின் வழமையாகி விட்டது.

தங்கள் பிள்ளைகள் தங்கள் கண்முன்னாலேயே காலனிடம் பறிபோவதைத் தடுக்கமுடியாத அவலம் முதியவர்களின் கண்களில் கண்ணீராக வடிகிறது. ஏக்கத்துடன் தம் பிள்ளைகளை அவர்கள் பார்த்து நிற்கிறார்கள்.

இளைஞர் மூவருக்கும் தங்கள் வேதனைக்கு அப்பால் தங்கள் இழப்பு கண்டு துடிக்கப் போகும் உறவுகளின் முகங்கள் தோன்றி உள்ளத்தை உருக வைக்கிறது. குமுறிவரும் அழுகையை உதடுகளை இறுகப் பல்லால் கடித்து அடக்கிக் கொள்கிறார்கள். இப்பொழுது படகு தள்ளாடியபடி கரை நோக்கிப் பயணிக்கிறது. மீன்களின் பாரத்தால் அல்ல. முதியவர்களின் மனப்பாரத்தால்.

கடல்மட்டும் எப்பொழுதும் போல இரவின் நிசப்தத்தில் ஆழ்ந்துகிடக்கிறது.

## அலை 5

மறுநாள் காலை வழமை போலப் புலர்கிறது... மேரி குடிசையில் மதியச் சமையலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறாள். இன்று வெள்ளி... நாளை சனி... நாளை மறுநாள்...... அவள் மனம் ஞாயிற்றுக்கிழமைக்காக ஏங்கித் தவிக்கிறது.

இராசனின் கட்டுமஸ்தான உடல்... அவனது காதல் கனிந்த பார்வை... அன்பொழுகும் பேச்சு...... அவளது மனக்கண்களில் தோன்றி இன்பக்

கிலுகிலுப்பை ஏற்படுத்திய வண்ணம் இருந்தன.

அவள் கனவு நிலையைக் குலைப்பது போலச் சந்தையில் இருந்து திரும்பியிருந்த மரியம்மாவின் குரல் வெளியில் கேட்க்கிறது.

“மேரி... மேரி......”

மேரி அவசரமாய் குடிசையின் வெளியில் ஓடி வருகிறாள்.

“என்னம்மா... இப்படிப் பதறுகிறாய்... பதறாமல் சொல்லனை.”

“நேற்றைக்குக் கடலுக்குப் போன போட்டிலை ஒண்டை நேவி மறிச்சுப் பெடியலைப் பிடிச்சுக் கொண்டு போட்டுதாம்.”

“உனக்கு ஆர் சொன்னது” தாயின் பதற்றம் மேரியிடமும் தொற்றிக் கொள்கிறது.

“சந்தைக்குள்ளை ஒரே கதையாக் கிடக்குது. அதுதான் நான் ஓடிவாரன்”.

“நேற்றைக்குக் கடலுக்கை எத்தனை போட்டுப் போயிருக்கும். அதுக்கு நீ ஏன் பதறுகிறாய்...?” மேரி தாயைத் தேற்றுகிறாளா...? அல்லது தனக்குத் தானே ஆறுதல் சொல்லுகிறாளா...?

“எனக்கென்னமோ பயமாக்கிடக்குது... வா போய் முதலில பாத்திட்டு வருவம்.”

மரியம்மா மீன் கடகத்தைக் குடிசையை நோக்கி எறிகிறாள்... ஏணையில் கிடக்கும் குழந்தையை அள்ளி எடுத்துக் கொண்டு கடலை நோக்கி ஓட்டமும் நடையுமாய்ச் செல்லுகிறாள். அவளைத் தொடர்ந்து ஒருவிதக் கலக்கத்துடன் மேரியும் போகிறாள்.

கரையில் ஒதுங்கிய படகொன்று இருவர் கண்களிலும் படுகிறது.

அதிலிருந்து சூசை, டானியல், டேவிட் மட்டுமே இறங்கி வருகிறார்கள். ஆனால் கபரி... ராசன்.....

மரியம்மா சூசையிடம் பாய்ந்து செல்லுகிறாள். போட்டில் இருந்து சோர்ந்தவனாய் வந்த சூசையை உலுக்கி எடுத்து விடுகிறாள்.

“எங்க என்ற பிள்ளை... அவனை எங்க விட்டிட்டு வந்திருக்கிறீர்...? மரம் மாதிரி நிக்காமச் சொல்லுமன்...”

மரியம்மாவுடன் இணைந்து மேரியும் தகப்பனை உலுக்குகிறாள்...

"கபரி... ராசன் எல்லாம் எங்க அப்பு...? "மேரிக்கு அழுகை பொத்துக் கொண்டு வருகிறது.

சூசை பதிலேதும் கூறாமல் குமுறி அழுகிறான்.

"அவங்களைக் குறுக்கால போன நேவி பிடிச்சிட்டுப் போட்டாங்கள்..."

கிணற்றுக்குள் இருந்து ஒலிக்கும் குரலாக டானியலிடமிருந்து பதில் வருகிறது.

"ஐயோ என்ற பிள்ளை... என்ற ராசா... இதுக்கோ நான் பத்து மாசம் பத்தியம் இருந்து பெத்து வளர்த்தன்... என்ற குலக்கொழுந்த கோதாரியில போறவங்கள் கொண்டு போனாங்களோ..."

மரியம்மாவின் ஒப்பாரியில் ஊரே கூடி விடுகிறது. மேரி குமுறிக் குமுறி அழுகிறாள் அவள் அழுகையில் அவள் எதிர்காலமும் மெல்ல வழுவிப் பாதாளம் நோக்கிச் செல்வது போன்ற உணர்வு மேலிடுகிறது.

கடலின் அலைகள் தரையில் மோதி எழும் பேரோசை அவர்களின் ஒப்பாரிக்குச் சுருதி கூட்டுகிறது.

## அலை 6

"அம்மா... அம்மா..."

மேரியின் தொண்டைக்குள் மீன் முள் குத்தியது போலக் குரல் தடுக்கிறது.

"ஓம் பிள்ளை"

தவிப்புடன் மேரியை நோக்குகிறாள் மரியம்மா.

"அம்மா... நான்... நான்..."

"என்ன பிள்ளை சொல்லன்..."

"அம்மா நான் போட்டு வாரன்."

மேரியின் குரலில் இப்பொழுது உறுதி. அது மரியம்மாவை ஏதோ செய்கிறது. அவள் வேதனையுடன் மேரியின் கைகளைப் பற்றுகிறாள்.

“எங்க பிள்ளை... நீயும் என்னை விட்டுட்டுப் போகப் போறாயோ...?”

அவள் கண்கள் மகளிடம் எதையோ யாசிக்கின்றன...

“ஓம் அம்மா...”

தாயின் தவிப்பு மேரியின் உறுதியான முடிவில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

“எதுக்குப் பிள்ளை போறாய்.....”

தாயின் இந்தக் கேள்வி மேரியிடம் சிரிப்பைத்தான் வரவழைக்கிறது. ஆனாலும் அவள் பதில் கூறுகிறாள்.

“விடுதலைக்காக...”

மரியம்மாவின் கண்களில் திடீரென ஒளி கூடுகிறது.

“அப்ப உன்ற கொண்ணனையும் விடுவிப்பியோ...?”

அவள் ஆர்வத்துடன் மகளின் முகத்தைப் பார்க்கிறாள்.

மேரி இக் கேள்வியைச் சற்றும் எதிர் பார்க்கவில்லை. அவள் உள்ளத்தின் தடுமாற்றம் கண்களில் பட்டுத் தெறிக்கிறது. இந்தக் கேள்விக்கு மேரியால் எப்படிப் பதில் சொல்ல முடியும். அவள் மௌனமாகிறாள்.

“ஏன் பிள்ளை பேசாமல் நிக்கிற” சொல்லன். கொண்ணனையும் விடுவிப்பியோ...?”

மரியம்மா ஆவேசம் கொண்டவள் போல் மேரியிடம் திரும்பத் திரும்பக் கேட்கிறாள்.

மேரி பதில் ஏதும் கூறாதவளாய்... கூறமுடியாதவளாய் அந்த இடத்தை விட்டு நகர்ந்து விடுகிறாள்.

“என்ற ராசனையும் விடுவிப்பியோ...? என்ற ராசா கபரி...” மரியம்மாவின் அழுகுரல் மேரியைத் துரத்திச் செல்கிறது.

மரியம்மாவால் கபரியேலை மறக்க முடியவில்லை. அவனது மறைவு அவள் உள்ளத்தின் ஆழத்தில் புதைந்து போனாலும் அவ்வப்போது மேல் வந்து அவளை வேதனைப் படுத்துவது வழமைதான். ஆனால்... சுனாமி அனர்த்தத்தின் பின் மரியம்மாவின் மனச்சமநிலை குலைந்த நிலையில் ஆழ்மன எண்ணங்களே ஆட்சிபுரிந்தன. காலத்தால்

ஆற்றப்பட்டதாக எண்ணிய புண்கள் மீண்டும் கோரமாய் தாக்கப்பட்டு அதில் சீழும் இரத்தமும் கசிந்து கொண்டிருந்தன.

## அலை 7

*1998* வன்னியில்

பரந்து விரிந்த வன்னிப் பிரதேசம்...

இன்று தமிழர் தாயகத்தின் இதயமாக விளங்கி வருகிறது... எனினும், அதன் வளம்...?வன்னி பொதுவாகவே மழை வீழ்ச்சி குன்றியது. அரசாங்கத்தின் தொடர்ச்சியான திட்டமிட்ட புறக்கணிப்புக் காரணமாகப் பண்டைய மன்னர்களால் வெட்டப்பட்ட குளங்களும் நீர்நிலைகளும் தூர்ந்து போய் அங்கு வறட்சி ஆட்சி செய்தது.

வடக்கிலும் கிழக்கிலும் போர் தொடங்கிய போது வன்னியின் நிலைமை மேலும் மோசமானது. அரசாங்கத்தின் பொருளாதாரத் தடை வன்னி மக்களின் பொருளாதார முயற்சிகளை முடக்கிப் போட்டிருந்தது. இத்தனையும் போதாதென்று அரச ஆக்கிரமிப்புப் படையின் செல்வீச்சுக்களும் விமானக் குண்டு வீச்சுக்களும் மக்களைச் சொல்லொணாத் துன்பத்துக்கு உள்ளாக்கிக் கொண்டிருந்தன.

இத்தகைய ஓர் சூழ்நிலையிலேயே *1995, 96*களில் யாழ்ப்பாணத் திலிருந்து கணிசமான மக்கள் வன்னிக்கு இடம் பெயர்ந்து சென்றனர்.

சூசையின் குடும்பமும் யாழ்ப்பாணத்திலிருந்து எத்தனையோ அவலங்களுக்கிடையே கிளிநொச்சியை வந்தடைந்திருந்தது. கிளிநொச்சியிலிருந்து பத்துக் கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இராமனாதபுரம் இவர்கள் வசிப்பிடமாயிற்று.

செஞ்சிலுவைச் சங்கத்தினால் வழங்கப்பட்ட பிளாஸ்ரிக் விரிப்புக்கள் உள்ளூரில் கிடைத்த காட்டுத்தடிகள் ஓலைகள் கொண்டு எப்படியோ ஓர் குடிசையை அமைத்து விட்டார்கள். இடம் பெயர்ந்த மக்கள் பலரின் முக்கிய பிரச்சனையான வேலையின்மை இவர்களது வாழ்க்கையையும் திணறடிக்கச் செய்தது. மீன்பிடித் தொழிலையே நம்பியிருந்த இவர்களால் லேசில் இங்கு தொழில் வாய்ப்பைப் பெறமுடியவில்லை.

மரியம்மா தலைச் சுமையைக் குடிசை வாசலில் இறக்கி வைக்கிறாள். தலையில் விறகுச் சுள்ளிகள் அண்டாதவாறு வைத்த துண்டை எடுத்து வழியும் வியர்வையைத் துடைத்தவள் தன்னை ஆசுவாசப் படுத்துவதற்காகக் குடிசை வாசலில் உள்ள சிறிய திண்ணையில் அமருகிறாள்.

அவளையறியாது மன வெப்பியாரம் பெருமூச்சாக எழுகிறது. கண்களில் நீர்த் துளிகள் வருவதா வேண்டாமா என்று எட்டிப்பார்க்கின்றன.

“போனவளை நினைச்சு இப்பிடி இடிஞ்சு போய் இருந்தா குடும்பத்தை ஆர் பார்க்கிறது.”

வெறும் தேத்தண்ணியை உறிஞ்சியபடி எதிர்த் திண்ணையில் சூசை வந்து அமருகிறான்.

“கவலை கவலை எண்டு நீர் குடிச்சுக் கொண்டிருந்தால் மட்டும் குடும்பம் உருப்படுமாக்கும்.” மனத்தில் கணவன் மீது ஏற்பட்ட எரிச்சல் நெருப்புத் துண்டமாய் வார்த்தைகளில் வந்து தெறிக்கிறது.

“அம்மோய் நிவாரண அரிசியும் முடிஞ்சு போட்டுதனை. மத்தியானச் சாப்பாட்டுக்கு என்ன செய்யிறது” ரெமி வெறுந்தேத்தண்ணியை நீட்டியபடி தாயிடம் வினவுகிறாள்.

“கொப்பரக் கேள் அவர்தான் பதில் சொல்லுவார்.” ஆற்றாமை அவள் குரலில் தொனிக்கிறது.

இதற்கு பதில் கூறினால் மனைவியின் வசைக்கு மேலும் மேலும் உள்ளாக நேரிடும் என்பதைச் சூசை உணர்ந்தவனாய் மகளை நோக்குகிறான்.

“இந்தா பிள்ளை ரெமி உந்த மீன் பறியையும் தூண்டிலையும் எடுமோனை குளத்திலை ஏதும் கிடைக்குதோ எண்டு பாப்பம்.”

“குளத்தில கிடைக்கிறதை வித்துப் போட்டுப் பேந்தும் கசிப்புக் குடிக்கப் போயிடாதையும் யேசுதாசனுக்கும் காய்ச்சலாக் கிடக்குது. ஆஸ்ப்பத்திரிக்குப் போகக் பஸ் காசும் வேணும்.”

“கடலில் மீன் பிடிச்ச எங்களைக் குட்டையில மீன்பிடி எண்டால் என்னத்தைப் பிடிக்கிறது. வருகிற ஒண்ட ரெண்டையும் விக்கிறதுக்கு ஐஞ்சாறு மைல் சைக்கிள் உழக்க வேண்டியிருக்குது. களைப்பு வந்தால்

எப்பவாவது குடிப்பன்".

சூசையின் பதில் மரியம்மாவின் கோபத்தைத் தூண்டிவிடுகிறது.

"ஓம்.... ஓம்... ஒருக்காக் களைப்பெண்டு குடியும். பேந்து மகள் இயக்கத்துக்குப் போட்டாள், மகன் காணாமல் போட்டான். கவலை பொறுக்க முடியேல்லை எண்டு குடியும் பேந்து வன்னியில இடம் பெயர்ந்து கஸ்டப்படுகிறம் எண்டு குடியும். உமக்குத்தான் குடிக்கிறதுக்கு ஆயிரம் காரணம் கிடைக்குமே..."

வறுமையால் வாடும் இவர்களிடம் ஏதோ ஒருவகையில் இந்தக் குடிப்பழக்கமும் ஒட்டிக் கொள்கிறது. தங்களை வாட்டும் துன்பங்களில் இருந்து தற்காலிகமாக விடுபட இவர்கள் கைக்கொண்ட பழக்கம் எல்லை மீறும் பொழுது இவர்கள் குடும்பத்தை எவ்வளவு சீரழிக்கிறது என்பதை இவர்கள் உணர்வதில்லை.

"உண்மையில இவள் மேரி எவ்வளவு பொறுப்பான பிள்ளை. இவள் இப்படி இயக்கத்துக்குப் போவாள் எண்டு நான் கனவிலையும் நினைக்கேல்ல..." கதையை மாற்றும் பொருட்டு இப்படி ஒரு கருத்தை முன் வைக்கிறான் சூசை. அதில் மகள் பற்றிய அவனது வேதனையும் புலப்படாமல் இல்லை.

"அக்கா பொறுப்பான பிள்ளையெண்டதாலதான் இயக்கத்துக்குப் போனவ". தமக்கையின் செயல் முற்று முழுதாக சரியானது என்பது ரெமியின் முடிந்த முடிவு. ரெமி தானும் இயக்கத்துக்குப் போக எத்தனையோ முறை எண்ணியிருக்கிறாள். ஆனால் ஏதோ ஒன்று அவளை அவ்வாறு செய்யாமல் தடுத்து வந்தது.

"ம்...... தமையனை ஆமி பிடித்தத அவளால பொறுக்க முடியேல்லை. இந்த அகதி அவல வாழ்க்கையும் அவங்களாலதானே... அதுதான் போட்டாள்."

மரியம்மாவால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தொடரும் அவலங்கள் உறுதியான அவள் மனதைக்கூட ஆட்டங்காண வைத்து விட்டன.

"சரி சரி... விடியகாத்தால அழாதை... நான் போட்டுவாறன். தா பிள்ளை அந்தப் பறியை..." ரெமி பறியையும் தூண்டிலையும் கொடுக்கச் சூசை வெளியேறுகிறான்.

மனப்பாரம் அழுத்தச் சிறிது நேரம் செயலற்று இருக்கிறாள் மரியம்மா... அங்கு அசூசையான மௌனம் நிலவுகிறது. அவள் சிந்தை வேறொன்றில் தாவுகிறது. மனப்பாரம் மேலும் அழுத்துகிறது. இனம் புரியாத பயம் அவள் மனதைப் பிசைகிறது.

யேசுதாசன்... மரியம்மா, சூசையின் கடைசி மகன். செல்லமகன். அவன் ஐந்தாறு நாளாய் காய்ச்சலால் அவதிப்படுகிறான். மரியம்மாவும் தனக்குத் தெரிந்த கைவைத்தியம் எல்லாம் செய்து விட்டாள். ஆனால் இன்னும் குணம் ஏற்பட்டபாடில்லை. இன்று அவனை எப்படியும் ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக்கொண்டு போய்க் காட்டுவதென்று தீர்மானிக்கிறாள்.

போசாக்கான உணவு கிடைக்காமை, நுளம்பின் பெருந்தாக்கம் என்பன இடம் பெயர்ந்து சுகாதாரக்கேடுகளுக்கிடையே வாழும் மக்களை மேலும் வாட்டி வதைத்து வருகிறது. பலர் நிமோனியா டெங்குக் காய்ச்சல்களால் இறந்திருக்கிறார்கள். மரியம்மாவின் பயத்துக்கு நியாயம் இல்லாமல் இல்லை.

“எங்க பிள்ளை இவன் யேசு? காய்ச்சலோட விளையாடப் போட்டானே...? “

“இல்லையம்மா அவன் விடியத் தொடக்கம் முனகிக் கொண்டு கிடந்தவன். தேத்தண்ணி கொடுத்தன். அதையும் சத்தியெடுத்துப் போட்டான்.”

மகளின் பதில் மரியம்மாவின் வயிற்றில் புளியைக் கரைக்கிறது.

“அதையேன் எனக்கு முன்னமே சொல்லெல்ல?” குற்றம் சாட்டுவது போல அவசரமாய்க் கேட்கிறாள் அவள்.

“விடிய எழும்பி விறகு பொறுக்கப் போட்டு இப்பத்தானே இதில வந்து இருக்கிறாய். வந்தோன அப்புவோட சண்டை.”

“சரி சரி இப்பவே அவனை கூட்டிக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போறன். பத்துமணி பஸ்ச விட்டால் பேந்து இரண்டு மணிக்குத்தான் பஸ். பத்து மைல் போகவேணும். இந்தப் பிஞ்சு தாங்குமோ என்னமோ...?”

வன்னியில் பஸ் சேவை என்பது ஒழுங்காக நடைபெறுவதில்லை. பொருளாதாரத் தடை காரணமாகப் பல பஸ்கள் சேவையில் இருந்து நிறுத்தப்பட்டு விட்டன. ஓடும் இரண்டு மூன்று பஸ்களும்

உடைந்து சிதலமாய்ப் போன ரோடுகளிலேயே பயணம் செய்ய வேண்டி இருந்தமையால் அடிக்கடி பஞ்சராகி நடுரோட்டில் நின்று விடுகின்றன. நிவாரண விடயமாய் ரவுனுக்குப் போகப் பஸ்சுக்காகக் காத்திருந்து அது கிடைக்காததால் நடந்து செல்ல வேண்டிய நிலைக்கு மரியம்மா உள்ளாகியிருக்கிறாள். பல மணி நேரம் காத்திருந்தும் பஸ் வராததால் தகிக்கும் வெய்யிலிலோ மழையிலோ நோயோடு தள்ளாடி நடக்கும் சீவன்களை அங்கு மிகச்சாதாரணமாகப் பார்க்கலாம். தானும் கொளுத்தும் வெய்யிலில் நோயால் வாடும் குழந்தையைத் தூக்கிக் கொண்டு நடக்க நேரிட்டால்...? நினைப்பதற்கே மரியம்மாவுக்குப் பயமாக இருக்கிறது.

"அம்மா அவனுக்குக் குளிருதெண்டு அழுதான். உன்ற சீலையாலதான் போர்த்து விட்டனான். எல்லா இடமும் மலேரியா."

"நீ போய் கமலமக்காட்ட அரிசி கடன் வாங்கிக் கஞ்சிவை. நான் அவனத் தூக்கிறன்."

மகனைத் தூக்கியவள் ஒருகணம் பதறித் துடித்துப் போகிறாள்.

"இங்க பார் ரெமி. இவனுக்கு அனலாய் உடம்பு கொதிக்குது.. எனக்கென்னமோ பயமாக் கிடக்குது... கொப்பரக் கூப்பிடுவமே..."

"பயந்து என்ன செய்யிறது... கெதியில் ஆஸ்பத்திரிக்கு வெளிக்கிடு. அப்புவ இப்ப நான் எங்களண்டு தேடிறது...?"

மரியம்மா தனது சீலையொன்றால் யேசுதாசனை நன்கு போர்த்தி அவன் தலையில் வெய்யில் சூடு படாதவாறு பார்த்துக்கொள்கிறாள். தூக்கிய போது காய்ச்சல் மயக்கத்தால் முனகிய யேசு தாயின் இதமான அணைப்பில் மீண்டும் சோர்ந்து அவள் தோளில் சாய்ந்து கொள்கிறான்.

மரியம்மா படலையை தாண்டும் வரை அவளையும் யேசுவையும் பார்த்துக் கொண்டிருந்து விட்டு உள்ளே செல்கிறாள் ரெமி.

"தம்பி பாவம் யேசப்பா...! அவனுக்குக் கெதியில சுகம்வர நீர்தான் உதவ வேணும்... ஆமென்." கருணையே உருவாய் அவளையே நோக்கியிருந்த யேசு படத்தின் முன் நின்று மனம் உருகப் பிரார்த்திக்கிறாள் ரெமி.

ரேமிக்குப் பதினான்கு வயது மட்டுமே ஆகிறது. ஆனால் வாய்ப்புக் கிடைக்கும் பொழுதெல்லாம் மரியம்மா களை பிடுங்க, நாற்று நட

எனக் கூலி வேலைக்குச் சென்று விடுவதனால் வீட்டு வேலைகள் ரெமியின் தலையில் விழுந்து விடுகின்றன.

சூசை குடும்பத்திலேயே ரெமிக்குத்தான் படிப்பில் ஆர்வமும் திறமையும் அதிகம் இருந்தது. ஆனால் இடம் பெயர்ந்த இந்த இரண்டு வருடத்தில் அவள் படிப்பும் அதிகம் பாதிப்புக்கு உள்ளாகியிருந்தது. அரசாங்கம் புத்தகங்களை இலவசமாக வழங்கியிருந்தாலும் கொப்பி இதர கல்வி உபகரணங்களை வாங்கிக் கொடுக்கும் நிலையில் அவள் குடும்பம் இருக்கவில்லை. இதனால் அவள் கல்வி ஊசலாடிக் கொண்டிருந்தது. மழைக்கு ஒதுங்குவது போல அவளும் இன்னும் ஏதோ பள்ளிக்கூடம் சென்று வருகிறாள். ஆரம்பத்தில் அவளது வரவின்மைக்கு ஆசிரியர்கள் கண்டித்தாலும் அவளைப் போன்ற மாணவர்களின் அவல நிலையை அறிந்திருந்ததால் வரும் அளவுக்கு வரட்டுமே என்று விட்டுவிட்டார்கள். தனது படிப்புப் பாதிக்கப்படுவதற்காக வருந்துவதைத் தவிர ரெமியாலும் என்னதான் செய்யமுடியும்...?

ரெமி தனது சிறிய குடிலை அழகாகக் கூட்டிவிட்டு முத்தத்தில் ஒரு பகுதியைக் கூட்டுகிறாள். நேரம் பதினொன்றைத் தொட்டுவிட அப்புவும் தேவதாசனும் பசியால் வருவார்களே என்ற எண்ணம் தோன்றுகிறது. ஒரு சிறிய பெட்டியை எடுத்துக் கொண்டு பக்கத்து வீடு நோக்கிச் செல்லுகிறாள்.

பக்கத்து வீட்டு கமலம் மாமியிடம் எத்தனை தடவைகள்தான் அரிசி, சீனி, மாவு என்று கடன் வாங்குவது...? பல சமயங்களில் வாங்கிய கடன் திருப்பிக் கொடுக்கப்படுவதில்லை. இப்பொழுது அவவிடம் கடனுக்குப் போக ரெமிக்குக் கூச்சமாக இருக்கிறது. ஆனால் இன்று உலை வைப்பதற்குக் கடன் வாங்குவதுதவிர வேறு வழியில்லை.

ரெமி தயங்கியபடி மாமியின் வீட்டு வாசலில் போய் நிற்கிறாள்.

கமலம் மாமிக்கு கிளிநொச்சி இராமனாதபுரம்தான் சொந்த இடம். அவவின் குடும்பம் பரம்பரையாக விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறது. ஊரில் ஓரளவு பசையுள்ள குடும்பமும் கூட. மாமியின் இயல்பான இரக்க சுபாவம் காரணமாக முகம் சுழிக்காமல் தன்னாலான சிறிய உதவிகளை செய்து வருகிறா... அல்லாமலும் கமலம் மாமியின் வயல் வேலைகளுக்குக் கூலியாக அவ கூப்பிடும் போதெல்லாம் மறுக்காமல்

மரியம்மா போவதுண்டு. அவவின் வீட்டில் அரிசி இடித்தல், நெல் குற்றிப் பிடைத்தல், புழுங்கள் அவித்தல் என நீளும் வேலைகளைச் செய்யும் நிரந்தர வேலையாளாக மரியம்மா திகழ்ந்தமையும் மாமியின் உதவிகள் நீடிப்பதற்கான மற்றுமொரு காரணமாய் இருந்து வருகிறது.

"மாமி... மாமி..."

மிக மெதுவாக ரெமி உட்பக்கம் பார்த்துக் கூப்பிடுகிறாள்.

வெளியில் வெளிக்கிட்டுக் கொண்டிருந்த மாமி கண்ணாடியில் பார்த்துப் பொட்டைச் சரி செய்கிறா. பின் முந்தானையை இழுத்துச் சொருகிய வண்ணம் குரல் வந்த திக்கை நோக்கி வருகிறா.

ரெமியின் தயக்கத்தைப் பார்த்தவுடனையே அவள் தன்னிடம் ஏதோ எதிர்பார்த்து வந்திருப்பதைப் புரிந்துகொள்கிறா...

"என்ன ரெமி ஏதும் வேணுமே...?"

"ஓம் மாமி... கொஞ்சம் அரிசி வேணும்... நிவாரணம் வந்தோன தாறம்..."

"ம்... கொப்பர் பொறுப்பில்லாமல் நடக்கிறார்... கொம்மா கூலிக்கு போறா... அது என்னத்தைக் காணும்...? இதில இரு பிள்ளை... அரிசி எடுத்திட்டு வாறன்."

வெளிவிறாந்தையில் இருந்த கதிரையை ரெமிக்குக் காட்டிவிட்டு உள்ளே சென்று ஒரு கொத்து அரிசியுடன் வெளியே வருகிறா...

"உன்ற அம்மா எங்க...? கூலிக்கே போட்டா...?"

"இல்லை மாமி தம்பிக்குச் சுகமில்லை. அவனக் கூட்டிக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போட்டா."

"நானும் ஆஸ்பத்திரிக்குத்தான் போறன். தம்பியிண்ட ரக்றர் ரவுனுக்குப் போகுது. மினக்கடாமப் போகலாம். மரியம்மா போறதெண்டா கூடிக்கொண்டு போயிருக்கலாம்."

ரெமி அரிசியை வாங்கியபடி எழுந்து கொள்கிறாள். "மாமி நான் போட்டு வாரன்."

"ஓம் பிள்ளை... எனக்கும் நேரம் ஆகுது." கூறியபடியே கேற்றை நோக்கி ரெமியுடன் மாமியும் நடக்கிறா...

றெமி வீட்டுக்கு வந்து அடுப்பை மூட்டி உலையைக் கொதிக்க வைக்கிறாள். அரிசி கடன் வாங்கியாகி விட்டது. ஆனால் சோறு காய்ச்சினால் கறிக்கு எங்கு போவது. இடம் பெயர்வுக்கு முன் மீனும் நண்டும் எனச் சுவையாகச் சாப்பிட்ட நாவு இப்பொழுது வெறும் இலை குலைகளைச் சாப்பிட்டுச் செத்து விட்டது. இன்றைக்கு முருங்கையிலைக் கஞ்சிதான். தீர்மானித்தவளாய் வெளியில் வந்து முருங்கையிலையை ஆய்ந்து சுத்தம் செய்கிறாள்.

கொதிக்கும் உலையில் அரிசியைப் போட்டுவிட்டு தேங்காய் துருவி பாலைப் பிழிகிறாள். அரிசி வெந்து வர முருங்கையிலை. தேங்காய்ப்பால் உப்பு ஆகியவற்றைப் போட்டுத் துலாவி விடுகிறாள். சிறிது நேரம் கொதிக்கவிட்ட பின்னர் கஞ்சி தயாராகி விடுகிறது.

சமையல் முடித்துப் பாத்திரங்களைச் சுத்தம் செய்து முடித்த போது நேரம் இரண்டைத் தொடுகிறது.

“நேரம் ரெண்டாகுது... அம்மா இன்னும் ஏன் வரேல்லை...” இனம் புரியாத சங்கடம் மனதை நெருடுகிறது... சிந்தனையோடு திண்ணையில் படுத்தவள் சற்றுக் கண்ணயர்ந்து போகிறாள்.

“சின்னக்கா பசிக்குது... என்ன கிடக்குது...?”

தேவதாசன் சத்தமாகக் கேட்டுக் கொண்டு வீட்டினுள்ளே வந்தவன் புத்தகப்பையை ஒரு மூலையில் எறிகிறான்.

தேவா வந்த அரவத்தில் எழும்பிய றெமி ஒரு தடவை உடம்பு வளைத்துச் சோம்பல் முறிக்கிறாள்.

“பிரபு வந்திட்டார்... கண்ட கண்ட இடங்களில விளையாடுகிறது... கை கால் கழுவிட்டு சாப்பிட வாடா...” உள்ளே சென்று தட்டொன்றில் கஞ்சியை வார்த்து வைக்கிறாள் றெமி.

“சின்னக்கா என்ன சாப்பாடு?” அவசரமாகக் கைகால்களை அலம்பி விட்டு வந்தவனின் முகம் சாப்பாட்டைக் கண்டவுடன் சுருங்கிப் போகிறது.

“என்னனை இண்டைக்கும் கஞ்சியே...? தொட்டுச் சாப்பிட மாசிச் சம்பலாவது வைச்சிருக்கலாமே...?”

“ஓம்... ஓம்... அப்பு இரண்டு மூண்டு மீன் பிடிக்கும்.... அதையும்

வித்துப் போட்டுக் கசிப்புக் குடிக்கும்... இந்த லட்சணத்தில உமக்கு மீனும் இறைச்சியும் கேக்குதோ...? இனி நிவாரணம் வரும்வரை இதுதான் சாப்பாடு...”

சொல்லியபடி தானும் ஒரு தட்டை எடுத்துக் கஞ்சியை வார்க்கிறாள். ஒரு வாய் வாயில் வைக்கு முன் கமலம் மாமி அவளை கூப்பிடுவது கேட்கிறது. அவசரமாகக் கையைக் கழுவிக் கொண்டு வெளியே வருகிறாள். அவளைத் தேவாவும் தொடர்கிறான், மாமியின் முகம் வழமைக்கு மாறாக இறுகி இருக்கிறது.

ரெமியால் அதன் காரணத்தை ஊகிக்க முடியவில்லை...

“என்ன மாமி ஒரு மாதிரி இருக்கிறியள்.? ஏதும் பிரச்சினையே...?”

“நான் ஆஸ்பத்திரியில உங்கட அம்மாவக் கண்டனான்... யேசுதாசனுக்குக் கொஞ்சம் கடுமையாகக் கிடக்குதெண்டு அந்தரப்பட்டுக் கொண்டு நிண்டவ...”

நடந்துவிட்டதை அந்தப் பிள்ளைகளிடம் பக்குவமாய்ச் சொல்ல வேண்டும் என்ற அக்கறையும் கவனமும் மாமியிடம் இருக்கிறது...

ரெமி பதில் ஏதும் கூறாமல் மாமியின் முகத்தைப் பாக்கிறாள்... அவள் இதயம் பயத்தால் வேகமாகத் துடிக்கிறது.

“யேசுவுக்கு நிமோனியா வந்திருக்கு... கொழும்புக்கு உடன கொண்டு போக வேணும் எண்டு டொக்ரர் சொன்னதா சொன்னவ...”

“கொழும்புக்கோ?” அதிர்ச்சியடைந்தவளாய் கேட்கிறாள் ரெமி.

நாடு இன்று இருக்கும் நிலையில் கொழும்புக்குப் போவது என்பது லேசான காரியம் இல்லை என்பது ரெமிக்குப் புரிந்திருந்தது.

“இப்படித்தான் கொம்மாவும் அதிர்ச்சியோட இருந்தா... ஆனால் ஒரு மணி போல யேசு... “உண்மையை அந்தச் சிறுவர்களிடம் எப்படிப் போட்டு உடைப்பது என்று தெரியாமல் தாடுமாறுகிறா கமலம் மாமி...

“அம்மாவும் யேசுவும் எங்க மாமி கொழும்புக்குப் போகப் போயினமே...?”

தேவாவின் கேள்விக்கு பதில் கூற முடியாது சிறிது நேரம் மௌனம்

சாதிக்கிறா மாமி. அவவின் கண்கள் கலங்குகின்றன.

"ஏன் பேசாமல் இருக்கிறியல். அம்மா எங்க... யேசு எங்க..."

கேட்கும் போதே அழுகை பொத்துக் கொண்டு வருகிறது ரெமிக்கு...

"யேசுவிண்ட சீவன் ஒரு மணிக்குப் போட்டுது... அம்மா உடம்பை எடுத்திட்டு வாரதுக்கு ஆஸ்பத்திரியில நிக்கிறா... கொப்பருக்கும் வழியில சொன்னனான். அவரும் ஆஸ்பத்திரிக்குப் போய்ட்டார்."

கமலம் மாமி உண்மையை ஒருமாதிரி போட்டு உடைத்து விடுகிறா...

"என்ற யேசு... என்ற தம்பி யேசு..." ரெமியும்... தேவாவும் குழறி அழுகிறார்கள். இப்பொழுது மாமியும் வாய்விட்டு ஒப்பாரி வைக்கிறா... இவர்களின் கூக்குரல் கேட்டு அக்கம் பக்கத்தவர்கள் அங்கு ஓடி வருகிறார்கள்.

## அலை 8

குடத்தனை மருத்துவ முகாமுக்கு ஒரு தாய் தன் குழந்தையைக் கொண்டு வருகிறாள்.

அந்தக்குழந்தைக்குக் காய்ச்சல், வயிற்றுப்போக்கு. பேரலையின் தாக்கத்தால் உடற் காயம்.

குழந்தை வீறிட்டுக் கத்துகிறது. அதனைச் சமாதானப்படுத்தத் தாயும், அதன் உறவினர்களும் படாதபாடு படுகின்றனர்.

மரியம்மாவின் இன்னுமொரு காயத்தில் நெருப்புத் துண்டொன்று வந்து விழுகிறது.

அவள் காதுகளில் குழந்தை ஒன்றின் அழுகுரல்... இல்லை அவள் குழந்தை யேசுதாசனின் அழுகுரல்...

அவள் சட்டென குழந்தையைத் தூக்குகிறாள்... அதனை மார்போடு அணைக்கிறாள். அதன் நெற்றியில் கை வைத்துப் பார்க்கிறாள்.

நெற்றி அனலாய்ச் சுடுகிறது.

"இங்கவந்து பார் ரெமி... என்ற பிள்ளைக்கு நெற்றி அனலாய்ச் சுடுகுது. மலேரியா வந்திட்டுப்போல..."

“ஐயோ…! என்ற பிள்ளை கைகால் அசைக்க முடியாமல் கிடக்குது…”

உடல் முழுவதையும் தடவுகிறாள்.

“என்ற பிள்ளையைக் காப்பாத்த ஆரும் இல்லையோ…?”

அவள் சிந்தனையில் ஒரு மின்னல். உடனே அதைத் தூக்கிக் கொண்டு டாக்டரிடம் ஓடுகிறாள்.

“டாக்டர் இவனைப் பாருங்கோ… இவனுக்கு என்னமோ செய்யுது… யமன்… யமன்… கொண்டு போக முன்னம் காப்பாத்துங்கோ… டாக்டர்.”

டாக்டரின் கையைப் பற்றியவாறு கெஞ்சுகிறாள்.

மரியம்மாவின் கையில் சிக்கியிருந்த குழந்தையோ அன்னியப் பெண்ணின் பரிசத்தாலும் அவளின் அதிரடி நடவடிக்கையாலும் பயந்து வீறிட்டு அழுகிறது.

அவசர கருமமாக வெளியே போய் திரும்பிய அக்குழந்தையின் தாய் தன் குழந்தை மரியம்மாவிடம் சிக்கிப் படும்பாட்டைக் கண்டு பதறிப் போகிறாள். அவள் போட்ட கூக்குரலில் முகாமே சில கணப்பொழுது அல்லோலகல்லோலப்படுகிறது.

மருத்துவப் பணியாளருக்கு மரியம்மாவிடம் இருந்து குழந்தையைப் பிரிப்பதற்குள் போதும் போதும் என்றாகி விடுகிறது.

டாக்டர் மரியம்மாவைப் பரிதாபமாகப் பார்க்கிறார்.

மருத்துவப் பணியாளரின் உதவியுடன் அவளுக்கு வலுக்கட்டாயமாக நித்திரை மருந்து ஊசி மூலமாக ஏற்றப்படுகிறது.

மரியம்மாவின் நோய்க்கு இது நிரந்தரமான தீர்வு ஆகாது என்பது டாக்டருக்கு நன்கு தெரியும். ஆனாலும் உடனடி நிவாரணமாக இதைத் தவிர வேறு எதையும் அவராலும் செய்யமுடியாதுதான்.

## அலை 9

யாழ் குடத்தனை

வராத மாமணி வந்தது போல 2002 இல் சமாதானப் பேச்சு வார்த்தைகள்

அரசுக்கும் புலிகளுக்கும் இடையே தொடங்குகின்றன. அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் மக்கள் வாழ்விலும் சில சாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

ஐந்து வருடங்களுக்கு மேல் வன்னியில் அஞ்ஞாத வாசம் செய்துவிட்டு சூசையின் குடும்பமும் சொந்த இடத்தில் மீண்டும் குடியேறிவிட்டது. பின்னும் ஒரு வாழ்க்கைப் போராட்டத்தைத் தங்கள் சொந்த மண்ணில் எதிர் கொள்ளத் தொடங்கி விட்டார்கள்.

கபரியேல், ராசன், அன்ரனி ஆகியோர் காணாமல் போய் பத்து வருடங்கள் ஓடிவிட்டன. ஆனால் அவர்கள் நினைவுகளை மட்டும் காலவெள்ளத்தால் அடித்துச் செல்ல முடியவில்லை. அவர்கள் உறவுகளின் உள்ளங்களில் அழியாத கோலங்களாய் நிலைத்து விட்டார்கள்.

தாய்மைத் தவம் இன்னும் தொடர்கிறது. மரியம்மா இன்று காணாமல் போனவர்களுக்கான அன்னையர் முன்னணியின் அங்கத்தவள். அவள் தேடுதல்கள் முடியாத தொடர்கதையாகவே இருந்து வருகிறது.

அப்பாவிகளான தன் உறவுகளுக்குக் கடல் நடுவே நிகழ்ந்த கோரம் மேரியின் உள்ளத்தைக் குமுற வைத்தது. அவள் கடற்புலியாய்க் களம் நோக்கிச் சென்று எட்டு வருடங்கள் பூர்த்தியாகி விட்டது. அவளது திறமை இன்று அவளை கடற்புலி அணியொன்றின் கப்றனாக மாற்றியிருந்தது.

கடந்த காலங்களில் போர்... சூசையின் குடும்பத்தில் தன் கோரப்பல்லை ஆழமாகப் பதித்து விட்டது. வறுமை விரக்தி இவற்றுக்கெல்லாம் மேலாக யேசுதாசனின் திடீர் மறைவு... சோதனை மேல் சோதனையை எதிர்கோண்டதால்தான் என்னமோ உழைப்பினால் உரமேறிய இவர் உடம்பு போல உள்ளமும் வைரித்துப் போயிற்று.

காலந்தான் எவ்வளவு பெரிய மருத்துவன்... அவனால் ஆற்றப்படாத புண்கள்தான் உண்டோ...? ஆனால் பத்துமாதம் பத்தியமிருந்து... ஐந்து பிள்ளைகளைப் பெற்ற மரியம்மாவின் புண்கள் மட்டும் மேலுக்குக் காய்ந்து போனாலும் உள்ளே குமைந்து கொண்டு அடிக்கடி வலியை ஏற்படுத்தத் தவறவில்லை. அதற்காக.... இறந்தவற்றுக்காக நிகழ்காலத்தைப் பலிகொடுக்க அவள் விரும்பவில்லை. உள்வலியைத் தாங்கிக் கொண்டு வாழ்க்கையை எதிர்கொள்ள அவளும் தயாராகி

விட்டாள்.

சூசை தொழிலுக்குப் போக ஆயத்தமாகிக் கொண்டிருந்தான்... கிறிஸ்துமஸ் பண்டிகைக் கொண்டாட்டங்களில் மூழ்கி நேற்றைய பொழுது மகிழ்ச்சியாகப் போய்விட்டது. இன்று ஞாயிற்றுக்கிழமை... பூசை என்று தேவாலயத்துக்குப் போய்விட்டால் வரும் வருடப் பிறப்புக்குப் பிள்ளைகள் விரும்புவதை வாங்கிக் கொடுக்க முடியாது போய் விடும். ஆண்டவரைச் சில நிமிடங்கள் உளமாறப் பிரார்த்திக்கிறான். அத்துடன் அவனது வைதிகக் கடமைகள் முடிந்து விடுகிறது.

கதியால்களில் உலரப் போட்டிருந்த வலையை இழுத்தெடுத்து ஒழுங்கு செய்வதில் அவன் கவனம் குவிந்திருக்கிறது.

“தரை மேல் பிறக்க வைத்தான்..... பெண்களைக்

கண்ணீரில் மிதக்க வைத்தான்...”

அவனை அறியாது அவன் வாயிலிருந்து சினிமாப் பாட்டொன்று உரக்கப் பிறக்கிறது.

“பாட்டெல்லாம் பலமாக் கிடக்குது...?” கேள்வியுடன் டானியல் அவன் வீட்டுப் படலையைத் திறந்து கொண்டு உள்ளே வருகிறான்.

“சொந்த இடத்திலே வந்து குந்தினோன பழைய ஞாபகம்.” சூசை தனது வேலையிலிருந்த கவனத்தைத் திருப்பாமலே சொல்லுகிறான்.

“ம்... இடம் பெயர்ந்து போய் காம்பிலையும் ரோட்டிலையுமெண்டு வாழ்க்கையே சலிச்சு போட்டுது... போனகாலத்தை நினைத்துப் பார்க்கவே டானியலுக்குப் பயம் ஏற்படுகிறது.”

“அதுமட்டுமே... என்ற பிள்ளையைப் பறிகொடுத்தன். குளத்திலையும் குட்டையிலையுமெண்டு மீன் பிடிச்சு என்னத்தை வாழுறது...? தந்த நிவாரணமும் ஒழுங்காக் கிடைக்காம நாங்கள் பட்ட துன்பம் எல்லாத்தையும் அந்த ஆண்டவன்தான் அறிவான்.”

“ம்... இங்க வந்தும் என்ன...? எல்லாம் புதுசாத்தான் தொடங்க வேண்டிக் கிடக்குது. “டானியலின் வார்த்தைகளில் சலிப்பு.

“அது சரி டானியல். நீ புதிசா ஒரு போட் வாங்கப் போறாயெண்டு கதையடிபடுகுது.”

“ஓம் சூசை... என்ற மருமகன் வெளிநாட்டில இருந்து அனுப்பின காசை என்ற மகன் லாரன்சுக்கு ஒரு முதலா ஆக்கிப் போடலாமெண்டு பாக்கிறன். அவனோட நானும் ஒத்தாசையாக இருக்கலாம். வயசும் போகுது. என்னாலையும் தனிச்சு நிண்டு தொழில் செய்யேலாதுதானே...?”

வெளிநாட்டுத் தொடர்பு இவர்கள் சமூகத்திலும் சில நல்ல மாற்றங்களை ஏற்படுத்தத்தான் செய்தது. வெறும் குடிசைகள் இன்று கல் வீடுகளாக மாறி வருகின்றன. சம்மட்டிமாரின் போட்டுகளில் தொழில் செய்து கூலிமட்டும் பெற்று வாய்க்கும் வயித்துக்கும் போதாதாய் வாழ்ந்த நிலையிலும் மாற்றம் ஏற்பட்டு வருகிறது. இன்று இளைஞர்கள் சிலர் புதிதாக மெசின் போட்டுக்கள் வாங்கித் தொழில் செய்யத் தொடங்கி விட்டார்கள். இவர்கள் வாழ்விலும் ஒளிக்கீற்றுக்கள் தென்படத்தான் செய்கிறது. ஆனாலும் அங்கும் இங்குமாய்ப் படையினரின் அடாவடித்தனங்கள் இன்றும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

அது போதாதென்று ஆழ்கடலில் பிற பகுதி மீனவர்களினாலும் பல சங்கடங்களை எதிர்கொள்ள வேண்டி நேரிடுகிறது. அவர்கள் இலங்கை எல்லைக்குள் மீன் பிடிப்பதோடல்லாமல் அவர்களது றோலர் படகுகளால் இலங்கை மீனவர்களின் வலைகளும் சேதப்படும் சம்பவங்களும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

ஆனால்... வெளிநாட்டுத் தொடர்புகள் இல்லாத சூசை போன்றவர்களின் வாழ்வு என்றும் மாறாத பழைய நிலையிலேயே தொடர்கிறது

“அது நல்லம் டானியல். எத்தனை நாள்தான் நாங்களும் இந்தச் சம்மாட்டிமாருக்கு உழைச்சு உழைச்சு உடம்பு தேயிறதுதான் மிச்சம்.. ம்... கபரியிருந்தால் கடன்பட்டாவது ஒரு போட்டை வாங்கிப் போடுவன்.”

சூசையின் பேச்சில் ஆதங்கம் இழையோடுகிறது. இவ்விருவருக்கும் தேத்தண்ணியைக் கொண்டு வந்த மரியம்மாவும் இவர்கள் சம்பாசனையில் இணைந்து கொள்கிறாள்.

“போனகிழமை நடந்த காணாமல் போனவையிண்ட கூட்டத்தில உயிரோட இருக்கிற பத்து இளைஞர்கள வருகிற ரெண்டாந் திகதி அரசு

வெளியில விடுகிறதாச் சொன்னவ. யேசுவே! சுவாமி இதிலயாவது என்ற பிள்ளையும் இருக்க வேணும்... “மனமுருகி வேண்டி நிற்கிறாள் மரியம்மா.

“இப்படியே அங்க விடுகிறாங்கள்... இங்க விடுகிறாங்கள் எண்டு முழுசா பத்து வருசம் ஓடிட்டுது.” சூசையின் குரலில் அவநம்பிக்கை தொனிக்கிறது. ஆனால் ஒரு நூலிழையிலாவது நம்பிக்கையிருக்குமானால் அதை விட்டுவிட மரியம்மா தயாரில்லை. பலமான அந்த நம்பிக்கைதான் அவள் புண்ணை ஆற்றும் மருந்தாகவும் இருந்து வந்தது.

“எனக்கு நம்பிக்கையிருக்கு என்ற பிள்ளை உயிரோட இருப்பான்.”

“சரி நான் தொழிலுக்குப் போக நேரமாச்சுது. சாப்பாட்ட எடுத்து வை.”

மரியம்மா கபரியேல் பற்றிக் கதைக்கத் தொடங்கினால் அதற்கு முடிவு இருக்காது என்பது சூசைக்குத் தெரியும். எனவே அந்தக் கதைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முகமாக அவன் சொல்லுகிறான்.

மரியம்மா உள்ளே சென்று சாப்பாட்டுப் பார்சலையும் தண்ணீரையும் கொண்டு வந்து கணவனிடம் கொடுக்கிறாள்.

“ஒண்டுக்கும் யோசியாதை தங்கச்சி... நம்பினவைய ஆண்டவன் கைவிட மாட்டான். அப்ப நாங்கள் போட்டு வாறம்.” டானியல் ஆறுதல் கூறியபடி விடைபெறுகிறான்.

“தேவதாசனை ஊர் சுற்றாமல் ஞாயிறு ஆராதனைக்குப் போகச் சொல்லு. அப்பிடியே யோசப்புப் பாதிரியாரிட்ட கோயிலில எதாவது வேலை போட்டுத்தரச் சொல்லிக் கேக்கச் சொல்லு.”

தேவதாசன் கடலுக்கு வர ஆசைப்பட்டாலும் அதைச் சூசை அனுமதிப்பதில்லை. கபரிபோல இவனையும் இழக்க சூசை விரும்பவில்லை. ஓ. எல் வரை படித்த அவனை எதாவது சின்ன வேலையிலாவது அமர்த்திவிட வேண்டுமென்று துடித்தான் சூசை.

“அதையெல்லாம் நான் பார்க்கிறன். நீங்கள் கவனமாய்ப் போட்டு வாங்கோ..”

அவர்களுக்கு விடை கொடுத்து விட்டு அவர்கள் போவதையே

கண் கொட்டாமல் சிறிது நேரம் பார்த்து நின்றாள் மரியம்மா.. அவர்களுடன் கபரியும் போவது போல ஒரு பிரமை தட்டுகிறது. தலையை உலுக்கி அந்த நினைவுகளில் இருந்து வலுக்கட்டாயமாக விடுபட முயன்றவளாய் குடிசையுள்ளே வருகிறாள்.

ரெமி படுக்கையிலிருந்து எழாதவளாய் கதைப் புத்தகம் ஒன்றில் ஆழ்ந்திருக்கிறாள். மரியம்மாவுக்கு ரெமியைப் பார்க்கும் போது பெருமைதான். எத்தனையோ கஸ்டங்களுக்கிடையே அவள் ஏ,எல் கலைத்துறைப் பரீட்சையில் இரண்டாவது தடவையில் சித்தியெய்தி விட்டாள். பல்கலைக்கழகம் போகப் புள்ளிகள் போதாவிட்டாலும் யாழ்ப்பாணக் கல்வியியல் கல்லூரியில் அவளுக்கு இடம் கிடைத்து விட்டது, நாளை அவள் ஆரம்பக் கல்வி ஆசிரியையாக வெளியேறுவாள்... தங்கள் வாழ்வு போல இல்லாமல் அவள் வாழ்வு ஒளிமயமாகத் திகழப்போகிறது. மரியம்மாவின் உள்ளம் ஈன்ற பொழுதிலும் பூரிப்படைகிறது..

இந்த நேரத்தில் மரியம்மாவால் யோசப்புப் பாதிரியாரை நினைவு கூராமல் இருக்க முடியவில்லை. அவரது பண உதவியும் ஊக்கமுமே ரெமியின் இந்த வளர்ச்சிக்குக் காரணம் என எண்ணியவள் அவருக்கு மனசார நன்றி கூறுகிறாள்.

ஆனாலும் விடியற் பொழுதில் வேலைகளை விட்டுவிட்டு ரெமி கதைப்புத்தகத்தில் ஆழ்ந்திருப்பது சற்று எரிச்சலையே தருகிறது.

“நேற்றைக்கு முழுக்க இந்தப் புத்தகத்தோட கிடந்தது பத்தாம இப்பவும் தொடங்கிட்டியே படிக்க...”

“ராத்திரியில தலமாட்டில விளக்கு வைச்சு படிக்கக் கூடாதெண்டா இப்பவும் விடமாட்டியே...?” சுவாரசியாமான பகுதியை வாசிக்கும் வேளையில் தாய் தன்னைக் குழப்பியது ரெமிக்கு எரிச்சலைத் தருகிறது.

“கதையை விட்டுட்டு மாதா கோயிலுக்கு வெளிக்கிடுகில் வேலையைப் பாரு. பூசை தொடங்கப் போகுது.”

புத்தகத்தைப் போட்டுவிட்டு பாயைச் சுருட்டி பரணில் வைத்தவளுக்குத் தீடீரென்று தமக்கை நாளை வருவதாகச் சொல்லியது ஞாபகம் வருகிறது. அவள் உள்ளம் பூரிப்பால் மலர்கிறது.

“அம்மோய் அக்கா நாளைக்கு வாறதெண்டு சொன்னவளில்லை.”

“இப்பத்தான் ஞாபகம் வருகுதோ…? அவளுக்குப் பிடிச்ச கறி வாங்க நான் சந்தைக்குப் போக வேணும். தலைக்கு மேல வேலை கிடக்குது. நீ ஒரு ஒத்தாசையும் செய்யாமல் புத்தகம் வாசிக்கிறா…”

“ஏன் நான் விடியச் சமையலுக்கு உதவி செய்து போட்டுத்தானே புத்தகம் வாசிச்சனான். நானும் இண்டைக்கு றவுனுக்குப் போக வேணும். அக்காவுக்குப் பிறந்தநாள் வருகுதில்லை…”

அவர்கள் சம்பாசனையைக் குழப்பியபடி அந்தத் திடீர்ச் சத்தம்… பெரும் வெடிச்சத்தம்… இதுவரை அவர்கள் கேட்டிராத பேரோசை…

கிபீர் விமானம் சீறி வந்து குண்டு மழை பொழிகிறதா…?

அவர்களால் சரியாக ஊகிக்க முடியவில்லை. அவர்கள் இருவரும் சில கணப்பொழுது திகைத்து நிற்கிறார்கள்.

“என்னடி பிள்ளை சத்தம்… பேந்தும் சண்டை தொடங்கிட்டோ…?” மரியம்மாவின் குரல் கிலியில் நடுங்குகின்றது.

ரெமி பதிலேதும் கூறாது வெளியில் ஓடி வருகிறாள். அவளை மரியம்மாவும் தொடர்கிறாள். அவர்கள் முன்னே பெரிய வெடிச் சத்தத்துடன் சீறிக்கொண்டு அலை உயர்ந்து வருகிறது.

தெளிந்த நீர் இல்லாமல் கழிவு நீர் போல எழுந்த அலைக் கூட்டத்தை எதிர்த்து என்ன செய்வது என்று அறியாதவராய் விறைத்து நிற்கையிலே வெளியில் சென்றிருந்த தேவதாசன் சைக்கிளோடு இழுபட்டு உள்வரவும் முடியாமல் வெளியேறவும் முடியாமல் அலையால் அலைக்கழிக்கப் படுகிறான்.

“ஐயோ காப்பாத்துங்கோ… அலை இழுக்குது…”

அவன் குரல் ஒலியின் வேகத்திலும் அசுர வேகத்தில் வந்த அலை எதிர்த்து ஒடாதவாறு கடலை நோக்கி மூவரையும் இழுத்துச் செல்லுகிறது.

“ஐயோ… என்ர பிள்ளை… “கத்தியவள் ரெமியின் கையை இறுகப் பற்றி இழுக்க முயற்சி செய்தபடி அலை இழுப்பில் தானும் சிக்கிக் கொள்கிறாள். ஆனால் ரெமி அவள் கையில் இருந்து விலகிச் சென்று சிலகணங்கள் ஆகிவிட்டது. தேவதாசனை அலை மூடி அவன் மரியம்மாவின் கண்களில் இருந்து மறைந்து விட்டான்.

“அம்மா என்னை பிடியணை... ஐயோ... அலை என்ன மூடுது.” ரெமியின் குரல் மட்டும் மரியம்மாவின் செவிப்பறையில் அவலமாய் ஒலிக்கிறது.

மரியம்மாவையும் அலை மூழ்கடிக்கத் தொடங்குகிறது.

“ஐயோ யேசப்பா...! என்ற பிள்ளைகளைக் காப்பாத்தும்.” அவள் கைகளை உயர்த்தி ஆண்டவனை இரஞ்சுகிறாள். பாஞ்சாலிக்குக் கண்ணனால் மானங் காக்கப் புடவை கிடைத்தது போல இவள் கைகளுக்கும் பெரிய மரக்கொப்பொன்று அகப்படுகிறது.

ஆழ்கடல் நடுவே தத்தழிக்கும் போது துரும்பைக் கூடப் பற்ற மனம் விழைவது மனித இயல்பு. தன்னிச்சையான செயல்.

மரியம்மாவும் அந்த இயல்பூக்கத்தால் உந்தப்பட்டு அந்த மரக்கிளையை இறுகப் பற்றிக் கொள்கிறாள். கடல் நீர் அவள் நாசிவரை வந்து மூச்சுத் தினறலை ஏற்படுத்தவே தன்னையறியாது உந்தி மரக்கிளையில் ஏறிக்கொள்கிறாள்.

கிளைகள் நிறைந்த அந்தத் தேக்கு மரம் இன்று மரியம்மாவின் உயிரைக் காத்து விட்டது. அவள் மரத்தில் இருந்து பார்க்கையிலேயே பலர் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படுகின்றனர். சில நிமிடங்களில் நீர் மெல்ல மெல்ல வடிந்து செல்கிறது.

ஆண்டவன் மரியம்மாவின் பிரார்த்தனையை ஏற்று அவள் பிள்ளைகளைக் காக்கவில்லை. மண்டையில் இருந்து தொடங்கிய விறைப்பு அவள் உடல் எங்கும் பரவுகிறது. அவளது இயலாமை, உள்ளத்தைக் கண்டதுண்டமாய்க் குதறியெறிகிறது.

அலை வந்த வேகத்தில் திரும்பிச் சென்று கடலோடு சங்கமித்து விடுகிறது. மரியம்மாவையும் தொண்டர்கள் சிலர் முகாமில் சேர்த்து விட்டார்கள். அவள் உடலுக்குக் காப்புக் கொடுத்தாகி விட்டது, ஆனால் அவள் உள்ளத்துக்கு.......?

## அலை 10

ஒரு நித்திரைக்கான ஊசியால் எத்தனை நேரம்தான் மூளையைச் சோர்வில் வைத்திருக்க முடியும். ஆழ்மனம் ஓயாமல் விழித்

திருக்கையில் நித்திரையும் விடைபெற்று ஓடிவிடுகிறதே...

மரியம்மாவின் மனத்திரையில் சுனாமியின் கோரத்தாண்டவம் திரும்பத் திரும்ப அரங்கேறிக் கொண்டிருந்தது.

அம்மா... என்னை அலை இழுக்குது... "ரெமியின் கடைசிக் குரல்... காதுகளை வண்டு போலக் குடைகிறது. கண்களில் தேவதாசனும் ரெமியும் அலையால் மூடப் படும் காட்சி...

ஓர் அலையல்ல......... ஓராயிரம் அலைகள் ஒன்று திரண்டு அவள் மனக் கதவைத் தூள் தூளாக்கிச் சிதறடித்துக் கொண்டிருந்தன.

"என்ற பிள்ளயலை என்னால காப்பாத்த ஏலாமல் போட்டுது."

ஆயிரம் தடவைகளுக்கு மேல் இந்த வார்த்தைகள் அவள் வாயிலிருந்து வெளிப்பட்டுவிட்டன.

"அம்மா என்னக் காப்பாத்து எண்டு கத்தேக்க இந்த ரெண்டு கையும் சும்மா கிடந்தது."

தன் கைகளால் மிருகத்தனமாய்த் தன் தலையில் அடிக்கிறாள் மரியம்மா. மண்டையில் கைகள் ஏற்படுத்திய காயத்திலிருந்து இரத்தம் கசியத் தொடங்கி விட்டது.

அருகில் இருந்தவர்களால் அவள் வேகத்துக்கு ஈடுகொடுத்து அவள் செயல்களைக் கட்டுப்படுத்துவது பெரும் சிரமமாயிருக்கிறது.

சாப்பாடு தண்ணியைக் கூடச் சரியாகத் தொடாத அவளிடம் இந்த யம பலம் எங்கிருந்து வந்தது என்பது அவர்களுக்கு விளங்காத புதிராகவே இருக்கிறது.

சிறுவர்கள் பயத்துடன் சற்றுத் தூரத்தில் நின்று வேடிக்கை பார்க்கிறார்கள்.

"என்ற பிள்ளையல் செத்தாப் பிறகு நான் மட்டும் ஏன் உயிரோட இருக்கிறன். என்ன மட்டும் இந்த நாசமாப் போன கடல் ஏன் விட்டு வச்சிருக்குது."

குற்ற உணர்வால் மரியம்மா குமுறுகிற போது அவள் தற்கொலை செய்து விடுவாளோ என்ற அச்சம் சூழ உள்ளவர்களுக்கு எற்படுகிறது.

டொக்றர்கள், பல சமயம் ஊசி மூலம் அவளை நித்திரையில் ஆழ்த்த

வேண்டியிருக்கிறது.

உளவளத் துணையாளர்களும் மனநல மருத்துவர்களும் மரியம்மாவின் மனவடுவை வெறும் கவுன்சிலிங்கால் நீக்கிவிட முடியாததென்பதை உணராமலில்லை. ஆனால் பல்வேறு வேலைப் பளுக்களுக்கு இடையில் உடனடியாக மனநோய்க்கான மருத்துவ சிகிச்சைக்கு ஏற்பாடுகளைச் செய்வது அவர்களால் முடியாதிருந்தது.

அவர்கள் கவலையைச் சற்றுக் குறைப்பது போல மேரி தாயைப் பார்க்க அந்த முகாமுக்கு வருகிறாள்.

## அலை 11

மேரி எத்தனையோ களங்களைக் கண்டவள்தான். தன்னோடு நெருங்கிப் பழகிய தோழிகளை இழக்க நேர்ந்த போது அவள் மனதில் கலக்கம் உண்டாகாமல் இருப்பதில்லை. ஆனால்... அதிலிருந்து அவள் விரைவில் விடுபட்டு விடுவாள். போராளிகளுக்கு வழங்கப்படும் பயிற்சி அத்தகைய மனநிலையை அவர்களுக்குக் கொடுத்திருந்தது.

போர்க்களங்களில் கண்ட அவலத்திலும் சுனாமி அனர்த்தம் போராளிகள் உட்பட அனைவரையும் கதிகலங்க வைத்துவிட்டது. அதற்கு மேரியும் விதிவிலக்கல்ல.

மேரி தனது தந்தை சகோதரர்களின் இழப்பை அறிந்த போது மனதளவில் பெரும் பாதிப்புக்கு உள்ளாகத்தான் செய்தாள். எனினும் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு முல்லைத்தீவுப் பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காய் கடந்த ஏழு நாட்களாய் ஒருநாளைக்குப் பதினைந்து மணித்தியாலத்துக்கு மேல் வேலை செய்திருக்கிறாள். பிணங்களைத் தூக்கிக் கூட்டாகப் புதைத்துப் புதைத்து ஒருவகையில் அவள் மனம் விறைத்து வைரித்துப் போய்விட்டது. பலரது கொடூரமான அனுபவங்களைக் கேட்டதால்தான் என்னமோ தனது குடும்பத்துக்கு எற்பட்ட அவலத்தை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் அவளுக்கு வந்திருந்தது.

ஆனால் அந்தப் பக்குவ உணர்வு தாயைப் பார்த்தவுடனே உடைந்து சிதறியது. தாயின் கோலங்கண்டு அவள் உள்ளம் ஆடிவிட்டது. அவள் உள்ளிருந்து கட்டுப்படுத்த முடியாது கேவல்கள் தோன்றி அழுகையாக

வெடித்தது. அவள் தாயைக் கட்டிக் கொண்டு சில பொழுதுகள் கதறியழுது விட்டாள்.

ஆரம்பத்தில் மரியம்மாவால் மேரியைக் கூட அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. ஆனால் மேரியின் பரிசம் பட்டவுடன் அவளது தாய்மை விழித்துக் கொள்கிறது. உடம்பில் புதிய இரத்தம் ஊற்றெடுப்பது போல் ஓர் உணர்வு... மேரியின் அழுகையுடன் மரியம்மாவின் அழுகையும் சங்கமிக்கிறது.

கரைகாணாத இருண்ட நரகத்தில் நடந்து கொண்டிருந்த அவளுக்கு முன் முதல் முதலாக ஓர் ஒளிக்கீற்று...

கடந்த ஏழு நாட்களின் பின் கனவு நிலையிலில்லாது நனவு நிலையிலேயே புன்னகை ஒன்று அவள் இதழ்கடையில்........ இதுநாள் வரையில்லாத ஒளி கண்களில்...

பெரிய ஊழியழிவைக் கண்டபின் இயற்கை ஓர் சமநிலையடையுமே அத்தகைய சமநிலை மரியம்மாவிடம் ஏற்படுகிறது.

இன்றுவரை மனநோயாளியாகத் தங்களால் கணிப்பிடப்பட்ட மரியம்மாவில் மேரியின் வருகை ஏற்படுத்திய மாற்றம் கண்டு உளவளத் துணையாளர்களும், வைத்தியர்களும் அதிசயித்து நிற்கிறார்கள்.

உறவுப் பிணைப்புக்கள் வலுக்கட்டாயமாக அறுக்கப்பட்ட போது வலுவிழந்திருந்த மரியம்மா இன்னுமொரு பிணைப்பு இருப்பதுகண்டு புத்துயிர் பெற்றுவிட்டாளா...? மனம் என்பது மிக நுண்ணியது. அணுவைத் துளைத்து அதன் கூறுகளைச் சரியாகக் கணக்கிட்ட மனிதனால் மனதின் ஆழத்தை அளவிட முடியவில்லை என்பதை அந்த நேரத்தில் மருத்துவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது.

எது எவ்வாறாயினும் மீண்டும் தொடங்கும் மிடுக்காய் தோன்றியிருக்கும் இந்தச் சிறு மாற்றம் நிலைக்க வேண்டும் என அங்கிருந்த அனைவரும் மனதார இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கின்றனர். நாமும் அவர்களுக்காகப் பிரார்த்திப்போமாக...!

# சக்தி தனக்கே கருவியாக்கு (நாடகப்பிரதி)

## நாடக மாந்தர்

**குடும்பம் – 1**

குடும்பத் தலைவர் – ஆராவமுதன்.
அவர் மனைவி – சங்கரி
இவர் பிள்ளைகள்:
மகள் – தாரணி (16 வயது)
மகன் – இரவீந்திரன் (ரவி)
மகன் – சயந்தன்
மகள் – யாழினி (இப்பாத்திரம் இருப்பதாக, அழுகை மூலம் பாவனை செய்யலாம்.)
அப்பம்மா – காமாட்சி (ஆராவமுதனின் தாய்)

**குடும்பம் 2**

சாவித்திரி – குடும்பத் தலைவி (விதவை.)
சாம்பவி – மகள் (சங்கரியின் தங்கை, 31 வயது)

**குடும்பம் 3**

முதலாம் குடும்பத்தின் உறவினர், நண்பர்கள்
தந்தை – கமலரூபன்
தாய் – கௌரி (இவர்கள் இருவரும் விவாகரத்துப் பெற்றுப் பிரிந்திருக்கின்றனர்)
இவர்கள் மகள் – கார்த்திகாயினி (வயது 16, தந்தையோடு இருப்பவள்)
தாரணியின் நெருங்கிய நண்பி
இவர்களுடன் உரைஞர் (இவர்கள் இந்த நாடகத்தை விமர்சிப்பவர்களாகவும் இரசிப்பவர்களாகவும் அமைவர்)
புதுமைப் பிரியன் – ஆண் விமர்சகர்
கவிரதன் – ஆண் கவிஞர்
ஞானோதையா – பெண் கவிஞர்
இவர்களுடன் பாடகர் குழுவும் இடம் பெறுவர்

# அரங்கு

பாடகர் குழு பின்வரும் பாடலைப் பாடும் நேரத்தில் உரைஞர் குழு மேடையின் இடது வலது படிகளைப் பயன்படுத்தி மேடைக்கு வருவர்; முன் திரை திறக்கப்பட மாட்டாது.

சக்தி தனக்கே கருவி யாக்கு –அது
சாதனைகள் யாவினையும் கூடும்–கையைச்
சக்தி தனக்கே கருவி யாக்கு –அது
சக்தியுற்றுக் கல்லினையும் சாடும்.

(பாரதியார் பாடல் –சக்திக்கு ஆத்ம சமர்ப்பணம்)

**புதுமைப் பிரியன்:** *நாடகம் பார்க்க வந்திருக்கிற இவைக்கு நாங்கள் யார் என்பதையும் நாங்கள் இங்கு வந்திருக்கிற நோக்கத்தையும் சொல்ல வேணும்.*

**ஞானோதையா:** *முதலில நாங்கள் யார் எண்டு அறிமுகப்படுத்துவம்.*

**கவிரதன்:** *நான் கவிரதன், பாரதி சொன்னது போல கவிதை எனக்குத் தொழில் இல்லை. ஆனால் கவிதையை நான் காதலிப்பவன். கொஞ்சம் கவிதையும் எழுதுவன்.*

**புதுமைப் பிரியன்:** *ஓம் இவர் கொஞ்சும் கவிதை எழுதுவார். நான் புதுமைப் பிரியன், மாற்றங்களை -நியாயமான மாற்றங்களைப் பெரிதும் வரவேற்பவன். பழமைச் சேற்றில் புரளும் எருமை வாழ்வை வெறுப்பவன்.*

**ஞானோதையா:** *நான் ஞானோதையா, கற்பனை உலகில் சஞ்சரிப்பதிலும் உண்மையைக் கண்டறிவதே எனது நோக்கம். கண்டதைக் கவியில் ஓரளவு புனையும் ஆற்றலும் எனக்கு உண்டு.*

**கவிரதன்:** *நாங்கள் சொன்னதில் இருந்து நாங்கள் சொன்ன பெயர்கள் புனை பெயர்கள் என்று உங்களுக்குப் புரிந்திருக்கும்.*

**புதுமைப் பிரியன்:** *எங்கள் சொந்தப் பெயர்கள் இந்த நேரத்துக்கு உங்களுக்குத் தேவையில்லை என்று கருதுகிறோம்.*

**ஞானோதையா:** *அவர்களின் பொறுமையைச் சோதிக்காமல் நாங்கள் வந்த நோக்கதைச் சொல்லுவம்.*

**புதுமைப் பிரியன்:** *இப்ப இந்த மேடையில ஒரு நாடகம் நடக்கப் போகுது.*

**ஞானோதையா:** *அதை நாங்களும் நீங்களும் பார்க்கப் போறம்.*

**கவிரதன்:** *ஆனா எங்களுக்கும் உங்களுக்கும் இடையே சிறிய வித்தியாசம்...*

**புதுமைப் பிரியன்:** *நீங்கள் நாடகம் பார்த்திட்டு வெளியில் போய் விமர்சிக்கப் போறீங்க.*

**கவிரதன்:** *நாங்கள் நாடகத்தில குறுக்கிட்டு இடையில விமர்சிப்பம்.*

**ஞானோதையா:** *அதுக்கு நாடகத் தயாரிப்பாளர் எங்களுக்கு அனுமதி தந்திருக்கிறார்.*

**புதுமைப் பிரியன்:** *சரி நாங்கள் இப்ப போய்த் தேவையான இடத்தில் வருவம்.*

இவர்கள் மேடையைவிட்டு இறங்க,திரை மெல்ல விலகும். மேடையில். முதல் குடும்பம் இயங்கும் போது மற்றைய இரு குடும்பங்களும் உறைநிலையில் அமையும். முதல் குடும்பத்தில் உத்தியோகமும் பள்ளியும் செல்லும் அங்கத்தவர்களின் காலைப் பொழுதின் பரபரப்பு புலப்படும்.

ஆராவமுதன் சக்தி உபாசகர் போலும். பாரதியார் பாடலைப் பாடி வழிபடுகிறார். பாடலின் முடிவில் குழந்தை யாழினி அழுகிறாள்.

ஆராவமுதன் பாடுதல்

வாழ்வு பெருகும் மதியே சக்தி
மாநிலம் காக்கும் மதியே சக்தி
தாழ்வு தடுக்கும் சதிரே சக்தி.
சஞ்சலம் நீக்கும் தவமே சக்தி
வீழ்வு தடுக்கும் விறலே சக்தி.
விண்ணை யளக்கும் விரிவே சக்தி.
ஊழ்வினை நீக்கும் உயர்வே சக்தி.
உள்ளத் தொளிரும் விளக்கே சக்தி.

(பாடல் முடிவில் குழந்தையின் அழுகுரல்.)

**ஆராவமுதன்:** *(கோபமாக) இந்த வீட்ட சாமி கும்பிடகூட விடமாடியளே. சங்கரி யாழினி அழுகிறாளே - என்ன உங்க*

*செய்கிறீர்?*

**சங்கரி:** *(முணுமுணுப்பாக) மகிஷாசுர மர்த்தினி போல 1000 கை இருந்தாத்தான் எல்லா வேலையும் செய்ய ஏலும்.*

*(பெரிதாக) ஏனப்பா நீங்கள் ஒருக்கா பிள்ளையை ப் பார்க்கக் கூடாதோ?*

**ஆராவமுதன்:** *உம்மட வேலையை நீர் பார்க்கிறதுக்கு என்னை ஏன் இழுக்கிறீர்?:.*

(சாவகாசமாய்ப் பேப்பர் பார்க்கிறார். அவரிடம் சங்கரி தேத்தண்ணியைக் கொடுத்துவிட்டு குழந்தையைச் சமாதானப் படுத்தச் செல்கிறார்)

**சயந்தன்:** *சீ.... இந்தக் கணக்குச் சரியே வருகுதில்லை... அம்மா இந்தக் கணக்கை ஒருக்காச் சொல்லித்தாங்கோ...*

**சங்கரி:** *கணக்குக் கேக்கிறதுக்கு இதுதான் நேரமோ?*

**ஆராவமுதன்:** *இதுக்கும் முகூர்த்த நேரம் பாக்கேலுமே.*

**சங்கரி:** *அப்ப நீங்கள் சொல்லிக் கொடுங்கோவன்.*

**சயந்தன்:** *அம்மா நீங்கள் சொல்லித்தாறதெண்டால் தாங்கோ. இல்லாட்டி வேண்டாம். அப்பாவிட்டக் குட்டு வாங்கேலாது.*

**சங்கரி:** *ராத்திரியில* T. V *பாத்திட்டு படுத்தா இப்படித்தான். விடியவிலதான் வீட்டு வேலை செய்ய நேரம் கிடைச்சுதோ?*

(பாடத்தை விளங்கப்படுத்துகிறா சங்கரி)

**ஆராவமுதன்:** *இவர் இராத்திரியில கணக்கு விடுவார். காலையில கணக்குச் செய்வார்.*

(அப்பொழுது மூத்த இரண்டு பிள்ளைகளும் ரியூசனில் இருந்து வருகிறார்கள்.)

**சங்கரி:** *தாரணி மேசையில சாப்பாடு மூடி வச்சிருக்கிறன். ரவிக்கும் அப்பாவுக்கும் போட்டுக் குடும். நீரும் சாப்பிடும். அப்பா நீங்களும் போய்ச் சாப்பிடுங்கோ.*

(ரவியும் தாரணியும் சாப்பாட்டை எடுத்துவந்து hall இல் உள்ள கதிரையில் அமர்கிறார்கள்.

**ரவி:** *அம்மா நீங்கள் நல்ல பிள்ளையில்லா..*

**தாரணி:** *அம்மாப் பிள்ளையுமில்ல, அம்மா பிள்ளையுமில்ல, அவ பொம்பிளை*

**ரவி:** *நீர் பேசாம இரும்.*

**தாரணி:** *- அம்மா ரவி ஏன் இண்டைக்கு உங்களுக்கு ஐஸ் வைக்கிறான் எண்டு தெரியுமே*

**சங்கரி:** *ரவி எனக்குக் குளிருதப்பு. நீ சொல்ல வந்ததச் சொல்லும்.*

**ரவி:** *இல்லையம்மா...*

**தாரணி:** *என்ன குளிர் இல்லையெண்ணுரீரோ....*

**ரவி:** *(கோபமாக) நீர் சும்மா இருக்கமாட்டீரே... அம்மா நான் சொன்ன விசயத்தை அப்பாட்ட கேட்டனீங்களே..?*

**தாரணி:** *பாத்தீங்களே சோழியன் குடும்பி சும்மா ஆடாது. அவருக்கு இரண்டாம் தரம் ரூர் போற ஆசை வந்திருக்கு.*

**ரவி:** *(தமக்கையைப் பார்த்து முறைத்துவிட்டு) அம்மா கேட்டனீங்களே..?*

**சங்கரி:** *ஏப்பிறல் லீவுக்குத்தானே அப்பா கொழும்பு கண்டி எண்டு எல்லா இடமும் கூட்டிக்கொண்டு போய்க் காட்டினவர்.*

(இப்பொழுது சங்கரி கூட்டுதல் முதலிய வேறுபல வீட்டுக்காரியங்களைச் செய்யலாம்.)

**சயந்தன்:** *-அம்மா அண்ணா ரூர் போனால் என்னையும் இன்னுமொருதரம் கூட்டிக்கொண்டு போக வேணும்.*

**ரவி:** *சும்மா இரடா. இது ஒல் சிலோன் ரூர்" பிரண்ஸோட போற மாதிரி சந்தோசம் வருமே?*

**சங்கரி:** *அதுக்கு ஐயாயிரம் ரூபாவுக்கு மேல முடியும். அப்பாட்ட கேட்டா எனக்குத்தான் பேச்சு நடக்கும். நெருப்பெடுக்கும் மனிசன்.*

**ரவி:** *அம்மா... அம்மா--நீங்களே இப்படிச் சொன்னால் எப்படி? ஒரு ரீச்சரா இருக்கிறீங்கள் நான் பார்த்த சுற்றுலா எண்டு கட்டுரை எழுதச் சொல்லுவீங்கள்.*

**தாரணி:** *உச் உச்சு... ஐயா கற்க கசடறக் கற்று கற்றவழி நிக்கிறதில பெரிய மகான்.*

**சங்கரி:** *சரி சரி இதைப்பத்தி ஆறுதலாப் பேசலாம். இப்ப போய்ப் பள்ளிக்கூடம் போற வழியைப் பாருங்கோ.*

**ரவி:** *எப்படியும் அப்பாட சம்மதம் வாங்கிறது உங்கட பொறுப்பு.*

**சங்கரி:** *பாப்பம் முதலில நீ வெளிக்கிடு.*

**தாரணி:** *அம்மா இவனுக்கு இடம் கொடுக்காதுங்கோ.. பின்னுக்கு அவதிப்படப் போரீங்க.*

**சயந்தன்:** *ஏன் மடம் பிடுங்குவாரோ..?*

**தாரணி:** *மடந்தையைக் கட்ட அம்மாவையே அப்பாட்ட தூது அனுப்புவார்.*

**சயந்தன்:** *(சிரித்தபடி) அன்னத்தூதுக்குப் பதிலா அன்னை விடு தூது.*

**ரவி:** *உமக்குத்தான் இப்ப தூது தேவைபோலக் கிடக்கு..*

**சங்கரி:** *காலங்காத்தால் மல்லுக்கட்டாதுங்கோ..*

(ரவி உள்சென்று வெளிக்கிடலாம்)

**தாரணி:** *அம்மா இண்டைக்கு ஸ்கூலில ஓப்பின் டே. அப்பா அல்லது அம்மா கட்டாயம் வந்து கிளாஸ் ரீச்சரை சந்திக்க வேணும்*

**சங்கரி:** *இவ்வளவு நேரமும் இருந்திட்டு இப்பத்தான் சொல்லிற அப்பாட்டக் கேளன்.*

**தாரணி:** *அப்பா எங்க..?*

**சங்கரி:** *நீதானே சாப்பாடு போட்டுக் குடுத்தனி*

**தாரணி:** *அவர் அப்பவே சாப்பிட்டிட்டார். ஏதோ ஃபைலை பாத்துக்கொண்டிருந்தவர்.*

**சங்கரி:** *அப்பாவும் பிள்ளையும் ஒரே அச்சா இருக்கிறீங்கள். ராத்திரி ஏமலாந்திப்போட்டு விடியவில கோம் வேர்க் (home work) செய்யினம்.*

**சயந்தன்:** *அப்பாவும் கோம் வேர்க் செய்யிறாரே.. ;?*

**சங்கரி:** கோம் வேர்க் செய்யப் பொம்பிளையல் இருக்கேக்க அவர் ஏன் செய்யப் போறார்?

**ஆராவமுதன்:** (வேலைக்குப் போக வெளிக்கிட்டுக்கொண்டு வருகிறார்)என்ன என்ற தலையை உருட்டுறியல்?

**தாரணி:** அப்பா இண்டைக்கு பள்ளிக்கூடத்தில ஓப்பின் டே -அதுக்கு நீங்கள் அல்லது அம்மா வரவேணும்.

**ஆராவமுதன்:** எனக்கு பாங்கில கடும் வேலை. அம்மாவுக்குத்தான் பள்ளிக்கூடத்தில நிறைய free period இருக்கும் அவவிட்ட கேள்

**தாரணி:** அப்பா இப்ப. teachers free period இல வம்பளக்கேலாது-

**ஆராவமுதன்:** அப்ப free period இல நாட்டுக்கு உகந்த குழந்தைகளை உருவாக்க வேலை செய்யினமோ?

**தாரணி:** இல்லை கணிப்பீட்டுக் கட்டோட மாரடிக்கினம்.

**சங்கரி:** இதுகள் உங்கட அப்பாவுக்கு எங்க தெரியப் போகுது?

**ஆராவமுதன்:** சரி சரி.. நேர காலம் தெரியாமல் வாக்குவாதப்படுகிறம். இப்ப என்ன நேரம் தெரியுமே?

**சங்கரி:** கடவுளே 7.45

யாமினியை அம்மா வீட்ட விட்டிட்டு பள்ளிக்கூடம் போறதெண்டா இண்டைக்கு red line க்குக் கீழதான் sign பண்ணப்போறன்.

**ஆராவமுதன்:** நேரம் செண்டுதெண்டு சாப்பிடாம போகாதையும். பேந்து அல்சர் அது இது என்று அவதிப்படப் போறீர்.

**சங்கரி:** மணியில மட்டுமில்லாமல் மனிசியிலயும் கொஞ்சம் அக்கறை இருக்குத்தான்.

**ரவி:** (பாடசாலைக்கு வெளிக்கிட்டு கொண்டு வந்தபடி)அம்மா மணி எண்டு சொன்னது நேரத்தையோ காசையோ..?

**தாரணி:** அப்பா பற்றி சொன்னதால அது காசாகத்தான் இருக்கும்.

**ஆராவமுதன்:** மணி மணியா இரண்டு பொம்பிளைப் பிள்ளயை பெத்தனான் மணி சேர்க்காமல் என்ன செய்யிறது.

**சங்கரி:** தாரணி கதைக்கிறத விட்டிட்டு எனக்குச் சாப்பாடு கட்டி

*வைச்சிட்டு வெளிக்கிடுகிற வேலையைப் பாரும்.*

**தாரணி:** *ஓமம்மா.. நீங்களும் வெளிக்கிடுங்கோ.*

**ஆராவமுதன்:** *சயந்தன் வா நாங்கள் போவம். சங்கரி நாங்கள் வாறம்*

**சயந்தன்:** *அம்மா போட்டு வாறம்.*

**சங்கரி:** ஓம் ஓம்--*போட்டு வாங்கோ*

(ஆராவமுதனின் தாய் காமாட்சி, நோயால் அவசிய காரியங்களுக்கன்றி எழும்பமுடியாது கடந்த ஒரு மாதமாகப் படுக்கையில் கிடக்கிறா... அவவின் அறைக்கு சங்கரி போகிறா)

**சங்கரி:** *மாமி. மருந்தையும் சாப்பாட்டையும் இந்த மேசையில வைக்கிறன். சாப்பிட்டிட்டு மருந்தக் குடியுங்கோ.*

**காமாட்சி:** *உமக்கிருக்கிற வேலேக்க இதையும் செய்ய வேண்டியிருக்கு- போன மாசம் வரை வீட்டில ஒத்தாசையா இருந்தன். இப்ப படுக்கையில் விழுந்து(பெருமூச்சு) எல்லாருக்கும் கஷ்டம்.*

**சங்கரி:** *ஒருத்தருக்கு ஒருத்தர் ஒத்தாசையா இருக்கிறதுதானே வாழ்க்கை.*

எல்லோரும் தங்கள் தங்கள் அலுவல்களுக்குச் செல்லச் சங்கரி மட்டும் மையப்படுத்தப்படல் வேண்டும். அவ உறைநிலையில் இருக்க புதுமைப்பிரியன் முதலியோர் மேடைக்கு வருவர்.

*இந்த இடைவெளியில் பாடகர் முதல் பாடிய பாடலின் தொடர்ச்சியைப் பாடுவர்.*

**பாடகர்:**

சக்தி தனக்கே கருவி யாக்கு– நல்ல
சக்தி உள்ள சந்ததிகள் தோன்றும் இடை
சக்தி தனக்கே கருவி யாக்கு நின்றன்
சாதி முற்றும் நல்லறத்தில் ஊன்றும்.

**புதுமைப் பிரியன்:** *இந்தக் காட்சி பற்றிய அபிப்பிராயத்தை.. இல்லை வாழ்க்கை பற்றிய விமர்சனத்தை யார் சொல்லுவினம்?*

**கவிரதன்:** *நான் சொல்லுறன்.*

*கவிதை வடிவில எழுதிக்கொண்டு வந்திருக்கிறன். வாசிக்கட்டோ?*

**ஞானோதையா:** *ஓம் வாசியுங்கோ.*

இவள் சங்கரி
ஆராவமுதனின்
தர்மபத்தினி

அடுப்பு முதல்
அலங்காரம் வரை
மலையாய்க் குவியும்
வேலைகள் செய்வதில்
இவள் அடிமை

தொல்லைகள் தலை தூக்கின்
தளராது சீர்தூக்கித்
துயர் துடைப்பதில்
இவள் மந்திரி.

புன்மைகள் பல
புரியாது இவர்
செய்திட்டால்
பொறுமைகாப்பதில்
இவள் பூமாதேவி

புகையும் வயிற்றுக்குச்
சோறுமட்டுமா போட்டாள்
நீளும் நாக்குக்கு
அறுசுவை உணவாக்கி
இதம் செய்வதில்
இவள் தாய்.

பள்ளியறைதனிலே
காமன் கணைகளுக்கு
ஈடுகட்டி
கணவனுக்கு
இன்பமூட்டுவதில்
இவள் கணிகை

இளமை குன்றா
அழகு மேனி
காத்திடுவதில்
இவள் இலக்குமி

இத்தனையும் போதாதென்று
உத்தியோகம் பார்த்து
உழைக்கும்
மெழுகுவர்த்தி

உழைப்புக்குக்
கூலி கொள்வர்
இவள் உழைப்பின்
விலை மதிப்பரோ?

இதயத்தின் அலரல்களையும்
உடல் உவாதையின்
கூக்குரலையும்
புரையோடிய
புண்களையும்
புன்னகையால்
திரையிட்ட
உண்மை உணர்வரோ?

அடுத்த காட்சி தொடர்வதற்கான இடைவெளியில் பாடகர் கதுழுவினர் முன் பாடற் தொடர்ச்சியைப் பாடுவர்.

**பாடகர்:**

சக்தி தனக்கே கருவி யாக்கு –அது
சாடியேழு கடலையுந் தாவும் –கால்
சக்தி தனக்கே கருவி யாக்கு –அது
சஞ்சலமில் லாமலெங்கும் மேவும்.

(இந்த இடைவெளியில் இரண்டாம் குடும்பம் இயங்கத் தொடங்கும். சங்கரி அம்மா சாவித்திரியிடம் யாமினியைக் கூட்டிச் செல்ல பாடசாலையிலிருந்து வருகிறா. சாம்பவியும் அவர்களுடன் இணைந்து கொள்வாள்)

**சங்கரி:** *அம்மா! அம்மா!*

**சாவித்திரி:** *வா சங்கரி.*

**சங்கரி:** *யாமினி நித்திரையோ?*

**சாவித்திரி:** *இவ்வளவு நேரமும் சித்திக்காரியோட மல்லுக்கட்டிப் போட்டு இப்ப கொஞ்சம் முதல்தான் நித்திரையானவள்.*

**சங்கரி:** *சாம்பவி வேலைக்குப் போகேல்லையோ?*

**சாவித்திரி:** *எனக்கு ஒரே நாரி உளைவு. சாதுவான காய்ச்சல். அதில லீவு போட்டுட்டு நிக்கிறாள். சாம்பவி இருந்ததாலதான் யாமினியைப் பார்க்க முடிஞ்சுது.*

**சங்கரி:** *பென்சன் எடுத்த உங்களை ஆறுதலா இருக்கவிடாமல் நானும் கஸ்டப்படுத்திறன்.*

**சாம்பவி:** *(வெளியில் வந்தபடி) பொம்பிளையலுக்குத் தொழிலிலதான் பென்சன். வீட்டு வேலையில இல்லை.*

**சாவித்திரி:** *யாமினியைப் பார்க்கிறது சுமையெண்டாலும் அது இன்பச்சுமை. யாமினியை எழுப்பட்டே?*

**சங்கரி:** *வேண்டாம் கொஞ்சம் ஆறிப் போவம்.*

**சாம்பவி:** *அக்கா சாப்பிடிறீரே.*

**சங்கரி:** *வேண்டாம் விடியக் கட்டின சாப்பட்டைப் பள்ளிக்கூடம்*

விடக் கொஞ்ச நேரத்துக்கு முதல்தான் சாப்பிட்டனான்.

**சாவித்திரி:** ஏன் முகம் வாடியிருக்கு?

**சங்கரி:** பதினொரு மணி வெய்யிலுக்க தாரணியின்ர school க்குப் போனனான்.

**சாம்பவி:** பொம்பிளையல் two in one ஆ இருந்தா இப்படித்தான். (தேநீர் கொடுத்தல்) ஆற முதல் குடியுங்கோ.

**சங்கரி:** அம்மா கனகம் அன்றி சாம்பவிக்குக் கொண்டு வந்த சம்பந்தம் என்ன மாதிரி. சாதகம் நல்ல பொருத்தமில்லே?

**சாவித்திரி:** நானும் ரெண்டு இடத்தில பாத்துத்தான் அனுப்பினான். ஆனா மாப்பிள்ளையின்ர தாய் சாம்பவியின்ர சாதகத்தில கிரக பாவம் கூட எண்டு மாட்டனெண்டிட்டா.

**சங்கரி:** கனகம் அன்றி அண்டைக்கு நம்பிக்கையாப் பேசினா.

**சாவித்திரி:** கனகமும் எங்களுக்காண்டி எவ்வளவோ முயற்சி செய்யுது. ம்.... பெடியன்ர தாய் வேற ஏதோ காரணத்தை வைச்சு மறுக்கிறா போல கிடக்கு

**சங்கரி:** வேற காரணம் எண்டா?

**சாவித்திரி:** கனகம் பெடியன்ற தாயோட ஓரளவு நெருக்கம். அதால வெளிப்படையாச் சொல்லியிருக்கிறா.

**சங்கரி:** என்ன சொன்னவவாம்

**சாவித்திரி:** கருணாகரனுக்கும் சாம்பவிக்கும் எதோ தொடர்பு இருக்காம்.

**சங்கரி:** (அதிர்ச்சியுடன்) கருணாகரன் சாம்பவியைக் கலியாணம் செய்துதரச் சொன்னதுக்காக இப்படி அபாண்டமாய்ப் பழி சொல்லிறதே? அதோட கருணா முறைப்படி என்ற அவரிட்டதான கேட்டுவிட்டவர்.

**சாம்பவி:** ஒரே office இல இரண்டு பேரும் வேலை செய்யிறதால அங்கையும் வீண் கதைகளைக் கதைக்குதுகள். ஆனா இந்தச் சம்பந்தம் குழம்ப இது காரணமில்லை.

**சங்கரி:** பின்ன?

**சாம்பவி:** ஐம்பது லட்சம் சீதனமும் வீடும் தந்தா யோசிக்கலாம் எண்ட மாதிரி அன்றியிட்ட சொல்லியிருக்கினம்.

**சங்கரி:** (கோபமாக) காசு இருந்தா பழி மறைஞ்சிடுமோ..?

**சாம்பவி:** இதுதான் அக்கா உலகம்..

**சாவித்திரி:** இவள் ஒரு ஆம்பிளையாப் பிறந்திருந்தால் இப்ப நான் எந்தக் கவலையுமில்லாமல் இருந்திருப்பன்..

**சாம்பவி:** (இறுக்கத்தைக் குறைத்து கலகலப்பை ஏற்படுத்த)எண்ட உத்தியோகத்துக்கும் படிப்புக்கும் கியூவில பொம்பிளையல் நிண்டிருப்பினம்..

**சங்கரி:** நீ எல்லாத்தையும் சிரிச்சு மழுப்பு.. முந்தி வந்த மூண்டு சம்பந்தமும் பொருத்தமில்லை எண்டு குழம்பிச்சு. ரெண்டு மூண்டு வெளிநாடு சீதனம் எண்டு குழம்பிச்சு, சிலதுகளை எங்கட சபை சந்திக்கு உதவாது எண்டு விட்டியள்.

**சாவித்திரி:** நான் சாக முதல் இவளின்ற காரியத்தை ஒப்பேத்திட்டன் எண்டா நிம்மதியாச் சீவன் போகும்.

**சாம்பவி:** ஏனம்மா நீங்கள் கவலைப்படுகிறியள். துணையில்லாமல் ஒரு பெண்ணால வாழமுடியாதே?

**சங்கரி:** நீங்கள் உழைக்கிறியள். உங்கட காலில நிக்கலாம். ஆனா இந்தச் சமூகம் உங்களை ஏதோ குறைச்சில்லே மதிப்பிடுதுகள். தேவையில்லாமல் கதையைக் கட்டுதுகள்.

**சாம்பவி:** நாக்கில நரம்பில்லாமல் பேசிற சனங்களுக்கு நாங்கள் பயப்பிட வேணுமே?

**சங்கரி:** சாம்பவி நீ கோவிக்காத (தாயைப் பார்த்து) அம்மா நான் ஒண்டு சொன்னால் கோவிக்காம கேப்பியளே?

**சாவித்திரி:** இல்லை... சொல்லு மோனை..

**சங்கரி:** கருணா எங்களிலையும் கொஞ்சம் சாதி குறைவெண்டு தானே வேண்டாமெண்டியள்?

**சாவித்திரி:** நான் ஓமெண்டாலும் எங்கட சொந்த பந்தம் என்ன சொல்லும்?

**சங்கரி:** இந்தச் சொந்தத்தில எத்தனை பேர் இப்ப எங்களுக்கு முட்டுக் கொடுக்கினம்?

**சாவித்திரி:** தூரத்துச் சனங்களை விடு.. ஆராவமுதன் ஒப்புக்கொள்ளுவாரோ?

**சங்கரி:** இந்த விசயத்தில அவர் என்ற பக்கம் தான். சாம்பவிக்கு வருகிற நல்ல சம்பந்தத்தை நீங்கள் பழைய பஞ்சாங்கத்தனத்தால் தட்டிப் போட்டிங்கள் எண்டு அவருக்குக் கவலை..

**சாவித்திரி:** சரி பிள்ளை நான் யோசிச்சுப் பதில் சொல்லிறன்.

**சங்கரி:** சரி கதைச்சதில நேரம் போச்சுது. மாமிக்கு மருந்து கொடுக்க வேணும் அதோட எங்கட வீட்டை புதுப் பொம்பிளை மாப்பிளை வருகினம். அவைக்குச் சாப்பாடும் செய்ய வேணும்.

**சாவித்திரி:** ஆர் புது பொம்பிள் மாப்பிள?

**சங்கரி:** அவற்ற office இல வாலை செய்யிர பியோன் சுந்தரமும் என்னோட டிப்பிளோமா செய்த சாந்தியும்.

**சாம்பவி:** சாந்தியக்காவை எனக்கு நல்லாத் தெரியும். அவ நல்ல வடிவு. மாப்பிள்ள எப்படி?

**சங்கரி:** மாப்பிள மிகச்சாதரணம்தான். அவருக்குக் கொடுத்த சீதனத்தை கேட்டியள் எண்டா சாம்பவிக்கு கேட்டதெல்லாம் பெரிசில்ல.

**சாம்பவி:** ஆம்பிள எண்டு இருக்கிறதே இப்ப ஒரு qualification தானே.

**சாவித்திரி:** எவ்வளவு கொடுத்தவை-?

**சங்கரி:** பத்து லட்சம் காசும் தின்னவேலியில வீடும் பூநகரியில பத்து ஏக்கர் வயலும் கொடுத்தவை.

**சாவித்திரி:** (பெருமூச்சுடன்) அவை வெளிநாட்டுக் காசில கொடுப்பினம். எங்களுக்கு ஏலுமே? சரி உனக்கும் நேரம் செல்லுது.

சாம்பவி! அக்காவை scooter இல கூட்டிக்கொண்டுபோய் விட்டிட்டு வா,

**சாம்பவி:** ஓமம்மா

(சாவித்திரியும் சங்கரியும் வீட்டில் மறைய சாம்பவி உறைநிலை பெறுவாள்.

புதுமைப்பிரியன் முதலியோர் மேடைக்கு வந்து சபையில் இருப்பவர்களைப் பார்த்துப் பேசுவர்.)

**புதுமைப் பிரியன்:** *முந்தின பிரச்சினைபோலத்தான் இந்தப் பிரச்சினையும் உங்களில பலபேருக்கு இருக்கக் கூடும்.*

**கவிரதன்:** *இந்தப்பிரச்சினையில சாம்பவி போன்ற பெண்களின் பாதிப்பு மற்றவர்களிலும் அதிகம்தான்.*

**ஞானோதையா:** *நானும் பெண் எண்டதால சாம்பவியின் உணர்வுகளை என்னால கூடுதலா விளங்கிக் கொள்ள முடியும்.*

**புதுமைப் பிரியன்:** *பாம்பின் காலைப் பாம்புதானே அறியும்.*

**கவிரதன்:** *இந்த இடத்தில ஞானோதையாவுக்குத்தான் முதலிடம்.*

**ஞானோதையா:** *கவிதையா எழுதி வந்திருக்கிறன் வாசிக்கிறன்.*

வாழ்க்கைக்குத் துணையிருக்க
வரன் ஒன்று வேண்டுமென்றேன்
இவரோ
வாழ்க்கை முழுதும்
வருவாய் தரும் முதலீடாய் நீ
இருந்தால்
வரனாக வருவது
தமக்கு வரம் என்றார்.

கூடிக் களித்திருக்க
குணமான குமரன்
வேண்டும் என்றேன்.
இவரோ
கூடக் காசு இருந்தால்
கூடா ஒழுக்கம் தமக்குப்
பொருட்டல்ல என்றார்.

பேணி இல்லறம் காத்து
பெருமையாய் வாழப்

பெருந்தகை வேண்டும் என்றேன்
இவரோ
பேசும்படி அழகிருந்தால்
பேயைக் கொள்ளவும்
தாயார் என்றார்.

சாதிக்குச் சாவுமணியடித்து
சாதனையாளனைக் கொள்வேன்
என்றேன்.
சமூகத்துப் பகையைத்
தேடியே வாழ்தல்
கூடா தென்றார்.

வேடிக்கை மனிதர் இவர்
வாழும் ஊரில்
முதிர்ந்த கன்னியர்
தழல் மூச்சுக்குக்
குறைவேது?

மூன்றாவது குடும்பம் இயங்கத்தொடங்கும் இடைவெளியில் பாடகர் குழு பாடுவர்.

பாடகர் – சக்தி தனக்கே கருவியாக்கு அது
சக்தியற்ற சிந்தனைகள் தீரும். மனம்
சக்தி தனக்கே கருவியாக்கு – அதில்
சாரும் நல்ல உறுதியும் சீரும்

மூன்றாவது குடும்பம் இயங்கத் தொடங்க அதில் கார்த்திகாயினியும் அவளுடைய தந்தை கமலரூபனும் முதலில் இடம் பெறுவர். கார்த்தி ஒருவருமற்ற தனிமை உணர்வால் சூழப் பெற்றவள் போல உள்ள 16 வயதுப் பருவமங்கை. TV போடுகிறாள். அதில் எதோ நாடகம் போகிறது. சலிப்புடன் மூடிவிட்டு ரேடியோ போடுகிறாள் அதுவும் இரசிக்கவில்லை. கதைப் புத்தகம் எடுக்கிறாள். அதுவும் சுவாரசியப் படவில்லை. சலிப்புற்று ஹாலில் போடப்பட்ட சோபாவில் வந்து படுத்துக் கொள்கிறாள். அவளை அறியாது கண்ணீர் பெருகுகிறது. விக்கி விக்கி அழுகிறாள். சற்றுப்பொறுத்துக் கண்ணீரைத் துடைத்துவிட்டுக் கூரைவிட்டத்தைப் பார்த்தபடியிருக்கிறாள். அப்பொழுது அவளது தந்தை கமலரூபன் வருகிறார். வாசல்க்கதவு

திறந்திருக்கிறது. ஒருவரையும் காணவில்லை.

**கமல்:** *(தனக்குத்தானே) என்ன வாசல் கதவு திறந்திருக்கு.? கார்த்தி இருக்கிற செலமனையும் காணல்ல. (உரத்து) கார்த்தி..! கார்த்தி..!*

(ஆவர் குரல் கேட்காத அளவு சோகத்தில் ஆழ்ந்திருக்கிறாள்.)

**கமல்:** *(அருகில் வந்துஅவளைத் தட்டி) கதவையும் திறந்து போட்டிட்டு நித்திரை கொள்ளுரீரே?*

**கார்த்திகாயினி:** *(திடுக்கிட்டவளாய்) இல்லை இல்லயப்பா.*

**கமல்:** *ஏன் குஞ்சு உம்மட முகம் அழுதமாதிரி வாடிக்கிடக்குது?*

**கார்த்திகாயினி:** *ஒண்டுமில்லையப்பா - நீங்கள் போய்ச் சாப்பிடுங்கோ.*

**கமல்:** *கார்த்தி நீர் முந்திமாதிரி இல்ல. எதிலையும் சுரத்தில்லாமல் இருக்கிறீர்.*

**கார்த்திகாயினி:** *அப்படி ஒண்டுமில்லையப்பா.*

**கமல்:** *என்னைக் கூட உமக்குப் பிடிக்கேல்லையோ?*

**கார்த்திகாயினி:** *அப்படி நான் சொன்னனானே? உங்களுக்குத்தான் வரவர நான் ஒருத்தி இருக்கிறன் எண்ட நினைப்பே இல்லாமல் போட்டுது.*

**கமல்:** *ஏன் குஞ்சு அப்பாண்ட மனசை நோகடிக்கிறீர்?*

**கார்த்திகாயினி:** *நீங்கள் வேலையால எழு அல்லது எட்டு மணிக்கு வாரீங்கள். சிலவேளையில குடிச்சுப்போட்டும் வாரீங்கள்.*

**கமல்:** *இண்டைக்கு வெள்ளன வந்தனாந்தானே?*

**கார்த்திகாயினி:** *இண்டைக்குச் சனிக்கிழமை. இண்டைக்கும் 4 மணி ஆச்சு.*

**கமல்:** *கணக்கு முடிக்கிற நாட்களில கொஞ்சம் கூட நேரம் வேலை செய்ய வேண்டியிருக்கும்.*

**கார்த்திகாயினி:** *தாரணியிண்ட அப்பாவும் உங்கட bank இல தானே வேலை செய்யிறார்.*

**கமல்:** *அவற்ற section வேற என்ர section வேற.*

**கார்த்திகாயினி:** *அதுக்குக் குடிச்சுப்போட்டு வர வேணுமே?*

**கமல்:** *கார்த்தி (கோவமாக)நீர் இப்ப பெரியாளாப் போட்டீர்.*

**கார்த்திகாயினி:** *(கோபமாக உரத்தகுரலில்) ஓமப்பா இப்ப எனக்கு 16 வயது.*

**கமல்:** *ஆனா நீர் எண்ட பிள்ளை யெண்டதை மறந்து போனீர் போல.*

**கார்த்திகாயினி:** *(அழுகையுடன்) பிள்ளையெண்டு என்னில என்ன அக்கறை காட்டினீங்கள்.?*

**கமல்:** *உமக்காண்டித்தானே நான் இப்படி உழைக்கிறன். நீர் எதைக் கேட்டாலும் வாங்கித்தாறனாந்தானே?*

**கார்த்திகாயினி:** *அப்பா நான் ஒண்டு கேட்டால் வாங்கித்தருவீங்களே?*

**கமல்:** *உமக்கு அதில என்ன சந்தேகம்?*

**கார்த்திகாயினி:** *அம்மாவை வாங்கித்தருவீங்களே அப்பா?*

**கமல்:** *(பளார் என அவள் கன்னத்தில் அடிக்கிறார்) குட்டிச் சாத்தான்; நன்றி கெட்டவள்; இனி எதாவது கதைச்சால் நான் பொல்லாதவனாயிடுவன்.*

(கமலரூபன் சீறிய படி தமது மனப் பாரத்தைக் குறைப்பதற்காகக் குடிக்கப் போகிறார். மீண்டும் கார்த்தி அழுதபடி சோபாவில் சாய்கிறாள்.. சிறிது நேரத்தில் அவளது பள்ளித்தோழி தாரணி வருகிறாள்.)

**தாரணி:** *கார்த்தி.. கார்த்தி..*

(பலமுறை கூப்பிட்டபின் கார்த்தி போய்க் கதவைத் திறக்கிறாள்.)

**கார்த்திகாயினி:** *தாரணி (முகத்தில் சிறிது பிரகாசம்) வா வா நானே உன்னைப் பாக்கவேணுமெண்டு இருந்தனான்.*

**கார்த்திகாயினி:** *(உள்ளே வந்து அமர்ந்த பின் கார்த்தியை உற்றுப்பார்த்தவள் அதிர்ந்து போனாள்.) என்ன கார்த்தி அழுதனியே. முகமெல்லாம் வீங்கிக் கிடக்குது?*

**கார்த்திகாயினி:** *(பதில் சொல்லாமல் இருக்கிறாள். கண்கலங்கி நீர் முத்துக்கள் இரண்டு கன்னத்தில் வழிகிறது)*

**தாரணி:** *(அவளருகில் சென்று அவளது கையைப் பற்றியபடி)*

அப்பாவோட ஏதும் சண்டையே?

**கார்த்திகாயினி:** அப்பாவும் அம்மாவும் கோட்டில பிரிஞ்சு போகேக்க நான் அப்பாவோடதான் போவனெண்டு அடம்பிடிக்காம அம்மாவோட போயிருக்க வேணும்.

**தாரணி:** அது முடிஞ்ச கதை; இண்டைக்கு என்ன நடந்தது?

**கார்த்திகாயினி:** அப்பா எதையும் வாங்கித் தருவார் எண்டார்.

**தாரணி:** நீ எதைக் கேட்டனீ.

**கார்த்திகாயினி:** அம்மாவை வாங்கித்தரச் சொன்னனான்.

**தாரணி:** (மௌனம்)

**கார்த்திகாயினி:** (திடீரெனப் பெரிதாக அழுதபடி) போனவருசம் அப்பம்மா செத்த பிறகு எனக்கு யாருமே இல்லை. நான் அனாதை.

**தாரணி:** (அவள் அழுவதைத் தடுக்க முயற்சித்தபடி) ஏன் அப்படிச் சொல்லுறாய். அப்பா இருக்கிறார். சில நாளில அம்மாட்டையும் போய் வாராய். நாங்களெல்லாம் இருக்கிறம்.

**தாரணி:** நீ பள்ளிக்கூடத்தில ரியூசனில ரோட்டில நடக்கிற விசயங்களை யாரிட்ட சொல்லுறனி?

**தாரணி:** ஏன் அம்மாட்ட தான் சொல்லுறனான்.

**கார்த்திகாயினி:** எல்லாத்தையுமோ?

**தாரணி:** சொல்லக்கூடிய சந்தோசமான விசயம் அல்லது துக்கமான விசயம் எண்டு எல்லாத்தையும்தான்.

**தாரணி:** அப்பாட்டச் சோல்லுறதில்லையோ?

**தாரணி:** அப்பாட்ட எல்லாத்தையும் சொல்ல மாட்டன். ஆனா எல்லாரும் சேர்ந்து இருக்கேக்க சொல்லக்கூடிய பொதுவான விசயங்களைச் சொல்லுவன்.

**கார்த்திகாயினி:** என்னப் பற்றியும் சொல்லுறனியே?

**தாரணி:** ஓ நிறையச் சொல்லுறனான்.

**கார்த்திகாயினி:** அன்றி ஆர்வமாக் கேப்பாவே?

**தாரணி:** ஏன் கேட்கமாட்டா. தன்ற சொந்தக்காரப் பிள்ளையில இருக்கிற அக்கறையோட கேட்பா. இதில என்ன அதிசயம் இருக்கு?

**கார்த்திகாயினி:** சங்கரியன்றி நல்லவா, சொந்தமெண்டதிலும் பார்க்க அவ என்னில அக்கறையா இருக்கிறவ,

**தாரணி:** ஏன் இப்படிக் கேள்விமேல கேள்வி கேக்கிறா?

**கார்த்திகாயினி:** என்னப் பற்றி எல்லா விஷயமும் சொல்லுறனியே?

**தாரணி:** நீ எதைப் பற்றி கேக்கிறாயெண்டு தெரியும். சங்கரன் அண்ணா விசயத்தையும் சொன்னனான்.

**கார்த்திகாயினி:** ஏன் சொன்னனீ.. அவ என்னைபத்தி என்ன நினைப்பா?

**தாரணி:** சொன்னது எவ்வளவு நல்லதாப்போட்டுது. சங்கரன் அண்ணாவுக்கு கல்யாணம் பொருந்தி இருக்காம். அதோட அவற்ற கரக்கரர் சரியில்லையாம்.. குறிப்பா girls விஷயத்தில அவர் சரியில்லையாம்.

**கார்த்திகாயினி:** தெரியும்-

**தாரணி:** தெரிஞ்சு கொண்டா அவருக்கு லெற்றர் எழுதினீ?

**கார்த்திகாயினி:** இப்பத்தான் அவனைப்பற்றித் தெரியுது. அந்த விசரன் தான் என்ற மனச மாத்திட்டு இப்ப ஏமாத்திட்டான்.

**தாரணி:** -அவரோட இதைப் பற்றிக் கதச்சனீயே?

**கார்த்திகாயினி:** ஓம் கதைச்சனான். எனக்கும் தனக்கும் பதினஞ்சு வயசு வித்தியாசமாம். தான் சும்மாதான் பொழுதுபோக்கத்தான் என்னோட கதைச்சவராம்.

அவர் உனக்கு love letter எழுதினதும் பொழுது போக்கோ?

**கார்த்திகாயினி:** அவன் ஒருநாளும் எழுதேல்ல. நான்தான் எழுதினான்.

**தாரணி:** அந்த லெற்றருகளை நீ திருப்பிக் கேட்டனியே?

**கார்த்திகாயினி:** கேட்டனான். தான் அப்பவே கிழிச்சுப் போட்டன் எண்டு மழுப்பிறான்.

**தாரணி:** நீ கவலைப் படாத. என்ற அம்மா இது விஷயமா உன்ற

அம்மா அப்பாட்ட கதைக்கிறதா சொன்னவா-

**கார்த்திகாயினி:** ஐயோ! அப்பா என்ன கொண்டிடுவார்

**தாரணி:** இல்லை. - கமலரூபன் மாமாவிண்ட கவனிப்பு இல்லாததாலதான் நீ இப்படிப் போனனியாம். அவற்ற பிழை யெண்டதால அவர் உன்னைப் பேச மாட்டார்.

(அப்பொழுது அப்பா திரும்பி வருகிறார். முன்பு இருந்த கோபம் மறைந்திருந்தது. கார்த்தியோடு கடிந்து கொண்டால் அவள் தனது அம்மா பக்கம் சாய்ந்து விடுவாளோ என்ற பயம் காரணமாக இருக்கலாம். பெற்ற பாசமும் விட்டுப் போகாதல்லவா?) கமல் (குரலில் உற்சாகத்தைக்காட்டி)

**கமல்:** கார்த்தி.. கார்த்தி.. (தாரணியைக் கண்டவுடன்) கலோ தாரணி எப்ப வந்தனீர்?

**தாரணி:** கொஞ்சம் முந்தி மாமா.

**கமல்:** வீட்டில எல்லாரும் சுகமாய் இருக்கினமே

**தாரணி:** ஓம் மாமா.

**கமல்:** கார்த்தி உமக்குப் பிறந்தநாள் வருகுதில்லே. அதுக்கு என்னுடைய பரிசா cell phone வாங்கினனான்.

**கார்த்திகாயினி:** thanks அப்பா (போனை வேண்டுதல்)

**தாரணி:** மாமா இம்முறை கார்த்தியிண்ட birthday பெரிசாக் கொண்டாடுவம்.

**கமல்:** ஓம் கார்த்தியிண்ட பதினாறாவது birthday இல்ல. கட்டாயம் பெரிசாத்தான் கொண்டாட வேணும்.

**கார்த்திகாயினி:** அப்பா கோவிக்காட்டி ஒண்டு கேக்கட்டே?

**கமல்:** கேள் கார்த்தி.

**கார்த்திகாயினி:** இவ்வளவு காலமும் அம்மாவை நான் அவவின்ற வீட்டதான் போய்ப் பார்க்கிறனான்.

**கமல்:** (சற்று இறுக்கமாக) அதுக்கு என்ன?

**கார்த்திகாயினி:** இந்தமுறை birthday க்கு மட்டும் இங்க கூப்பிடுவம்.

**கமல்:** *(அரைமனதுடன்)* இனி உம்மட விருப்பம்.

**கார்த்திகாயினி:** *(மட்டற்ற மக்கிழ்ச்சியுடன்)* thank you *அப்பா-*

(இப்பொழுது கார்த்தி மையப்படுத்தப்பட்டு உறைநிலைப்படுத்தப்படுவாள் விமர்சகர் குழு மேடைக்கு வரும்)

**ஞானோதையா:** *பருவ வயதில் தங்களின்ற உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள ஒரு வடிகால் மிகவும் அவசியம்.*

**புதுமைப் பிரியன்:** *இந்தப் பிரச்சினைபற்றி சிலாகிப்பதற்கு நீர் தான் சரியான ஆள்.*

**ஞானோதையா:** *ஓம் நான் சொல்லிறன். கவிதை வடிவில் சொல்லிறன்.*

**கவிரதன்:** *விடலைப் பருவத்தில இருக்கிற பிள்ளைகளுடைய பெற்றோர் நிறைய வந்திருக்கினம். அவைக்கும் தெரியட்டும்.*

**ஞானோதையா:**

பூக்கும் பருவம்
எனக்கோ
புரியாத புதிர்கள்
புறம் எங்கும்
கொட்டிக் கிடக்கும்

பொங்கும் புதுப் புனலாய்
புத்துணர்வு
பெருகிவரும்

சந்தக் கவிதை பாடி
செகத்தினையே
சாடச் சொல்லும்

எனது உணர்வுகளை
வரம்பிட்டு வடிகட்டி
வளமாய் ஆக்கிவிட
வருவார் எவருமில்லை.

தறி தட்டி ஓடும்
மனக் குதிரையை
கடிவாளம் இட்டு
நெறி தனிலே செலுத்திவிட
உலகில் யாருமில்லை

தனிமைச் சிறையில்
இருந்து விடுதலைபெற
மீட்பர் வருவரோ?
அன்னையும் அப்பனும்
அரவணைத்துக் காப்பரோ?

**பாடகர்:**

சக்தி தனக்கே கருவி யாக்கு –அது
சக்தி சக்திசக்தி என்றே பேசும்–மனம்
சக்தி தனக்கே கருவி யாக்கு அதில்
சாந்திருக்கும் நலுறவும் தேசும்.

பாடகர் பாடும்போது கார்த்தி வீட்டில் பிறந்த நாளுக்கான அலங்காரங்கள் செய்யப்படுகிறது. கார்த்தியும் கமலரூபனும் தாரணியும் இந்த வேலைகளில் ஈடுபடுவர். பாடல் முடிவில் ஆராவமுதன் சங்கரி,ரவி சயந்தன் ஆகியோர் வருகின்றனர்.

**சங்கரி:** many many happy returns of the day

**கார்த்திகாயினி:** thank you

**ஆராவமுதன்:** *எங்கள் பாப்பாவுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள்.*

**கார்த்திகாயினி:** *நன்றி*

**ரவி:** happy birthday to you, enjoy your special day

**கார்த்திகாயினி:** thanks

**சயந்தன்:** *(பரிசை வழங்கி) பிறந்த தின வாழ்த்துக்கள் அக்கா அவர்களே.*

**கார்த்திகாயினி:** *நன்றி தம்பி சயந்தன் அவர்களே.*

(கமலரூபன் எல்லோரையும் வரவேற்று அமரச் செய்வார், அப்பொழுது கார்த்தியின் அம்மா கௌரி வருகிறா. அவவின் கால்கள் பின்னிக் கொண்டது போல ஒரு தயக்கம்– வேதனை. நிலைமையைப் புரிந்து கொண்டு சங்கரி எழுந்து சென்று அவவை வரவேற்று வருகிறா. கார்த்தி ஓடிச் சென்று தாயைக் கட்டிக் கொள்கிறாள். அவர்கள் இருவர் கண்களிலும் கண்ணீர். பேசாமடந்தையினராயினர். சில கணப்பொழுது நகருகிறது. பெரியவர்களைக் கதைக்க விட்டு சிறியவர்கள் கேக் முதலியவற்றை எடுத்துவைத்து தமக்குள் பேசி சிரிப்பர். ஆனால் கார்த்தியின் காதுகள் மட்டும் பெரியவர் பேச்சை உன்னிப்பாய் கவனிக்கும்.)

**ஆராவமுதன்:** *கமலன்! இண்டைக்குக் கார்த்திக்கு ஒரு நல்ல நாள்.*

**சங்கரி:** *அப்பாவும் அம்மாவும் ஒரே இடத்தில இருக்கிற நாளைவிடக் கார்த்திக்குச் சந்தோசமான நாள் வேற இல்லை.*

(கமலன் மௌனமாக ஆராவமுதனை ஏறிட்டுப் பார்த்தல்... சிறிது நேரம் மௌனம் தொடரும்.)

**சங்கரி:** *teen age இல இருக்கிற ஒரு பொம்பிளைப் பிள்ளைக்கு அம்மாவின்ர துணை கட்டாயம் வேணும்*

**ஆராவமுதன்:** *கார்த்தியின்ற பிரச்சினைகள் நான் என்ன எண்டு கமலனுக்குச் சொன்னனான்.*

**சங்கரி:** *நானும் கௌரிக்கு இந்தப்பிரச்சனைகள் பற்றிச் சொன்னான்.*

**ஆராவமுதன்:** *உங்களிரண்டு பேரின்ர மனஸ்தாபமும் பிள்ளையைப் பாதிக்கக் கூடாது.*

**சங்கரி:** *கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் செய்யிறதில வேலையில்ல.*

**ஆராவமுதன்:** *வேற குடும்பங்களுக்க இருக்கிற பிரச்சினையளவு உங்களுக்க இல்லை.*

**கமல்:** *(கோபத்துடன்) உந்தத் திமிர் பிடிச்சவளோட என்னால வாழ முடியாது. டொக்ரருக்கு படிச்சவ எண்டோனை வீடே மறந்திட்டு.*

**கௌரி:** *என்னச் சரியாப் புரிஞ்சுகொள்ள முடியாத மனுசனோட முட்டுப்பட்டுக் கொண்டு என்னாலையும் வாழ முடியாது.*

**ஆராவமுதன்:** உங்களிட்ட இருக்கிற இந்த ego தான் உங்களைப் பிரிச்சிருக்கு.

**கௌரி:** இவர் குடிச்சுப் போட்டுச் செய்த கொடுமை தாங்கேலமாத்தான் நான் பிரிஞ்சு போனனான்.

**கமல்:** வேலை வேலை எண்டு ஒடிட்டு பிள்ளையையும் கவனிக்காமல் விட்டால் ஆருக்குத்தான் கோபம் வராது?

**கௌரி:** டொக்ரர் எண்டு தெரிஞ்சுதானே கட்டினவர். உங்கட அம்மா கார்த்தியப் பார்க்க இருந்தவதானே? உங்களுக்கு நான் கூடப் படிச்சனான் எண்டத ஏற்கமுடியேல்ல. அதாலதான் கொடுமைப்படுத்தினீங்கள்

**கமல்:** கொடுமை கொடுமை எண்டுறா, நான் எப்பவாவது கைநீட்டினான.

**கௌரி:** வார்த்தையால சுடுறது அடிக்கிறதிலையும் கொடுமை.

**ஆராவமுதன்:** சரி சரி பழசை விடுவம். மறக்கவும் மன்னிக்கவும் தெரிஞ்சால் யாரும் இணைஞ்சு வாழமுடியும்.

**கமல்:** அமுதன் உம்மட wife வீட்டு வேலையெல்லாம் செய்து வெளியில போய் உழைச்சும் தாராதானே. உங்களில பிழை கண்டவாவா?

**சங்கரி:** எனக்கு அவரில குறையில்லை எண்டு ஆர் சொன்னது?

**கௌரி:** சங்கரி வளர்க்கப்பட்ட முறையில பிரச்சினைப்படுத்தாம இருக்கிறா ஆனா நிறையப் பிரச்சினை அவவிட்டையும் இருக்கு.

**ஆராவமுதன்:** ஓம் நானும் அவவின்ர பிரச்சினைகளை அலட்சியப் படுத்திப்போட்டன். எங்கட குடும்பம் உடையாம ஒரு தனித்தூணா இருந்து சங்கரி காத்து வாரா.

**சங்கரி:** நிறைவான விசயங்களை மனம்விட்டுப் பாராட்டிரதும் குறையை உணர்ந்து திருந்திறதும் எண்டு அவரிட்ட இருக்கிற நல்ல குணங்களால்தான் நான் பொருந்திப் போறன்.

**ஆராவமுதன்:** ஒருவரிட்ட இருக்கிற குறைய மட்டும் பார்க்காம நிறையையும் சீர்தூக்கிப் பார்த்தா பிரச்சினை வலுக்காது.

ஒருவரையும் அதிகமாப் பாதிக்காது.

**கமல்:** அம்மாவை ஆஸ்பத்திரியில வைச்சிருக்கேக்க ஒரு டொக்ரரிற்ற work எப்பிடிப்பட்டது எண்டத உணர்வுபூர்வமாய் உணர்ந்தனான். நான் சராசரியான house wife இட்ட எதிர்பாக்கிற விசயங்களை கௌரியிட்ட எதிர்பாத்தது பிழை எண்டு அப்பத்தான் விளங்கிச்சு.

**கௌரி:** எங்கட குடும்பத்தில ஆரும் குடிக்கிறதில்ல. அதுவும் என்ற அப்பாட்ட ஒரு கெட்ட பழக்கமும் இல்ல. அப்பா அம்மாவ நல்லா மதிச்சு நடப்பார். அம்மாண்ட சம்மதத்தோட தான் எல்லாம் செய்வார். அப்பாதான் எனக்கு hero. அவரப்போல தான் எல்லாரும் இருக்கவேணும் எண்டு எதிர்பார்ப்பன். அதுவும் எனக்கு வார husband கட்டாயமா அப்பிடியே இருக்கவேணுமெண்டு நினைச்சன். அதால கமலண்ட குடிப் பழக்கத்த என்னால ஏத்துக்கொள்ளேலாமல் இருந்துச்சு.

**கமல்:** நான் எந்த நாளுமே குடிச்சிட்டு வந்தனான். எங்களுக்க சண்டை பெருத்த பிறகுதான் கௌரியை வெறுப்பேர்த்த வேணுமெண்டு குடிச்சிட்டு வந்தனான், ஆனால் கார்த்தியில உயிரை வைச்சிருக்கிறன் அவள் சொன்னாள் எண்டு குடிக்கிறத எவ்வளவு குறைச்சனான் தெரியுமே? கௌரியும் அன்பாச் சொன்னால் குறைச்சிருப்பன் தானே.

**ஆராவமுதன்:** இப்ப உங்கட குறை நிறை உங்களுக்கு தெரியுதுதானே. அப்பவே சரியா மனம் விட்டுக் கதைச்சிருந்தால் நீங்கள் divorce வரைக்கும் போய் இருக்கத் தேவையில்லை. இடையில நிண்டவையும் உங்கட பிரிவுக்குக் காரணமாய் போட்டினம்.

**சங்கரி:** கௌரிக்கு இப்ப உலக அனுபவம் இருக்கு. அதோட கார்த்தியைப் பிரிஞ்சிருக்கிறது பெரிய மன உளைச்சலா இருக்கு.

**ஆராவமுதன்:** இளமையிலையிலும் பார்க்க நடுவயதில தான் துணையிண்ட அவசியம் கூட எண்டத கமலனும் உணராமலில்ல.

**சங்கரி:** உங்களுக்கு முன்னால ego எண்ட சிறிய திரைதான் இருக்கு,. மனம் வைச்சால் இலகுவா அதைக் கிழிச்செறியலாம்.

**ஆராவமுதன்:** அத நீங்கள் செய்தால் நீங்களும் சந்தோசமா இருக்கலாம், நீங்கள் உயிரா இருக்கிற கார்த்திக்கும் பெற்றவையா நீங்கள் செய்யிற கடைமையாயும் இருக்கும்.

**கமல்:** *(திக்கிதிக்கி ஒருவகை சங்கோயத்துடன்) கார்த்திக்காக நான் சேந்து வாழத்தயார். கௌரிக்கு விருப்பமோ எண்டு கேளுங்கோ*

**கௌரி:** *(முகமலர்ச்சி)கார்த்திக்காகத்தான் மட்டுமே*

**சங்கரி:** *கமலன் கேட்டுதே கௌரி தனக்காக நீங்கள் சேர்ந்து வாழமாட்டீங்களோ எண்டு கேக்கிறா*

**கமல்:** *(பதில் சொல்லாமல் வெட்க உணர்வு மேலிட சிறிதாய் புன்னகைத்தல்)*

**ஆராவமுதன்:** *பாரடா புது மாப்பிளையிண்ட வெட்கத்த*

*(அவர்களது முடிவைக் கேட்ட கார்த்தி ஓடியந்து தாயைக் கட்டிப்பிடித்தல் - தந்தையை நன்றியுடன் நோக்கிய அவள் கண்களில் ஆனந்தக் கண்ணீர்.)*

**கார்த்திகாயினி:** *(சங்கரியின் கைகளைப் பற்றியபடி மகிழ்ச்சியின் எல்லையில்)* thanks thank you uncle

*(தங்களுக்குள் கதைத்துச் சிரித்தாலும் தாரணி முதலியவர்களின் கவனமும் பெரியவர்களின் பேச்சில் இல்லாமல் இல்லை. அவர்களும் இப்பொழுது இணைந்து கொள்வர்.*

**தாரணி:** *கார்த்திக்கு இண்டைக்குத்தான் சந்தோசமான பிறந்தநாள்.*

**கார்த்திகாயினி:** *தாயினதும் தந்தையினதும் கைகளை இணைத்தபடி) இவையிரண்டு பேருந்தான் புதிசாப் பிறந்திருக்கினம். அதால இவைக்குத்தான் இண்டைக்குப் பிறந்தநாள்.*

**ரவி:** *அப்பாவுக்கும்... ஏன் எனக்கும் கூட இண்டைக்குத்தான் அம்மாவின்ற பிரச்சினை விளங்கியிருக்கு.*

**ஆராவமுதன்:** *ஓம் ரவி.. இனி அம்மாவுக்கு நாங்களும் ஒத்தாசையாக இருந்து வீட்டு வேலையிலும் எல்லாத்திலையும் உதவுவம்.*

**தாரணி:** *புதிய ஞானம் இவை எல்லாரிட்டையும் பிறந்திருக்கு.*

*(ஆப்பொழுது சாவித்திரியும் சாம்பவியும் வருகிறார்கள்.)*

**சாம்பவி:** *ஆரிட்ட புதிய ஞானம் பிறந்திருக்குத் தாரணி?*

**சங்கரி:** *அம்மாவிட்டையும் தான்.*

**கௌரி:** *சங்கரி ஏதும் விஷேசமே?*

**சங்கரி:** *சாம்பவிக்குக் கலியாணம் பொருந்தியிருக்கு.*

**கௌரி:** *(சாம்பவிக்கு கைகுழுக்கி)* Congratulations

**தாரணி:** *அம்மம்மாவுக்கு என்ன ஞானம் பிறந்திருக்கு?*

**கமல்:** *யார் மாப்பிள்ளை?*

**சங்கரி:** *சாம்பவியோட வேலை செய்யிற கருணாகரன்தான்.*

**கௌரி:** *முந்தி இந்தச் சம்பந்தம் கேட்டு வந்ததில்லே..*

**ஆராவமுதன்:** *கருணாவுக்கு சாம்பவியில விருப்பம் இருந்தது தெரியும் தானே.*

**சாவித்திரி:** *அப்ப சாதி எண்டும் அந்தஸ்து எண்டும் தட்டிக் கழிச்சுப்போட்டடன்.*

**சங்கரி:** *சமூகத்திண்ட அபிப்பிராயங்கள் பழைமையை இறுக்கிப் பிடிச்சுக்கொண்டு விலகாததுபோல காட்சிதரும்.*

**ஆராவமுதன்:** *அபிப்பிராயங்கள் தானா மாறாது. கொஞ்சம் பேர் துணிஞ்சு மாற்றினா மட்டும் மாறிப்போகும்*

**சங்கரி:** *அம்மாவுக்கு சமுக அபிப்பிராயங்களைவிட தன்ற மகளின்ற வாழ்க்கை முக்கியமா தெரிஞ்ச போது தன்ற முடிவை மாற்றிப்போட்டா.*

**சயந்தன்:** *அப்ப அம்மம்மாவுக்கு ஞானம் பிறந்தது உண்மைதான்.*

**கார்த்திகாயினி:** *இப்படி ஒவ்வொருவருக்கும் ஞானம் பிறந்தால்?*

**ரவி:** *சந்தோசம் எங்கட கையில்*

**தாரணி:** *நிம்மதி எங்கட தோள்களிலே*

**சயந்தன்:** *இன்பச் சுமைகள் மட்டுமே எங்கட தலையில,*

(எல்லோரும் சந்தோசமாக உணவு பரிமாறி மகிழ்ந்திருப்பர்.

**பாடகர்:**

சக்திதனக்கே கருவியாக்கு அது
சக்தியுற்று நித்தம் விரிவாகும் –நெஞ்சம்

சக்திதனக்கே கருவியாக்கு அதை
தாக்கவரும் வாளொதுங்கிப் போகும்.

(பாடல் இசைக்கப்படும் பொழுது விமர்சகர் மேடைக்கு வருவர்.

**ஞானோதையா:** *பார்த்திர்களா ஞானம் பிறந்தவுடன் இந்தக் குடும்பத்துக்குள் எவ்வளவு குதூகலம்.*

**புதுமைப் பிரியன்:** *இப்ப என்ர முறை. நான் சொல்லுறதுதான் சரியாய் இருக்கும்.*

**கவிரதன்:** *ஏன் அப்படிச் சொல்லுகிறீர்.*

**புதுமைப் பிரியன்:** *நீங்கள் இருவரும் கவிஞர்கள். கொஞ்சம் உணர்ச்சிவசப்படுவீர்கள்.*

**கவிரதன்:** *கொஞ்சும் உணர்ச்சி ஒன்றும் எமக்கில்லை.*

**ஞானோதையா:** *உணர்ச்சிவசப்பட்டாலும் உண்மைதானே சொன்னனாங்கள்.*

**புதுமைப் பிரியன்:** *நான் மறுக்கேல்ல. உண்மையில சிலநேரம் பகுதி உண்மை மட்டும் தெரியும்*

**கவிரதன்:** *இது உங்கட முறைதான்,சொல்லுங்கோ.*

**புதுமைப் பிரியன்:** *நான் இப்பொழுது சபையோருக்கு நிதானமாக ஒரு உண்மையைச் சொல்லப்போறன். கவிதையில இல்லை. வசனத்தில..*

**கவிரதன்:** *(நகைச்சுவையாக) ஆடத்தெரியாதவன் மேடை சரியில்லையெண்டானாம்.*

**ஞானோதையா:** *சபையோற்ற பொறுமையச் சோதிக்காமல் கெதியில் சொல்லுங்கோ.*

**புதுமைப் பிரியன்:** *மாற்றம் ஒன்றே மாறாதது என்று சொல்லுவார்கள்.*

*கமலரூபனும் கௌரியும் சங்கரி, ஆராவமுதன் சொன்னவுடன் மனம் மாறினார்கள் என்று சொல்ல முடியாது. காலமும் கார்த்தியின் நிலையும் அவர்கள் மனநிலையை சிறிது சிறிதாக மாற்றி இருக்கிறது சங்கரி ஆராவமுதனின் முயற்சி உடன் பலன்தர இதுவே காரணம் எனலாம்.*

அதேபோல சாவித்திரி அம்மாவின் மன மாற்றத்துக்கும் தேவையே காரணமாய் அமைந்திருக்கிறது- காலமும் தேவையும் சூழலும் மாற்றத்துக்கு காரணமாகின்றன.

**ஞானோதையா:** ஓம் புதுமைப் பிரியன் சொல்லியது சரிதான். பிரிவினையிலும் மாற்றம் வரும்.

**கவிரதன்:** பிரிவினை ஒன்றும்  பிரியமானது அல்ல.

சாதி என்றும் சமயம் என்றும் பணக்காரன் ஏழை என்றும் ஆண் பெண் என்றும் பேதப்பட்டு நாங்கள் மனிசர் எண்டத முற்றாக மறந்து போகிறம்

**ஞானோதையா:** பேதம் பகை வளர்க்கும். நிம்மதி குலைக்கும். சக்தியைப் பிரிக்கும்.

**புதுமைப் பிரியன்:** பிரிக்கப்பட்ட சக்தி ஒன்றோடு ஒன்று முரண்பட்டு முட்டி மோதி மனிதனின் குரல் வளையைக் கொடூரமாய்த் திருகும். மனிதம் ஒன்றே என்று அபேதம் ஏற்பட்டால் சக்தி பெருகும்.

**ஞானோதையா:** ஓம் ஆண் என்றும் பெண் என்றும் பேதப்படாமல் திரண்டு ஒரு சக்தியாக இருந்தால் உலகையே ஆளலாம்.

**கவிரதன்:** ஆராவமுதன் அண்டைக்கு சக்தி பற்றி பாரதி பாடிய பாட்டை நல்ல அழகாப் பாடினவர்.

**ஞானோதையா:** அவரை இப்ப பாடச் சொன்னால் பொருத்தமாக இருக்கும்.

**புதுமைப் பிரியன்:** அவருக்கு நல்லகுரல் -அவரப் பாடச் சொல்லுவம்.

**கார்த்திகாயினி:** நீங்கள் அபேதத்தைப் பற்றிப் பேசிப்போட்டு எங்களில ஒருவரைப் பேதப்படுத்திப் பாடச் சொல்லுறியல்.

**தாரணி:** ரவி சயந்தன்-எங்களுக்கும் பாடத் தெரியும்.

**புதுமைப் பிரியன்:** அச்சா ---அப்ப எல்லாரும் சேர்ந்துபாடுவம்.

**கமல்:** ஆராவமுதன் தொடங்குங்கோ. நாங்களும் கூடப் பாடிறம்

**புதுமைப் பிரியன்:** அட பெரியவர்களும் பேதமின்றிச் சேர்ந்திட்டினம்.

அப்ப பாடுங்கோ.

வாழ்வு பெருகும் மதியே சக்தி
மானிலம் காக்கும் மதியே சக்தி.

(கைகொட்டிப் பாட சபையோரும் சேர்ந்து பாடுவர் என நம்பலாம்.)

# பொருளடக்கம்

சமர்ப்பணம் .......... III

மகிழ்வுரை (Appreication) .......... V

மனம் தழுவும் அலை, வாசுகியின் கடல் சிறுகதைத்தொகுப்பு .......... IX

முகவுரை .......... XV

ஊனம் மனதுக்கல்ல .......... 1

கொட்டில் .......... 8

பாப்பாவுக்கு ஒரு நாள் கழிகிறது. .......... 15

போர்முகம் .......... 24

ஆலய தரிசனம் .......... 30

இருப்பைத் தேடும் மனிதர்களும் சில அந்தரங்கங்களும் .......... 36

உடையும் விலங்குகள் .......... 41

ஆனந்த சுதந்திரம் .......... 51

முரண்கள் .......... 60

கடவுள் மீண்டும் வருவாரா....? .......... 66

இயலாமை .......... 69

ஞானி .......... 75

பாவ மன்னிப்பு .......... 78

ஆதிமந்தி ஆட்டனத்தி .......... 84

கடல் .......... 89

சக்தி தனக்கே கருவியாக்கு (நாடகப்பிரதி) .......... 128